# நான்காவது பரிமாணம்

(THE FOURTH DIMENSION)



DR. PAUL YONGGI CHO

வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு உங்கள்
விசுவாசத்தை செயலாற்ற வைக்கும் திறவு கோல்

# நான்காவது பரிமாணம்

## பால்யாங்கி சோ

# பொருளடக்கம்


1. விசுவாசத்தின் விதிமுறை
2. நான்காம் பரிமாணம்
3. பேசப்படும் வார்த்தையின் உருவாக்கும் வல்லமை
4. ரேமா – தேவன் பேசுகின்ற வார்த்தை
5. அந்திரேயாவின் பள்ளி
6. தேவனுடைய முகவரி
7. விசுவாச வித்து

# முன்னுரை

கொரியாவில் ஏற்பட்ட பெரும் மோதலைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தின் விளைவாகப் போராடிக் கொண்டிருந்த பலரில் நானும் ஒருவன். ஏழ்மையின் காரணமாக ஒரே நாளில் பல்வேறு வேலைகள் செய்ய வேண்டிய நிர்ப்பந் தத்தில் இருந்தேன். – ஒருநாள் பிற்பகல் நான் தனியாக கல்வி கற்றுக் கொடுக்கும் பணியிலிருந்தேன். (Tutor) திடீரென்று என்னு டைய நெஞ்சின் ஆழத்திலிருந்து ஏதோ கசிந்தது போல் இருந்தது. அது என் வாய் நிறைய ஏற்பட்டு என் தொண் டையை அடைப்பது போல் தோன்றியது.

நான் வாயை திறந்த மாத்திரத்தில் இரத்தம் பீரிட்டு வெளியே வந்தது. இரத்தம் வருவதை நிறுத்த முயற்சித்துப் பார்த்தேன். ஆனால் என் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் ஒழுக ஆரம்பித்தது. நான் மிகுந்த பலவீனமடைந் தேன். மயங்கி விழுந்தேன்.

நான் மீண்டும் உணர்வடைந்தபோது யாவுமே சுற்றுவது போலிருந்தது. நான் வீட்டிற்கு திரும்பவே முடியாத நிலை யிலிருந்தேன்.

அப்போது எனக்கு 19 வயது. நான் செத்துக் கொண்டிருந்தேன். இளைஞனே, நீ வீட்டிற்கு போகலாம்

பீதியடைந்த என் பெற்றோர், தங்களுக்கிருந்த கொஞ்ச உடைமைகளை விற்று எனக்கு சிகிச்சையளிக்கும் பொருட்டு ஒரு பெரிய மருத்துவமனையில் சேர்த்தார்கள். டாக்டர் மிக்க கவனமாய் என்னை சோதித்தார். சோதனையின் முடிவு தீராத ஷயரோகம் என கண்டுபிடித்தார்கள்

அதை கேட்டதும் உடனே எவ்வளவு நிர்ப்பந்தமான ஒரு வாழ்க்கை எனக்கு இருக்கிறது என்பதை உணர்ந்தேன். என்னுடைய எதிர்கால ஆசைகள் யாவும் என்னுடைய வாழ்க்கையின் துவக்கத்திலேயே முடிவுக்கு வந்துவிட்டது.

என்னுடைய நம்பிக்கையெல்லாம் இழந்த நிலவரத்தில் எனக்கு ஷயரோகம் என கண்டுபிடித்த டாக்டரிடம் கெஞ் சினேன். ’டாக்டர், எனக்காக நீங்கள் எதுவும் செய்ய முடியாதா ?’

அவருடைய பதில் என்னை அதிரச் செய்தது. இல்லை , இந்த வகையான ஷயரோகம் முற்றிலும் வேறுபட்டது. இது மிகவும்

வேகமாக பரவக்கூடியது. இதை தடுத்து நிறுத்த முடியாது.

*’நீ மூன்று மாதம், அல்லது அதிகப்பட்சம் நான்கு மாதங்கள் மட்டுமே உயிரோடிருக்க முடியும். இளைஞனே, நீ வீட்டிற்கு போ. நீ விருப்பப்படுகிறதை சாப்பிடு. நண்பர்களை சந்தித்து விடை பெற்றுக்கொள்’.*

மனமுடைந்த நிலையில் நான் மருத்துவ மனையை விட்டு வெளியேறினேன். நான் தெருவிலே செல்லும்போது நூற்றுக்கணக்கான அகதிகள் கடந்து சென்றனர். நானும் அவர்களைப் போன்றவரானேன் என்ற உணர்வு ஏற்பட்டது. நான் முற்றும் தனிமைப்பட்டவனானேன். நம்பிக்கையற்றவர்களில் நானும் ஒருவன்.

என் மனம் பேதலித்த நிலையில் வீட்டிற்கு திரும்பினேன். சாவதற்கு தயாராக என் நாட்களை எண்ணும் பொருட்டு மூன்று மாத காலண்டரை என் அறை சுவற்றில் தொங்க விட்டேன். நான் புத்த மார்க்கத்தில் வளர்க்கப்பட்டிருந்தேன். உதவி செய்வார் என்ற நம்பிக்கையில் புத்தரை தினமும், நான் தொழுதேன். ஆனால் நம்பிக்கை ஏற்படவில்லை. மாறாக நிலமை மிகவும் மோசமானது.

என்னுடைய வாழ்நாட்கள் குறைந்து கொண்டே வருகிறது என்பதை உணர்ந்து நான் புத்தரின் மீதுள்ள விசுவாசத்தை விட்டுவிட்டேன். அந்த நேரத்தில் நான் அறியாத கடவுளை நோக்கி கதற ஆரம்பித்தேன். என்னுடைய கதறலுக்கு என்னுடைய ஜீவியத்தில் ஒரு பதில் கிடைக்கும் என்பதை உணராதவனாகயிருந்தேன்.

## என்னைத் தொட்ட கண்ணீர்

சில நாட்கள் கழித்து உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் ஒரு சிறு பெண் என்னிடத்தில் வந்து இயேசு கிறிஸ்துவை குறித்து பேச ஆரம்பித்தாள். இயேசு கிறிஸ்து கன்னியிடம் பிறந்ததையும், அவரது சிலுவை மரணத்தையும் அவரது உயிர்த்தெழுதலையும் கிருபையின் மூலம் அவர் அளிக்கும் இரட்சிப்பைக் குறித்தும் எனக்குச் சொன்னாள். அந்த கதைகள் எனக்கு புத்தியீனமாகத் தோன்றியது. அவளுடைய இந்த கதைகளை நான் ஏற்றுக்கொள்ளவுமில்லை. அவற்றை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவுமில்லை. அந்த சிறு பெண்ணின் அறியாமையையும் நான் கண்டுகொள்ள வில்லை. அந்த சிறுமி

போய் விட்டாள். நல்லவேளை போய் விட்டாள் என்று நினைத்துக் கொண்டேன்.

ஆனால் மறுநாள் அவள் மீண்டும் வந்தாள். மீண்டும் மீண்டும் வந்தாள். அவள் வரும் நேரமெல்லாம் இயேசுவைப் பற்றிய கதைகளைச் சொல்லி என்னை தொந்தரவு செய்வாள். இவ்வாறு அவள் வந்து கொண்டிருக்கும்போது ஒருவாரம் கழித்து அவள் வருவதையிட்டு எனக்கு அதிகக் கோபம் ஏற்பட்டு அவளை மிகவும் திட்டிவிட்டேன்.

அவள் நான் திட்டியதையிட்டு வெட்கப்பட்டு போய் விடவுமில்லை, கோபத்தில் என்னை பதிலுக்கும் திட்ட வில்லை. ஆனால் அவள் உடனே முழங்கால்படியிட்டு எனக் காக ஜெபிக்க ஆரம்பித்தாள். அவளுடைய கன்னங்களில், கண்ணீர் துளிகள் உருண்டோடின. அவளது ஜெபத்தில் மன உருக்கம் பிரதிபலிப்பதை நான் கண்டேன். இது போன்ற மனப்பாங்கு எங்களது புத்தமத தத்துவங்களுக்கும் சடங்காச் சாரங்களுக்கும் அன்னியமான காரியமாக எனக்குத் தோன்றியது.

அவளது கண்ணீரை கண்டதும் என்னுடைய இருதயம் வெகுவாய் தொடப்பட்டது. இந்த சிறுமியிடம் நான் வித்தியாசமான ஒரு

அனுபவத்தை கண்டேன். அவள் எனக்கு மத சம்பந்தமான கதைகளைச் சொல்லவில்லை. ஆனால் அவள் விசுவாசத்தை. ஜீவித்து காட்டினாள். அவளது அன்பின் மூலமாகவும் கண்ணீரின் மூலமாகவும் தேவனின் பிரசன்னத்தை நான் உணர்ந்தேன்.

நான் அவளிடம் மிகவும் பரிவோடு “சிறுமியே அழாதே நான் உன்னை புண்படுத்தியதற்கு வருந்துகிறேன். நான் இப்போது உன்னுடைய கிறிஸ்தவ அன்பை விளங்கிக் கொண்டேன். நான் ஒரு செத்துக் கொண்டிருக்கிற மனிதனானபடியால் உனக்காக நான் கிறிஸ்தவனாகிறேன் என்று சொன்னேன்.

உடனே அவளது முகம் பிரகாசமாய் ஒளி வீசியது. அவள் தேவனை ஸ்தோத்தரித்தாள். என்னோடு கைகுலுக்கினாள். அவள் எனக்கு ஒரு வேதாகமம் கொடுத்தாள்.

என்னுடைய வாழ்க்கையில் முதல் முறையாக வேதா கமத்தை எடுத்த சந்தர்ப்பம் அதுதான். மூச்சுவிடுவதற்கே திணறிக் கொண்டிருந்த நிலவரத்தில் வேதாகமத்தை எடுத்து ஆதியாகம புத்தகத்தை திறந்தேன்.

வேதாகமத்தை அவள் தன் கையில் வாங்கி சிரித்துக் கொண்டே மத்தேயு சுவிசேஷ பகுதியை எடுத்து 'நீங்கள் மிகவும் சுகவீனமாயிருக்கிறீர்கள். ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல் வரை உங்களால் படிக்க முடியாது. மத்தேயு சுவிசேஷத்திலிருந்து ஆரம்பித்தால் நீங்கள் முடித்துவிடலாம் என்று சொன்னாள்.

மத தத்துவங்கள் ஆழ்ந்த படிப்பினைகள் அடங்கிய போதனைகள் இருக்கும் என்ற எதிர்பார்ப்போடு நான் படிக்க துவக்கினேன். ஆனால், ஆபிரகாம் ஈசாக்கை பெற்றான், ஈசாக்கு யாக்கோபை பெற்றான்; யாக்கோபு யூதாவையும் அவன் சகோதரரையும் பெற்றான் என்று வாசித்ததும் எனக்கு அதிர்ச்சியாயிருந்தது.

எனக்கு முட்டாள்தனமாக தோன்றியது. நான் வேதாக மத்தை மூடினேன். 'சிறுபெண்ணே நான் வேதாகமத்தை படிக்கப் போவதில்லை. இது ஒரு மனிதன் இன்னொரு மனி தனை பெற்ற கதை. இதை விட ஒரு டெலிபோன டைரக்டரியை படிக்கலாம்'

அவள் சொன்னாள் 'ஐயா, உடனடியாக அந்த பெயர்களை நீங்கள் விளங்கிக் கொள்ள முடியாது. ஆனால் நீங்கள் தொடர்ந்து வாசித்தால் ஒவ்வொரு

பெயர்களின் கருத்தையும் நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். அவள் அவ்வாறு சொன்னபடியால் ஆர்வம் அடைந்து வேதாகமத்தை வாசிக்கத் துவங்கினேன். ஜீவனுள்ள தேவன்

: நான் தொடர்ந்து படித்தபோது பெரிய தத்துவத்தையோ, வைத்திய ரீதியான கோட்பாடுகளையோ அல்லது மத சடங்காச்சாரங்களையோ நான் வேதாமகத்தில் காண வில்லை. ஆனால் குறிப்பிடத்தக்க ஒரு மைய கருத்தைக் கண்டேன். வேதாகமம் தொடர்ந்து தேவனுடைய குமார னாகிய இயேசு கிறிஸ்துவை பற்றி சொல்லுகிறது.

என்னுடைய மரணம் விரைவில் சம்பவிக்கக்கூடியதாக இருந்தால், மதத்தைவிட, தத்துவ ஞானத்தை விட, மனிதனின் அனுதாபத்தைவிட பெரிய காரியம் ஒன்று, என்னுடைய ஜீவியத்தில் தேவை என்பதை உணர்ந்தேன். என்னுடைய போராட்டங்களையும், பாடுகளையும் பகிர்ந்து கொள்ளக் கூடியவரும், இவை எல்லாவற்றிலும் எனக்கு ஜெயம் தருகிற வருமாகிய ஒருவர் எனக்குத்தேவை.

நான் வேதாகமத்தை வாசித்ததில் அந்த ஒருவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதான் என்பதைக் கண்டு கொண்டேன்.

அந்த இயேசு கிறிஸ்து ஒரு மதத்தையோ, ஒழுக்க அநுசாரங்களையோ, அல்லது தொடர்ச்சியான சடங்காச் சாரங்களையோ கொண்டுவரவில்லை. நடைமுறைப்படி பார்த்தால் இயேசு மனுக்குலத்திற்கு இரட்சிப்பை கொண்டுவந்தார். அவர் பாவத்தை வெறுத்து, பாவியை நேசித்தார். அவரிடத்தில் வந்த யாவரையும் அவர் ஏற்றுக் கொண்டார். என்னுடைய பாவங்களைக் குறித்து எனக்கு ஆழ்ந்த உணர்வு இருந்தபடியால் அவரிடமிருந்து பாவமன்னிப்பு தேவை என்பதை அறிந்து கொண்டேன்.

கிறிஸ்து நோயாளிகளை குணமாக்கினார். வியாதியஸ்தர்களும், பலவீனர்களும் அவரிடத்திலே வந்தார்கள். அவர்களைத் தொட்டு குணமாக்கினார். இது என்னுடைய : இருதயத்தில் விசுவாசத்தை உண்டாக்கியது. அவர் : என்னையும் குணமாக்கக் கூடும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

கலங்கியவர்களுக்கு கிறிஸ்து சமாதானத்தைக் கொடுத்தார். ''தேவனில் விசுவாசம் வையுங்கள். நீங்கள் கலங்கா திருங்கள்" என்று அவர் வற்புறுத்துகிறார். கிறிஸ்து பயத்தை வெறுத்தார். 'மனிதன் விசுவாசத்தால் பிழைப்பான் என்பதைக் காட்டவே அவன் பிறந்திருக்கிறான். கிறிஸ்து

விடத்தில் உதவி நாடி வந்தவர்களுக்கு அவர் நம்பிக்கை யையும் விசுவாசத்தையும் சமாதானத்தையும் கொடுத்தார். இப்பெரிய சத்தியம் என் இருதயத்தில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கியது.

கிறிஸ்து மரித்தோரை எழுப்பினார். அவர் மரித்தோருக்கு : ஜீவன் கொடுத்தார். அவர் அடக்க ஆராதனை நடத்தியதாக எங்கும் நாம் காணவில்லை . ஆனால் அவர் செய்த – ஆராதனை உயிர்த்தெழுதலின் ஆராதனை.

பிசாசு பிடித்த ஒருவன் மீது கிறிஸ்து காட்டிய இரக்கம் தான் என்னுடைய மனதில் ஆழப்பதிந்து விட்டது. கொரியா யுத்தத்தின் போது பலர் தங்கள் குடும்பங்களையும் வியாபா ரங்களையும் இழந்தனர். நரம்பு தளர்ச்சியின் காரணமாகப் பலர் பிசாசினால் பீடிக்கப்பட்டனர். தங்குவதற்கு இடமில்லா மல் தெருக்களில் சுற்றித்திரிந்தார்கள். இந்த சவாலை சந்திக்க கிறிஸ்து தயாரானார். அவர் பிசாசுகளைத் துரத்தினார். பிசாசு பிடித்தவர்களை விடுவித்து அவர்களது சுயநிலைக்குக் கொண்டு வந்தார். அவரிடத்தில் வந்த அனைவருக்கும் அவர் களுடைய ஜீவியத்திற்கும், தேவைகளுக்கும் கிறிஸ்துவின் – அன்பு வல்லமையுள்ளதாக இருந்தது.

இயேசு ஜீவிக்கிறார் என்ற மனத்தெளிவும், அவரது ஊழியத்தின் வல்லமையால் அசைக்கப்பட்ட நிலவரத்தில் நான் முழங்கால்படியிட்டேன். ’கிறிஸ்துவே நீர் என் இருதயத்தில் வாரும். என்னை இரட்சியும், என்னை குணப்படுத்தும், மரணத்தினின்று என்னை விடுவியும் என்று கேட்டேன்.

அந்த நேரத்திலேயே இரட்சிப்பின் சந்தோஷத்தினாலும் கிறிஸ்துவின் பாவமன்னிப்பால் கிடைத்த சமாதானத் தினாலும் என் உள்ளம் பொங்கி வழிந்தது. நான் இரட்சிக்கப் பட்டிருக்கிறேன் என்று அறிந்து கொண்டேன். நான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந்தேன். நான் குதித்து எழுந்து ஆர்ப்பரித்தேன். ’தேவனுக்கே மகிமை உண்டாவதாக !

அந்த நேரத்திலிருந்து பட்டினியாக கிடந்த ஒரு மனிதன் அப்பத்தை ஆவலுடன் உண்பது போல நான் வேதத்தை வாசித்தேன். வேதம் என்னுடைய விசுவாசத்திற்கு வேண்டிய அஸ்திபாரத்தை கொடுத்தது. என்னுடைய வியாதியை குறித்து டாக்டர் சொன்னதையும், என்னுடைய பழைய அச்ச உணர்வையும் மீறி நான் ஜீவிக்கப்போகிறேன் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. மூன்று மாதத்தில் சாகப் போகிறேன் என்ற

நிலவரத்திலிருந்த நான் ஆறு மாதத்தில் என் மரண படுக்கையை விட்டு எழுந்தேன் !

அந்த நேரத்திலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமை நிறைந்த சுவிசேஷத்தை (dynamic gospel) பிரசங்கிக்க ஆரம்பித்தேன். பெயர் தெரியாத அந்த சிறிய பெண் எனக்கு கற்பித்ததின் மூலமாக நான் என்றும் › அறியத்தக்கதான பெரிய விலையேறப் பெற்ற பெயரை நான் கற்றுக் கொண்டேன்.

கடந்து வந்த ஆண்டுகளில் விசுவாசத்தின் அநேக முக்கிய கொள்கைகளை நான் விளங்கிக் கொள்ள தேவன் எனக்கு உதவி செய்தார். இந்த கொள்கைகளைத்தான் தொடர்ந்து வரும் அதிகாரங்களில் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். ஏனென்றால், நீங்களும் ஆழமான பரிமாணத் திற்குள் நுழைந்து, இயேசு கிறிஸ்துவின் நிறைவான ஜீவனை அடைந்து கொள்ள வேண்டும்.

கிறிஸ்து மாறாதவர். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

கிறிஸ்து உங்களுடைய பாரங்களைச் சுமக்க விரும், கிறார். அவர் உங்களை மன்னிப்பார். உங்களை குணப்படுத்துவார். அவர்

பிசாசுகளைத் துரத்தி உங்களுக்கு நம்பிக்கையையும் விசுவாசத்தையும் சமாதானத்தையும் தருவார்.

கிறிஸ்து உங்களுக்கு நித்திய ஜீவனைத் தர விரும்புகிறார். உங்களுடைய அன்றாட ஜீவியத்தில் உங்களோடு இருக்க விரும்புகிறார். திருடன் கொல்லவும் அழிக்கவும் வருகிறான், இயேசு கிறிஸ்துவோ இலவசமாக ஜீவனைத் தரவும் அந்த ஜீவன் நிறைவாகவும் வருகிறார்.

பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தின் மூலமாக இயேசு இப்போதே உங்களோடு கூட இருக்கிறார். கிறிஸ்து உங்களைக் குணப்படுத்தவும் மரணத்தினின்று தப்புவிக்கவும் வாஞ்சிக்கிறார். அவர் உங்களுடைய ஜீவனுள்ள தேவன். உங்களுடைய விசுவாசத்தை இயேசு கிறிஸ்துவின் மீது வையுங்கள். உங்களுடைய ஜீவியத்தில் இன்றே, ஒரு அற்புதத்தை எதிர்பாருங்கள்.

டாக்டர். பால் வாங்கி சோ.

# 1. விசுவாசத்தின் விதிமுறை

## சிந்தையில் ஆழ்த்துதல் – விசுவாசத்தின் பிரமாணம்

நீங்கள் விசுவாசத்தின் தேவையை உணர்ந்து அதை உணர முயற்சிக்கும்போது உங்களில் விசுவாசம் இருக்கிறது என்பதைக் கண்டு கொள்ளலாம். எனக்கு இரண்டு கைகள் இருக்கின்றன என்பதை நான் தொட்டுப்பார்த்து தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஆனால் தேவை ஏற்படும்போது நீங்கள் எப்படி கைகளை நீட்டி, அசைத்து பயன் படுத்துகிறீர்களோ அதுபோல உங்களிலிருக்கும் விசு வாசத்தை நீங்கள் பயன்படுத்தவேண்டும்.

உங்களது தனிப்பட்ட விசுவாசத்தின் மூலமேயல்லாமல் தேவன் எந்த ஒரு கிரியையும் செய்வதில்லை . பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறபடி தேவன் நம் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளித்த விசுவாசம் உங்களிடம் உண்டு. அதை நீங்கள் உணர்ந்தாலும், உணராவிட்டாலும் விசுவாசம் உங்களுக் குள்ளேயே இருக்கிறது. இந்த விசுவாசம் கிரியை செய்யா விட்டால்

ஜெபங்களுக்குப் பதிலளிப்பவரோடு உங்களுக்கு தொடர்பு இல்லை .

விசுவாசம் கிரியை செய்யும் சில வழிகள் உண்டு. இந்த விசுவாசம், உங்களில் வாசமாயிருக்கும் பரலோகப் பிதாவோடு உங்களை இணைக்கிறது. நம்பப்படுகிறவைகளின் உறுதிதான் விசுவாசம் என வேதம் சொல்லுகிறது. இந்த உறுதி எப்படி ஏற்படுகிறதென்றால், கோழி தன் முட்டைகளை அடைகாக்கும் போது முட்டையிலுள்ள கருவுக்கு எப்படி ஒரு உருவம் ஏற்படுகிறதோ, அதுபோல நமது நம்பிக்கையை, நமது சிந்தையில் ஆழ்த்தும்போது அந்த நம்பிக்கைக்கு வளர்ச்சியும் உருவமும் ஏற்படுகிறது. என்னுடைய விசுவாசம் கிரியை செய்யத் தேவையான காரியங்கள் எவைகள்? என நீங்கள் கேட்கலாம். இவ்வாறு சிந்தையில் ஆழ்த்தும் நிலவரத்திற்கு நான்கு அடிப்படையான படிகள் உள்ளன.

## 1. தெளிவான நோக்கம்:

முதலாவதாக விசுவாசத்தை உபயோகிக்குமுன் உங்கள் கண்களுக்கு முன்பாக தெளிவான ஒரு நோக்கம் இருக்க வேண்டும். நம்பப்படுகிறவைகளைக் குறித்த தெளிவான உறுதியே விசுவாசம்.

நோக்கத்தைக் குறித்த தெளிவற்ற எண்ணம் உங்களுக்கு இருந்தால் உங்களுக்கு உறுதியும் தெளிவான இலக்கு தேவை. இந்தப் பாடத்தை நான் ஒரு அசாதாரணமான சூழ்நிலையில் கற்றுக் கொண்டேன்.

என் ஊழியத்தில் சில மாதங்கள் முற்றிலும் வறுமையிலிருந்தேன். எந்தவிதப் பொருட்களும் என்னிடம் இருந்த தில்லை. மேஜையோ, நாற்காலியோ, படுக்கையோ கிடையாது. அப்போது திருமணமாகாததால் ஒரு சிறிய அறையில் வசித்து வந்தேன். சாப்பிடுவதும், தூங்குவதும் படிப்பதும் தரையிலே தான். ஆத்தும ஆதாயத்திற்காக ஒவ்வொரு நாளும் பலமைல்கள் நடந்தே சென்றேன்.

ஒருநாள் வேதாகமத்தை வாசித்தபோது, ஆண்டவரின் ஆச்சரியமான வாக்குத்தத்தங்களைக் கண்டு பூரித்துப் போனேன். இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து அவருடைய நாமத்தில் ஜெபித்தால் எல்லாவற்றையும் நான் பெற்றுக் கொள்ள முடியும் என வேதம் சொல்லுகிறது. நான் இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிற தேவனுடைய பிள்ளை என்றும் வேதம் போதிக்கிறது.

எனவே, 'பிதாவே! இராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தருமாயிருக்கிறவரின் பிள்ளை, மேஜையில்லாமலும், படுக்கையில்லாமலும், சைக்கிள் இல்லாமலும் ஏன் இருக்க வேண்டும். ஒரு சாதாரண மேஜை, நாற்காலி, சைக்கிள் இருந்தால் கூட போதுமே!

"பிதாவே எனக்கொரு மேஜை, நாற்காலி, சைக்கிள் தாரும்' என்று கேட்டேன். அவர் அப்படி செய்வார் என விசுவாசித்து தேவனுக்கு நன்றி செலுத்தினேன்.

அந்த வேளையிலிருந்து ஆண்டவரிடம் நான் கேட்ட பொருட்கள் கிடைக்கும் என்று காத்திருந்தேன். ஒன்று, இரண்டு என ஆறு மாதங்கள் கடந்தும் காத்திருக்க வேண்டியதாயிற்று. ஆனால் எதுவும் சம்பவிக்கவில்லை. மழைக் காலத்தில் ஒருநாள் பசியில் வாடி, களைத்து சோர்ந்திருந்த வேளையில் ஆண்டவரிடம் இப்படி முறையிட்டேன்.

'தேவனே, பலமாதங்களுக்கு முன் மேஜை, நாற்காலி, சைக்கிளுக்காக உம்மிடம் ஜெபித்தேன். ஆனால் இதுவரை அவைகளைத் தரவில்லை. நானோ வறுமையில் வாழும் ஏழை மக்களிடம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறேன். நானே விசுவாசத்தைப் பயிற்சிக்காத போது,

அவர்களைப் பயிற்சிக் கும்படி எப்படி சொல்ல முடியும்? ''அப்பத்தினால் மட்டுமல்ல, தேவனுடைய வார்த்தையினால் மெய்யாகவே பிழைக்க முடியும், தேவனிடத்தில் விசுவாசம் வையுங்கள்'' என்று எப்படி நான் சொல்ல முடியும்? என் பிதாவே! நான் மிகவும் சோர்ந்து விட்டேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், நான் தேவனுடைய வார்த்தையை மறுக்கமுடியாது. அந்த வார்த்தை நிலை நிறுத்தப்படவேண்டும். இந்த முறை நீர் என் ஜெபத்திற்கு பதிலளிக்கப்போகிறீர் என்று நான் நிச்சயித் திருக்கிறேன். ஆனால் எப்போது, எப்படி செய்யப்போகிறீர் என்பது தான் எனக்குத் தெரியவில்லை. நான் செத்துப் போன்பின் என் ஜெபத்திற்குப் பதில் வந்து பயன் என்ன? என் ஜெபத்திற்கு நீர் பதில் கொடுக்க விரும்பினால் தயவு செய்து அதை சீக்கிரமாய் செய்யும்

பிறகு, நான் உட்கார்ந்து அழ ஆரம்பித்தேன். உடனே அமைதியும் சமாதானத்தின் உணர்வும் என் உள்ளத்தில் வருவதை உணர்ந்தேன். இது போன்ற உணர்வு ஏற்படும் போதெல்லாம் தேவ பிரசன்னத்தை நான் உணர்ந்திருக் கிறேன். தேவன் நம்மோடு பேசுகிறவர். ஆகவே நான் காத்திருந்தேன். அப்போது அவரது மெல்லிய சத்தம் என்

ஆவியையும் ஆத்துமாவையும் நிரப்பிற்று. "மகனே, உன் ஜெபத்தை நான் நீண்ட நாட்களுக்கு முன்பாகவே கேட்டேன்" என்று கர்த்தர் பேசினார்.

அப்படியானால் மேஜை, நாற்காலி, சைக்கிள் எல்லாம் எங்கே? என்றேன்.

"பிரச்சினை உன்னிடத்தில்தான் இருக்கிறது. எனது பிள்ளைகள் அனைவரும் இப்படியே செய்கிறார்கள். பல விதமான தேவைகளைச் சொல்லி என்னிடத்தில் கெஞ்சி கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் கேட்பவற்றில் தெளிவு இல்லாத காரணத்தால் அவர்களது ஜெபத்திற்கு எனக்கு பதிலளிக்க முடிவதில்லை. மேஜைகளில், நாற்காலிகளில், சைக்கிள்களில் பலவிதங்கள் இருப்பது உனக்குத் தெரியாதா? நீ, மேஜை, நாற்காலி, சைக்கிள் என்று பொதுவாகக் கேட்டாயே அல்லாமல் இன்ன மேஜை, இந்த நாற்காலி, இந்தவிதமான சைக்கிள் என நீ எதையும் குறிப்பிட்டுக் கேட்கவில்லையே' என்றார்.

இது என் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாய் இருந்தது. வேதாகம கல்லூரியில் எந்த பேராசிரியரும் இந்த விதமாக எனக்குப் போதிக்கவில்லை. நான் தவறு செய்து விட்டேன். ஆனால் இதுவே என் கண்கள் திறக்கப்பட ஏதுவாயிருந்தது. முழங்கால்

படியிட்டு கர்த்தாவே, உண்மை யிலேயே திட்ட வட்டமான வார்த்தைகளினால் நான் ஜெபிக்கும்படி விரும்புகிறீரா? கர்த்தர், எபிரேயர் 11ம் அதிகாரத்திற்கு திருப்ப என்னை ஏவினார். 'விசுவாசம் நம்பப்படுவதில் உறுதி' ஆம். நம்பப்படுவதில் தெள்ளத் தெளி வான உறுதி. நான் மீண்டும் முழங்கால் படியிட்டேன். பிதாவே, நான் எனது தவறுக்கு வருந்துகிறேன். நான் உம்மைத் தவறாக விளங்கிக் கொண்டேன். நான் எனது பழைய ஜெபத்தை தள்ளிவிட்டு புதிதாக துவங்கப் போகிறேன்.

நான் உம்மை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. என்னை மன்னியும். நான் மேஜையின் அளவையும் சொல்லி அது வெண்தேக்கினால் செய்யப்பட்டிருக்க வேண்டு மென்றும், இரும்புச் சட்டமுள்ள உயர சுழல் நாற்காலியும், அமெரிக்காவில் செய்யப்பட்ட உயர்ரக உறுதியான சைக்கிளையும் தாரும் என்று ஜெபித்தேன். இவைகளைத் தாரும் என்று ஆண்டவரிடத்தில் ஜெபித்த போது என் இதயத்திலிருந்து விசுவாசம் நிரம்பி வழிந்தோடுவதை உணர்ந்தேன். கர்த்தருக்குள் மகிழ்ந்து களி கூர்ந்தேன். அன்றிரவு, ஒரு குழந்தையைப் போல நிம்மதியாக படுத்துறங் கினேன். அடுத்த நாள் காலை 4.30 மணிக்கு

எழுந்த போது என் இதயம் வெறுமையாயிருப்பதை உணர்ந்தேன். முந்தின நாள் மாலைவரை எனக்கு உலகத்தின் மீதான விசுவாசமிருந்தது ஆனால் தூங்கியபோது எனது விசுவாசம் சிறகடித்து பறந்து விட்டது. என் இருதயம் சலனமற்று இருந்தது. ’பிதாவே இது மிகக் கடினமாக உள்ளது. விசுவாசமாயிருப்பது ஒரு நல்ல காரியம் தான். ஆனால், ஜெபத்திற்குப் பதிலைப் பெற்றுக் கொள்ளுகிற வரைக்கும் தொடர்ந்து, விசுவாசிப்பது என்பது முற்றிலும் வித்தியாசமாய் இருக்கிறது” என்றேன்.

இது எல்லாக் கிறிஸ்துவர்களிடமும் காணப்படும் பொது வான பிரச்சினைதான். அவர்களுக்கு விசேஷித்த பிரசங் கியார் வரும்போது விசுவாசத்தில் நிறைந்தவர்களாகக் காணப்படுவார்கள். ஆனால் கூட்டம் முடிந்து வீட்டிற்குப் போனதும் எல்லாவற்றையும் இழந்து விடுவார்கள். அவர்கள் விசுவாசம் செட்டைகளை அடித்துப் பறந்து போய்விடும்.

காலை எழுந்து வேதத்தை வாசித்து வேதத்தின் மூலம் தேவன் என்னோடு பேசவேண்டுமெனக் காத்திருந்த போது

'மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவராயிருக்கிற தேவன்' என்ற ரோமர் 4:17 வசனத்தின் மேல் என் கண்கள் பதிந்தன. என் உள்ளம் அந்த வசனத்தை பற்றிக் கொண்டது. அந்த வார்த்தை என் உள்ளத்தை அனல் கொள்ளச் செய்தது. விசுவாசத்தைக் காத்துக் கொள்வது எப்படி என்ற என் பிரச்சினைக்குப் பதிலை இங்கே பெற்றுக் கொண்டேன்.

எங்களுடைய கூடார ஆலயத்திற்கு நான் விரைந்தேன். ஏற்கனவே அங்கே மக்கள் கூடி ஜெபித்துக் கொண்டிருந் தார்கள். சில பாடல்கள் பாடினபின் நான் பிரசங்கிக்கத் துவங்கினேன். எனக்கு வெளிப்படுத்தித் தந்த அந்த வேதபகுதியை நான் விளக்கிச் சொன்னேன். அதன் பிறகு ஆண்டவர் எனக்கு வெண்தேக்கு மேஜையும், அழகான சுழல் நாற்காலியும், அமெரிக்க சைக்கிள் ஒன்றையும் எனக்குக் கொடுத்திருக்கிறார். இவையெல்லாவற்றையும் நான் பெற்றுக் கொண்டேன். அல்லேலூயா! என்று சொன்னேன்.

வறுமையில் வாடின எனக்கு இவைகளை எப்படி வாங்க முடிந்தது என்று ஆச்சரியப்பட்டார்கள். நான் அதை

பெருமிதத்தோடு சொல்லிக் கொண்டிருந்தேன். அவர்கள் தங்கள் காதுகளையே நம்பமுடியவில்லை. தேவனுடைய வார்த்தை சொல்லுகிறபடி விசுவாசத்துடன் நான் தேவனைத் துதித்துக் கொண்டிருந்தேன்.

ஆராதனை முடிந்து நான் வீட்டிற்கு திரும்பும்போது மூன்று இளைஞர்கள் என் வீட்டிற்கு வந்தனர். போதகரே. 'நாங்கள் அந்தப் பொருட்களைக் காண விரும்புகிறோம் என்றனர். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நான் பயந்தேன். அவர்களிடம் காட்டுவதற்கு என்னிடம் ஒன்றுமில்லை.

இந்த மக்கள் குடிசைப்பகுதியில் வாழ்கிறவர்கள், நான் பொய் சொல்லியிருக்கிறேன் என்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டால், அதுவே என்னுடைய ஊழியத்திற்குக் கடைசி கட்டமாக இருக்கலாம் அவர்களும் ஆலயத்திற்கு இனிவர மாட்டார்கள். நான் மிகுந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்தேன். ஆகவே தேவனை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தேன். 'ஆண்டவரே இந்த எண்ணம் என்னுடையதல்ல; உம்முடையது. நான் செய்தது உமக்கு முற்றுமாய் கீழ்ப்படிந்திருக்கிறேன் இப்போது நெருக்கடியான சூழ்நிலை யிலிருக்கிறேன்

நான் பெற்றுக் கொண்டதாகச் சொன்னேன் அதை அவர்களுக்கு நான் எப்படி விளக்கிச் சொல்ல முடியும்? நீரே எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஜெபித்தேன்.

அப்போது ஆண்டவர் எனக்கு உதவி செய்தார். என்னுடைய இருதயத்தில் ஒரு எண்ணம் தோன்றியது ”என் அறைக்குள் வந்து பாருங்கள்“ என்று சொன்னேன். அவர்கள் என் அறைக்கு வந்து சைக்கிளையும் நாற்காலியையும் மேஜை யையும் காண சுற்று முற்றும் பார்த்தார்கள். ’நீங்கள் சுற்று முற்றும் பார்க்க வேண்டாம் நான் பின்னர் காட்டுகிறேன். என்று சொன்னேன். அவர்களில் ஒருவரான திரு பார்கர் என்ற இளைஞனைப் பார்த்து (இவர் இப்போது கொரியாவில் ஒரு பெரிய சபையின் போதகர்) ”நான் உங்களிடத்தில் சில கேள்விகள் கேட்பேன் நீங்கள் என்னுடைய கேள்விகளுக்குப் பதிலளித்தால் அந்தப் பொருட்களை உங்களிடத்தில் காட்டுவேன்“ என்று சொல்லி ஆரம்பித்தேன். நீங்கள் பிறக்குமுன் தாயின் வயிற்றில் எவ்வளவு காலம் இருந்தீர்கள்?

அவன் தலையைச் சொறிந்தவண்ணம், ’ஒன்பது மாதங்கள்’ என்றான் ’ஒன்பது

மாதங்களும் என்ன செய்தீர்கள்?' 'நான் வளர்ந்து கொண்டிருந்தேன்.'

ஆனால் அப்போது யாரும் உங்களைப் பார்க்கவில்லை அல்லவா?

'ஆம் அப்படித்தான். நான் என் தாயின் வயிற்றிலிருந்த படியால் யாரும் என்னைக் காணமுடியாது.

'சரியாக சொன்னாய் பிறர் காண முடியாமல் நீ வயிற்றுக்குள் இருந்தது எவ்வளவு உண்மையோ, அது போல மேஜை, நாற்காலி, சைக்கிள் எல்லாம் எனக்குள் உருவாகி வளர்ந்து கொண்டிருக்கிறது. ஏற்ற காலத்தில் அவைகள் வெளிப்படும்' என்றேன்.

அவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். குறும்புக்கார வாலிபர்கள்! 'பாஸ்டர் பேறுகாலமாக இருக்கிறார். அவர் வயிற்றுக்குள் மேஜை, நாற்காலி வளர்ந்து கொண்டிருக்கிறது. என்று ஊரெல்லாம் டமாரம் அடித்தார்கள் சபையினரெல்லாம் என் வயிற்றைப் பார்த்துப் பார்த்து கேலி செய்தார்கள்.

ஆனால் இந்தப் பொருட்களைப் பெற்றுக் கொள்வேன் என்ற நம்பிக்கை எனக்குள் வளர்ந்து கொண்டே இருந்தது. தாயின் வயிற்றில் வளரும் பிள்ளை வெளிப்பட

நாட்கள் ஆவது போல, இதற்கும் நாள் ஆகலாம்.

உறுதியான விசுவாசத்தோடு தேவனை துதித்துக் கொண்டிருந்த எனக்கு அந்த வேளை வந்தது. நான் கேட்ட அதே வெண் தேக்கு மேஜை, ஜப்பானின் உயர்ந்தரக சுழல் நாற்காலி, அமெரிக்காவில் தயாரான அழகான ஒரு சைக்கிள் இவையெல்லாவற்றையும் ஆண்டவர் எனக்கு ஒரு அமெரிக்க மிஷனெரி ஊழியரின் மகன் மூலம் தந்தார். இந்நிகழ்ச்சி எனது ஜெப பழக்கத்தை முற்றிலும் மாற்றியமைத்தது.

அதற்கு முன் ஏதோ தெளிவில்லாமல் ஜெபிப்பேன். ஆனால், அன்று முதல் இன்று வரை திட்டமும், தெளிவுமாக ஜெபிக்க ஆரம்பித்தேன். நமது தெளிவற்ற ஜெபங்களுக்கு தேவன் பதிலளிக்க முடியவில்லை. குறிப்பிட்ட காரியத்தை பற்றித் தெளிவோடும், முழு நிச்சயத்தோடும் தேவனிடத்தில் கேட்க வேண்டும்.

தெளிவற்ற ஜெபங்களைத் தேவன் விரும்புவதில்லை பர்த்திமேயு என்ற குருடன் இயேசுவிடம் வந்து, இயேசுவே தாவீதின் குமாரனே! எனக்கு இரங்கும்' என்று கூப்பிட்டான். அவன் பார்வையடைய வேண்டும் என விரும்பி ஆண்டவரைக்

கூப்பிடுகிறான் என எல்லோருக்கும் தெரியும். ஆனால், இயேசு அவனைப் பார்த்து, உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாய்?’ என்றார். அவனுக்கு எது தேவையோ, அதை அவனே திட்டமும் தெளிவுமாக கேட்கும்படி இயேசு விரும்பினதால் இப்படிக் கேட்டார். நான் பார்வையடைய வேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி, ’நீ பார்வையடைவாயாக’ என்றார். உடனே அவன் பார்வையடைந்தான். லூக்கா: 18:42.

அவன் பார்வையடைவதைப் பற்றித் திட்டமாக ஜெபிக்காத போது கிறிஸ்து ஆரோக்கியத்தை வாக்களிக்கவில்லை. நீங்கள் ஒரு விண்ணப்பத்தோடு ஆண்டவரிடம் வரும் போது, குறிப்பிட்ட வேண்டுதலைக் குறித்த தெளிவான நோக்கத்தோடும், திட்டமான கருத்தோடும் ஜெபியுங்கள்.

நான் ஒருமுறை ஒரு சபையின் போதகரைக் காணச் சென்றிருந்தேன் அப்போது அந்த போதகரின் மனைவி என்னை போதகரின் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்த போதகர் என்னிடம் ஒரு பெண்ணுக்கு ஜெபிக்க வேண்டு மென்றார். நான் எதற்காக? என்றேன். அவளது

திருமணத்திற்காக ஜெபிக்க வேண்டும். இன்னும் அவளுக்குக் கணவன் கிடைக்கவில்லை . என்றதும், அவளை வரச் சொன்னேன். அவள் உள்ளே வந்தாள்.

முப்பது வயது மதிக்கத்தக்க அழகான அப்பெண்ணிடம், ஒரு கணவன் வேண்டுமென எவ்வளவு காலமாக ஜெபிக் கிறீர்கள்?' என்றேன்.

'பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஜெபிக்கிறேன் என்றாள். பத்து ஆண்டுகளாகியும் உன் ஜெபம் கேட்கப்படவில்லையா ? எப்படிப்பட்ட கணவனுக்காக ஜெபிக்கிறாய்?.

அவள் திருதிருவென்று விழித்தாள். 'அது தேவனைப் பொறுத்தது. அவருக்கு எல்லாம் தெரியும். தவறு உன்னிடத்தில் தான் இருக்கிறது. தேவன் நித்தியமானவர். சகல நன்மைகளுக்கும், ஊற்றும் காரணர், நீ தெளிவாய்க் கேட்பதைப் பொறுத்தே அவர் கிரியை செய்வார். நான் உனக்காக ஜெபிக்க விரும்பிகிறாயா?

“ஆம் !”

1. அப்படியானால், உட்கார்ந்து நான் கேட்பவைகளுக்கு

இந்த தாளில் பதில் எழுது. அவர் கறுப்பு நிறமா? பொது நிறமா? அல்லது சிகப்பு நிறம் உள்ளவராய் இருக்க வேண்டுமா?

பொது நிறம்.

2. 'அவர் ஆறடி உயரமுள்ளவரா? அல்லது ஐந்தடியா?'

'எனக்கு உயரமானவர் தேவை

3. 'அவர் அழகான தோற்றமுடையவராய் இருக்க வேண்டுமா? அல்லது கொழுத்த சரீரம் உடையவரா?'

'அழகான தோற்றம் உடையவர்'

4. அவருக்கு என்ன பொழுது போக்கு இருக்கவேண்டுமென விரும்புகிறாய்?

'இசையில் நாட்டம் உடையவராய் இருக்க வேண்டும்'

5. அவருக்கு என்ன உத்தியோகம்?

'பள்ளி ஆசிரியர்'

இப்படி தொடர்ந்து பத்துக் கேள்விகளைகக் கேட்டேன். எல்லாவற்றிற்கும் பதில் எழுதின பின் அதை வாசிக்கச் செய்தேன். 'கண்களை மூடு. இப்போது உன் கணவனைக் காணமுடிகிறதா?' என்றேன்.

’ஆம். அவரைத் தெளிவாகக் காண்கிறேன்: தேவன் தெளிவற்ற ஜெபங்களுக்குப் பதில் அளிப்பதில்லை. நீ ஜெபிக்கும் முன் உன் ஜெபத்தைக் குறித்த தெளிவான நோக்க முடையவளாய் இருக்க வேண்டும் என்று சொன்னேன்.

அவள் முழங்காலிட்டாள். ’ஆண்டவரே, அவள் தன் கணவனை தெளிவாகக் காண்கிறாள். நானும் அப்படியே காண்கிறேன். அவளது கணவன் யார் என உமக்குத் தெரியும். எனவே இயேசுவின் நாமத்தில் அவள் கணவனை அவளுக்குக் கட்டளையிடும் ! என ஜெபித்தேன்.

”சகோதரி, நீங்கள் எழுதின இந்தத் தாளை எடுத்துச் சென்று உங்கள் கண்ணாடியின் முன் நிறுத்திவையுங்கள் – ஒவ்வொருநாள் காலையிலும், மாலையிலும், இந்தக் குறிப்பு களைச் சத்தமாய் வாசித்து, ஆண்டவர் உன் ஜெபத்திற்குப் பதில் தருவார் என்று நம்பி ஆண்டவருக்கு நன்றி செலுத்திக் கொண்டிரு“ என்றேன்.

ஒராண்டுக்குப்பின், நான் அந்த வழியே சென்றபோது அந்தப் போதகரின் மனைவி தங்கள் வீட்டிற்கு மதிய உணவருந்த அழைத்தார்கள். நான் அங்கு சென்றபோது,

அந்தப் பெண்ணுக்குத் திருமணமாயிற்று என்று சொன் னார்கள்.

ஒரு உயர்நிலைப்பள்ளி இசை ஆசிரியருக்கும் அவளுக்கும் ஓராண்டுக்குள், இவள் ஜெபித்த விதமாகவே அதே தோற்றம் உள்ள மணமகனுடன் திருமணம் நடந்தது. அவள் இப்போது சந்தோஷமாய் இருக்கிறாள். அவளது திருமண நாளில் அப்பெண்ணின் தாயார் பத்துக் குறிப்புகள் உள்ள அந்தத் தாளை அனைவருக்கும் முன்பாக வாசித்துக் காட்டினார்கள் இது ஒரு கதையைப் போல இருந்தாலும் அது அப்படித்தான் நிகழ்ந்தது.

நான் ஒரு காரியத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். தேவன் உங்களுக்குள் இருக்கிறார். ஆனால் உங்களது வாழ்வைக் குறித்த எந்த விஷயத்திலும் தேவன் தானாகக் கிரியை செய்வதில்லை. உங்களது விசுவாசம். சிந்தனை மூலமாக மட்டுமே தேவன் கிரியை செய்ய முடியும். எனவே, கர்த்தரிடத்திலிருந்து பதிலை எதிர்பார்க்க விரும்பினால் தெளிவான நோக்கத்தோடு ஜெபிக்க வேண்டும்.

ஆண்டவரே ! என்னை ஆசீர்வதியும், என்னை ஆசீர்வதி யும் என்று சொல்லாதே. பரிசுத்த வேதாகமத்தில் எத்தனை ஆசீர்வாதங்கள் உண்டு என உனக்குத் தெரியாது. அதில் எட்டாயிரத்துக்கும்

மேற்பட்ட வாக்குத்தத்தங்கள் உள்ளன. ’தேவனே, என்னை ஆசீர்வதியும்’ என்று மட்டும் சொன்னால், 8000 வாக்குத்தத்தங்கள் உள்ளன; அதில் எந்த ஆசீர்வாதத்தை நீ விரும்புகிறாய்? என தேவன் உன்னிடம் கேட்க வேண்டியதாகும் எனவே, திட்டமான நோக்கத்தோடு ஜெபி.

1960–ஆம் ஆண்டில் என் சபையின் எழுப்புதலுக்காக ஜெபித்தபோது ஒவ்வொரு ஆண்டிலும் ஆயிரம் ஆத்துமாக் களைத் தாரும் என்று ஜெபித்தேன். அதன்படி 1969 வரை ஒவ்வொரு வருடமும் ஆயிரம் பேர் புதிதாகச் சபையில் சேர்ந்தனர்.

ஆனால் 1969 ல் என் சிந்தையையும், நினைவையும் மாற்றிக் கொண்டேன். ஓர் ஆண்டிற்கு ஆயிரம் ஆத்துமாக் களைத் தருகிற ஆண்டவர், மாதந்தோறும் ஆயிரம் ஆத்துமாக் களைத் தரும்படி ஏன் நான் கேட்கக் கூடாது? எனவே 1970 முதல் பிதாவே! மாதந்தோறும் ஆயிரம் ஆத்துமாக்களைத் தாரும்’ என்று ஜெபிக்க ஆரம்பித்தேன்.

முதலில் 600 தான் கொடுத்தார். பின்பு ஒவ்வொரு மாதமும் 1000 ஆத்துமாக்களைத் தந்தார். அடுத்த ஆண்டில் 12000–க்கு மேல் ஆத்துமாக்கள் கிடைத்தனர். அதற்கடுத்து

ஆண்டில் கூடுதலாக 15000 பேர் கிடைத்தனர். அதற்கடுத்து வருடத்தில் 20000 பேரைக் கேட்டேன். தெளிவான நோக்கத்தோடு திட்டமாய் ஜெபித்தால் நீங்கள் நிச்சயம் அதைப் பெறுவீர்கள்.

10,000 பேர் அமரத்தக்க இப்போதுள்ள ஆலயத்திற்கு – கான்கிரீட் போடும் முன்பே அதன் அமைப்பைத் தெளிவாக மனதிலே கண்டேன். ஆயிரக்கணக்கான முறை அந்தக் கட்டிடத்தில் நடந்து திரிந்தேன் பரிசுத்த ஆவியானவரின் திரள் கூட்டமான மக்கள் அந்த ஆலயத்தில் வருவதைக் கற்பனை செய்து பார்த்தபோது எனக்கே ஆச்சரியமாய் இருந்தது. உன்னுடைய உணர்வுகளில் எதை நீ உணருகிறாயோ அதைக் குறித்த தெளிந்த நோக்கமும், தரிசனமும் இருக்க வேண்டும். இந்த விசுவாச சட்டத்தை பயிற்சி செய்யாவிடில் நீ கேட்கிற எதற்கும் மெய்யான பதிலைப் பெறுவது கடினம்.

## 2. அனல் பற்றும் வாஞ்சை வேண்டும்

இரண்டாவதாக, ஒன்றைக் குறித்த தெளிவான தரிசனம் உங்களில் இருக்கும் போது அதைப் பற்றிய அவியாத விருப்பமும் உங்களில் இருக்க வேண்டும். அநேகர், 'தேவனே, என் ஜெபத்திற்குப் பதில் தாரும் என்று சாதாரணமாக ஜெபிக்கிறார்கள். அவர்கள்

ஆலயத்தை விட்டு வெளியே போனவுடன் எதற்காக ஜெபித்தோம் என்பதையே மறந்து விடுகிறார்கள். இப்பழக்கம் ஒருபோதும் விசுவாசத்தைக் கொண்டு வருவதுமில்லை, அது தேவனைப் போய் எட்டுவது மில்லை. உங்களுக்கு அனல் பற்றும் தீராத வாஞ்சை வேண்டும்.

நீதிமொழிகள்:10:24–ல் நீதிமான் விரும்புவது அவனுக்குக் கொடுக்கப்படும் என்றும், சங்கீதம் 37:4ல் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார் என்றும் காண்கிறோம். ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்குள் எரிந்து கொண்டிருக்க வேண்டும். அதைத் தொடர்ந்து உங்கள் மனக்கண்களில் வைத்துப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

1958–ல் நான் என் ஊழியத்தைத் துவங்கின போது கொரியாவிலேயே மிகப்பெரிய ஆலயத்தைக் கட்டி எழுப்ப வேண்டுமென்ற எண்ணம் என் ஆத்துமாவில் அக்கினியாய் எரிந்து கொண்டிருந்தது. இந்த அக்கினியோடு நான் வாழ்ந்தேன், உறங்கினேன். நடந்தேன். இப்போது இருபது ஆண்டுகளுக்குப் பிறகு என்னுடைய ஆலயம் உலகிலேயே மிகப்பெரிய ஆலயம்

என பேசப்படுகிறது. உங்கள் இருதயத்தில் வாஞ்சை பற்றியெரிய வேண்டும். அப்படியிராவிட்டால் தேவன் உங்களில் அப்படிப்பட்ட வாஞ்சையை வைக்கும்படி ஜெபித்துக் காத்திருங்கள். அனலுமின்றி, குளிருமின்றி நீங்கள் வெது வெதுப்பாக வாழ்வதை தேவன் விரும்பாமல் நீங்கள் ஒரு அக்கினிப் பிழம்பாக மாறவேண்டும் என விரும்புகிறார். ஒன்றைப் பெறவேண்டும் என்ற வாஞ்சை உங்களில் அக்கினியாய் எரியும் போது நீங்கள் பலன்களைப் பெறுவீர்கள்.

## 3. நிச்சயத்தை பெற ஜெபிக்க வேண்டும்

மூன்றாவதாக, காரியத்தைக் குறித்த நிச்சயம் உங்களுக்கு இருக்க வேண்டும். உங்களுக்குத் தெளிவான நோக்கம் இருக்கும் போது, அதைப் பெறவேண்டும் என்ற வாஞ்சை உங்களில் பற்றியெரிந்து கொண்டிருக்கும் வேளையில், இப்போது நீங்கள் முழங்கால் படியிட்டு நாம் அதைப் பெற்றுக் கொள்வோமென்ற நிச்சயம் ஏற்படும் வரை ஜெபிக்க வேண்டும்.

ஹவாய் பகுதியில் நான் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்த போது, ஒரு ஜப்பானிய பெண்மணி என்னிடம் வந்து, “நிச்சயத்தைப்

பெறுவதற்கு எவ்வளவு நேரம் ஜெபிக்க வேண்டும்“ என்றாள். சிலவேளை ஒரு நிமிஷம் போதும். அக்காரியத்தில் அவளுக்கு சமாதானமும், உறுதியும் இருந்தால், அதற்குமேல் அவள் ஜெபிக்க வேண்டியதில்லை.

நிச்சயத்தைப் பெற உங்களுக்கு இரண்டு நிமிஷமோ, இரண்டு மணியோ, இரண்டு வாரங்களோ, இரண்டு மாதங்களோ, இரண்டு வருஷங்களோ ஆகலாம். உங்களுக்கு மனதில் நிச்சயம் உண்டாகும் வரை ஜெபிக்க வேண்டும் என்றேன்.

பலரது வாழ்க்கையில் எல்லாம் அவசரமயம். குடும்பத்தினரோடு, நண்பர்களோடு செலவழிக்க நேரமில்லை. கர்த்தரிடம் காத்திருக்க நேரமில்லை எல்லாம் அவசரம்தான். திடீர் காலை உணவு, தொலைக்காட்சி விருந்து, அவசர உணவகம் இப்படி ஐந்தே நிமிடங்களில் எல்லாவற்றையும் முடிப்பது. ஆலயத்திற்குச் செல்லும்போது அவசரம் அவசரமாக, ’தேவனே, எனக்குப் பதில் கொடும். எனக்கு காத்திருக்க நேரம் இல்லை. எனவே உடனே பதில் தேவை. இல்லாவிட்டால் இக்காரியத்தை விட்டுவிடும்’ என்று ஜெபிப்ப

வர்களும் உண்டு அவர்கள் தேவனிடம் காத்திருப்பதில்லை.

கொரிய நாட்டு சபைகளில் பொழுதுபோக்கு என்பது எதுவும் இல்லை . அறிவிப்புகள் மிகக் குறைவு. தேவ வார்த்தைக்கே முதலிடம் தரப்படும். வசனத்தை இரண்டு அல்லது மூன்று பேர் பிரசங்கித்த பின் ஆராதனையை முடிப்போம். தேவ வார்த்தை முதலிடம் பெற்று வருகிறது.

அலபாமா என்ற இடத்தில் ஒரு மாலை ஆராதனையில் பிரசங்கிக்க அழைக்கப்பட்டேன். ஏழு மணிக்குத் துவங்கின அந்த ஆராதனையில் இரண்டு மணி நேரம் பாடலும், அறிவிப்பும் நடந்தது. நான் அமர்ந்தவண்ணம் தூங்கி விடலாம் போல் இருந்தது. மக்கள் களைத்துப் போனார்கள். பிரசங்கியார் என்னைப் பார்த்து, 'போதகரே ! பத்து நிமிடம் மட்டும் பிரசங்கித்தால் போதும், இன்றிரவு எங்களுக்கு நல்ல தாரு T.V. நிகழ்ச்சி உண்டு. தயவுசெய்து பத்து நிமிடம் பிரசங்கித்தால் போதும் என்றார். அவருடைய அழைப்பிற்கு இணங்கி, கொரியாவிலிருந்து இவ்வளவு தூரம் பயணம் செய்து, பத்து நிமிடம் பேசுவதற்காகவா வந்தேன் !

இப்படிப்பட்ட சபைகளில் பூரண ஆசீர்வாதத்தைக் காண முடியாது. சபைகளில் அதிகமாகத் துதிப்பதும், கர்த்தரிடத்தில் காத்திருப்பதும் தெளிவாகப் பிரசங்கிப்பதும் அவசியம். அது, விசுவாசத்தைத் தட்டி எழுப்பும். மனதில் நிச்சயம் உண்டாகும் வரை கர்த்தரிடத்தில் காத்திருக்க வேண்டும். பத்தாயிரம் பேர் அமரக்கூடிய ஒரு பெரிய ஆலயத்தைக் கட்டி முடிப்பதற்கு ஏறக்குறைய பதினைந்து கோடி ரூபாய் தேவைப்பட்டபோது எனக்கு ஒரு தெளிவான தரிசனமும், தெளிவான நோக்கமும் இருந்தது அத்துடன் அதைக் கட்டி முடிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் அக்கினியாய் எரிந்து கொண்டிருந்தது, ஆனால் என் இதயத்தில் பயம் இருந்தது. நான் நடுங்கித் திகைத்து, நம்பிக்கையற்று இருந்தேன். பதினைந்து கோடி ரூபாய் பணம் எவரெஸ்டு சிகரத்தைப் போல் எனக்கு எட்டாத உயரமாய் தோன்றியதால் நான் திகிலடைந்த முயலைப் போல் இருந்தேன்.

பணக்கார வெளிநாட்டினருக்கு ஒரு கோடி ரூபாய் என்பது ஒரு பெரிய தொகை அல்ல. ஆனால் கொரியர்களாகிய எங்களுக்கு அது மிகப் பெரும் தொகை. எனவே நான் கதறி அழ ஆரம்பித்தேன். ஆண்டவரே, அவர்கள் வேலையைத் துவங்கி விட்டனர். எனக்கு

இதுவரை நம்பிக்கை ஏற்பட வில்லை. இவ்வளவு பெரிய தொகையை நான் எங்கிருந்து பெறுவேன்’? என்று கதறி ஜெபித்தேன். தவித்தேன்; கலங்கினேன்; கர்ப்ப வேதனைப்பட்டேன்.

ஒரு மாதம் கடந்தது. ஆனாலும் நிச்சயமோ சமாதானமோ என் உள்ளத்தில் இல்லை. இரண்டாம் மாதமும் ஆயிற்று. நடு ராத்திரியில் எழுந்து, புலம்பி அழுதேன். என் இதயம் நின்று விடும் அளவிற்கு அழுது புரண்டு அங்குமிங்குமாக என் அறையில் புரண்டு, புரண்டு கதறிக் கொண்டிருந்தேன். என் மனம் என்னிடத்திலில்லை. பணத்தைக் குறித்த சிந்தனையும், கவலையும் என் மனதைக் கவ்விப் பிடித்திருந்தது. என் மனைவி, எனக்கு பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று நினைத்து விட்டாள்.

மூன்று மாதங்களுக்குப் பின், என் தொடர் ஜெபத்தின் பலனாக, நான் சிற்றுண்டிக்காக அமர்ந்த வேளையில் வானம் எனக்குத் திறக்கப்பட்டது. அபரிமிதமான தேவனுடைய ஆசீர் வாதம் என் இதயத்தை நிரப்பிற்று தேவன் என்னை ஆசீர் வதிப்பதாக உணர்ந்தேன். என் ஆத்துமாவில் நிச்சயம் உண்டாயிற்று. நாற்காலியிலிருந்து திடீரென எழுந்து, குதித்து, நடனமாடி ’நான் பெற்றுக்

கொண்டேன்' என சத்தமாய் சொல்லி, பேரானந்தம் கொண்டேன்.

சமையல் அறையிலிருந்து ஓடிவந்து பார்த்த என் மனைவியின் முகம் வெளிறிப் போயிற்று. அவள் பயத்துடன் என்னிடம் வந்து, 'உங்களுக்கு என்ன நேர்ந்தது? எப்படி இருக்கிறீர்கள்? இங்கே சற்று அமருங்கள்' என்றாள்.

'நான் பெற்றுக் கொண்டேன்' என்றேன். என்னத்தைப் பெற்றீர்கள்?

'பதினைந்து கோடி ரூபாயை' என்று திட்டமாய் சொன்னேன். 'உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது' என்றாள்.

பதினைந்து கோடி ரூபாயை நான் பெற்றுக் கொண்டேன். தேவன் கிருபை செய்தார். அது எனக்குள் வளர்கிறது. அது எனக்குள் போடப்பட்டிருக்கிறது என்றேன்.

இப்போது நிச்சயம் உடையவனாக ஜெபித்தேன். என் விசுவாசம் வளர்ந்து, கிரியை செய்ய ஆரம்பித்தது. விசுவாசத்தினாலே அந்த பெரும் தொகையை பற்றிக் கொண்டேன். அது என்னுடையதாயிற்று.

ஒரு காரியத்தைக் குறித்த விஷயத்தில் நம்பிக்கை ஏற்படா திருந்தாலும் தொடர்ந்து

ஜெபித்தால் பெற்றுக் கொள்வோம் என்ற நம்பிக்கையை அடையலாம். இப்படி நம்பிக்கை ஏற்படும் வரை ஜெபிக்க வேண்டும்.

ஐம்பதாயிரம் பேர் என் சபைக்கு கிடைப்பார்கள் என்ற நிச்சயத்தைத் தேவன் எனக்குத் தந்த போது, அந்த எண்ணம் எனக்குள் வளர்ந்து கொண்டிருந்தது. அதே போல நான் விசுவாசித்து மனதில் தரிசித்த அந்த 50,000 ஆத்துமாக் களையும் கர்த்தர் தந்தார். நம்மில் நம்பிக்கை உண்டாகும் வரை ஜெபிக்க வேண்டும். இதுதான் இரகசியம்.

## 4. விசுவாச வார்த்தைகளைப் பேசு

நான்காவதாக, உங்கள் விசுவாசத்திற்கான அடையாளம் காணப்பட வேண்டும். மரித்தோரை தேவன் எழுப்பினாரென வேதம் சொல்கிறது. இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிற தேவன் அற்புதங்களைச் செய்கிறார்.

ஆபிரகாமுக்கு நூறு வயதாகும் போது, சாராளுக்கு தொண்ணூறு வயது. ஒரு மகன் வேண்டுமென்ற தெளிவான நோக்கம் அவர்களுக்கு இருந்தது. அவியாத வாஞ்சையோடு ஜெபித்தார்கள். ஒரு குமாரன் பிறப்பான் என்ற நம்பிக்கை அவர்களுக்கு

வந்தபோது, தேவன் ஆபிராம் என்ற பெயரை ஆபிரகாம் என்றும், சாரா என்ற பெயரை சாராள் என்றும் மாற்றினார்.

'ஆண்டவரே, எங்கள் வீட்டில் ஒரு குழந்தையும் இல்லாத போது எங்களது பெயர்களை திரளான ஜாதிகளின் தகப்பன் என்றும், இளவரசி என்றும் பெயரிடுவானேன் ?' என்று ஒரு வேளை கேட்டிருப்பாள். தேவன் எதைச் செய்ய நினைத்தாரோ, அது அப்படியே ஆகும்.

சாராள், தன் கணவனை ஆபிரகாமே! (திரளான ஜாதிகளின் தகப்பன்) என்றழைத்த போது, மற்றவர்கள் அவளைப் பார்த்து தொண்ணூறு வயதான இந்த சாரா பாட்டிக்கு ஆசையைப் பார்! அவளுக்கு மூளை சரியில்லை போலும் என சொல்லிக் கேலி செய்திருப்பார்கள்.

ஆனால் ஆபிரகாமும், சாராளும் இந்த பரியாசப் பேச்சுகளுக்கு செவிகொடுக்காமல், திரளான ஜாதிகளின் தகப்பனே (ஆபிராகம்) என்றும், இளவரசியே (சாராள்) என்றும் ஒருவரையொருவர் மாறி மாறி அழைத்துக் கொண்டு தங்கள் விசுவாசத்தின் சிந்தனையை வளர்த்துக் கொண்டனர். 'புன்னகை' என்ற அர்த்தம் உடைய ஈசாக்கு

என்னும் அழகான குழந்தையை அவர்கள் பெற்றுக் கொண்டனர்.

சகோதரனே, சகோதரியே! உங்களுக்கு சந்தோஷம் வேண்டுமா? உங்கள் குடும்பத்தில், தொழிலில், சபையில் சந்தோஷம் வேண்டுமா? விசுவாசத்தின் விதியைப் பயன் படுத்துங்கள். சந்தோஷம் உங்களில் மீண்டும் மீண்டும் நிரம்பி யிருக்கும்.

அற்புதங்கள் சாதாரணமாக நிகழ்ந்து விடுவதில்லை. ஆவிக்குரிய வாழ்க்கையில் சில விதிமுறைகள் உள்ளன.

தேவன் உங்களோடிருக்கிறார். ஆனால் உங்கள் விசு வாசத்தின் மூலமேயல்லாமல் அவர் எதுவும் செய்யமாட்டார். பெரிய காரியங்கள் நிகழ உங்கள் விசுவாசத்தைப் பொறுத்தே அவர் கிரியை செய்ய முடியும். கர்த்தர் மாறாதவர். விசுவாச வீரர்களான மோசே. யோசுவா போன்றவர்களைத் தேவன் பயன்படுத்தியிருக்கிறார். அவர்கள் மரித்தபின்பு, மக்கள் பின்வாங்கினர். இவர்களிடம் தேவன் தமது வல்லமையை வெளிப்படுத்தவில்லை . அதாவது, மனிதரின் விசுவாசம் தளரும் போது அல்லது மாறும்போது, தேவன் தமது வல்லமையை வெளிப்படுத்துவதில்லை.

தேவன் அன்றும் இன்றும் வல்லமை உள்ளவராகவே இருக்கிறார். தமது வல்லமையை வெளிப்படுத்த உங்களையே அவர் சார்ந்திருக்கிறார். உங்கள் மனதிலும், இதயத்திலும் எது அதிகமாக வளர்கிறதோ, அதுவே உங்கள் வாழ்க்கையில் வந்து சம்பவிக்கும். உங்கள் இதயத்தையும், சிந்தனையையும் ஆராய்ந்து பாருங்கள்.

நிச்சயமுள்ள விசுவாச வார்த்தைகளைப் பேசுங்கள். அவை சிருஷ்டிக்கும் வல்லமை உள்ளவை. தேவன் சொன்னபடி முழு உலகமும் உண்டாயிற்று. பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யத்தக்க வல்லமை உங்களது விசுவாச வார்த்தையில் உண்டு.

செங்கடல் பக்கம் வந்த மோசே, 'தேவனே உதவி செய்யும் எகிப்தியர் வந்து விட்டனர் எனக் கெஞ்சினான். தேவன் அவனைப் பார்த்து, "ஏன் அழுகிறாய்? உன் கோலை நீட்டி, செங்கடலைப் பிளந்துவிடு" என்றார்.

ஜெபிக்க வேண்டிய நேரமும் உண்டு, நீ கட்டளை கொடுக்க வேண்டிய வேளையும் உண்டு. ஜெப அறையில் ஜெபிக்க வேண்டும். யுத்த களத்திற்கு வரும்போது கட்டளை கொடுக்க வேண்டும். இயேசுவின் வாழ்க்கையில் அவர் கட்டளை கொடுத்ததை

அதிகமாய் வாசிக்கிறோம். இரவெல் லாம் அவர் ஜெபித்தார். ஆனால் அவர் வெளியே வந்த போது அவர் ஆரோக்கியத்தைக் கட்டளையிட்டார். கடலை அதட்டி, பிசாசைத் துரத்தினார். அவரது சீஷர்களும் அப்படியே செய்தனர். பேதுரு ஆலயத்துச் சப்பாணியைப் பார்த்து, 'இயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்றும் மரித்துப் போன தொற்காளைப் பார்த்து, 'தொற்காளே எழுந்திரு" என்றும் பவுல் லிஸ்தீராவில் முடவனைப் பார்த்து, 'எழுந்து நில்' எனவும் கட்டளையிட்டார்கள். நமது விசுவாச வார்த்தையில் சிருஷ்டிக்கும் வல்லமை உண்டு.

வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்குங்கள் என வேதம் சொல்லுகிறது. விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் என யாக்கோபில் காண்கிறோம். வியாதியஸ் தர்களை சுகமாக்குங்கள் என தேவன் சொல்லியிருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின் படி எங்கள் சபையில் வியாதியஸ்தர்களைச் சுகமாக்குகிறோம். நான் சாதாரணமாக அவர்கள் முன் நின்று, 'நீ சுகமாகிவிட்டாய் எழுந்து நட என்று தான் சொல்கிறேன். சுகம் பெற்றவர்கள் யார் என அழைக்கும் போது அநேகர் வந்து, சுகம் பெற்றதாக சொல்கிறார்கள்.

கொரியாவின் மேற்குப் பகுதியில் கூட்டம் நடந்தபோது 1500–க்கும் மேற்பட்டவர்கள் கூடியிருந்தனர். முன் பகுதியில் ! எனக்கெதிரே சக்கர நாற்காலியில் ஒரு பெண் அமர்ந் திருந்தாள். ஏன் இவள் இங்கே இருக்கிறாள் என் ஆண்டவரிடத்தில் வேதனையோடு நான் கேட்டபோது, இறங்கிப் போய் அவளை எழுப்பிவிடு என்றார். நான். அவளைப் பார்த்தபோது அவள் கூனிக் குறுகிப் போயி ருந்தாள். ஆண்டவரே, என்னால் முடியாது என்று ஆண்டவரிடம் மறுத்துப் பேசினேன். ஆனால் பரிசுத்த ஆவி யானவரோ "நீ போய் அவளை எழுப்பிவிடு" என திட்டமாய் பேசினார். எனக்கோ பயம் பிடித்துக் கொண்டது.

அங்கே ஜெபவேளையில் ஒரு குருட்டுப்பெண் பார்வை யடைந்தாள். அதைத் தொடர்ந்து அநேகர் ஆரோக்கிய மடைந்தனர். மற்றவர்களைச் சுகமாக்குவதிலேயே நான் கவனமாய் இருந்தபோது, 'நீ போய் அந்த பெண்ணை எழுப்பிவிடு' என பரிசுத்த ஆவியானவர் மீண்டும் என்னைத் தூண்டினார்.

'எனக்குப் பயமாய் இருக்கிறது; அவள் மிகவும் கூனிக் குறுகிப் போய்

இருக்கிறாளே !’ என்றேன். ஆராதனை முடியும் வேளையில் எல்லோரும் எழும்பி நின்று ஒரு பாடலைப் பாடும்போது, யாருக்கும் தெரியாமல் அப்பெண்ணிடம் போய் ’நீ விரும்பினால் சக்கர நாற்காலியை விட்டு எழுந்திரு என்று சொல்லி, அந்த இடத்தை விட்டே ஓடிவிட்டேன்.

ஆனால் அந்தப்பெண் எழுந்து, நடந்தபடி மேடை நோக்கி வருவதைக் கண்ட ஜனங்கள் கைகளைக் கொட்டி சந்தோஷத் தினால் ஆர்ப்பரித்தனர். நான் இங்கே தவறு செய்து விட்டேன். ஏனெனில் ஆராதனையின் துவக்கத்திலேயே அவளைச் சுகமாக்கியிருந்தால் அந்த ஆராதனையில் பரலோகமே வந்து இறங்கியிருக்கும்.

பலர் என்னிடம் வந்து, விசுவாச வரம் இருக்கிறதா? சுகமாக்கும் வரம் என்னிடம் இருக்கிறதா? எனக் கேட் கின்றனர் என் இதய பூர்வமாக ஆராய்ந்து பார்த்ததில் இது வரை எனக்கு எந்த வரமும் இருப்பதாகத் தெரியவில்லை ஏனெனில், பரிசுத்த ஆவியானவரிடம் ஒன்பது வரங்களும் இருக்கிறது என்பதை நான் விசுவாசிக்கிறேன். அவர் நமக்குள். எனக்குள் வாசம் பண்ணுகிறார். என் மூலமாய் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுகிறார் எனக்கு

வரங்களைப் பற்றி கவலையில்லை. எனக்குப் பரிசுத்த ஆவி யானவர் வேண்டும். நான் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரை நம்பினால் போதும்.

உங்களுக்கு எந்த வரம் இருக்கிறது என்று கேட்டால், துணிச்சல் என்ற வாரம் இருக்கிற தென்று தான் சொல்லுவேன். இதைக் கொண்டு விசுவாசத்தை செயல் முறையாக்கும் போது, பரிசுத்த ஆவியானவர் கிரியை நடப்பிக்கிறார். அற்புதங்கள் உங்களைத் தொடரும்படி நீங்கள் விசுவாசத்தில் முன் நடக்க வேண்டும். விசுவாச விதியை அனுபவமாக்கும் போது, உங்கள் விசுவாசப் பாதையில் ஜீவிய காலமெல்லாம் தொடர்ந்து அற்புதங்கள் நிகழ்வதைக் காண்பீர்கள்.

உங்கள் விசுவாசம் கிரியை செய்யத்தக்க ஏதுக்களும். ஒரு காரியத்தைப்பற்றிய தெளிந்த நோக்கம் கொள்ளும் படியான வாஞ்சை உங்களில் பற்றி எரியட்டும்! மனதில் நிச்சயம் உண்டாகும் வரை ஜெபியுங்கள்! பின்பு விசுவாசத்தில் அறிக்கையிடுங்கள்! எல்லாம் உங்களுடையதாகும்.

# 2. நான்காம் பரிமாணம்

நம்முடைய விசுவாசம் முறையாக உருவேற்றப்படுவதற்கு நாம் பின்பற்ற வேண்டிய சில படிகள் இருப்பது போல விசுவாசத்தன்மையின் பரப்பை (Nature’s Faith realm) குறித்தான அடிப்படை சத்தியமும் உண்டு என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். விசுவாசத் தன்மையின் அரப்பை குறித்தான மிக முக்கியமான பாடத்தை முதலில் நான் ஒரு கசப்பான அனுபவத்தின் விளைவாகத்தான் கற்றுக் கொண்டேன்.

கிழக்கத்திய நாடுகளில் தேவனின் அற்புத வல்லமையை குறித்து பிரசிங்கிப்பது என்றால் எனக்கு அது மிகக் கடினமான காரியமாக இருந்தது. அமெரிக்காவிலுள்ள ஊழியர்களுக்கு இது போன்ற பிரச்சனைகள் எழுவதில்லை. ஏனெனில் கிழக்கத்திய நாடுகளிலுள்ள புத்த துறவிகள் வினோதமான அற்புதங்களை செய்கிறார்கள்.

கொரியாவில் சமீபத்தில் ஒரு பெண் புற்று நோயால் பாதிக்கப்பட்டு மரணத்துக்கேதுவாக இருந்தபோது, அவளை வைத்தியர்கள் குணமாக்க இயலவில்லை. பல சபைகளுக்கு கொண்டு சென்று கடைசியில் புத்த

துறவியிடம் கொண்டு சென்ற போது அவர்கள் செய்த பிரார்த்தனையில் அவள் பூரண சுகம் பெற்றாள்.

கொரியாவில், யோகாசனப்பயிற்சியில் பலர் ஈடு பட்டுள்ளனர். இவ்வழி தியானத்தின் போது பல வியாதியஸ்தர்கள் சுகமடைகின்றனர். ஜப்பானியர்களின் தியானத்தில், வயிற்றுவலி சுகமாகிறது. செவிடர் கேட்கின்றனர், ஊமை பேசுகிறான். குருடர் காண்கின்றனர். எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் அதிலும் குறிப்பாக பெந்தேகொஸ்த் கிறிஸ் தவர்களாகிய நாம் இப்படிப்பட்ட செயல்களுக்கு விளக்கம் சொல்ல இயலாமல் கஷ்டப்படுகிறோம். இவை சாத்தானின் வல்லமையால் நடக்கிறது என நாம் எளிதாக சொல்லிவிட முடியாது. பிசாசு இவைகளையெல்லாம் செய்வானென்றால், கிறிஸ்து இயேசுவின் சபையானது இவைளைக் காட்டிலும் அதிகமாக ஏன் செய்ய முடியாது,

கிறிஸ்துவர்களில் அநேகர் தேவனுடையது செய்யும் வல்லமையைக் குறித்து முக்கியத்துவம் காட்டி, திருப்பதை எண்ணி நான் ஒரு நாள் பாரமடைந்தேக தேவனை, அவர் மட்டுமே முற்றிலும் தெய்வீக யுள்ளவர் என நாங்கள் எப்படி நம்புவது?,

தேவனாகிய யெகோவா தான் ஒப்பற்ற சிருஷ்டிகர்த்தா என எப்படி சொல்ல முடியும்? பௌத்தத்திலும் யோகாசனத்திலும் ஜப்பானிய தியான முறையிலும், அற்புதங்கள் நடப்பன நாங்கள் காண்கின்றோமே! கிழக்கத்திய நாடுகளிலுள்ள மார்க்கங்களிலும் அற்புதங்கள் நிகழ்கின்றனவே! யெகோவா தேவன் ஒருவர் மட்டுமே அண்டசராசரங்களையும் படைத்தவர் என எப்படி சொல்லமுடியும்?' என்கின்றனர் அவர்கள்.

ஆனால் நமது தேவன் ஒருவரே என்றும், அவர் ஒப்பற்றவர், அண்ட சராசரங்களனைத்தையும் சிருஷ்டித்த ஒரே கர்த்தர் என்பதை நான் அறிவேன். எனவே தேவனுடைய விசுவாசத்தை அடையவும் அவர்களுடைய கேள்விகளுக்கு பதில் பெற வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு உபவாசித்து ஜெபித்தேன் அப்போது என்னுடைய இருதயத்தில் ஒரு மகிமையான வெளிப்பாடும், தெளிவான விளக்கமும் கிடைத்தது. அன்று முதல் கொரியாவிலுள்ள எனது ஆலயத்தில் அதை விளக்கிச் சொல்ல ஆரம்பித்தேன். தற்போது நான் எந்த கேள்விகளுக்கும் இலகுவாக திருப்தியான பதிலளிப்பதுடன் பட்டப்பகல் வெளிச்சம் போல தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நான் உங்களுக்கு அதை தற்போது விளக்கிச் சொல்கிறேன்.



கோடு - முதலாம் பரிமாணம்
(நீளம் மட்டும்)



சமதளம் - இரண்டாம் பரிமாணம்
( நீளம், அகலம், இரண்டும்)



பல சமதளங்களை ஒன்றன்மேல் ஒன்றாக
அடுக்கினால் - கனசதுரம்- மூன்றாம் பரிமாணம்
(நீளம், அகலம், உயரம்)

# 1. நான்கு பரிமாணங்கள்

இப்பிரபஞ்சத்தில் தேவ ஆவி, பிசாசின் ஆவி, மக ஆவி என மூன்று வித ஆவிகள் உள்ளன. வடிவியல் (Geometry) அங்குமிங்குமுள்ள இரண்டு புள்ளிகளை கோட்டால் இணைக்கும் போது காணப்படும் அக்கோட்டி முதலாம் பரிமாணம் என்று பெயர். ஆனால், அதன்மேல் ஒன்றின் மேல் ஒன்றாகப் பல கோடுகளை வரைந்தால், சமதளமாகக் காணப்படும். அது இரண்டாம் பரிமாணம்.

இந்த சமதளத்தின்மேல் பல சமதளங்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கினால் அது ஒரு கனசதுரமாகிறது. .. மூன்றாம் பரிமாணம். முழு உலகமும், முழுபூமியும், மூன்றாம் பரிமாண மாயிருக்கிறது. முதல் பரிமாணம் ஒரு கோடு. முக பரிமாணமாகிய கோடு இரண்டாவது பரிமாணமாகிய சமதளத்திற்குள் அடங்கியிருப்பதால் அதனுடைய கட்டும் பாட்டுக்குள் இருக்கிறது. இரண்டாவது பரிமாணம் கனசது. மாகிய மூன்றாவது பரிமாணத்திற்குள் அடங்குவதால் அதனுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. அப்படியானால் முப்பரிமாணமாகிய இந்த உலகத்தை உருவாக்கியவரும் அதை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவரும் யார்?.

நம்முடைய வேதபுத்தகத்தில் ஆதியாகமம் 1:2 ல் இதற்கான பதில் உள்ளது. ”பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமா யிருந்தது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது; தேவ ஆவி யானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்“.

ஆனால் மூலபாஷையில் ’தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அடைகாத்துக் கொண்டிருந்தார்’ என்ற பொருள்பட உள்ளது. ஒழுங்கற்ற இவ்வுலகம் மூன்றாம் பரிமாணத் துக்குரியது. காணக்கூடிய இந்த மூன்றாம் பரிமாணமாகிய பூமியின் மேல் அடைகாத்துக் கொண்டிருக்கும் ஆவியானவர். தான் நான்காம் பரிமாணம். அதாவது, விசுவாசமாகிய ஆவிக்குரிய இராஜ்ஜியம் தான் நான்காம் பரிமாணமாகும்.

1. நான்காம் பரிமாணமாகிய ஆவிக்குரிய உலகமானது மூன்றாம் பரிமாணமாகிய பூமியை தழுவிக்கொண்டு அதை அடைகாத்தபடியால் இப்பூமி புது சிருஷ்டியானது பழமையிலிருந்து புதியது உருவானது, மரணத்திலிருந்து ஜீவன் உருவானது. அருவருப்பிலிருந்து அழகும், அசுத்தத்திலிருந்து சுத்தமும், தரித்திரத்திலிருந்து நிறைவும் உருவாயிற்று. நான்காம் பரிமாணத்தின்

அடைகாத்தலின் காரணமாகயாவும் அழகும் ஆச்சரியமான புதுவடிவு பெற்றது.

2. தேவன் என் இருதயத்தில் பேசினார். ’மகனே எப்படி ரெண்டாம் பரிமாணம் முதல் பரிமாணத்தை உள்ளடக்கி கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறதோ, எப்படி மூன்றாம் பரிமாணம் இரண்டாம் பரிமாணத்தை உள்ளடக்கி கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறதோ, அதுபோல நான்காம் பரிமாணம் மூன்றாம் பரிமாணத்தை உள்ளடக்கி கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதோடு, வழுங்கும் அழகுமான ஒரு உருவாக்கும் வேலையை செய்கிறது. அந்த வேலையை செய்கிற ஆவியானவரே நான்காம் பரிமாணம். ஒவ்வொரு மனிதனும் சரீரப் பிரகாரமானவன் மட்டுமல்லாமல் ஆவிக்குரியவனாகவும் இருக்கிறான். அவர்களுடைய இருதயத்தில் மூன்றாம் பரிமாணம் மட்டுமல்ல நான்காம் பரிமாணமும் உள்ளது. ஆகவே மனிதர்கள் தங்களுடைய தரிசனத்தையும் கனவையும் சிந்தனையையும் ஒழுங்குப்படுத்தி அதை தங்களது சிந்தனையில் ஆழ்த்தி மூன்றாம்

பரிமாணத்தின் மீது அடைகாத்து தங்களிலுள்ள நான்காம் பரிமாண மாகிய ஆவிக்குரிய பகுதியை ஆராய்ந்து உணர்ந்து கொண்டு மாற்றத்தையும் வளர்ச்சியையும் அடை கின்றனர். பரிசுத்த ஆவியானவர் இதைத்தான் எனக்கு கற்றுக் கொடுத்தார்.

3. ஆகவே யோகபயிற்சி செய்கிறவர்களும் புத்த விசு வாசிகளும் ஆவிக்குரிய பகுதியாகிய நான்காம் பரிமாணத்தை ஆராய்ந்து தங்களுடைய தெள்ளத் தெளிவான தரிசனத்தின் மூலமாகவும் தங்களது மனத் திரையில் உருவகித்துக் கொள்ளும் ஆரோக்கிய நிலை மூலமாகவும், (Mental Picture of Health) தங்களின் சரீரத்தி, மீது அடைகாக்கும் அனுபவத்துடன் வளர்ச்சி பெற்றுக் கொள்கின்றனர். இயற்கையின் நியதி.. நான்காம் பரிமாணத்திற்கு மூன்றாம் பரிமாணத்தின் ..' அதிகாரம் உள்ளது. மனித ஆவிக்கும் உருவாக்கும் வல்லமை உண்டு. ஆனால் அதற்கு ஒரு எல்லை உண்டு தேவன் மனுகுலத்திற்கு உலகத்தை தனது கட்டி பாட்டிற்குள் வைத்துக் கொள்ளவும், அதை ஆளவும் வல்லமை கொடுத்திருக்கிறார். அந்த ஆளுகையின் பொறுப்பை மனிதன் நான்காம்

> பரிமாணத்தின் மூலம் செயல்படுத்துகிறான். அவிசுவாசிகளும்கூட தங்களிலுள்ள ஆவிக்குரிய பகுதியை ஆராய்ந்து வளர்ச்சியைப் பெற்றுக் கொள்வதோடு மூன்றாம் பரிமாணத்தின் மீது ஆளுகையும் செலுத்துகின்றனர். இதன்மூலம் தங்கள் சரீரத்திலுள்ள வியாதிகளுக்கும் விடுதலையை பெற்றும் கொள்கின்றனர்.

பின்னர் பரிசுத்த ஆவியானவர் என்னோடு பேசினார். ’ஜப்பானியர்களின் ஆலயத்தை பார். அவைகள் சாத்தானை சேர்ந்தவை. மனிதனுடைய ஆவி தீய நான்காம் பரிமாணத் திலுள்ள (Evil Fourth Dimension) ஆவியோடு சேர்ந்து கொண்டு அந்த தீய நான்காம் பரிமாணத்தின் மூலம் சரீரத்தின் மீதும் சூழ்நிலைகள் மீதும் ஒரு ஆளுகையை அடைந்து கொள்கின்றனர் இந்த முறைமையின் படிதான் எகிப்திலுள்ள மந்திரவாதிகள் மோசே செய்த அற்புதங்கள் போல செய்ய முடிந்தது.

நாம் நம்மிலுள்ள நான்காம் பரிமாணமாகிய ஆவியை அண்ட சராசரங்களையும் சிருஷ்டித்த பரிசுத்த பிதாவாகிய நான்காம் பரிமாணத்துடன் இணைத்துக் கொண்டால் சூழ் நிலைகளின் மீது அதைவிட மேலான

ஒரு ஆளுகையைப் பெற்றுக் கொள்ளலாம். தேவனுக்கே துதி. நமது மூன்றாம் பரிமாணத்தின் மீது நமக்கு அற்புதமான சிருஷ்டிக்கும் திறனும் பெரிய கட்டுப்பாடும் அதிகாரமும் உண்டாயிருக்கும்.

கர்த்தரிடத்திலிருந்து இந்த வெளிப்படுத்தலை பெற்றுக் கொண்ட பின் புறமதத்தார் நடப்பிக்கும் அற்புதங்களைப் பற்றி என்னால் சுலபமாக விளக்கிச் சொல்ல முடிந்து, பலர் என்னிடம் வந்து நாங்களும் இதே போன்ற அற்புதங்களைச் செய்யமுடியும். ' என சவால் விட்டனர்.

ஆம். உங்களால் இதை செய்யமுடியும் என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் உங்களது ஆவியில் அந்த நான்காம் பரிமாணம் உள்ளது. நீங்கள் அந்த ஆவியை மேம்படுத்திக் கொண்டு சரீரத்திலும் சூழ்நிலைகளிலும் ஆளுகை செலுத்துகிறீர்கள். நீங்கள் அப்பேர்ப்பட்ட அற்புதங்களைச் செய்தாலும் அந்த ஆவி இரட்சிப்பின் ஆவி அல்ல. நீங்கள் தீய நான்காம் பரிமாணத்தோடு இணைத்துக் கொண்டிருக்கிறீர்கள் அந்த தீய நான்காம் பரிமாணத்திற்கும் மூன்றாம் பரிமாணத்தின் மீது ஆளுகை செலுத்த அதிகாரமுள்ளது. ஆனால் அந்த அதிகாரத்திற்கு ஒரு

எல்லையுண்டு. அந்த எல்லைக்குட்பட்டு சூழ்நிலைகள் மீதும் மூன்றாம் பரிமாணத்தின் மீதும் ஆளுகை செய்கிறது. என்று சொன்னேன்.

## 2. சிந்தையின் உள்ளுணர்ச்சியின் பங்கு (The Role of the Subconscious Mind)

சிந்தையின் உள்ளுணர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்ததன் காரணமாக அமெரிக்காவிலும் மற்றும் பல இடங்களிலும் சிந்தையை மேம்பாடு செய்வதற்கான பல புத்தகங்கள் வெளியாகியுள்ளன. சிந்தையின் உள்ளுணர்ச்சி (subconscious) என்றால் என்ன? சிந்தையில் உள்ளுணர்ச்சி என்பது உங்களிலுள்ள ஆவியே. இதை வேதாகமம் உள்ளான மனிதன் என்றும் இருதயத்தில் மறைந்திருக்கும் மனிதன் என்றும் சொல்கிறது.

தத்துவ ஞானிகள் சிந்தையின் உள்ளுணர்ச்சியை கண்டு கொள்வதற்கு, முன்பே பவுல் அப்போஸ்தலன் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே, மறைந்திருக்கும் உள்ளான மனிதனைப் பற்றி எழுதியுள்ளார் இந்த உண்மையை 2000 ஆண்டுகளுக்கு முன்பே பரிசுத்த வேதம் தன்னகத்தே கொண்டுள்ளது.

விஞ்ஞானிகளும் தத்துவ ஞானிகளும் தற்போது. அவர்கள் கண்டு கொண்ட இந்த சிந்தையின் உள்ளுணர்ச்சியை ஆராய்ந்து அதன் வல்லமை பயன்படுத்த முயற்சிக்கின்றனர். சிந்தையின் உள்ளுணர், நான்காம் பரிமாணத்தில் இருப்பதால் அதற்கு ஒரு குறிப்பி வல்லமையுண்டு. ஆனால் சிலர் சொல்வது போல் அல்லா இதில் சில வஞ்சகமான காரியங்களும் உள்ளன. நாம் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த போது அங்குள்ள இ. ஊழியக்காரர்கள் எனக்கு சில புத்தகங்களை கொடுத்தார்கள். நான் அவற்றை படித்து அறிந்து கொண்ட காரியம் மிகும். ஆச்சரியமாக இருந்தது ஏனென்றால் எல்லா புத்தகங்களில சிந்தையின் உள்ளுணர்ச்சியே சர்வ வல்ல தேவன் என்பதாக எழுதியிருந்தார்கள். இதுவே பெரிய வஞ்சனையாகும். சிந்தையின் உள்ளுணர்ச்சிக்கு ஒரு அளவான திறன் உண்டு. ஆனால் அதற்கு ஒரு எல்லை உண்டு. சர்வ வல்ல தேவனைப் போல் அதற்கு சிருஷ்டிக்க முடியாது அமெரிக்காவிலுள்ள ஐக்கிய சபையில் (The unitarian church) மனித ஆவியின் நான்காம் பரிமாணத்திலுள்ள சிந்தையின் உணர்ச்சியை மேம்படுத்திக் கொள்ள முயற்சிப்பதோடு மனித ஆவியை இயேசு கிறிஸ்துவின் ஸ்தானத்திற்கு உயர்த்திக் காட்டும் அளவுக்கு

போதிக்கிறார்கள் உண்மையிலேயே இது வஞ்சகமான காரியம் மட்டுமின்றி பெரும் பாதகத்தை விளைவிக்கக் கூடியதாகும்.

இந்த போதனையில் சில உண்மைகளையும் சத்தியங்களையும் நாம் தெரிந்து கொண்டாலும், தீய நான்காம் பரிமாணத்தில் சாத்தான் இருக்கிறான் என்ற முக்கியமான காரியத்தை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும் ஆனால் கர்த்தர் பரிசுத்தர், ஒப்பற்றவர், சர்வவல்லவர். நான்காம் பரிமாணம் எப்போதும் அடைகாக்கும் அனுபவத்தின் மூலம் சிருஷ்டித்துக் கொண்டும், மூன்றாம் பரிமாணத்தைக் கட்டளைகளை கொடுத்து ஆண்டு கொண்டுமிருக்கிறது. ஆதியாகமத்தில் *(1:2)* நாம் கண்டது போல் தேவனின் ஆவி தண்ணீர் மீது அடைகாத்துக் கொண்டிருந்தார். ஒரு கோழி குஞ்சுகளை எப்படி பொரிக்கிறதோ அதுபோல் பரிசுத்த ஆவி அவர் மூன்றாம் பரிமாணத்தின் மீதிருந்து அடைகாக்கிறார். அதைப் போலவே தீய ஆவியும் அடைகாக்கும் தன்மையுள்ளது

அமெரிக்காவில் ஒரு நாள் தொலைக்காட்சியில் செய்தி களக் கவனித்துக் கொண்டிருந்தேன். ஒரு மனிதன் -ால்லப்பட்டது சம்பந்தமாக பெரிய

சர்ச்சையே நடந்தது. காலையாளியான இளைஞனுக்கு அவனுடைய வழக்கறிஞர்,

லைக் காட்சிகளில் காட்டப்படும் கொடூர சம்பவங்களின் விளைவாக ஏற்பட்ட வெறித்தனத்தின் காரணமாகத்தான் – இளைஞன் கொலைகாரனாக மாறிவிட்டான் என்று வாதாடியுள்ளார். இதில் ஒரு உண்மை இருக்கத்தான் செய்கிறது. இந்த இளைஞன் தொலைக்காட்சியின் கொடூர என்பவ நிகழ்ச்சியைப் பார்த்தபின் அதையே தனது நான்காம் பரிமாணத்தின் மூலம் பயிற்சித்துள்ளான். கொடூரத்தை அடைகாத்து பாவத்தை பொரித்திருக்கிறான்

## 3. நான்காம் பரிமாணத்தின் பாஷை!

நான்காம் பரிமாணத்தின் உண்மையை நான் கண்டு பிடித்ததால் என் ஊழியத்தில் புரட்சிகரமாறுதல் ஏற்பட் டுள்ளது நீங்களும் இதை பயிற்சித்தால் உங்களது ஜீவியமும் புரட்சிகரமாக மாறும். நாம் நமது சிந்தையின் உள்ளு ணர்ச்சியை எப்படி அடைகாக்க இயலும் என நீங்கள் ஆச்சரியப்படலாம் வரையறைக்குப்பட்ட ஒரு சரீரத்தில் நாம் வாழ்கிறோம். சர்வவியாபியான பரிசுத்த ஆவியானவர் முழு உலகத்தின் மேலும் அசைவாடமுடியும். ஆனால், நமது சமயமும் சந்தர்ப்பமும் குறைவானதால், நாம் நமது

சிந்தனைகள் தரிசனங்கள், கனவுகள் மூலமாக மட்டுமே அடைகாக்கும் அனுபவத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

இதனால்தான் பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வந்து கிரியை செய்து, நமது இளைஞர் தரிசனங்காணவும், மூப்பர்கள் சொப்பனங்காணவும் உதவிசெய்கிறார்.

தரிசனங்கள் சொப்பனங்கள் மூலமாக நமக்குத் தடையாக உள்ள எல்லைச் சுவர்களையெல்லாம் தகர்த்து அண்டசராசரத்திற்கு நமது எல்லையை விரிவுபடுத்த முடியாம் எனவேதான் வேதம் சொல்கிறது. தீர்க்கதரிசனமில் இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள்: (நீதி 29, 10, உங்களுக்கு அந்த தரிசனம் இல்லாவிட்டால் உங்களி உருவாக்கும் திறன் இருக்க முடியாது. உருவாக்கும் திறன் இல்லாவிட்டால் நீங்கள் சீர்கெட்டுப் போவீர்கள்.

## நான்காம் பரிமாணத்தின் பாஷை தரிசனங்களும் சொப்பனங்களுமே!

பரிசுத்த ஆவியானவர் இவைகளின் மூலமாகவே ஜனங்களிடம் தொடர்பு கொள்கிறார்.

ஒரு தரிசனம், ஒரு சொப்பனம் உங்கள் மனக்கண்களில் நிற்கும் போது மட்டுமே ஒரு பெரிய சபையை நீங்கள் காண முடியும், ஒரு புதிய ஊழிய ஸ்தலத்தைக் காணலாம், உங்கள் சபை வளருவதைக் காண்பீர்கள். உங்கள் மனக்கண்களில் ஓடிக் கொண்டிருக்கும் எதிர்காலத்தை குறித்து தேவன் தந்த தரிசனத்தின் மேல், சொப்பனத்தின் மேல் நீங்கள் அசை வாடும் போது, அல்லது அடைகாக்கும் போது, அது வளர்ச்சியடைவதால் அதன் பலனைக் காண்பீர்கள். ஆவிக் குரிய உதாரணங்களால் நான் இதை உங்களுக்கு உறுதிப் படுத்திக் காட்டுகிறேன்.

ஆதாமும் ஏவாளும் ஏன் கிருபையைவிட்டு விழுந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? மனித சிந்தனைகளில் இருக்கும் கனவு அல்லது தரிசனம் இவைகளை நான்காம் பரிமாணம் திட்டமான ஒரு முடிவை உருவாக்கும் என பிசாசு அறிந்திருந்தான். இதில் அவன் தந்திரமாய் நுழைந்து, ஏவாளிடம், ’ஏவாளே, விலக்கப்பட்ட மரத்தின் கனியை வந்து பார். நீ பார்ப்பதால் ஒரு தீங்கும் வந்துவிடாது. எனவே நீ வந்து அந்தப்பழத்தை மட்டும் பார், அது போதும்“ என்றான்.

எனவே, பார்ப்பது ஒன்றும் தீமையாகாது என நினைத்து, அவள் போய் அந்த பழத்தைப் பார்த்தாள். தொடர்ந்து அதைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். ஆதியாகமம் 3:6ல் அவள் அதை புசிப்புக்கு நல்லது என்று கண்டு. கனியைப் பறித்துப் புசித்தாள் என வேதம் சொல்கிறது. பறிப்பதற்கு முன் அவள் பார்த்தாள். அதை பார்த்துக் கொண்டேயிருந்த போது அதைப் புசிக்க வேண்டுமென்ற எண்ணம் அவளது நான்காம் பரிமாணத்தில் தோன்றி வளர்ச்சியடைந்தது.

நான்காம் பரிமாணத்தில் நல்லதையோ கெட்டதையோ செய்யலாம். ஏவாள் அப்பழத்தைக் குறித்த சிந்தனையை ஆழப்படுத்தி அப்பழத்தை மட்டுமே உற்று நோக்கி, அது தன்னை தேவனைப் போல மாற்றிவிடும் என கற்பனை செய்து பார்த்தாள். பிறகு, அந்த மரத்தினால் அவள் கவரப்பட்டு, அந்த நிலைக்கு அவள் தள்ளப்பட்டவளாக, பறித்து அதைப் புசித்ததுடன் அதில் கொஞ்சத்தைத் தன் கணவனுக்கும் கொடுத்தாள். இந்த செயலின் நிமித்தமாகவே அவள் விழுந்து போனாள்.

பார்வை முக்கியமில்லையென்றால், லோத்தின் மனைவிக்கு, தேவதூதன் ஏன் கொடூரமான நியாயத் தீர்ப்பளிக்க வேண்டும் ?

ஆதியாகமம் 19:17ல் ஜீவன் தப்ப ஓடிப்போ ! பின்னிட்டுப் பாராதே !'' என வேதம் சொல்கிறது. பின்னிட்டு பாராதே' என்பது ஒரு சாதாரணக் கட்டளைதான். ஆதியாகமம் 19:26ல் லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்து உப்புத்தூண் ஆனாள் என எழுதியிருக்கிறது அவள் பின்னிட்டுப் பார்த்த ஒரே காரணத்திற்காக அவள் கொடூரமான நியாயத்தீர்ப்படைந்து உப்புத்தூண் ஆனாள்.

இந்த நியாயத்தீர்ப்பு கடுமையானது என நீங்கள் ஒரு வேளை சொல்லலாம். ஆனால் ஆவியின் பிரமாணத்தை நீங்கள் அறியும்போது அப்படியல்ல. அவள் திரும்பிப் பார்த்தபோது வெறும் மாமிசக்கண்களால் மட்டும் பார்க்காமல், தன் உள்ளான மனதில் தன் கடந்த கால வாழ்வின் மேல் இச்சை உள்ளவளாகி ஆவிக்குரிய தன் உள்ளான மனதில் அதை கற்பனை செய்து பார்த்தாள். எனவே, தேவன் அவள் மேல் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவந்தார்.

ஆதியாகமம் 13:14,15ஐ கவனமாகப் படிக்கும் போது, லோத்து ஆபிரகாமைவிட்டுப் பிரிந்து சென்றபின், கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, நீ நிற்கிற இடத்திலிருந்து வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் நோக்கிப்பார். நீ

பார்க்கிற இப்பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்.

’ஆபிரகாமே, நான் உனக்கு கானானைத்தருவேன் , பெற்றுக் கொள்’ என ஆண்டவர் அவனுக்கு வெறுமா ?“ சொல்லவில்லை, அப்படி இல்லை. நீ எழுந்து கிழக்கே மேற்கேயும் வடக்கேயும் தெற்கேயும் பார் ! அதை நாம் உனக்கும், உன் சந்ததிக்கும் தருவேன் என திட்டவட்டம். சொன்னார்.

ஆபிரகாமிடம் ஒரு ஹெலிகாப்டர் இருந்திருந்தால் உயரே சென்று, மத்திய கிழக்கு நாடுகளையெல்லாம் பார்த்திருப்பா அப்படி செய்திருந்தால் இப்போது அங்கே இருக்க பிரச்சனைகள் எதுவுமே இல்லாமல் போயிருக்கும் எம் நினைக்கிறேன். அன்று அவனிடம் ஹெலிகாப்டரோ தொலைநோக்கியோ (binoculars) இல்லாததால் அவனது தரிசனம் குறைந்த எல்லைக்குட்பட்டதாயிற்று.

பார்ப்பது சுதந்தரிக்கப்படுகிறது. ஆபிரகாம் தேசத்தைப் பார்த்து விட்டு, தன் படுக்கைக்குச் சென்று தான் சுதந்தரிக்க போகிற தேசத்தைப்பற்றி கனவு கண்டான். அவனது நான்காம் பரிமாணத்தில் பரிசுத்த ஆவியானவர் இந்த பாஷையைப்

பயன்படுத்தினார். பரிசுத்த ஆவியானவர் ஆளுகை செய்யத் துவங்கினார்.

ஆபிரகாமுக்கு 100 வயதும், சாராளுக்கு 90 வயது மாயிருந்தபோது அவர்களுக்கு ஈசாக்கு பிறந்தது ஆர்வமூட்டும் ஒரு நிகழ்ச்சியாகும் அவனுக்கு 99 வயதாகும் போது ஆண்டவர் அவர்களைப் பார்த்து 'உனக்கொரு மகன் பிறப்பான்' என்று சொன்னபோது ஆபிரகாம் நகைத்தான் அதாவது, அதை அவனால் நம்ப முடியவில்லை . கூடாரத்தின் மறைவிலிருந்து சாராளும் சிரித்தாள் என்று காண்கிறோம். 'சாராள் நீ ஏன் நகைக்கிறாய் என்று தேவன் கேட்டார் 'இல்லை ஆண்டவரே நான் நகைக்கவில்லை' என்றாள். 'இல்லை, நீ நகைத்தாய்' என்று தேவன் சொன்னார். இப்படி யாக இருவரும் நகைத்தார்கள். ஏனென்றால், அவர்கள் நம்ப வில்லை. பரிசுத்த ஆவியானவரின் பாஷையில் தேவன் நான்காம் பரிமாணத்தைப் பயன்படுத்தி அவர்கள் நம்பும்படி செய்தார்.

மத்திய கிழக்கு நாடுகளில் மேகக்கூட்டம் மிகக்குறைவு, எனவே இரவு நேரங்களில் வானில் எண்ணிறந்த நட்சத்திரங் களைக் காணலாம். ஆபிரகாமை தேவன் வெளியே கொண்டு வந்து வானத்தைக் காட்டி 'ஆபிரகாமே வானத்திலுள்ள

நட்சத்திரங்களை எண்ணு' என்று சொன்னார். அவன் எண்ண ஆரம்பித்தான். மனித கண்களால் சுமார் 6000 நட்சத்திரங்களைத்தான் எண்ண முடியும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆபிரகாம் எண்ணிக் கொண்டே, யிருந்தான். கடைசியாக எண்ணிக்கையை விட்டுவிட்டான். எண்ண முடியவில்லை. இயலாத நிலையில் 'ஆண்டவரே அவைகள் எல்லாவற்றையும் எண்ண முடியவில்லை' என்றான். ஆண்டவர் அவனைப் பார்த்து, 'உன். பிள்ளைகள் எண்ணிப்பார்க்கூடாத இந்த நட்சத்திரங்களத்தனையாய் இருப்பார்கள்' என்றார்.

அக்காட்சியில் அவன் உணர்ச்சி வசப்பட்டான். கண்கள் கண்ணீரால் நிரம்பியது. இந்த தரிசனத்துடன் நட்சத்திரங்களை நோக்கும் போது அவைகளில் தன் பிள்ளைகளின் முகங்களைக் கண்டதுடன் அவர்கள் தன்னை 'அப்பா' என்று அழைப்பதையும் கேட்டிருக்கக்கூடும்' என நான் கற்பனை செய்து பார்க்கிறேன்.

அவன் கூடாரத்திற்கு திரும்பி வந்து படுத்தபோது அவனால் தூங்கமுடியவில்லை. ஏனென்றால் அவனது கண் களுக்கு

முன்பாக நட்சத்திரங்களில் அவனது பிள்ளைகளின் முகங்களும், காதில் அவர்களது ’அப்பா’ எனும் சப்தமும் இருந்து கொண்டேயிருந்தது.

இக்காட்சி அவனது சிந்தனையில் திரும்பத்திரும்ப வந்து இதுவே அவனது கனவும் காட்சியுமாகிவிட்டது. அக் காட்சிகள் அவனது நான்காம் பரிமாணத்தின் ஒருபகுதியாகி விட்டது. இந்த காட்சியும் கனவும் 100 வயதான அவனது சரீரத்தில் ஆளுகை செய்யத் துவங்கியதால் அது ஒரு இளைஞனின் சரீரம் போல மறுரூபமாவதை அவன் உணர்ந்தான். அந்த வேளையிலிருந்து அவன் தேவவார்த்தையை விசுவாசித்து தேவனுக்கு துதி செலுத்தினான்

ஆபிரகாமை இந்த அளவுக்கு யாரால் மாற்ற முடியாது, பரிசுத்த ஆவியானவரே! பரிசுத்த ஆவியானவரின் பாதை யாகிய நான்காம் பரிமாணத்தின் விதியை கேவலம் பயன்படுத்தியதுதான் அதற்கு காரணம்! தரிசனமும் கனவு ஆபிரகாமின் சிந்தனையை மட்டுமல்ல அவனது சரீரத்தை மாற்றி அமைத்தது. அதுமட்டுமா? சாராளின் சரீரத்தையும் அது மீண்டும் இளமையடையச் செய்தது! நான்காம் பரிமாணத்தின் பாஷையில் இளமைபெறச் செய்த 90 வயசு.

சாராளை அபிமலேக்கு என்ற அரசன் தனக்கு மறுமனையாட்டியாக ஆக்கிக் கொள்ள முயற்சித்தான் என வேதம் சொல்கிறது.

நாம் சாதாரண விலங்குகளைப் போன்றவர்களல்ல. தேவன் நம்மை சிருஷ்டித்த போது ஆவிக்குரிய உலக மாகிய நான்காம் பரிமாணம் உள்ளவர்களாக சிருஷ்டித்தார். எனவே தான் 'எல்லாவற்றையும் ஆண்டு கொள்ளுங்கள்' என்றார்.

ஆத்தும ஆதாயப்பணியாகிய என் ஊழியத்தை சும்மா வெறுமனே போய் கதவுகளைத்தட்டி கைப்பிரதி கொடுப்பதும் சாகும்வரை போராட்டத்துடன் வாழ்வதுமாக செயல்படுத்த முடியாது. விசுவாச வழியைப் பயன்படுத்துகிறேன். சபை நிரம்பி வழிகிறது! 5 லட்சம் விசுவாசிகள் என் சபையில் இருந்தாலும், நான் என் அலுவலகத்தில் அதிகமாய் பிரயாசப் படுவதில்லை. ஏனெனில், நான் விசுவாசப் பாதையை பின்பற்றுகிறேன். ஆவியானவர் இலகுவாய் செய்து முடிக்க விரும்பும் காரியங்களை எதையும் மாமிச அறிவில் போட்டு நான் குழப்பிக்கொள்வதோ போராடுவதோ இல்லை. வெளி நாடுகளில் ஊழியம் செய்ய செல்லும்போதும் பரிசுத்த ஆவியானவரின்

முழு ஆளுகைக்கும் நடத்துதலுக்கும் விட்டு விடுகிறேன். சபைக்கு என்ன தேவை என்பதை ஆவி யானவரிடம் சொல்கிறேன். அவர் காரியங்களைச் செய்து முடிக்கிறார்.

நான் வெளிநாட்டில் ஊழியம் செய்து கொண்டிருந்தாலும் பரிசுத்த ஆவியாகிய நான்காம் பரிமாணத்திற்குள் நின்று கொரியாவில் எனது சபைக்குத் தேவையான எல்லா வற்றையும் சொல்வேன். அவர் எல்லாவற்றையும் செய்து முடிப்பார். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நான் என் மனைவியை போனில் கூப்பிட்டு அவ்வப்போது விபரம் அறிந்து கொள்வேன். அதையிட்டு நான் சுயதிருப்தி அடைந்து கொள்வதுண்டு. என்னுடைய சபையார் நான் விரைவில் திரும்ப வேண்டுமென்று ஆவலுடன் இருப்பார்கள் என்றும் எனக்காக மிகவும் காத்திருப்பார்கள் என்றும் ஞாயிறு ஆராதனையில் நான் இல்லாததால் சபையார் வருவது குறைந் திருக்கும் என்றும் நான் நினைப்பதுண்டு. அதைக் குறித்து நான் என் மனைவியிடம் கேட்கும்போது, “ சபை நீங்கள் இல்லாமலேயே நன்றாகத்தான் இருக்கிறது. நீங்கள் பெருமை யடித்துக் கொள்ள வேண்டாம்’ என்று சொல்வாள்.

## 4. நான்காம் பரிமாணத்தின் விதியை நடைமுறைப் படுத்துதல்.

அற்புதமான நான்காம் பரிமாணத்தின் மூலம் தேவன், ஆபிரகாமை தேசத்தை சுதந்தரிக்கச் செய்யக் கூடுமானால், பரிசுத்த ஆவியானவரின் பாதையாகிய தரிசனம் கனவு இவைகளின் மூலம் ஆபிரகாம், சாராள் ஆகிய இருவரின் சரீரங்களை இளமையடையச் செய்யக்கூடுமானால் நீங்களும் 4ம் பரிமாணத்தில் கிரியை செய்ய முடியும்.

ஆதியாகமம் 30:31-43ல் யாக்கோபைக் குறித்த ஒரு சிறப்பான கதை ஒன்று உண்டு. 37 முதல் 39 வரையிலான வசனங்களில் யாக்கோபு தான் விரும்பும்படியான ஆட்டுக் குட்டிகள் பிறப்பதற்கு கையாண்ட முறைகள் சொல்லப் பட்டுள்ளது. வேதத்திலுள்ள இந்த பகுதியை நான் விரும்புவதில்லை .

’ஏன் ஆண்டவரே, மூடநம்பிக்கையான இந்த சம்பவத்தை வேதத்தில் அனுமதித்தீர். இதனால்தானே தற்காலத்தை சேர்ந்தவர்கள் வேகம் குறைகூறுவதும், கட்டுக்கதை என்று சொல்வதற்கு இடமாகி, என்று கேட்டேன். நான் வேதத்தை வாசிக்கும்போது , பகுதிக்கு வரும் சந்தர்ப்பத்தில் இதை படிக்காமல் தாண்டி .ெ- வதுண்டு. ஏனென்றால் இதில்

எனக்கு நம்பிக்கை இல்ல. ஒரு நாள், பரிசுத்த ஆவியானவரின் நிறைவோடு வேம் கமத்தை படித்துக் கொண்டிருந்த போது, இந்த பகுதி மீண்ற என் கண்களில் பட்டபோது, இது ஒரு மூடநம்பிக்கை, இந்த பகுதியை நான் படிக்கப் போவதில்லை என்றேன்.

ஆவியானவர் என்னிடம் சற்று பொறு. வேதத்தில் மூடநம்பிக்கை எதுமில்லை. அது உனக்கு விளங்கவில்லை அவ்வளவுதான். ஆகவேதான் இந்த பகுதி உனக்கு இருண் பகுதியாக உள்ளது. ஆனால் நான் சிருஷ்டிப்பின் சிறப்பு வி யில் இதை நடைமுறைப்படுத்துகிறேன். என்னைக் கவனி. என்றார்.

ஒரு பெரிய சத்தியம் எனக்கு வெளிப்படுத்தப்பட்டது. அது என் ஊழியத்துக்கு புதிய பரிமாணத்தை தந்தது. அற்புதமான விசுவாச விதியை நீ பயன்படுத்தாவிடில் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் புதிய ஆத்துமாக்கள் வருவதை நீ காணமுடியாது. நான்காம் பரிமாணத்தின் கிரியையினாலல்லாமல் உன் சொந்த பிரயாசங்களால் இந்த இலக்கை நீ அடையவே முடியாது.

தன் பெயருக்கு ஏமாற்றுக்காரன்' என்னும் அர்த்தமுடைய யாக்கோபு தன் மாமன்

லாபானிடம் சென்றான். அங்கே 20 ஆண்டுகள் தங்கியிருந்து ஒரு அன்னியனைப் போல தனது மாமனுக்கு உழைத்தான். யாக்கோபை வஞ்சிக்கும்படி லாபான் பலமுறை யாக்கோபின் சம்பளத்தை மாற்றினான். யாக் கோபும் பதிலுக்கு லாபானை வஞ்சிக்கும் வேளை வந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் மாறி மாறி ஏமாற்றிக் கொண் டார்கள். இப்போது யாக்கோபுக்கு 40 வயது. அவனுக்கு உலகப்பிரகாரமாக எந்த ஆசீர்வாதமும் இதுவரை எதுவுமே இல்லை. அவனுக்கு மனைவிகளும் பிள்ளைகளும் இருந்தார்கள். ஆகவே அவன் தன் சொந்தவீட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்று விரும்பினான்.

தேவன் யாக்கோபின் நிலவரத்தைக்கண்டு அவன் மீது இரக்கப்பட்டு, நான்காம் பரிமாணத்தின் இரகசியத்தின் ஒரு பகுதியை அவனுக்குக் காட்டினார். இந்த வெளிப்பாட்டை பெற்றுக் கொண்ட யாக்கோபு தன் மாமனிடம் சென்று, ’நீர் எனது ஆடுகளையெல்லாம் எடுத்துக்கொண்டீர்; பலவீனமா னவைகளே எனக்கு கிடைத்தது. ஆனால் இனிமேல் இந்த ஆடுகள் புள்ளியும் வரியுமான குட்டிகளைப் போடுமானால் அவைகள் என்னுடையதாக

வேண்டும், அதுவே என் சம்பளமாக இருக்கட்டும்’ என்ற ஒரு நிபந்தனையை சொன்னான்.

உறுதியான நிறமுடைய ஆடுகள் குறைந்த அளவுதான் பலநிற குட்டிகள் போடும், இந்த இளைஞன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளப்பார்க்கிறான். சரி நாமும் அப்படியே செய்து இவனது சம்பளத்தை இன்னமும் குறைத்துவிடலாம் என நினைத்து அந்த சந்தோஷத்தில் லாபான் துள்ளினான். அத்துடன் யாக்கோபைப் பார்த்து ’நல்லது, நீ கேட்டுக் கொண்டபடியே நான் உன்னுடனே ஒப்பந்தம் செய்து கொள்கிறேன்’ என்றான்.

பிறகு, லாபான், புள்ளியும் கோடுள்ளதுமான ஆடுகளை யெல்லாம் பிரித்து மூன்று நாள் பிரயாண தூரத்தில் அவைகளை வைத்து தன் குமாரர்களிடம் ஒப்புவித்தான். யாக்கோபிடம் உறுதியான நிறமுடைய ஆடுகள் மட்டும் மீந்திருந்தன. யாக்கோபு மலைப்பகுதிக்குச் சென்று தன் ஆடுகளுக்கு வாதுமை, புன்னை , மற்றும் அர்மோன் மரக் கொப்புகளை வெட்டி அவைகளின் பட்டைகளை உரித்து, ஆடுகள் பொலியும்போது அவைகளைப் பார்க்கத்தக்கதாக தண்ணீர் வாய்க்கால்களில் போட்டு வைத்தான்.

யாக்கோபு அங்கே நின்று கவனித்துக் கொண்டிருந்தான். யாக்கோபு அதற்குப் பின்பு விருத்தியடைந்தான். ஆடுகள் புள்ளியுள்ளதும், கோடுள்ளதுமான குட்டிகளைப் போட்டு என்று வேதம் சொல்கிறது.

யாக்கோபின் சிந்தனையில் தேவன் ஒரு தரிசனத்தையும் கனவையும் உண்டாக்கினார். முன்னதாக அவனது மனநிஏழ்மையும் தோல்வியும் ஏமாற்றமும் நிறைந்ததாக இருந்த ஆனால் தேவன் யாக்கோபின் சிந்தனையை மாற்றி, பள்ளயும் கோடுமான மரக்கிளைகளை உபகரணமாகப் பாடி படுத்தி அவன் தன் சிந்தனையை கனவாக தரிசிக்கும் செய்தார்.

தன் ஆடுகள் புள்ளியும் கோடுகளுமுள்ள குட்டிகளை போடுவதாக மீண்டும் மீண்டும் சொப்பனங் கண்டால் பரிசுத்த ஆவியானவரின் பாஷையாகிய ’தரிசனம் காணுதலை’ கற்றுக் கொள்ளத் தொடங்கினான். அறிந்த வா பாஷையின் மூலமாகவே நாம் வேறொரு மனிதனுடன் உரையாட முடியும். அறியாத பாஷையில் எப்படி நாம் மற்றவரோடு உரையாட முடியும்.?

பரிசுத்த ஆவியானவரின் பாஷையை அறிந்து கொண்டதும் யாக்கோபு, பரிசுத்த ஆவியானவருடன் யாக் கோபு உரையாட ஆரம்பித்தான். பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யத் தொடங்கிவிட்டார். யாக்கோபு சீக்கிரத்தில் திரளான மந்தையை உடையவனானான், பணக் காரனானான்.

வேதாகமத்தில் 8000க்கும் மேற்பட்ட வாக்குத்தத்தங்கள் உள்ளன. அவைகள்தான் நமக்கு புள்ளியும் வரியுமான கிளைகள். மலைக்குப் போய் புன்னை, வாதுமை, அர்மோன் மரங்களை வெட்டிக் கொண்டுவரத் தேவையில்லை. உங்களுக் காகக் காத்திருக்கும் பரிசுத்த வேதாகமத்தின் வாக்குத் தத்தங்களை எடுத்துக் கொள்ளுங்கள். இவைகள் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் தோய்க்கப்பட்டவை.

யாக்கோபுக்கு பலநூறு ஆண்டுகளுக்குப் பின்பு, தேவன் கல்வாரியில் புள்ளியும் வரியுமான ஒரு மரத்தை வைத்தார்.

அது அரிவாளால் வெட்டப்பட்டதல்ல, அதுவே மெய்யான இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் உண்டானது. அதை நோக்கிப் பார்க்கிற எவரும், ஒவ்வொருவரும் ஒரு புது சிந்தனையை, தரிசனத்தை, பரிசுத்த

ஆவியானவரின் வல்லமையால் அடைந்து மாற்றம் பெறுகிறார்கள்.

என் சுய அனுபவத்திலிருந்து உங்களுக்குச் சிலவற்றைச் சொல்கிறேன். ஒரு கிறிஸ்துமஸ் செய்திக்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்த போது, அவசர தொலைபேசி செய்தி யில், சீயோல் பட்டணத்தின் தேசிய மருத்துவமனையிலிருந்து ஒருவர் என்னை அழைத்து, ’உங்கள் சபை உறுப்பினர் ஒருவர் மரித்துக் கொண்டிருக்கிறார்; ஒரு வாடகைக் கார் அவரை மோதிவிட்டது. அதன் ஓட்டுனர் அவரைப் பின் இருக்கையில் அமர வைத்து காலை முழுதும் சுற்றிக் கொண்டிருந்தான்’ என்றார்.

அந்நாட்களில், வாடகைக்கார் ஒருவனை மோதினதால் அவன் இறந்து போனால் உடனடியாக அதன் ஓட்டுனர் 2500 டாலர் பணம் மட்டும் கொடுத்தால் போதும். ஆனால் அவன் காயம்பட்டால் மருந்துவமனைச் செலவைக் கொடுக்க வேண்டும். மருத்துவமனைச் செலவு 2500 டாலருக்கும் அதிகமாக இருக்கும் என்பதால், தான் ஒருவனை மோதினதை யாரும் பார்க்கவில்லை என அந்த ஓட்டுனர் கண்டதால், அந்த நபரை பின் இருக்கையில் எடுத்துப் போட்டு அவன் சாகும் வரை

காரை நிறுத்தாமல் ஒட்டிக்கொண்டேயிருந்தான்.

ஆனால் இவரோ அழகான தொரு தொப்பியையும் மனைவிக்காக சில பரிசுப் பொருட்களையும் வாங்கிக் கொண்டு சந்தோஷ உணர்வுடன் வாகனம் வருவதைக் கூட கவனிக்காமல் சாலையின் குறுக்கே நடந்திருக்கிறார். வாடகைக் கார் அவரை மோதியிருக்கிறது. அதிகமாய் இருட்டிவிட்ட மாலை நேரமானதால் யாரும் கவனிக்கவில்லை. எனவே, வாகன ஓட்டி, அவரைத் தன் காரிலேயே அமர்த்தி அந்த இரவு முழுவதும் சுற்றிக் கொண்டிருந்திருக்கிறான் காவலர் ஒருவர் இந்த ஓட்டியைப்பிடித்ததால் அவரே அந்த அடிபட்ட ஆளை மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார். மோதின வேகத்தில் அவரது குடல்கள் சரிந்து, வயிறு முழுவதும் இரத்தமயமாக இருந்தது. அத்துடன் இரத்த விஷம் ஆகிவிட்டது.

மருத்துவர் பரிசோதித்துவிட்டு, 'போதகரே, மா. முறையில் இவரைக் குணமாக்குவது இயலாத காரியம் ஏற்றவேளையில் சிகிச்சையளிக்காததால் இரத்தம் மும்: விஷம் ஆகிவிட்டது. அவரைக் காப்பாற்ற இயலாது" என். 'அவருக்கு அறுவை சிகிச்சை செய்யக்

கூட செய்யுங்கள். நான் ஆராதனை முடிந்ததும் ஓடிவந்து விடுகிறேன்“ என்றேன்.

ஆராதனை முடிந்ததும் மருத்துவமனைக்குச் செல் பார்த்தேன். நோயாளி சுயநினைவற்றிருந்தார். மருத்துவர்கள் என்னிடம், ’போதகரே, நாங்கள் அவரது வயிற்றைத் திறந்து பார்த்தபோது, 3 இடங்களில் குடல்கள் அறுந்து போயிருக் கிறது, அந்த இடமெல்லாம் சுத்தம் செய்யக்கூடாத அளவுக்கு அழுக்குகளால் நிறைந்திருக்கிறது. அவர் மரித்துக் கொண்டிருக்கிறார். அவர் பிழைப்பார் என்கிற நம்பிக்கையே இல்லை . எங்களால் எதுவும் செய்ய இயலாது’ என்றனர்.

’நல்லது, என்னால் இயன்றதைச் செய்கிறேன்’ என்றேன் நான் அவரைப் பார்த்தபோது ஆழ்ந்த மயக்க நிலையில் இருந்தார். அவரது படுக்கைக்கு அருகில் முழங்காலிட்டு, “தேவனே, எனக்கு 5 நிமிடங்கள் தாரும். அவர் மயக்க நிலையிலிருந்து 5 நிமிடங்கள் திரும்பிவரட்டும்; நான் முயற்சி செய்கிறேன்’ என ஜெபித்தேன்.

என்ன ஆச்சர்யம்! அவர்தன் கண்களைத் திறந்து பார்த்தார். ’போதகரே! நான் செத்துக் கொண்டிருக்கிறேன்’ என கத்தினார்.

நீங்கள் அப்படி சொல்லக்கூடாது. இப்படி நீங்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தால் சாவீர்கள், நான் உங்களுக்கு உதவி செய்ய இயலாது. உங்களது கற்பனை யையும் நினைவுகளையும் மாற்றிக் கொண்டு, புதிய விதமாக சிந்தித்து அதை நீங்கள் தரிசனமாக்கி அதையே நீங்கள் பார்க்கவும் சிந்திக்கவும் வேண்டும் என்றேன்.

என்னை கவனியுங்கள் ஒரு வாலிபனை உங்கள் கற்பனையில் பாருங்கள். அவன் தன் மனைவிக்கு வாழ்த்துச் சொல்லி விடைபெற்றுச் செல்கிறான். அழகும் ஆரோக் கியமும் நிறைந்த அவன் அலுவலகத்துக்குச் சென்றபோது வெற்றிகரமாக தன் வேலைகளை முடிக்கிறான். பலரும் அவனை மரியாதையுடன் பார்க்கின்றனர். மாலை நேரத்தில் தன் மனைவிக்காக நல்ல பொருட்களை வாங்கிக் கொண்டு திரும்புகிறான். ஆவலுடன் அவன் வரவுக்காக காத்திருக்கும் மனைவி அவனை புன்முறுவலோடு அவனை எதிர்நோக்கி வீட்டினுள் அழைத்துச் செல்கிறாள். அங்கே இருவரும் அந்த மாலையில் பிரியமான உணவை உண்கின்றனர்.

நான் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் மனிதன் வேறு யாருமல்ல, நீங்களேதான் !

அப்படியொரு மனிதனை கற்பனை செய்து பாருங்கள், உங்கள் மனதில் அக்காட்சியைக் கொண்டு வாருங்கள். அந்த மனிதனைப் பார்த்து, அந்த மனிதன் நான்தான் என உங்கள் இருதயத்தில் சொல்லுங்கள்.

மரண சாயலின் தோற்றத்தை நீங்கள் நினைக்கவே வேண்டாம். நான் சொன்ன அந்த மனிதனையே நினைத்துக் கொண்டிருங்கள். நான் ஜெபிக்கிறேன். உங்கள் மனதில் அவனை பார்த்துக் கொண்டேயிருங்கள். ஜெபிப்பதை என்னிடம் விட்டுவிடுங்கள். அப்படி செய்வீர்களா? என்றேன்.

'ஆம், நான் அப்படியே செய்கிறேன். என் நினைவுகளை மாற்றிக் கொள்கிறேன். அந்த காட்சி என்னில் உயிருள்ளதாகும்படி அதையே நோக்குகிறேன் .... இப்போது அப்படியே காண்கிறேன்' என்றார்.

இப்படி நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது மருத்துவர் இரண்டு தாதியருடன் நுழைந்தார். அவர்கள் என்னைப் பார்த்து பரியாசம் பண்ணி, எனக்கு மூளை சரியில்லை என நினைத்தனர். ஆனால் நானோ கவனத்துடன் இருந்தேன். ஆவிக்குரிய நான்காம் பரிமாணத்தின் விதியை நான் அறிந்திருந்தேன். அந்த மனிதன் பரிசுத்த

ஆவியானவர் தந்த பாஷையைப் பேசிக் கொண்டிருந்தார். ஆழ்ந்த அனுபவத் தோடு ஆவியானவருடன் தொடர்பு கொண்டிருந்தார்.

அவரது படுக்கையை இறுகப் பிடித்துக் கொண் முழங்காலில் நின்று ஜெபிக்கத் தொடங்கினேன். ’பரி. ஆவியானவரே, இப்போது அவர் உமது பாலை பேசுகிறார். அவருக்கு ஒரு தரிசனமும் நினைவும் உக. அவரது சரீரத்தினுள் நுழைந்து நீர் ஆளுகை செய்தருள இந்த மனிதன் பூரண சுகம் பெறும்படி கட்டளையிடுகிறேன் என்றேன்.

உடனே, அங்கிருந்த அவிசுவாசிகளான தாதிமார், அதை மிகவும் உஷ்ணமாக இருக்கிறது. உஷ்ணத்தை தாங்க முன் வில்லை என்றனர். ஆனால் வெளியில் குளிர் இருந்த அங்கே உஷ்ணம் இல்லை. இது பரிசுத்த ஆவியானவரின் அனல்! மருத்துவரும் தாதியரும் நெருப்பு பரவுவது போல், உணர்ந்தனர். அவர்களது காதுகள் சிவந்து போயின. பரிசும் ஆவியானவர் அங்கு நிறைந்திருந்தார். கட்டில் அசைவுற்றது.

அற்புதமாக அந்த மனிதன் சொஸ்தமாகி, ஒரே வாரத்தில் மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு வந்தார். நல்ல தொரு வியாபாரம் செய்கிறார். ஞாயிறு தோறும் அவர் பால்கனியில் ஆராதனைக்காக

அமர்ந்திருப்பதை நான் காணும் போது 'தேவனுக்கு மகிமை உண்டாவதாக! நாம் பரிசுத்த ஆவியானவரின் பாஷையைப் பேசுவோம். நாம் சிருஷ்டிக்கப்பட்டோம் அல்லேலூயா! என்று எனக்குள் சொல்லிக் கொள்வேன்.

வேறொரு சம்பவத்தைச் சொல்கிறேன்.

ஒருநாள் நான் என் அலுவலகத்திலிருந்த போது, 50 வயதான ஒரு பெண் ஓடிவந்து 'போதகரே. என் குடும்பம் முழுவதும் நொறுங்கி அழிந்துவிட்டது: எனக் கத்தினாள்.

அழுவதை நிறுத்திவிட்டு விஷயத்தை சொல்லுங்கள்' என்றேன்.

எனக்கு பல ஆண்பிள்ளைகள். ஒரே ஒரு பெண் பிள்ளைதான். ஆனால் அவளோ என் கணவனின் நண்பர்களோடும் என் மகன்களின் நண்பர்களோடும் சுற்றித் திரிவதுடன் அவர்களோடு படுத்துக் கொள்கிறாள். ஒரு விடுதியிலிருந்து அடுத்த விடுதி, ஒரு நடன அரங்கத்திலிருந்து அடுத்த அரங்கம் இப்படியாகச் சுற்றித் திரிகிறாள்.

அவளால் எங்களுக்குப் பெருத்த அவமானம். என் கணவர் அலுவலகத்துக்கு செல்வதில்லை. என் மகன்கள் மனக்கலக்கத்தினால் செத்துக்

கொண்டிருக்கிறார்கள். அவர் களெல்லாரும் வீட்டை விட்டுப் போகப்போகிறார்கள். என்னால் இயன்ற மட்டும் முயற்சித்துவிட்டேன். ஆண்டவரே அவள் மண்டையை உடைத்துவிடும் என்று கூட ஜெபித்து விட்டேன் போதகரே நான் என்ன செய்யட்டும்' என்றாள்.

நீங்கள் முதலில் புலம்புவதையும் அழுவதையும் நிறுத்துங்கள். ஆண்டவர் உங்கள் ஜெபத்துக்கு ஏன் பதில் தரவில்லை என இப்போது புரிகிறது. தவறான விதத்தில் ஜெபித்திருக்கிறீர்கள். ஆண்டவரிடம் விபசாரப் பெண்ணின் படத்தை காண்பித்திருக்கிறீர்கள் அப்படித்தானே?'

'ஆம்! அவள் அப்படித்தானே இருக்கிறாள்? அவள் விபசாரிதானே?

'அவள் மாற்றப்பட்டவளாக இருக்க வேண்டுமென நீங்கள் விரும்பியிருந்தால், வேறு விதத்தில் ஜெபித் திருப்பீர்கள். உங்கள் சிந்தனையில் ஏற்பட்ட மாசை சுத்தி கரித்து விட்டு, உங்கள் மனதில் புதியதொரு காட்சியை கொண்டுவர வேண்டும்' என்றேன்.

ஆனால் அப்பெண்மணி, என்னால் அப்படிச் செய்ய முடியாது. அவள் அசுத்தமும்

அவலட்சணமுமானவள், பாதகியாய் இருக்கிறாள் என்றாள்.

'அப்படிப் பேசுவதை நிறுத்தி, புதிய கண்ணோட்டத்துடன் பாருங்கள். நாம் இருவரும் முழங்காலிட்டு ஜெபிப்போம். கல்வாரியின் பாதங்களில் சென்று நம் கரங்களை வானத்துக்கு ஏறெடுப்போம். நமக்காக அடிபட்ட, இரத்தம் சிந்தின சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்போம்.

இயேசு அவளுக்காகத்தானே சிலுவையில் தொங்கினார். அவளை இயேசுவின் பின்னால் வைத்துப் பார்ப்போம்.

அவளை, அடிபட்ட இயேசுவின் சிலுவையினூடாகக் காட்டிபோம். மன்னிக்கப்பட்டவளாக, சுத்தமாக்கப்பட்டவளாக மறுபடி பிறந்தவளாக, பரிசுத்த ஆவியினால் நிறை. முற்றிலும் மாற்றப்பட்டவளாக அவளை உன்னால் பார். முடியாதா? என்றேன்.

போதகரே, என்னால் அப்படியே புதிய பார்வையில் என் மகளைப் பார்க்க முடியும். என் மகளைக் குறித்த எம் நினைவுகளை சிலுவையினூடாகவும் இயேசுவுக்குள்ளாகவம் மாற்றிக் கொள்ள இயலும். என்றாள்.

ஆம் அற்புதம்! என்றேன். உன் மகளைக்குறித்து புதிய படத்தை நான் காண்பிக்கிறேன். தெளிவும் திட்டவட்டமாக இக்காட்சியை நாளெல்லாம் உங்கள் சிந்தனையில் வைத்திருங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்வார். அவரது பாஷையினால் அதைத் தரிசியுங்கள். சிலுவையினடியில் நாம் வந்தபோது சரியான காட்சியை மனதில் கொண்டோம் என நம்புகிறேன்.

எனவே, முழங்காலிட்டு ஜெபித்தோம். 'ஆண்டவரே, இக்காட்சியை நீர் காண்கிறீர். பிரியமான பரிசுத்த ஆவியானவரே, இந்த புதிய காட்சியினூடாய், தரிசனத் தினூடாய் கடந்து சென்று அற்புதம் செய்து அவளை மாற்றும்.

பிறகு அத்தாயாரை அனுப்பிவிட்டேன். அவர்கள் சந்தோஷமாக திரும்பிச் சென்றார்கள். அதற்குப்பின் அவர்கள் அழவில்லை , மாறாக, அவளது மகள் பற்றிய அவளது நினைவுகள் மாற்றப்பட்டிருந்தது. சில மாதங்களுக்குப் பின் அவள் ஒரு அழகான இளம் பெண்ணை என்னிடம் அழைத்து வந்து, மிகுந்த சந்தோஷத்துடன் இவள்தான் என் மகள் என்றார்கள். பிறகு நடந்ததை சொன்னார்கள்.

ஒரு நாள் இரவு ஒரு விடுதியில் ஒரு மனிதனுடன் அவள் படுத்திருக்கிறாள். காலையில் விழித்தபோது தான் இழிவு படுத்தப்பட்டதையும் அசுத்தமாயிருப்பதையும் உணர்ந்தாள். தன் ஆவியில் துயரத்தை உணர்ந்த அவள் உடனடியாக வீட்டுக்குச் செல்ல நினைத்தாள். தன் தகப்பன் மற்றும் சகோதரர்களை நினைத்து பயந்து நடுங்கினாள். ஒரு தீர்மானத்துடன், ’நான் மீண்டும் ஒருமுறை வீட்டுக்குச் செல்வேன். அவர்கள் என்னை ஏற்றுக் கொள்ளாமல் உதறித் தள்ளினால் இது எனது கடைசி முயற்சியாக இருக்கும் என தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

அவள் தன் வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினாள். கதவைத் திறந்த தாயாரின் முகத்தில் சூரியப் பிரகாசம் போன்ற பிரகாசம் காணப்பட்டது. அத்துடன், மகளே வா என அழைத்து கட்டித் தழுவிக் கொண்டார்கள்.

தாயின் அன்பில் முற்றிலும் மூழ்கிப் போன மகள் மனமுடைந்து அழுதாள். தாய் ஜெபித்தாள். தன் மகளைக் குறித்த சிந்தனை முற்றிலும் மாறியிருந்தது. தன் மகளை வரவேற்று அணைத்துக் கொண்டாள்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு அத்தாயார் தன் மகளை ஆலயத்துக்கு அழைத்து வந்தார்கள்.

பிரசங்கத்தை கவனித்துக் கொண்டிருந்த அவள் பாவங்களை அறிக்கை செய்து, இதயத்தை இயேசுவுக்கு கொடுத்து பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தையும் பெற்றுக் கொண்டாள். கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாய் காணப்பட்டாள். முடிவில் அவளுக்கொரு நல்ல கணவனும் கிடைத்துவிட்டான். இப்போது அவளுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். அத்துடன் இக்குடும்பம், வீட்டு ஜெபக்குழுத் தலைவர்களில் ஒன்றாக இருக்கிறது. அவள் ஒரு தாகமுள்ள சுவிசேஷகி. இவையெல்லாம் நடந்ததற்கு ஒரே காரணம், தன் தாய் அவளைப்பற்றிய சிந்தனையை தரிசனத்தை 4ம் பரிமாணத்தின்படி மாற்றிக் கொண்டதுதான்.

வேதாகமம் முழுவதிலும் தேவன் எப்போதும் இந்த நான்காம் பரிமாணத்தின் விதியை கையாண்டிருக்கிறார். யோசேப்பைப் பாருங்கள். அவன் விற்கப்படும் முன்பே, தேவன் அவன் இதயத்தில் அவனைக்குறித்த படத்தை அவனுக்குள் வைத்துவிட்டார். அவன் எகிப்துக்கு அடிமையாக விற்கப்பட்ட போதிலும் அவன் ஏற்கனவே விசுவாசத்தினால் ஆளுகை செய்யப்பட்டான். பிற்காலத்தில் அவன் தேசியத் தலைவன் ஆனான்.

மோசேயைப் பாருங்கள் ஆசரிப்புக் கூடாரத்தை ஸ்தாபிக்குமுன் அவன் சீனாய் மலைக்கு அழைக்கப்பட்டான்.

நாற்பது இரவும் பகலும் அங்கே தங்கியிருந்த போது ஆசரிப்புக்கூடாரத்தைப் பற்றிய தெளிவான அமைப்பு (படம்) அவனுக்கு காட்டப்பட்டது. தரிசனத்தில் அவன் க விதமாகவே ஆசரிப்பு கூடாரத்தைக் கட்டினான்.

ஏசாயா, எரேமியா, எசேக்கியல், தானியேல் மக அநேக தேவதாசர்களுக்கு தரிசனங்களைத் தந்தார். கே. அவர்கள் நான்காம் பரிமாணத்திற்குள் அழைத்துவந்து பரிசுத்த ஆவியானவரின் பாஷையில் (தரிசனம்) போதிக்க பின்பு அவர்கள் விசுவாசித்து ஜெபித்தார்கள்.

அப்போஸ்தலனாகிய பேதுருவின் வாழ்க்கையிலும் இதுதான் உண்மை . அவனது இயற்பெயர் சீமோன் என்பது நாணல் என்பது அதன் பொருள். அந்திரேயாவால் அவன் நடத்தப்பட்டு வந்தபோது. இயேசு அவனைப் பார்த்து ஆம், நீ சீமோன், அதாவது நாணலைப் போன்றவன். உன் குணம் வளைந்து கொடுக்கக் கூடியதும் மாறக் கூடியதுமாயிருக்கிறது. ஒரு நேரம்

கோபப்படுகிறாய் மறு நேரம் புன்சிரிக்கிறாய். ஒரு நேரம் நீ குடிக்கிறாய், அடுத்த நேரம் உன்னை புத்திசாலியாய் காட்டிக் கொள்கிறாய்.

மெய்யாகவே நீ நாணல்தான். ஆனால் நான் உன்னை பாறையாக மாற்றப் போகிறேன். நாணல் என்ற சீமோன் உலகத்துக்கு மரித்து, பாறையாகிய பேதுருவாய் நீ வாழப் போகிறாய்.

பேதுரு ஒரு மீனவன். பாறையின் நிலையான மற்றும் உறுதியான தன்மை பற்றி அவனுக்குத் தெரியும். அன்றி லிருந்து அவன் தன்னை ஒரு பாறையாக வர்ணித்துக் கொண்டான். கலிலேயாக்கடல் அலைகள் பாறையில் மோதி நுரைதள்ளுவதை அவன் பார்த்திருக்கக்கூடும், அங்கே பாறை தான் ஜெயம் பெற்றதல்லாமல் அலைகளல்ல. எத்தனை அலைகள் மோதினாலும் பாறை தகர்க்கப்படவில்லை. மாறாக அது உறுதியாய் நிற்கிறது, பேதுரு தன்னைப்பார்த்து நான் பாறையாய் இருக்கிறேன். ஆம் நான் பாறைதான் என்று சொல்லிக் கொண்டான்.

அத்திருச்சபையின் உறுதியான பாறையாகப் பேதுரு மாறி விட்டார். பேதுரு பாறையாக மாற்றப்படுவதற்கு முன்பாக, இயேசு, பேதுருவை ஒரு பாறையாகக் கண்டு

தரிசித்தார். அதன் பின் பேதுரு பாறையாகவே மாறினார்.

யாக்கோபை தேவன் இஸ்ரவேல் என ' மாற்றினார். தேவபிரபு' என்பது அதன் பொருள். அவன் ஏமாற்று இறவனும் வஞ்சகனுமாயிருந்தான். ஆனால் அவன் பிரபு எனப் பெயர் பெற்றான். இது அவன் மாற்றப்பட்டபின் நடந்தது.

முழு உலகத்திலும் கிறிஸ்தவரல்லாதோர், மிதமிஞ்சின தியானங்களில் ஈடுபடுகிறார்கள். தியானத்தில், ஒரு காரியத்தைக் குறித்த தெளிவான நோக்கமும் தரிசனமும் கொள்ளவேண்டும் என்கிறார்கள்.

மனிதர்கள் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவன், அற்புதங்களின் தேவனாக இருப்பதால், அவரது பிள்ளைகள் அற்புதங்களை காண வேண்டும்மென்ற விருப்பத் துடன் பிறந்திருக்கிறார்கள். அற்புதங்களை காணாமல், தேவன் வல்லமையுள்ளவர் என மக்களை திருப்திப்பட வைக்க முடியாது.

## உங்கள் பொறுப்பு

இந்த மக்களுக்கு அற்புதங்களை வழங்குவது உங்கள் பொறுப்புத்தான். பரிசுத்த வேதாகமம் மூன்றாம் பரி மாணத்துக்குரியதல்ல, ஆனால்

அது நான்காம் பரிமாணத்துக் குரியது. ஏனெனில், அதில் தேவனையும் அவர் நமக்குத் தந்த ஜீவனையும், பரிசுத்த ஆவியானவரின் பாஷையையும் வாசிக்கிறோம். வேத வசனங்களை வாசிக்க வாசிக்க உங்கள் தரிசனமும் நினைவுகளும் விரிவடையும். அந்த தரிசனத்தை கிரியை செய்யக்கூடியதாய் மாற்றுங்கள். நீங்கள் வாசிக்கிற வேதவாக்கியங்களை பரிசுத்த ஆவியானவர் உயிர்ப்பித்துத் தருவாராக!

மிஷினரிப் பணியில் உங்களுக்கு சந்தர்ப்பமோ சாதகமான சூழ்நிலையோ இல்லாதிருக்கலாம், ஆனால் உட்கார்ந்து தரிசனங்காண முடியுமே! அது வல்லமையுள்ளது! பரிசுத்த ஆவியானவர் வந்து தரிசனம் காட்சியாகிய அவரது பாஷையை உங்களுக்குப் போதிக்கட்டும். அந்த தரிசனத்தைக் அந்தக் காட்சியை உங்கள் மனதில் வைத்திருங்கள், பரி. ஆவியானவர் அதை உயிருள்ளதாக்கி விடுவார்.

உங்கள் இதயத்தின் வாஞ்சையை நிறைவேற்ற தேவன் விரும்புகிறார். ஏனெனில் 'நீதிமான் விரும்புகிறது அவனுக்கு கொடுக்கப்படும்' என்று நீதிமொழிகள் 10:24ல் வேதம் சொல்கிறது. கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு, அவரே உன்

இருதயத்தின் வேண்டுதல்களை (விருப்பங்களை) அருள் செய்வார். (சங்கீதம் 37:4)

முதலில் தெள்ளத் தெளிவான ஒரு இலக்கை உண்டாக்கிக் கொள்ளுங்கள். உங்கள் சிந்தையில் அதைக் தெளிவாக உருவாக்கி கொள்ளுங்கள். அதுவே உங்கள் ஆர்வமாக இருக்கட்டும். அதை அடைந்து கொள்ளும் வரை தொடர்ந்து ஜெபியுங்கள். ஆனால் மாயையான யோகாசனம் தியானத்திலோ மிதமிஞ்சின கற்பனை உலகிலோ இறங்கிவி டாதிருங்கள். இவைகள் நம்மை நன்மைக்கல்ல, தீயவழிகளில் சிந்தனைகளில் இழுத்துச் சென்றுவிடும். நாம் நமது தரிசனங் களையும் சொப்பனங்களையும் பரிசுத்த தேவனுக்காக செயல் படுத்துவோம். நாம் எழுந்து எகிப்திய மந்திரவாதிகள் செய்ததை விட அதிகம் செய்து காட்டுவோம். உலகமாகிய இந்த எகிப்தில் அநேக மந்திரவாதிகள் இருக்கிறார்கள். ஆனால் நாம் நம்முடைய தரிசனத்தையும் கனவுகளையும் பரிசுத்த தேவனுக்காக செய்வோம். நாம் மோசேயைப் போல் ஆச்சரியமான அற்புதங்களைச் செய்வோம்.

நமது சபையில் அற்புதங்கள், சாதாரண நிகழ்ச்சிகள் தான். நான் எனது

அனுபவத்திலேயே பேசுகிறேன். மனிதன் மற்ற விலங்குகளைப் போலல்ல. நீங்கள் ஒரு சாதாரண சிருஷ்டியல்ல. ஏனெனில் உங்கள் இருதயங்களில் நான்காம் பரிமாணம் இருக்கிறது. அது இந்த மூன்றாம் பரிமாணமாகிய உலக்காரியங்களின் மேல் ஆளுகையும் அதிகாரமும் உடையதாக இருக்கிறது.

இந்த நான்காம் பரிமாணத்தின் ஆளுகையில் விசுவாசப் பகுதியிலிருந்து சூழ்நிலைகளுக்கு மேலாக கட்டளை கொடுக்கலாம். காயப்பட்டதையும், துயரப்பட்டதையும் குணமாக்கலாம். அசுத்தமானதை சுத்தத்துக்கும் அவலட்சணமானதை அழகுக்கும் நேராகத் திருப்பி விடலாம்.

# 3. பேசப்படும் வார்த்தையின் உருவாக்கும் வல்லமை !

நமது விசுவாசம் உருவேற்றப்பட சில முறைகளை நாம் பின்பற்றுவதுடன், மையமான சத்தியம், அவ்விசுவாசத்தின் மூலம் கிரியை செய்வதற்கு நாம் கற்றுக் கொள்ள வேண்டும். பேசப்படும் வார்த்தை பற்றிய அடிப்படை விதிகளையும் நாம் அறிந்து கொள்வதவசியம். எனவே, பேசப்படும் வார்த்தை யின் உருவாக்கும் வல்லமை பற்றி நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். அதன் பயன் எத்தனை முக்கியமானது என்பதையும் விளக்குகிறேன்.

ஒருநாள் காலை கொரியாவிலுள்ள ஒரு முன்னணி நரம்பியல் நிபுணர் ஒருவரோடு காலை உணவருந்திக் கொண்டிருந்தபோது, மூளை அறுவை சிகிச்சையில் உள்ள பற்பல மருத்துவ கண்டுபிடிப்புகளைப் பற்றி என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார். 'டாக்டர் சோ, மூளையிலுள்ள பேச்சுமையம் என்ற இடம் மற்றெல்லா நரம்புகளையும் ஆளு கிறது என உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டார். மேலும் அவர் சொன்னார். 'ஊழியர்களாகிய உங்களுக்கு வல்லமை இருக்கிறது. ஏனெனில், நரம்பியலின்

சமீபத்திய கண்டுபிடிப் பின்படி மூளையின் பேச்சு மையம் மற்றெல்லா நரம்புகளையும் ஆளுகிறது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

’இதை நான் எப்போதோ அறிந்திருக்கிறேனே’ என்று சிரித்துக் கொண்டே சொன்னேன். நரம்பியல் நிபுணர்களால் கண்டு பிடிக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்பு இது. இது எப்படி ஏற்கனவே உங்களுக்குத் தெரிந்திருந்தது?“, என்றார். இதை டாக்டர் யாக்கோபு என்பவரிடமிருந்து கற்றேன்’ என்றேன். டாக்டர் யாக்கோபு! யார் அது? எனக் கேட்டார். ’சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் வேதாகம காலத்தில் வாழ்ந்த புகழ் பெற்ற டாக்டர் அவர்’ என்றேன். அவர்தான் அப்போஸ்த லனாகிய யாக்கோபு. அவரது புத்தகத்தில் யாக்கோபு வரையுள்ள வசனங்களில் நாவின் செயல்பாடு, வார்க் களின் முக்கியத்துவம் மற்றும் பேச்சு மையம் பத் எழுதியிருக்கிறார்’ என்றேன்.

’என்ன. வேதாகமம் இது பற்றி போதிக்கிறதா? என் ஆச்சரியப்பட்டார் அந்த நிபுணர். ஆம் நாவு சிறியதோ அவயமாயிருந்தும் முழு சரீரத்தையும் அது ஆளுகிறது.

தொடர்ந்து அந்த நரம்பியல் நிபுணர் அந்த சமீபத்திய கண்டுபிடிப்பை விவரித்தார். ’பேச்சு மைய நரம்பு மணம் சரீரத்தையும்

கட்டுப்பாட்டுக்குள் வைக்கிறது. பேசப்படும் வார்த்தை சரீரத்தை கட்டுப்பாட்டுக்குள் வைக்கிறது. ஆகவே, ஒருவன் விரும்புவது போலவே தனது சரீரத்தை கட்டுக்குள் வைக்கலாம். மேலும் அவர் சொன்னார் ’நான் பெலவீன மடையப் போகிறேன்’ என ஒருவர் தொடர்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தால், எல்லா நரம்புகளும் நாம் எல்லாரும் பெலவீனமடையப்போகிறோம், ஏனெனில் தொடர்பு மையத்திலிருந்து நாம் பெலவீனமடைய வேண்டுமென கட்டளை பெற்றிருக்கிறோம் என சொல்லிக்கொண்டு பெலவீன மடைந்து விடுகின்றனவாம்.

ஒருவர் ’எனக்கு திறமையில்லை, நான் இந்த வேலையைச் செய்யமுடியாது என சொல்லிக் கொண்டிருந்தால், நரம்புகளெல்லாம் ஒன்றிணைந்து நாம் திறமையற்றவர்கள் எனவே இவ்வேலையை செய்ய இயலாது. ஏனெனில் நாம், மைய நரம்பமைப்பிலிருந்து கட்டளை பெற்றுள்ளோம் என சொல்லிக் கொண்டு அந்த நரம்புகள் செயலற்று காணப்படுகின்றன.

ஒருவர். நான் வயதாகிவிட்டேன். மிகவும் களைத்துப் போகிறேன். என்னால் எதையும் செய்யமுடியவில்லை என சொல்லிக் கொண்டிருந்தால் அவரது நரம்புகள் யாவும்

அப்படியே ஆகிவிடுமாம். அவைகள் தளர்ந்து விடுகின்றன. வெற்றிகரமான தனிப்பட்ட வாழ்வுக்கு

இந்த உரையாடல் எனக்கு மிகுந்த அர்த்தமுள்ளதாக இருந்தது. என்னுடைய வாழ்க்கையில் அது ஒரு அழுத்தமான உணர்வை ஏற்படுத்தியது. பேசப்படும் வார்த்தையின் வல்லமையானது. வெற்றிகரமான தனிப்பட்ட வாழ்வுக்கு காரணியாக இருக்கிறது எனக் கண்டேன்.

நான் ஏழை. கர்த்தருக்கு கொடுக்க என்னிடம் பணம் இல்லை என சிலர் சொல்வதுண்டு. நல்ல சம்பளத்தில் வேலை கிடைப்பதாக இருந்தாலும் 'நான் ஏழை, எனக்கு இந்த வேலை கிடைக்காது என்பர். அவர்களது உணர்வெல்லாம் ஏழையாக இருப்பதில்தான், அதன்படியே அவர்களுக்கு நேரிடுகிறது.

2000 ஆண்டுகளுக்கு முன்னால் வேதம் என்ன சொல்லிற்றோ, இன்றும் அப்படியேதான் இருக்கிறது. மருத்துவ விஞ்ஞானம் இந்த கருத்தை இப்போதுதான் கண்டு பிடித்திருக்கிறது. நரம்பியல் நிபுணரின் கூற்றுப்படி, ஒருவன், நான் இளைஞன், என்னால் முடியும், என சொல்வானானால் அவனது நரம்புகள், நரம்பு மையத்திலிருந்து

வல்லமை பெற்று பெலனுள்ளவைகளாக செயல்படுகின்றன.

நாவை அடக்குகிறவன் சரீரம் முழுவதையும் அடக்குகிறான் என வேதம் சொல்கிறது. எதைப் பேசுகிறீர் களோ அதுவே வந்து சம்பவிக்கும். ஏழை ஏழை என்று சொல்லிக் கொண்டிருந்தால் ஏழையாய்த்தான் இருப்பீர்கள். என்னால் முடியும் என சொல்லிப்பாருங்கள். நீங்கள் சித்தி பெறுவீர்கள். எந்த சவாலையும் சந்திக்கத்தக்க பெலனைப் பெறுவீர்கள். எதிர்மறையான (Negative) பேச்சுக்களை பேசக்கூடாது என்பதன் காரணம் இதுதான்.

கொரியாவில் சாவைப்பற்றி அடிக்கடி பேசும் பழக்கம் உண்டு. பொதுவாக எல்லாராலும் பேசப்படும் விஷயம் இது! 'ரொம்ப உஷ்ணமாக இருக்கு, நான் செத்துப் போய் விடுவேன்', 'அதிகமாய் சாப்பிட்டுவிட்டேன். எனவே மூச்சுத் திணறி சாகப் போகிறேன்', 'நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன் எனவே நான் சாகப் போகிறேன்', 'பீதியடைந்ததால் சாகப்போகிறேன்' என்று எதற்கெடுத்தாலும் சாகப் போகிறேன் எனச் சொல்வதுண்டு.

5000 ஆண்டு வரலாற்றிலும் எங்கள் தேசத்தில் தொடர்ந்து யுத்தமும் சாவும் வந்து

கொண்டேயிருக்கிறது. என் தலைமுறையில் என் தேசத்தில் சமாதானமேயில்லை. சாவு சாவு என நாங்கள் சொல்லிக் கொண்டே இருக்கிறோமல்லவா? அதன் விளைவுதான் இது! நாடி உலகப் போரின்போது பிறந்தேன். கொரியா போது வளர்ந்தேன். இப்போதும் யுத்தத்தின் சி எங்கள் தேசம் இருக்கிறது.

இது! நான் இரண்டாம் கொரியா யுத்தத்தின் யுத்தத்தின் விளிம்பில்

## நீங்கள் மாறுவதற்கு முன்னால் உங்கள் பேச்சு வேண்டும்.

உங்கள் பேச்சு மாறாவிட்டால் உங்களில் மாற்றம் நிகழப் போவதில்லை. உங்கள் பிள்ளைகள் நன்றாயிருக்க வே. மானால் நீங்கள் அவர்களுக்கு நல்ல காரியங்களைப் போல் கற்றுக் கொடுக்க வேண்டும். ஒழுங்கற்ற முரட்டு இளைஞர்கள் நல்லவர்களாக மாற வேண்டுமானால், நீங்கள் புதியவிட அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

இந்த புது பேச்சை அல்லது பாஷையை எங்கே கற்பது? வேதாகமத்தில்தான்! ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல் வரை வாசித்துப் பாருங்கள். வேதாகம நடையைப் பின் பற்றுங்கள், விசுவாச வார்த்தைகளைப்

பேசுங்கள். விசுவாசத்தைத் தட்டியெழுப்பக்கூடியதும் முன்னேற்றமடையச் செய்யக் கூடியதும் பலன் தரக்கூடியதுமான ஜெயவார்த்தைகளை உங்கள் நரம்பு மண்டலத்துக்குள் அனுப்புங்கள். அந்த வார்த்தைகளையே பேசுங்கள். உங்கள் முழு சரீரத்தையும் ஆளக்கூடிய அளவுக்கு அவைகளை திரும்பத் திரும்பச் சொல் லுங்கள். நீங்கள் ஜெயம் பெறுவீர்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு மேலான வெற்றி உங்களுக்கு கிடைக்கும். இதுவே, பேசப்படும் வார்த்தையைப் பயன்படுத்துவதின் முதல் முக்கிய காரணம்.

நாம் பேசும் வார்த்தையில் வல்லமை இருக்கிறது!

## தேவ நோக்கத்திற்காக

நமது சொந்த வாழ்க்கையில் ஜெயம் பெறுவதற்காக மட்டுமல்ல, தேவநோக்கம் நிறைவேறுவதற்காகவும் பரிசுத்த ஆவியானவர் நாம் வார்த்தைகளைப் பயன்படுத்தும்படி விரும்புகிறார் என்பது இரண்டாவது காரணம்.

என் ஊழியத்தின் ஆரம்ப நாட்களில், பிரசங்கிக்கும் போது நான்

கஷ்டப்படுவதாகவும் என் ஆவியில் ஏதோ தடையிருப்பதாகவும் உணர்ந்தேன். ஆனால் பரிசுத்த ஆவியானவர் வந்து என் ஆவியில் இணைந்து கொண்ட போது, கட்டிகள் மறைவதாகவும், காசநோய் குணமடை வதாகவும் முடவர்கள் தங்கள் கட்டைகளை வீசி எறிந்துவிட்டு தாங்களாகவே நடந்து செல்வதாகவும் என் மனத்திரையில் கண்டேன்.

கொரிய தேசம் அமெரிக்காவிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறது. அப்போது, தெய்வீக சுகமளிக்கும் ஊழியத்தைப் பற்றி மிகவும் குறைவாகவே கேள்விப்பட்டிருந்தேன். என்னை சுற்றியிருந்த சில மிஷினரிமார் இப்படிப்பட்ட ஊழியத்தை அறியாதவர்களாக இருந்ததால் அவர்களிடம் இது பற்றி நான் விசாரித்தபோது எனக்கு குழப்பமே மிஞ்சிற்று. இது சாத் தானால் வந்த குழப்பம் என்பதை பிறகு புரிந்து கொண்டேன். என்னைத் தடை செய்யும் எண்ணம் என்னில் வரும்போது, தடை செய்யும் ஆவியே நீ என்னை விட்டு அகன்று போ! எனக் கடிந்து கொண்டேன்.

அப்படி நான் எவ்வளவாய் கடிந்து கொண்டேனோ, அவ்வளவாய் ஜனங்கள் சுகமடைவதை தரிசனமாகக் கண்டேன்.

தரிசனம் என்னில் நிலைத்திருந்ததால் உபவாசித்து ஜெபித்து கர்த்தரிடத்தில் காத்திருந்தேன்.

ஆண்டவர் என்னைப் பார்த்து, ’மகனே, அது சாத்தான் கொண்டுவரும் தடையல்ல. பரிசுத்த ஆவியானவரின் வாஞ்சையிது. இது ஞானத்தைப் போதிக்கிறவரமும், அறிவை உணர்த்துகிறவரமுமாகும். இந்த ஜனங்களை சுகமாக்கும்படி தேவன் விரும்புகிறார். ஆனால், நீ பேசாவிட்டால் அவரால் சுகமாக்க முடியாது” என்றார்.

’இல்லை, இதை நான் நம்ப மாட்டேன். நான் ஒரு வார்த்தையும் சொல்லாதிருக்கும் போதே தேவனால் எதையும் செய்யமுடியும்’ என்றேன்.

பிறகு வேதாகமத்தை வாசித்தேன். ஆதியாகமம் 1:2 ’பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டு இருந்தார். ஆனால் எதுவும் நடக்கவில்லையே. பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் அங்கேயிருந்தது. ஆவியானவர் தன் நிறைவான வல்லமையுடன் அசைவாடிக் கொண்டிருந்தார் அங்கே ஏதாவது நடந்ததா? என்று ஆண்டவர் கேட்டார்.

’இல்லை ’ என்றேன்.

’’உன் சபையில் பரிசுத்த ஆவியானவர் அசைவாடி எங்கும் நிறைந்திருக்கலாம். ஆனால் நீ பேசாத வரை பாவிகள் மனந்திரும்புவதோ, உடைந்த குடும்பம் இணைவதோ, நடக்கப் போவதில்லை. சும்மா இது வேண்டும் அது வேண்டும் என கேட்டுக் கொண்டிருக்காதே. வார்த்தையை அனுப்பு. நான் அற்புதங்களை நிகழ்த்தக் கூடிய ஆயுதம் அல்லது உபகரணம் அதுதான்’ என்றார். வெளிச்சம் உண்டாகக் கடவது, ஆகாய விரிவு உண்டாகக்கடவது என்ற நான் சொன்னபோது, அப்படியே நடந்தது.

இந்த சத்தியத்தை நான் அறிந்து உணர்ந்து கொண்ட போது என் வாழ்வில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. ’ஆண்டவரே என்னை மன்னித்துவிடும். இனி நான் பேசுவேன்’ என்றேன்.

ஆனாலும், இதுபோன்று யாரும் எனக்குச் சொல்லாததால் நான் பயந்திருந்தேன். நான் பேசியும் எதுவும் நடக்காவிட்டால் என்ன செய்வது, மக்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்றும் யோசித்தேன். ஆனாலும் ஜெபித்தேன்.

நான் பிரசங்கித்தபோது, வியாதியஸ்தர்கள் குணமாவதாக என் மனக்கண்களில் கண்டேன். ஆனால் நான் அறியா திருந்தேன். தலைவலியோடிருக்கிற யாரோ சுகமாகிக் கொண்டிருக்கிறீர்கள் என நான் சொல்லியிருக்கவேண்டும். நான் ’சுகமாகு’ என்று சொல்லும் ஒரு வார்த்தையினால் அவாகளா சுகமாக முடியுமா என நான் ஆச்சரியப்பட்டதுண்டு.

கொஞ்சம் கொஞ்சமாகத் தைரியம் வந்தது. அதற்குப் பிறகு பலர் சுகம் அடைவதாக, செவிடர் கேட்பதாக மனத்திரையில் கண்டு அவர்கள் சுகமடைவார்களாக செவிடர் கேட்பார்களாக என்றேன். இப்போது என் பையில் ஞாயிறு தோறும் நூற்றுக் கணக்கானவர்கள் சுகம் பெறுகிறார்கள். அநேக ஆராதனைகள் நடைபெறுவதாலும் நேரம் மிகக் குறுகினதாக இருப்பதாலும் நான் வேகமாக வேலை செய்யவேண்டும். . எனவே, நான் நின்று கொண்டிருக்கும் போது, ஆண்டவர் வரதானை வேளையில் சுகமளிக்கும் கிரியை நடந்து கொண்டிருப்பதை காட்டுகிறார். நான் அவைகளை வெளியே கொண்டுவருகிறேன். நான் கண்களை மூடி பேசிக் கொண் டிருக்கிறேன். சுகம் பெற்றதற்கு அடையாளமாக சுகம் பெற்றவர்கள் எழுந்து

நிற்கிறார்கள். ஆராதனை வேளையில் அநேகர் இவ்வாறு சுகம் பெறுகிறார்கள்.

நான் ’சுகமாகும் என்ற வார்த்தையை சொல்வதற்கு முன்னால் ஆவியானவர் கிரியை நடப்பிப்பதற்கு ஒரு அனு கூலமும் அங்கே இல்லை என்கிற உண்மையை அறிந்து கொண்டேன்.

மலையைப் பெயர்க்கத்தக்க விசுவாசத்தை ஆவியானவர் உங்களுக்கு கொடுத்திருந்தால், மலை விலகவேண்டுமே மலை விலகவேண்டுமே, என சும்மா ஜெபித்துக் கொண்டிராமல், நீ பெயர்ந்து சமுத்திரத்துக்குள் போ என கட்டளையிடுங்கள். அது அப்படியே நடக்கும்! இதை நீங்கள் கற்றுக் கொண்டு, பரிசுத்த ஆவியானவரின் நிறைவிலிருந்தும் தேவன் தந்த விசுவாசத்தினாலும் இப்படிப் பேசப், பழகிக் கொண்டால் உங்கள் வாழ்வில் அநேக அற்புதங்களைக் காணலாம்.

5 லட்சம் பேருக்கு ஊழியம் செய்வதென்பது ஒரு சாதாரண காரியமல்ல. எங்கள் சபையில் 24 மணிநேர தொலைபேசி சேவை உண்டு. தொடர்ந்து தொலைபேசியில் அழைப்புகள் வந்து கொண்டேயிருக்கும். உதவியாளர்கள் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுவார்கள். எனது தொலைபேசி பிற்பகலிலிருந்து

அதிகாலை வரை தொடர்ந்து கூப்பிட்டுக் கொண்டேயிருக்கும். எனக்கு வரும் டெலிபோன் தொல்லைகளுக்கு அளவேயில்லை. ஆயினும் ஒவ்வொரு வருக்காகவும் ஜெபிப்பேன்.

இரவு நேரங்களில் பாஸ்டர் என் பேரனுக்கு – ஜெபியுங்கள். பாஸ்டர் என் கணவர் இன்னும் வியாபார விட்டு திரும்பவில்லை . ஜெபியுங்கள், பாஸ்டர் இவர் மரிக் கொண்டிருக்கிறார். கடைசியாக உங்களைப் பார்க்க வேண்டுமென விரும்புகிறார், வருவீர்களா? இப்படி தொலை பேசியில் பல பல! தொலைபேசியின் ஒயரைத் துண்டித்து விடலாமா என்று கூடத் தோன்றும். நான் இப்படி எவ்வளவு காலம் பிழைப்பது!

ஆவியானவர் என்னைப் பார்த்து, நீ நல்ல மேய்ப்பன் நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளை ஆளில்லாமல் – விட்டுவிட மாட்டான்’ என்றார். நான் வெளியர் ஊழியங்களில் இருக்கும் போது மட்டும் நான் நன்றாக தூங்கியிருக்கிறேன்.

ஒரு நாள் மாலைப்பொழுதில், ஒருவர் என்னிடம் தொலை பேசியில் ’நான் இரண்டாண்டுகளாக என்னால் இயன்ற மட்டும் முயற்சித்துவிட்டேன், எங்கள் மணவாழ்க்கை வேதனையைத் தருகிறது.

இன்றிரவு பெரியதொரு சண்டையின் முடிவில் நாங்கள் பிரிவதென தீர்மானித்து விட்டோம். சொத்துக்களையும் தனித்தனியே பிரித்துவிட்டோம். ஒரே ஒரு காரியம். உங்கள் கைகளால் எங்களுக்கு திருமணம் நடந்தது. அது போல எங்கள் விவாகரத்துக்கும் நீங்களே உதவி செய்து விடுங்கள்' என்றார்.

ஊழியக்காரன் இணைத்து வைத்து ஆசீர்வதிக்க வேண்டுமா, பிரித்துவைத்து ஆசீர்வதிப்பதா? ம..! 'காலை வரை பொறுத்திருப்பாயா. இப்போது குளிராக இருக்கிறது. நான் படுத்துவிட்டேன். அல்லது நான் இப்போது வந்தே ஆகவேண்டுமா?

பாஸ்டர், நாளை காலை என்பது மிகவும் பிந்திவிடும் இப்போதே நாங்கள் பிரிந்துவிட்டோம். நீங்கள் எங்களும் பிரசங்கம் பண்ணவேண்டாம். அதற்கு நேரமில்லை. நாம் விலகிவிட்டோம். வந்து எங்களை ஜெபித்துப் பிரித்து வையுங்கள் போதும்' என பதில் வந்தது.

நொறுக்கப்பட்டவனாக என் படுக்கையை விட்டெழுந்து அடுத்த அறைக்குச் சென்றேன். சாத்தானுக்கு விரோதமாகக் கோபம் கொண்டேன். இது ஆவியானவரின் செயலல்ல. இது பிசாசின் வேலைதான் என நினைத்தேன். நான் ஜெபிக்கத்

தொடங்கின போது, எனது 4ம் பரிமாணத்துக்குள் வந்தேன். முழங்கால் படியிட்டு, கண்களை மூடி, பரிசுத்த ஆவியானவரின் உதவியுடன் சிலுவையினூடாக அக்குடும்பம் இணைந்து வாழ்வதாகக் கண்டேன். என் சிந்தனையில் தெளிவாக அவர்கள் இணைந்து வாழ்வதாகக் கண்டேன். 'இப்படியே இவர்கள் இணைந்து வாழட்டும் ஆண்டவரே' என ஜெபித்தேன். அப்படி நிகழுவதாக உணர்ந்து விசுவாசித்து அவர்களை சந்திக்கச் சென்றேன்.

அவர்கள் வசதியான அடுக்குமாடிக் கட்டடத்தில் வாழ்கிறார்கள். நான் அங்கே நுழைந்தபோது அவர்களிருவருக்குமுள்ள வெறுப்பு நீங்கி ஒரு குளிர்ந்த சூழ்நிலை இருப்பதை உணர்ந்தேன். உலகத்தில் உங்களுக்கு எல்லாமே இருந்தாலும் வெறுப்பையும் கசப்பையும் நீங்கள் அனுப விப்பீர்களென்றால் அவைகளால் உங்களுக்கு ஆசீர்வாதமில்லை .

நான் வீட்டுக்குள் வந்தபோது அந்த மனிதன் பெரிய ஹாலிலும் அவள் படுக்கையறையிலுமாக இருந்தனர். என்னைக் கண்டதும் அவன், தன் மனைவியைப் பற்றி இழிவாகப் பேசினான். அவன் மனைவி ஓடிவந்து அவர் சொல்வதை கேளாமல் நான்

சொல்வதைக் கேளுங்கள் என்றாள். அவளும் அவனைக் குற்றப்படுத்தினாள். அவரவர் சொல்வது சரியாகத்தான் தோன்றியது. ஆனால் நான் இடையில் நிற்கிறேன். ஜெபித்து எங்களைப் பிரித்துவிடுங்கள் என மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

நான் நான்காம் பரிமாணத்திலிருந்து கிரியை செய்யத் தொடங்கினேன். தனித்தனியே இருவரது கரங்களையும் பிடித்துக் கொண்டு, 'இந்த தம்பதியருக்குள் வெறுப்பான சிந்தனைகளைக் கொடுத்து பிரிக்க நினைக்கும் பிசாசே, இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உன் கட்டைத் தளரவிடு. இவர்கள் இருவரும் இணக்கமுள்ளவர்களாக இணைந்து வாழ்வார்களாக' என்று கட்டளையிட்டேன்.

திடீரென ஒரு வல்லமை என் கரங்களில் இறங்கும் கண்டேன். நான் பார்த்தபோது அவர்களிருவரும் கண் மல்க நின்று கொண்டிருந்தனர். அவர்களது கரங்களை விட விட்டு, 'தேவன் இணைத்ததை மனிதனோ சூழ்நிலையோ பிரிக்கக்கூடாது' என்றேன். சென்றுவருகிறேன் என்றேன். சந்தோஷமாக என்னை வழியனுப்பினார்கள். தேவன் இன்றும் கிரியை செய்கிறரர் அல்லேலூயா !

அடுத்த ஆராதனையில் ஆலயத்திலமர்ந்து அழகாக பாடினார்கள். அப்பெண்ணைப் பார்த்து என்ன நடந்தது என கேட்டபோது, நீங்கள் கட்டளையிட்டபோது இருவரின் உள்ளத்திலும் அசைவு ஏற்பட்டதுடன், ஏதோ ஒன்று எங்களை விட்டு விலகிச் சென்றது. அன்றிரவு நாங்கள் மூட்டை கட்டினவைகளைத் திரும்பவும் அவிழ்த்து எங்கள் வீட்டில் வரிசைப்படுத்தி வைத்தோம். இதை நினைத்துப் பார்க்கவே ஆச்சரியமாயிருக்கிறது. இப்போது நாங்கள் மிகவும் அன்புள்ளவர்களாக இருக்கிறோம் என்றாள். நான் வெறுமனே அமைதியாக ஜெபித்திருந்தால் எதுவும் நடந்திருக்காது! கட்டளையிட்டபோது வார்த்தை புறப்பட்டது. அந்த வார்த்தை கிரியை செய்தது. பரிசுத்த ஆவியானவருக்கு உங்களால் பேசப்படும் விசுவாச வார்த்தை தேவைப்படுகிறது. இயேசுவும் அப்போஸ்தலர்களும் இதையே செய்தார்கள். ஆனால் இன்று சபையானது துரதிர்ஷ்டவசமாக சும்மா கெஞ்சிக் கொண்டேயிருக்கிறது. நாம் கட்டளையிட வேண்டும்!

## இயேசுவின் பிரசன்னம் வெளிப்பட

பேசப்படும் வார்த்தையின் வல்லமை பயன்படுத்தப்பட வேண்டியதின் மூன்றாவது காரணம் என்னவெனில் இதன் மூலம் நீங்கள் கிறிஸ்துவின் பிரசன்னத்தை உருவாக்கி வெளிப்படுத்துகிறீர்கள். ரோமர் 10:10ல், ’நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்பு உண்டாக வாயினால் அறிக்கை பண்ணப்படும் என வேதம் சொல்கிறது.

விசுவாசத்தின் அறிக்கை மூலம்தான் இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் இரட்சிப்பை ஒருவன் பற்றிக் கொள்ள முடியும்.

இயேசுவிடமிருந்து இரட்சிப்பை பெற்றுக் கொள்ள யாராவது பரலோகத்திற்கு சென்று அவரை பூமிக்கு அழைத்து வரவேண்டும் என்று வேதத்தின் எந்த பகுதியிலும் சொல்லப் படவே இல்லை. இரட்சிப்பை அளிக்கும் வார்த்தைகள் மிக அருகாமையிலேயே உள்ளது. ஏனெனில் அந்த வார்த்தைகள் உங்கள் இருதயத்திலும் வார்த்தையிலுமே உள்ளது என்றுதான் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. இம்முறைமையில் இயேசு எங்கே இருக்கிறார். அவரது விலாசம் என்ன? உயரத்தில் ஆகாயத்திலுமல்ல தாழப் பூமியிலுமல்ல

இயேசு அவன் அவனுடைய வார்த்தையிலிருக்கிறார். இரட்சிப்பை அளிக்கும் அந்த வார்த்தைகள் எங்கே உள்ளன? அந்த வார்த்தைகள் உங்கள் வாயிலேயே உங்கள் இருதயத்திலேயே உள்ளன. நீங்கள் பேசும் வார்த்தைகளில் இயேசு நிச்சயமிருப்பார். நீங்கள் பேசும் வார்த்தைகள் மூலம் இயேசுவின் வல்லமையை நீங்கள் வெளிப்படுத்தலாம். கிறிஸ்துவின் பிரசன்னத்தை உங்களால் உருவாக்க முடியும். தெளிவாக விசுவாச வார்த்தைகளை பேசாவிட்டால் கிறிஸ்துவை வெளிப்படுத்த முடியாது. 'பூமியிலே எவைகளை கட்டுவீர்களோ அது பரலோகத்தில் கட்டப்பட்டிருக்கும்; பூமியிலே எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும் என வேதம் சொல்கிறது. கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் கொண்டுவருவது என்பது உங்களைப் பொறுத்ததே!

எங்களுடைய சபையின் 100 துணை போதகர்களோடு நான் கூட்டம் நடத்தும் போதல்லாம் நீங்கள் எங்கெங்கு போனாலும் இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தை உருவாக்க வேண்டியது உங்களது பொறுப்பு. கிறிஸ்துவை வெளிப் படுத்த, குறிப்பிட்ட தேவைகளை சந்திக்க இதை நீங்கள்

அவசியம் செய்யவேண்டுமென்று வலியுறுத்துவதுண்டு. எங்களை சுற்றிலும் பல பிரிவுகளைச் சார்ந்த சபைகளிருக்கின்றன. பிரஸ்பிட்டேரியன் சபையில் அங்குள்ள ஊழியக்காரர் மறுபடியும் பிறத்தலின் அனுபவத்தை மட்டும் பேசுகிறார் இரட்சிப்பின் அனுபவத்தை மட்டும் போதிப்பதால் அங்குள்ளவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களே யல்லாமல் அதற்குமேல் வளரவில்லை . ஆகவே அந்த ஊழியக்காரர்கள் இரட்சிக்கிற கிறிஸ்துவின் பிரசன்னத்தை மட்டும் உருவாக்கி காட்டுகிறார்கள். பரிசுத்தசபையில் (The Hoilness Church) பரிசுத்தமா குதல் பற்றி மீண்டும் மீண்டும் சொல்கிறார்கள். ஜனங்கள் பரிசுத்தப்படுகிறார்கள் ஆனால் அவர்களுக்கு வேறொன்றும் தெரியவில்லை. ஆகவே அங்குள்ள ஊழியர்கள் பரிசுத்தமாக்குகிற கிறிஸ்துவின் பிரசன்னத்தை மட்டும் உருவாக்கி காட்டுகிறார்கள். ஆனால் எங்கள் சபையில் இரட்சிக்கிற இயேசுவை, பரிசுத்தமாக்குகிற இயேசுவை, அபிஷேகிக்கிற இயேசுவை, ஆசீர்வதிக்கிற இயேசுவை, சுகமாக்குகிற இயேசுவைப் பிரசங்கிக்கிறோம். கிறிஸ்துவின் பூரண பிரசன்னத்தையும் நாங்கள் அனுபவிக்க முடிகிறது.

## உங்கள் பங்கு.

உங்கள் வாயின் அறிக்கையினால் கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் கொண்டுவரலாம். இரட்சிப்பைப் பற்றிப் பேசினால் இரட்சிக்கும் இயேசு வெளிப்படுவார் தெய்வீக சுகம் பற்றிப் பேசினால் சுகமளிக்கும் கிறிஸ்து உங்கள் சபை யிலே வெளிப்படுவார். அற்புதங்கள் செய்யும் இயேசுவைப் பற்றிப் பேசினால் அற்புதம் செய்யும் கிறிஸ்துவின் பிரசன்னம் வெளிப்படும். நமது வார்த்தைகளின்படியே இயேசு கிரியை செய்கிறார். கிரியை செய்ய அவர் நம்மைச் சார்ந்துதான் இருக்கிறார். நீங்கள் சாத்தானுக்கு பயந்து நடுங்கி தெளிவாகப் பேசாமலிருந்தால் கிறிஸ்து இயேசுவின் வல்லமையை அவர் இந்த தலைமுறையினருக்கு எப்படி வெளிப்படுத்த முடியும்? ஆகவே தைரியமாகப் பேசுங்கள்.

அநேக குடும்பங்களில் பெரும் பிரச்சனைகள் உள்ளன. ஏனென்றால் அவர்கள் வீட்டில் குடும்ப பலிபீடம் இல்லை. தகப்பனுக்கு குடும்ப பலிபீடம் இருக்குமனால், அவரது பேச்சில் கிறிஸ்துவின் பிரசன்னத்தை வீட்டில் உருவாக்குவாரானால் இயேசு அவர்களுடைய குடும்ப பிரச்சனைகள் யாவையும் பார்த்துக் கொள்வார். அநேகர்

இந்த குடும்ப பலிபீடத்தை அலட்சியம் செய்கிறபடியால் கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் குறித்து அவர்களுக்கு தெளிவாகப் பேச முடியவில்லை. ஆகவே அவர்கள் பிள்ளைகள் தேவனின் நிறைவான ஆசீர்வாதங்களைப் பெறமுடியாமல் போகிறார்கள்.

விசேஷித்த வரம் கிடைக்கும்வரை காத்திருக்க வேண்டும் மென்பதில்லை . ஆவிக்குரிய வரங்கள் பரிசுத்த ஆவி யானவருக்குள் இருக்கிறதென எப்போதும் நான் சொல்வதுண்டு. நீங்கள் உங்களுக்கென தனிப்பட்டதொரு வரத்தை சொந்தமாக்கிக் கொள்ள முடியாது.

ஒருவேளை சுகமாக்கும் ’வரம் எனக்கிருந்தால் என்னிடம் எதிர்பார்க்கிற ஒவ்வொருவரையும் நான் சுகமாக்க வேண்டும். எனக்கந்த வரம் இருந்தால் அதை மற்றவர்களுக்கும் நான் கொடுக்க வேண்டும். தேவை என்ன என்பதை ஆவியானவர் பார்க்கும் போது, அந்த தேவையைச் சந்திப்பதற்காக ஆண்டவர் வரம் கிரியை செய்யும்படி அனுமதிக்கிறார்.

ஆவியானவருக்குள் எல்லா வரங்களும் இருக்கிறதென் நாம் நிச்சயமாய் அறிய வேண்டும். அவர் உங்களுக்குள்ளும் உங்கள்

சபைக்குள்ளும் வாசம் பண்ணுகிறார். அவர் மூலமாக நீங்கள் போதக ஊழியமோ, சுவிசேஷ ஊழியமோ, நிர்வாகம் பண்ணுதலோ, மேய்ப்பர் ஊழியமோ, சுகமாக்கும் ஊழியமோ இப்படி நீங்கள் எந்த ஊழியத்தையும் செய்யலாம். அவரது வல்லமை வெளிப்பட நீங்கள் ஒரு வாய்க்காலாக இருக்கிறீர் கள் அவ்வளவுதான். எனவே கவலைப்படாமல் ஊழியம் செய்யுங்கள்.

தைரியமாயிருங்கள் தைரியமாய் இருப்பதற்கான வரத்தை பெற்றுக்கொண்டு தேவ வார்த்தையை தெளிவாய்ப் பேசுங்கள். அதனால் தேவ பிரசன்னத்தை திட்டமாக கொண்டு வாருங்கள். உங்கள் சபையில் அதை தொடங் குங்கள் திட்டமான முடிவை காண்பீர்கள். ஒரு தகப்பன் உனனுடைய பேசும் வார்த்தையால் கிறிஸ்து இயேசுவின்

பிரசன்னத்தை உருவாக்கலாம். அப்போது அவரது குடும்பத்திலுள்ள சகல பிரச்சனைகளையும் இயேசு பார்த்துக் கொள்வார். அதே போல என்னுடைய சபையில் திட்டவட்டமான செய்தியை பேசுகிறேன். திட்டவட்டமான அறுவடை செய்ய திட்டவட்டமான விதையை

விதைக்கறேன். அமெரிக்கர்கள் ஆராதனை முறையில் ஒரு பெரும் தவறைக் காண்கிறேன். அமெரிக்க போதகர்கள் மிக அழகாக பிரசங்கிப்பார்கள். அதைக் கேட்டபின் மக்கள் கலைந்து செல்வர். அவர்கள் கேட்ட செய்தி வாழ்க்கையில் கிரியை செய்ய நேரம் கொடுப்பதில்லை. பேசப்பட்ட வார்த்தைகளைப் கேட்கிறார்கள். ஆனால் ஜெபிக்க நேரமற்றவர்களாகி கேட்ட வார்த்தைகளை இதயத்தில் ஊன்ற சந்தர்ப்பம் அளிக்காதே போகிறார்கள். அமெரிக்கர்கள் தங்களது ஆராதனையை மிகவும் குறுகிய நேரத்தில் முடித்து விடுகின்றனர் சபை ஆராதனைகளில் அறிவிப்புகளையும் பொழுது போக்குகளையும் குறைத்து ஜெபிக்க அதிக நேரம் தந்து பேசப்படும் வார்த்தைகளை கிரகித்து செரித்துக் கொள்ள அதிக நேரம் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் போதக ஊழியத்தில் நல்ல பலனைக் காணலாம்.

உங்களுடைய பேச்சு மையம் எல்லா நரம்புகளையும் கட்டுப்படுத்துவதால் உங்களுடைய வார்த்தைகளே உங்க ளுடைய வாழ்க்கையை உருவாக்குகிறது. ஆகவே தான் அன்னிய பாஷையில் பேசுவது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு அடையாளமாகயிருக்கிறது. பரிசுத்த ஆவி

யானவர் பேச்சு மையத்தை ஆளுகை செய்வதால் எல்லா நரம்புகளையும் முழு சரீரத்தையும் அவரே நடத்துகிறார். எனவே தான் நாம் அந்நிய பாஷையில் பேசும் போது பரிசுத்த ஆவியில் நிரப்பப்படுகிறோம்.

உங்களுடைய முழு வாழ்க்கையையும் முழு சரீரத்தையும் கட்டுப்படுத்தி ஆளுகை செய்ய வார்த்தைகளை பேசுங்கள். பரிசுத்த ஆவி உங்களில் உருவாக்கும் பணியைச் செய்ய உங்கள் வார்த்தைகளை பரிசுத்த ஆவிக்கு ஒப்புவியுங்கள்" பின் நீங்கள் பேசும் வார்த்தைகள் மூலம் இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தை உருவாக்கி வெளிப்படுத்துங்கள்.

வசனத்தை பிரசங்கியுங்கள் நீங்கள் வார்த்தையை வெளி விடும் போது பேசப்படும் வார்த்தையிலுள்ள வல்லமையால் அற்புதங்கள் நிகழ்கின்றன. இது உங்களுடைய திறன் அல்ல. நீங்கள் பரிசுத்தமாயிருப்பதால் தேவன் உங்களைப் பயன் படுத்துவதில்லை. ஏனெனில் இவ்வுலகத்தில் வாழும் வரை திறிஸ்தவனுக்கு மாமிசத்தோடும் இரத்தத்தோடும் போராட்டம் உண்டு. உங்களுக்கு விசுவாசம் இருப்பதினாலேயே உங்களைப்

பயன்படுத்துகிறார். எனவே, சகோதரனே. சகோதரியே, உங்களது தனிப்பட்ட வாழ்வில் ஜெயம் பெறவும் பரிசுத்த ஆவியானவர் கிரியை நடப்பிப்பதற்கும், தேவ பிரசன்னத்தை வெளிப்படுத்தி புதியவைகளை உருவாக்குவதற்கும் நீங்கள் வார்த்தைகளைப் பேசுங்கள்.

கிறிஸ்து உங்களையும் நீங்கள் பேசும் வார்த்தைகளையும் சார்ந்திருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் நாவிலிருந்து கிரியை செய்யும் இயேசுவுக்கு நீங்கள் எதைச் செய்யப் போகிறீர்கள் ! மற்றவர்களின் ஆசீர்வாதத்திற்காக அவரை வெளிப்படுத்தப் போகிறீர்களா ? வாயை மூடிக்கொண்டு பேசாதிருக்கப் போகிறீர்களா ? உங்கள் தீர்மானத்தின் படியே கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !

# 4. ரேமா – தேவன் பேசுகின்ற வார்த்தை

பேசப்படும் வார்த்தையில் உயிருட்டும் வல்லமை இருக்கிறது. இதை சரியான முறையில் பயன்படுத்தினால் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கு அது ஜீவாதாரமாக இருக்கிறது. இந்த வார்த்தை மெய்யான பலனைத்தர சரியான அடிப்படை ஆதாரத்துடன் பயன்படுத்தப்பட வேண்டும். இதை அறிய முற்படுதல் தேவ சத்தியத்தின் ஒருபகுதியை அறிந்து கொள்வதற்கு சமம். அதை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## தேவனுடைய வார்த்தையில் விசுவாசம்:

### பிரச்சனைகளும் அவற்றின் பரிகாரமும்

ஒரு நாள் ஒரு பெண்ணை படுக்கையில் வைத்து என்னிடம் கொண்டு வந்தார்கள். அவளுக்கு கழுத்திலிருந்து கீழே வரையும் பக்கவாத நோய் தாக்கியிருந்ததால் விரல்களைக் கூட அசைக்க முடியாத நிலையில் இருந்தாள். அவள் படுக்கையில் கொண்டு வரப்பட்டபோது எனக்குள் புதுமையான உணர்வு ஏற்பட்டது.

என்னுடைய இருதயத்தில் ஒரு நெருக்கத்தை உணர்ந்தேன் பெதஸ்தா குளத்தண்டையில் அமர்ந்திருந்த சப்பாணி எப்படியும் சுகமாகிவிடுவோம் என்ற எதிர்பார்ப்பு அவனிடத்திலிருந்தது போல் இங்கேயும் ஏதோ நடக்கப்போகிறது என்பதை அறிந்து கொண்டேன்.

அவளது படுக்கையின் அருகில் சென்று அவளை உற்றுப் பார்த்தபோது, சுகம் பெறுவதற்கான விசுவாசம் அவளுக்குள், இருக்கிறது என அறிந்து கொண்டேன். செத்த விசுவாசமல்ல; ஜீவனுள்ள விசுவாசம்! அவளது நெற்றியில் கைவைத்து, 'சகோதரியே, இயேசுவின் நாமத்தில் சுகமாகு' என்றேன்.

அப்போதே தேவவல்லமை புறப்பட்டுச் சென்றது, அவள் சுகமானாள்! ஆச்சரியப்பட்டு திகைத்தவளாக படுக்கையை விட்டு எழுந்து நின்றாள்.

சில நாட்கள் கழித்து சில பரிசுப்பொருட்களுடன் என்னிடம் வந்தாள். நான் படித்துக் கொண்டிருந்த அறைக்குள் வந்து 'நான் கதவை மூடிவிடட்டுமா' என்று கேட்டாள். 'சரி மூடிவிடு' என்று சொன்னேன். கதவை மூடிவிட்டு அவள் மிகுந்த ஆச்சரியத்தோடு என் முன்பாக

முழங்கால்படியிட்டு, ‘ஐயா நீங்கள் இயேசு கிறிஸ்துவின் மறு அவதாரமா? தயவு செய்து நீங்கள் எனக்கு சொல்ல வேண்டும்’ என்று கேட்டாள். எனக்கு சிரிப்புதான் வந்தது. ’சகோதரியே! உங்களைப் போலவே நான் மூன்று வேளை சாப்பிடுகிறேன், குளிக்கிறேன், இரவு தூங்குகிறேன். உங்களைப்போல நானும் மனிதன்தான். ஆனால் ஒரே ஒரு மாற்றம். நான் இயேசு கிறிஸ்துவின் மூலம் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்’ என்று சொன்னேன். இந்தப் பெண் அற்புதமாய் சுகமானாள் என்ற செய்தி விரைவில் எங்கும் பரவிற்று.

அதற்குப் பிறகு, சிலநாட்கள் கழித்து இதேபோல படுக்கையில் வைத்து ஒரு பணக்கார கிறிஸ்தவப்பெண்ணை, என்னுடைய சபைக்கு கொண்டு வந்தார்கள். அவள் நீண்ட நாளைய கிறிஸ்தவள் மட்டுமின்றி தனது சபையில் பெண்கள் குழுவுக்குத் தலைவியும்கூட

நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் (யாத் 15:26) அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:5) அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு நமது நோய்களைச் சுமந்தார்

(மத்தேயு 8:17) விசுவாசிக் கிறவர்களால் நடக்கும் அற்புதங்களாவன – வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள் அவர்கள் சொஸ்தமாவார்கள் (மாற்கு 16:17,18) தெய்வீக சுகத்தை குறித்தான இதுபோன்ற வசனங்களை ஒன்றன்பின் ஒன்றாக மனப்பாடம் செய்து வைத்திருந்தாள்.

எனவே, அவளுக்காக என் முழுவல்லமையோடு ஜெபித்தேன். ஆனால் எதுவும் நடக்கவில்லை . அவள் சுகமடைய வேண்டுமென்பதற்காக மீண்டும் மீண்டும் சப்தமிட்டு ஜெபித்தேன். வசனத்தைச் சொல்லி குதித்து குதித்து, மீண்டும் மீண்டும் சொல்லிப்பார்த்தேன். எதுவுமே நடக்கவில்லை. விசுவாசத்தோடு எழுந்திருக்கச் சொன்னேன். அநேகமுறை எழுந்தாள். நான் என் கைகளை விட்டுவிட்ட போது ஒரு மரத்தைப்போல கீழே விழுந்தாள். இன்னமும் அதிக விசுவாசத்தோடு எழுந்திரு என்றேன். எழுவாள் விழுவாள், கடைசியில் எனக்கு மிகப் பெரிய விசுவாசம் இருக்கிறது. ஆனால் அது கிரியை செய்யவில்லை என்றாள்.

நான் மிகவும் வேதனையடைந்தேன். அவள் அழ ஆரம்பித்து விட்டாள். போதகரே, நீங்கள் அந்தப் பெண்ணை அதிகமாக

நேசிக்கிறீர்கள் எனவேதான் அவளை சுகமாக்கினீர்கள். என்னை நீங்கள் நேசிக்கவில்லை, எனவே நான் இன்னும் நோயாளியாகவே இருக்கிறேன். நீங்கள் பாரபட்சம் காட்டுகிறீர்கள்' என்றாள்.

சகோதரியே, நான் உங்களுக்கு முன்பாக ஜெபித்தேன், அழுதேன், துடித்தேன், கத்தினேன். ஒரு தேவ ஊழியர் எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவாய் என்னால் இயன்றதெல்லாம் செய்தேன். ஆனால் எதுவும் நடக்கவில்லை, எனக்கு எதுவும் விளங்கவில்லை என்றேன்.

எனது சபையில், ஒருவர் சுகமாகி மற்றவர் சுகமாகாமல் இருப்பது என்பது ஒன்றிரண்டல்ல. பலரும் இப்படி சுக மாகாமல் இருந்தார்கள். உலகில் பிரசித்தி பெற்ற கவி சேஷகர்கள் என் சபைக்கு வந்து உற்சாகமாய் பிரசங்கித்து 'நீங்கள் ஒவ்வொருவரும் சுகமாகப்போகிறீர்கள்' என விசுவாச வார்த்தைகளை அள்ளி வீசி விடுவார்கள். பலர் சுகமும் பெற்றனர்.

எல்லா புகழையும் பெற்றுக் கொண்டு அவர்கள் போனதும் சுகமாகாமல் விடப்பட்டவர்களுடன் எனக்கு குழப் பமே மிஞ்சும். இப்படிப்பட்டவர்கள் என்னிடம் வந்து, 'நாங்கள் சுகமடையவில்லை, தேவன்

எங்களைக் கைவிட்டார், நாங்கள் மறக்கப்பட்டுவிட்டோம், இனி நாங்கள் ஏன் இயேசுவை அவ்வளவு கஷ்டப்பட்டு நம்பவேண்டும்' என்றார்கள்.

'ஏன் பிதாவே, இப்படிச் சம்பவிக்கிறது? நீர் எனக்கு தெளிவாக பதில் சொல்லும்' என கதறினேன். ஆண்டவர் பதில் தந்தார். அதை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

தேவ வார்த்தையை விசுவாசிக்க முடியும் என ஜனங்கள் நினைக்கிறார்கள். அது அப்படி முடியும். ஆனால், தேவனைக் குறித்து பொதுவான அறிவைக் கொடுக்கும் தேவ வார்த்தைக்கும், விசேஷித்த சூழ்நிலையில், விசுவாசத்தைத் காண்டுவதற்காக மனித இதயங்களில் தேவன் கொடுக்கும் குறிப்பிட்ட வார்த்தைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ளத் தவறிவிடுகிறார்கள். அற்புதங்களை நிகழச் செய்யும் விசுவாசம் இந்த இரண்டாம் வகையைச் சார்ந்தது.

'வார்த்தை' என்பதற்கு கிரேக்க மொழியில் காணப்படும் இரண்டு வித்தியாசமான பதங்கள் 'லோகோஸ்', 'ரேமா' என்பவைகளாகும். ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை காணப்படும் பொதுவான தேவ வார்த்தை

தான் லோகோஸ். இதனால்தான் உலகம் உண்டாக்கப் பட்டது. இந்த பொதுவான தேவ வார்த்தைகள் வெளிப் படையாகவோ மறைமுகமாவோ இயேசுவைப்பற்றிச் சொல்கின்றன.

எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தை (லோகோஸ்)யை வாசிப்பதின் மூலம், தேவனையும் அவரது வாக்குத் தத்தங் களையும் குறித்து நீங்கள் பெறவேண்டிய அறிவை அடையலாம். சும்மா ஏதோ வாசிக்கிறதினால் மட்டும் விசு வாசத்தைப் பெற முடியாது. உங்களுக்கு தேவனைப் பற்றிய அறிவு உண்டாகுமேயல்லாமல் விசுவாசம் உண்டாகாது.

ரோமர் 10:17 விசுவாசத்தை கட்டி எழுப்பக்கூடிய காரிய மானது, வெறுமனே வார்த்தையை வாசிப்பதைக் காட்டிலும் மேலானது. ’விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் இந்த வாக்கியத்தில் “வசனம்’ எனும் பதம் லோகோஸ் அல்ல, அது ’ரேமா’, ரேமாவை கேட்பதின் மூலமே விசுவாசம் வருகிறது !

டாக்டர் அயன்சைட் என்பவர் அவரது கிரேக்க சொல் அகராதியில், ’லோகோஸ் என்பது தேவனால் பேசப்பட்ட வார்த்தை

என்றும் ரேமா என்பது தேவனால் பேசப்படுகிற வார்த்தை என்றும் விளக்கம் கொடுக்கிறார். ரேமாவின் செயல்பாட்டைப்பற்றி பல வேத பண்டிதர்கள் இப்படி சொல்கிறார்கள். பரிசுத்த ஆவி, வேதத்திலுள்ள சில வசனங்களை உபயோகித்து ஒரு தனிப்பட்ட மனிதனை உயிர்ப்பிப்பதாகும் “ரேமா’ என்ற பதத்திற்கு என்னுடைய விளக்கம் என்னவெனில் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் குறிப்பிட்ட மனிதனுக்காக கொடுக்கப்படுகிற குறிப்பிட்ட தேவ வார்த்தையாகும்’.

கொரியாவில் வல்லமையான ஊழியக்காரியான ’யன் வொ க்யுங்’ என்பவர் ஒரு சமயம் சாம்காக் மலைப்பகுதியில் இளைஞருக்கான பிரமாண்டமான கூட்டத்தை நடத்தினார்கள். அவர்களுடைய ஊழியம் மிகப்பெரிய ஊழியம், அந்த பெண்மணி பேச எழும்பியவுடன் பலர் பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிறைந்து அவர்கள் முன்பாக விழுந்து விடுவார்கள். அவர்களது கூட்டத்திற்கு இளைஞர்கள் மந்தைகள் போன்று கூடிவிடுவார்கள். சாம்காக் மலைப் பகுதி யில் அவர்கள் இளைஞர்களுக்கான கூட்டம் நடத்தியபோது ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கூடிவிட்டனர். அந்த வாரத்தில்

எதிர்பாராதவிதத்தில் பெருமழை பெய்து, ஆறுகள் கரைபுரண்டோடின. ஒரு ஆற்றின் இக்கரையிலிருந்த சில இளைஞர்கள் அக்கரையில் நடைபெறும் கூட்டத்திற்காக செல்ல விரும்பினர். அவர்கள் ஆற்றண்டையில் வந்தபோது கட்டுக்கடங்காத வெள்ளம் போகிறதை கண்டார்கள். படகோ பாலமோ இல்லை என்பதால் சோர்ந்து போனார்கள்.

ஆனால் 3 இளம் பெண்கள் மட்டும், ”நாம் ஏன் கடலின்மேல் நடந்து செல்லக் கூடாது? பேதுரு தண்ணீரில் நடந்தாரே, பேதுருவின் தேவன் நமது தேவன். பேதுருவின் இயேசு நம்முடைய இயேசு பேதுருவின் விசுவாசம் நமது விசுவாசம். பேதுரு விசுவாசித்தார். நாமும் விசுவாசித்து அதற்கு மேலும் செய்யலாமே. நாம் இப்போது இந்த ஆற்றின் தண்ணீரின் மீது நடக்கப் போகிறோம்“ என்றார்கள்.

திரளான வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் இந்த இளம் பெண்களோ, கைகோர்த்து முழங்கால் படியிட்டு, வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் பேதுரு தண்ணீரில் நடந்த சம்பவத்தை மேற்கோள் காட்டி ஜெபித்து தண்ணீருக்குள் இறங்கினார்கள். மற்ற அநேகர் பார்த்துக்

கொண்டிருக்கையில் தானே இவர்கள் சத்தமிட்டுக் கொண்டு ஆற்றில் இறங்கி நடக்க ஆரம்பித்தார்கள். ஆனால் பெரு வெள்ளத்தின் உக்கிரத்தால் சடுதியில் அடித்துச் செல்லப்பட்டார்கள். மூன்று நாட்களுக்குப் பின் அவர்களுடைய பிரேதங்கள் கடலில் காணப்பட்டது.

இச்சம்பவத்தின் எதிரொலி கொரியா முழுவதும் முழங்கியது. கிறிஸ்தவரல்லாதோரின் செய்தித்தாள்களில் "அவர்களது தேவனால் அவர்களைக் காக்க முடியவில்லை, விசுவாசமுள்ள அவர்கள் ஜெபத்துக்கு தேவன் ஏன் பதிலளிக்கவில்லை?" என்ற தலைப்புகளில் இது பற்றி விரிவாக எழுதினார்கள். அவிசுவாசிகளுக்கு இது கொண்டாட்டமாக இருந்தது. சபையானது. இதற்கு சரியான பதில் கொடுக்க இயலாமல் தாழ்வுற்று, நெருக்கப்பட்டு சோர்ந்து போயிற்று.

கொரியா முழுவதும் எல்லோரும் பேசுகிற ஒரு காரியமாகிவிட்டது. இதனிமித்தம் சில நல்ல கிறிஸ்தவர்களும், தங்கள் விசுவாசத்தை இழந்தனர். இப்பெண்கள் நமது ஊழியர்கள் போதித்த படிதானே செய்தார்கள். தங்கள் விசுவாசத்தை பயிற்சித்துப் பார்த்தார்கள்.

தேவனுடைய வார்த்தையின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தை பயிற்சித்துப் பாருங்கள் என மேடைகளில் போதர்கள் சொல்லி வருகிறார்களே’ இதைத்தான் இப்பெண்கள் செய்தனர், தேவன் ஏன் பதிலளிக்கவில்லை? இந்த மார்க்கம் பெயரளவில்தான்’ என்று சொல்லி சிலர் பின்வாங்கிப் போயினர்.

இப்படி கேள்வி கேட்கும் மக்களுக்கு நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? இந்த பெண்கள் விசுவாசித்தார்கள். தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில்தான் தங்களது விசுவாசத்தை பயிற்சித்துப்பார்த்தார்கள்.

ஆனால், அவர்களது விசுவாசத்துக்கு துணைபோக தேவனுக்கு காரணமில்லை. லோகோஸின் அடிப்படையில் பேதுரு தண்ணீரில் நடக்கவில்லை. அது தேவனைப்பற்றிய பொதுவான அறிவை மட்டுமே கொடுக்கிறது. பேதுருவுக்கு இயேசுவிடமிருந்து தனிப்பட்ட வார்த்தை தேவையாயிருந்தது.

பேதுரு ’ஆண்டவரே நீர் இயேசுவானால், நான் தண்ணீரில் நடந்துவர கட்டளையிடும் என கேட்டான். ’வா’ என்ற இயேசு பதிலளித்தார்.

பேதுருவுக்கு இயேசு அளித்த வார்த்தை லோகோஸ், அல்ல, அது ’ரேமா’, ’வா’ என திட்டமாய் சொன்னார், .. அவனுக்கு அந்த வேளையில் சொல்லப்பட்ட தனிப்பட்ட வார்த்தை . *(மத் 14:22:31)*

“ரேமா விசுவாசத்தை கொண்டுவருகிறது. விசுவாசம் கேள்வியினாலே வரும் அந்த கேள்வி ரேமாவினாலே வருகிறது. தேவனைப் பற்றிய அறிவினால் பேதுரு தண்ணீரில் நடக்கவில்லை. மாறாக, பேதுரு தனிப்பட்ட விதமாக தனிப்பட்ட சூழ்நிலையில் அவனுக்கென சொல்லப்பட்ட வார்த்தை (ரேமா)யின் படியே தண்ணீரில் நடந்தான்.

ஆனால் அப்பெண்களோ, தேவனைக் குறித்து பொது வான அறிவினால் அப்படிச் செய்து பலனற்றுப் போனார்கள்.

அவர்கள் லோகோஸ் அடிப்படையிலான விசுவாசத்தை பயிற்சித்துப் பார்த்தார்கள். அது அவர்களுடைய தவறுதான். தேவன் அதற்கு பொறுப்பல்ல. பேதுரு தன்னுடைய விசுவாசத்தை பயிற்சித்துப் பார்த்ததற்கும் இந்த மூன்று பெண்கள் தங்களது விசுவாசத்தை பயிற்சித்து பார்த்ததற்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வேதாகமக் கல்லூரி பட்டதாரிகள் இருவர் ஊழியத்தின் முதல் கட்டத்திலேயே தோல்வியடைந்தனர். அவர்கள் என்னுடைய சீடரானார்கள். அவர்கள் என்னுடைய பிரசங்கங்களை கேட்டார்கள். என்னுடைய சபைக்கு வந்தார்கள். விசுவாசத்தின் அடிப்படை தத்துவங்களை கற்றுக் கொண்டார்கள். அவர்களது முதற்கட்ட ஊழியத்தை துவக்கும்போது வேதத்திலுள்ள ’உன்வாயை விரிவாய் திற, அதை நான் நிரப்புவேன்(சங் 81:10) என நாமத்தில் எதைக்கேட்டாலும் செய்வேன் (யோ 14:14) என்ற வசனங்களைப் பிடித்துக் கொண்டு பெரிய விசுவாசம் இருப்பவர்கள் போன்று ஊழியத்தில் இறங்கினார்கள்.

ஒரு வங்கிக்கு சென்று பெரியதொரு கடன் தொகை பெற்றனர். அத்துடன் ஒரு பணக்காரனிடம் சென்று அதிகமாக கடன் வாங்கி வந்து, அந்த பணத்தினால் அழகியதோர் ஆலயத்தைக் கட்டினர். அவர்களுக்கு சபையார் என ஒருவருமில்லை . அவர்கள் பிரசங்கித்தார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் சபையில் வந்து சேருவார்கள். நமது கடனெல்லாம் தீர்ந்துவிடும் என எதிர்பார்த்தனர். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை .

அந்த இளம் ஊழியக்காரர்களில் ஒருவன் சுமார் 30,000 டாலரும் மற்றவன் சுமார் 50,000 டாலரும் கடன் வாங்கி யிருந்தனர். கடன் கொடுத்தவர்கள் பணத்தைத் திரும்பப் பெறும்படி வந்தனர். பயங்கர சூழ்நிலையில் சிக்கி எதுவும் செய்ய முடியாமல் தேவன் மேல் உள்ள தங்களது விசுவாசத்தை இழக்கக் கூடிய நிலைக்கு ஆளானார்கள்.

அவர்கள் . என்னிடம் வந்து, 'போதகரே, ஏன் உங்களுடைய தேவனும் எங்களுடைய தேவனும் வேறு படுகிறார்? நீங்கள் 2,500 டாலரில் தொடங்கி, 5 மில்லியன் டாலருக்கான திட்டப்பணியை நிறைவேற்றியிருக்கிறீர்கள். நாங்களோ 80,000 டாலர் செலவழித்து கட்டினோம். நாங்கள் அதே ஆண்டவரை அதே விசுவாசத்தை பின்பற்றுகிறோம். ஏன் தேவன் எங்களுக்கு பதிலளிக்கவில்லை ?' என்று அழுதார்கள். நீங்கள் சொன்னபடிதான் செய்தோம், அதே விசுவாசத்தைத்தான் பயிற்சித்தோம். ஆனாலும் தேவன் ஏன் எங்களுக்கு பதிலளிக்கவில்லை ?

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலுமுள்ள வாக்குத் தத்தங்களை எல்லாம் சுட்டிக் காட்டினார்கள். 'நாங்கள் நீங்கள் கற்பித்தது போலவே செய்தோம்

ஆனாலும் தோற்று விட்டோம்' என்று என்னிடத்தில் அங்கலாய்த்தார்கள்.

'என்னுடைய வார்த்தைகளைக் கேட்டு நீங்கள் தோற்றுப் போவதில் எனக்கு மகிழ்ச்சி. நீங்கள் எனக்கு சீடர்கள்தான். சந்தேகமில்லை. ஆனால் நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்கு சீடர் களாகவில்லை. என்னுடைய போதனைகளை நீங்கள் தவறாக விளங்கியிருக்கிறீர்கள். நான் என்னுடைய ஆலயத்தைக் கட்ட துவக்கினேனென்றால் அது 'லோகோசினால் அல்ல

"ரேமாவினால் தேவன் என்னிடம் திட்டவட்டமாக பேசினார் நீ எழுந்து போய் 10,000 பேர் அமரக்கூடிய ஒரு ஆலயத்தைக் கட்டு' என்று சொன்னார். மேலும் என்னுடைய இருதயத்தில் அவருடைய விசுவாசத்தை வைத்தார். நான் எழுந்து சென்ற போது அற்புதம் நிகழ்ந்தது. ஆனால் நீங்கள் தேவனைப் பற்றிய பொதுவான அறிவில் பொதுவான விசுவாசத்திலும் செயல்பட்டதால், நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்காக செயல்படுவதாக இருந்தாலும் ஆண்டவர் உங்களை பொறுப்பேற்றுக் கொள்ள இயலவில்லை' என்றும் சொன்னேன்.

சகோதரர்களே. சகோதரிகளே 'லோகோஸ்' மூலம் நீங்கள் தேவனை அறிந்து கொள்ளலாம் அவரைப்பற்றிய அறிவையும் தெளிவையும் பெற்றுக்கொள்ளலாம், ஆனால் "லோகோஸ்' எப்போதும் 'ரேமா' ஆகமுடியாது.

வியாதிப்பட்ட ஒருவன் பெதஸ்தா குளத்தண்டை யிலிருக்கும் மனிதர்களைப் பார்த்து, 'புத்தியில்லாதவர்களே, ஏன் நீங்கள் இங்கே காத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதே பெதஸ்தாகுளம்தான், அதே தண்ணீர்தான் அதே இடத்தில் தான் இருக்கிறது. நாள்தோறும் ஏன் காத்துக் கொண்டிருக்க வேண்டும் ? நான் இப்போதே குதித்து சுத்தமாகப் போகிறேன்' என்றால் எப்படியிருக்கும்.

அவன் அப்படியே குதித்துவிட்டு, வெளியே வந்தாலும் அவன் சுகமாகப் போவதில்லை . தேவதூதன் வந்து கலக்கின பின்பு யார் முதலில் இறங்குகிறார்களோ அவர்களே சுகமாக முடியும். அதே இடம், அதே தண்ணீ ர், அதே குளம்! ஆனால் தேவதூதன் கலக்கும்போது மட்டுமே அற்புதம் நிகழும்!

லோகோஸ் என்பது பெதஸ்தா குளத்தைப் போன்றது. வேத வசனத்தை வாசிக்கலாம் கேட்கலாம், ஆனால் ஒரு வசனத்தையோ,

வசனங்களையோ குறிப்பிட்ட உங்கள் சூழ்நிலைக்கேற்ப பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு சுட்டிக் காட்டி உங்கள் ஆத்துமாவை கொளுந்துவிட்டு எரியச் செய்வார். எழுதப்பட்ட அந்த வார்த்தையான லோகோஸ் இப்போது உங்களுக்கு இந்த சூழ்நிலையில் உங்களுக்கென்றே பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட விதமாய் கொடுப்பதால் அது 'ரேமா' வாகிறது.

எழுதப்பட்ட வார்த்தையாகிய லோகோஸ் எல்லோருக்கும் பொதுவானது. அது கொரியர்களுக்கும், ஆப்பிரிக்கர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் யாவருக்கும் பொதுவானது. இது தேவனைப் பற்றி அறிவடைய உதவுகிறது. ஆனால், 'ரேமா' எல்லாருக்கும் கொடுக்கப்படுவதல்ல. ரேமா, தேவனுடைய சமூகத்தில் பரிசுத்த ஆவியானவரால் லோகோஸ் 'ரேமா'வாக உயிர்ப்பிக்கப்படும் வரை காத்திருக்கும் குறிப்பிட்டவர்களுக்கு மட்டுமே கொடுக்கப் படுகிறது. தேவனிடத்தில் உங்களுக்கு காத்திருக்க நேரமில்லை என்றால் தேவன் உங்களுக்கு தேவையான வேதவசனத்தை இருதயத்தில் தந்து உங்களை உயிர்ப்பிக்கவே முடியாது.

இது ஒரு அவசர காலம்! ஜனங்கள் சபைக்கு வந்து பொழுது போக்குகிறார்கள். சிறியதொரு பிரசங்கத்தை கேட்டு விட்டு, தேவனிடத்தில் காத்திருக்க நேரமில்லாமல் கலைந்து செல்கின்றனர். அவர்கள் லோகோஸைப் பெற்றுச் செல்கிறார்களேயல்லாமல் ’ரேமாவையல்ல. ’ரேமா’யை பெற்றுக் கொள்ளாததால் தேவனுடைய அற்புத கிரியைகளை காணத் தவறிவிடுகின்றனர். அதனிமித்தம் அவரது வல்லமையைச் சந்தேகிக்க ஆரம்பிக்கின்றனர்.

ஜனங்கள் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து வார்த்தை களைக் கேட்டு, தேவனிடத்தில் காத்திருக்க வேண்டும். ரேமாவைப் பெற்றுக் கொள்ளும்படி காத்திருந்து பிரசங்க வார்த்தைகளை ஜெபத்துடன் உற்றுக்கேட்பதில்லை. எனவே தான் அவர்களது பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியாமல் போகிறது. அவர்களது அறிவு பெருகப்பெரும் துயரங்களும் பெருகின்றன. ஆகிலும் சபைக்கு வருகிறார்கள். எதுவும் நடக்காததால் பின்வாங்கிப் போய் விசுவாசத்தைவிட்டு வழுவிப் போகிறார்கள்.

சபைகளை குறித்ததான வேறொரு பிரச்சனை என்னவென்றால், சுறுசுறுப்பான இந்த

யுகத்தில் ஊழியர் பலர் அநேக காரியங்களால் ஆட்கொள்ளப்படுகின்றனர். அவர்கள் அலுவலராக, பணத்தைக் கையாளுபவராக, கட்டுகிறவர்களாக, ஒப்பந்தக்காரர்களாக, இப்படி பல அலுவல்களின் மணிக்கணக்காக நேரங்களை செலவிடுகிறார்கள்.

இதுபோன்று நூற்றுக்கணக்கான அலுவல்களில் சிக்கின இவர்கள், சனிக்கிழமையன்று மிகவும் களைத்துப்போய் அடுத்த நாள் பிரசங்கத்துக்காக ஏதோ சில எழுதப்பட்ட வார்த்தைகளை (லோகோஸ்) தேடுகிறார்கள். அவர்கள் களைத்துப் போனதால், தேவனிடத்தில் காத்திருந்து பசும் புல்லை பாலாக மாற்றி மந்தைக்குக் கொடுக்க அவர்களுக்கு நேரமில்லை. அவர்களது மந்தை வெறும் புல்லை மட்டும் மேய்ந்துவிட்டு ஆத்தும ஆகாரமாக களங்கமில்லாத ஞானப் பால் பெறாமல் திரும்பிச் செல்கின்றனர். இது மிகப்பெரிய தவறு.

சபையார் போதகரின் எதிரிகளல்லர், அவர்கள் அவரது நண்பர்கள். அப்போஸ்தலர் செய்ததுபோல, ஊழியர்கள் வேத வசனத்தை வாசிப்பதிலும் ஜெபிப்பதிலும் அதிகமாக கவனம் செலுத்தி, நிர்வாகப் பொறுப்புகளையும் மற்ற அலுவல்களையும்

மூப்பர்களிடத்திலும் காரியக்காரர்களிடமும் விட்டுவிட வேண்டும்.

இதே முறையைத்தான் என் சபையில் நான் பின்பற்று கிறேன் ஒரு பிரசங்கத்தை நிகழ்த்த வேண்டுமென்றால், தேவனிடத்தில் காத்திருந்து அந்த நாள் பிரசங்கத்துக்கான "ரேமாவைப் பெறாமல் நான் பிரசங்கபீடத்தில் ஏறுவதில்லை .

எனவே, சனிக்கிழமைகளில் ஜெபமலைக்குச் சென்று, தவழ்ந்து நுழையத்தக்க அந்த சிறிய அறைகளில் ஒன்றில் நுழைந்து, கதவை சாத்திவிட்டு பிரசங்கத்திற்கு தேவையான குறிப்பிட்ட வசனத்தை பரிசுத்த ஆவியானவர் தரும் வரை காத்திருக்கிறேன். இப்படி ஜெபிக்கிற வேளையில் சில சமயம் இரவு முழுவதும் நான் அங்கே காத்திருக்க வேண்டியதாக இருக்கும். 'ஆண்டவரே, நாளை ஜனங்கள் வியாதி, பெல் வீனங்கள் குடும்ப பிரச்சனைகள், வியாபாரத்தில் தொல்லை இப்படி பலதரப்பட்ட பிரச்சனைகளுடன் வரக்கூடும். அவர்கள் உம்மைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மட்டுமல்ல, அவர்கள் தங்களது பிரச்சனைகளுக்கான மெய்யான தீர்வு காணும்படி வருவார்கள், ஜீவனுள்ள விசுவாசத்தை நாங்கள் கொடுக்காவிட்டால்,

அவர்கள் தங்கள் தீர்வுகளைப் பெறாமல் திரும்பிச் செல்லவேண்டியதாக இருக்கும். எனவே, குறிப்பிட்ட சூழ்நிலையில் இருக்கும் குறிப்பிட்ட மக்களுக்கான குறிப்பிட்ட செய்தி எனக்கு வேண்டும்’ என ஜெபிக்கிறேன்.

அந்த செய்தியைத் தரும் வரை நான் ஆண்டவரிடம் காத்திருக்கிறேன். பிரசங்கமேடைக்கு நான் வரும்போது பரிசுத்த ஆவியானவர் என்னை அபிஷேகித்து செய்தியைத் தந்துள்ளதால் ஒரு தளபதியைப் போல தைரியமாய் வருவேன்.

பிரசங்கம் முடிந்ததும், ஜனங்கள் என்னிடம் வந்து, ’போதகரே இன்று நீங்கள் பிரசங்கித்த அந்த வார்த்தை எனக்காகவே அமைந்திருந்தது. என்னுடைய பிரச்சனைகள் தீர நான் விசுவாசத்தை பெற்றுக் கொண்டேன்’ என்று சொல்வார்கள் ஏனென்றால் அவர்கள் ’ரேமாவை பெற்றுக் கொள்ள நான் உதவினேன்.

சகோதர சகோதரிகளே, சபையை நாம் ஒரு பரிசுத்த பொழுதுபோக்கு இடமாகக் கட்டவில்லை. ஜீவனா, மரணமா என்பது போன்ற ஒரு காரியத்தில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். போதகர் ரேமாவை அவர்களுக்கு கொடுக்காவிடில் நீங்கள் சபையையல்ல, ஒரு சமுதாயக்

கூட்டத்தைத்தான் நடத்து கிறீர்கள் என்று பொருள். பொது மக்களிடம் ஏற்கனவே, லயன்ஸ் கிளப், லியோ கிளப் போன்றவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதன் உறுப்பினர்களும் தசமபாகம் போல சந்தாவை செலுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

கர்த்தரிடமிருந்து ஜனங்கள் தங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கும், அவர்கள் வாழ்வுக்கான அற்புதங்களைப் பெற்றுக் கொள்ளவும், வெறும் வார்த்தைகளைக் கேட்காமல் மெய்யான வழியைக் காட்டவும் நாம் சபைகளை நிறுவு கிறோம். இவைகளைச் செய்யவேண்டுமானால், போதகர் முதலாவது 'ரேமாவைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

தேவனிடத்தில் காத்திருக்கும்படி கிறிஸ்தவர்கள் நேரம் கொடுக்கப்படவேண்டும். அப்போது பரிசுத்த ஆவி யானவர் அவர்களது உள்ளங்களில் கிரியை செய்து வசனங்களை வெளிப்படுத்துவார். பேசப்பட்ட வார்த்தைகளையே பரிசுத்த ஆவியானவர் எடுத்து குறிப்பிட்ட நபரின் இதயத்திற்கு ஏற்றார்போல் பேசுவார். இப்படித்தான் 'பேசப்பட்ட வார்த்தை' (லோகாஸ்) பேசுகின்ற வார்த்தை யாக' (ரேமா) மாறுகிறது.

ஏன் பலர் தெய்வீக சுகத்தை பெற்றுக் கொள்ள முடியவில்லை என்பதற்கான காரணத்தை நான் உங்களுக்கு சொல்கிறேன். எல்லா வாக்குத் தத்தங்களும் எழுத்தின்படி அல்ல சத்தியத்தின்படி உங்களுடையது. தேவனுடைய வார்த்தையிலிருந்து சில வாக்குத்தத்தை எடுத்துக் கொண்டு “இது என்னுடையது. நான் மீண்டும் மீண்டும் சொல்வேன் இது என்னுடையது’ என்று நீங்கள் கூறலாம். அப்படியல்ல, சத்தியத்தின்படி அது உங்களுடையதான் ஆயினும் தேவனிடத்தில் காத்திருந்து உண்மையிலே உண்மையிலேயே. சத்தியத்தின்படி, அதை உங்களுடையதாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒருவரின் உள்ளத்தில் ஒரு வசனத்தை தேவன் உயிர்ப்பித்து கொடுக்கும் முன் அவர் சில காரியங்களைச் செய்கிறார். முதலாவது உங்கள் வாழ்க்கை சுத்தமுள்ளதா யிருக்கவும், நீங்கள் தேவனையே சார்ந்திருக்கவும் தேவன் விரும்புகிறார். ஒழுங்கற்ற விதத்தில் ஆண்டவர் வாக்குத் தத்தங்களைத் தருவதில்லை. ஆண்டவர் உங்களிடம் இடைபடும்போது, அவரிடத்தில் காத்திருக்க நேரமெடுங்கள். பாவத்தை அறிக்கை செய்து உங்களுடைய ஜீவியத்தை அவருக்கு சமர்ப்பியுங்கள். இதற்குப் பிறகு

தேவவல்லமை உண்டாகும். பெதஸ்தா குளத்தைப் போல அமைதலாயிருக்கும் உங்கள் இதயத்தில் ஒரு குறிப்பிட்ட வசனம் உங்களை கலக்கும். அப்போது அந்த வாக்குத்தத்தம் உங்களுக்குரியதென அறிவீர்கள். அதன்மூலம் தேவையான அற்புதத்தைப் பெற விசுவாசமுடையவர்களாவீர்கள்.

## தேவனின் அதி உன்னத நோக்கம்

மாமிச சரீரம் சுகமாக்கப்படுவது மட்டும் பரிசுத்த ஆவியானவரின் முற்றுமான நோக்கமல்ல. முக்கியத்துவம் எங்கிருக்கிறதென நீங்கள் அறிய வேண்டும். அவரது அதி உன்னத நோக்கம், ஆத்துமாவில் சுகமுண்டாக்குவதுதான்!

தேவன் உங்களோடு இடைபடும் போதெல்லாம் உங்களது அத்துமாவிலே சுகமுண்டாகும்படியே இடைபடுகிறார். ஆத்துமாவில் தேவனோடு சரியாயிராமல் குதித்தாலும் சப்தமிட்டு எவ்வளவு ஜெபித்தாலும் 'ரேமா'வாகிய சுகத்தை கொண்டு வரமுடியாது. நீங்கள் தேவனோடு நல்மனம் பொருந்த வேண்டும். பாவங்களை அறிக்கை செய்து இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனைப் பெறுங்கள். அதற்குப்பிறகு,

தெய்வீக சுகம் பெறவதற்கு உங்களுக்கு தேவையான “ரேமா’ வார்த்தையை உங்கள் உள்ளத்தில் பரிசுத்த ஆவியானவர் தூண்டிவிடுவார். இவைகள் நடக்க வேண்டுமானால் தேவனிடத்தில் காத்திருக்க வேண்டும்.

தெய்வீக சுகம் என்பது தேவனின் பரிபூரண சித்தத்தைப் பொறுத்தது. சிலர் உடனடியாக சுகம் பெறலாம். சிலர் சுகம்பெற நாளாகலாம்.

எங்கள் சபையிலுள்ள ஒரு நல்ல மூப்பர் வியாதிப்பட்டார். அவர் ஆண்டவரை நேசித்தார். ஆச்சரியப்படத்தக்க விதத்தில் ஆண்டவருக்காக உழைக்கிறவர். ஆண்டவருக்காக எல்லாவற்றையும் கொடுத்தவர். ஒருநாள் அவர் சரீரத்தில் கட்டி வளர்ந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, மருத்துவர் அதை அறுவைசிகிச்சை மூலம் அகற்ற வேண்டுமென்றார். அவர் நல்லதொரு பரிசுத்தவானாய் இருப்பதால் தேவன் அவரை அற்புதமாய் சுகமாக்கப்போகிறார் என்றே அனைவரும் நம்பினர்.

அவர் ஆரோக்கியமடைய வேண்டுமென ஜெபித்தேன். எங்களது 40,000 அங்கத்தினரும் கிருபாசனத்தை நெருங்கினர். அந்த மூப்பரும் சுகம் பெற ஜெபித்தார். ஆனால் எதுவும்

நடக்கவில்லை. நிலைமை மோசமாகி இரத்தக்கசிவு ஏற்பட்டதால் மருத்துவமனைக்கு கொண்டு சென்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டார். எங்கள் சபை அங்கத்தினர் பலரும் கவலையுற்று, தேவன் எங்கே? இவரை ஆண்டவர் என் இப்படி நடத்தவேண்டும்? என சொல்லிக் கொண்டிருந்தனர்,

ஆனால், அவருக்கு நேர்ந்த இந்த காரியத்துக்கென திட்டமான நோக்கம் அவரிடம் உண்டு என அறிந்து நாம் கர்த்தரைத் துதித்தேன்.

மருத்துமனையில் அவர் இருந்தபோது அவரை சந்திக்க வந்த அநேகருக்கும் சுவிசேஷம் சொல்லத் தொடங்கினார். சீக்கிரத்தில், மருத்துவமனை அதிகாரி உட்பட அநேகர் ஜீவனுள்ள இயேசுவை அறிந்து கொண்டார்கள். மருத்துவர், தாதியர், நோயாளிகள் இப்படி பலரும் தினம்தினம் மனந் திரும்பி இரட்சிக்கப்பட்டார்கள்.

பிறகு, சபையார், ’ஆண்டவரே உமக்கு நன்றி, இவர் உடனடியாக சுகமாகாமல் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டது நல்ல காரியம்’ எனச் சொல்லி மகிழ்ந்தார்கள்.

ஆண்டவர், பூமிக்குரிய இந்த சரீரம் சுகமாவதைக் காட்டிலும் நித்தியத்துக்குரிய ஆத்துமா சுகமடைவதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்.

நமக்குத் துயரமும் வேதனையும் வரும்போது, நாம் விடுதலையைக் கேட்பது சரியானதுதான். ஆனால், நமது பாடுகள் வேதனைகள், தேவனது விடுவிக்கும் கிருபை வெளிப்பட வாய்க்காலாக இருக்குமானால், உங்களது துயரம் வேதனை தேவனால் அனுமதிக்கப்பட்டதாக இருக்கும். மாறாக, உங்கள் துயரம் வேதனை உங்களை அழிக்கக் கூடியதாக இருக்குமானால், அது சாத்தானிடமிருந்து வந்தது. நீங்கள் ஜெபித்து அதை துரத்த வேண்டும்.

தேவன் விடுவிக்காத ஒரு துயரத்தை உங்களிடம் சொல்ல தயங்குகிறேன்.

கொரியா யுத்தத்தின் போது 500 கிறிஸ்தவ ஊழியர்களை பிடித்து உடனடியாக சுட்டுத்தள்ளினர். 2000

சபைகள் அழிக்கப்பட்டன. கம்யூனிஸ்டுகள் கிறிஸ்தவர்களிடம் கொடூரமாக நடந்து கொண்டனர்.

கொரியாவில் இன்கோன் என்ற இடத்தில் ஒரு தேவ வழியரக்காரரின் குடும்பத்தை பிடித்தனர். 'மக்கள் நீதிமன்றத்தில்' விசாரணைக்குக் கொண்டு வந்தனர். குற்றம் சாட்டுகிறவர்; 'இந்த மனிதர் இப்படி இப்படியான பாவங்கள் செய்தவர். இவர் தண்டிக்கப்பட வேண்டியவர்' என்று சொல்வார். உடனே உடன் இருப்பவர்கள் ஏககாலத்தில் பல்லவி பாடியதுபோல் ஆமாம், ஆமாம் என்பார்கள்.

அவர்கள் பெரிய குழி ஒன்றை தோண்டினார்கள். போதகரையும், அவரது மனைவியையும் அவரது பிள்ளைகளையும் அந்த குழியிலே தள்ளினார்கள். போதகரைப் பார்த்து இத்தனை ஆண்டுகளாக நீர் வேதாகமத்திலுள்ள மூட நம்பிக்கைகளை மக்களுக்கு போதித்து அவர்களை வழிகெடச் செய்தீர். ஆனால் வெளிப்படையாக வேதத்தை மறுதலித்து, இம்மட்டும் நீர் செய்த போதனைகளுக்கு உமது மன வருத்தத்தை தெரிவிப்பீரானால் நீரும் உமது மனைவியும் பிள்ளகளும் விடுவிக்கப்படுவீர்கள். மாறாக நீர் இன்னும் உமது மூடநம்பிக்கையில் நிலைத்திருப்பீரானால் நீர் உமது குடும்பத்தோடு உயிரோடு புதைக்கப்படுவீர். இப்போதே நீர் தீர்மானம் செய்யும்' என்று சொன்னார்கள்.

அவரது பிள்ளைகளெல்லாம் 'அப்பா, எங்களை நினைத்துப் பாருங்கள்' என கத்திக்கொண்டிருந்தனர்.

நாம் அவரது நிலமையிலிருந்தால் என்ன செய்திருப்போம்? நம் கண் எதிரே நம்பிள்ளைகள் கொல்லப் படுவதை நாம் விரும்பமாட்டோம். அவர் அசைக்கப்பட்டார். அவர்தன் கரங்களை உயரே நீட்டி 'ஆம் நான் என் நம்பிக்கையை – ' அவர்தன் வார்த்தைகளை முடிக்குமுன் அவரது மனைவி அவரை இடித்து விட்டுவிடமாட்டேன் என சொல்லுங்கள்' என்று சொன்னாள். பிள்ளைகளை அதட்டினாள் 'பிள்ளைகளே, இன்றிரவு நாம் இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாகிய இயேசுவிடம் பரலோகத்தில் விருந்துண்ணச் செல்வோம்' என்றாள்.

கம்யூனிஸ்டுகள் அவர்கள் மேல் மண்ணைக் கொட்டி மூடத்தொடங்கின போது இனிமையான பாடலைப் பாடினார்கள். மண்ணில் முதலாவது பிள்ளைகள் மூடப்பட்டார்கள் இவர்களிருவரின் கழுத்துவரை மண் கொட்டப்படும் வரைக்கும் பாடிக் கொண்டேயிருந்தார்கள். அதை அங்கிருந்து அனைவரும் பார்த்தனர். ஆண்டவர் அவர்களை விடுவிக்க வில்லை.

ஆனால், அதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்களானார்கள், அதில் அநேகர் எனது சபை அங்கத்தினர்களாகியுள்ளனர்.

அவர்களது உபத்திரவத்தின் மூலம் மீட்பின் கிருபை வெளிப்பட்டது. இந்த உலகம் மீட்கப்படும் இரட்சிக்கப்பட்ட வேண்டுமென்பதற்காக, தனது ஒரே பேறான குமாரனை சிலுவையில் அறையப்பட தேவன் கொடுத்தார். ஆத்தும் மீட்பாகிய அதுதான் தேவனின் அதிஉன்னத திட்டம்.

எனவே, சுகம் பெற வேண்டுமென நீங்கள் விரும்பும் போது, அல்லது உன்னத்திலிருந்து ஒரு பதிலை நீங்கள் எதிர் பார்க்கும்போது, ஆத்தும மீட்பு எனும் கண்ணாடியின் மூலம் பாருங்கள். உங்களது துயரம் தெய்வீக சுகத்தைக் காட்டிலும் மீட்பைக் கொண்டுவருவதாக இருந்தால், விடுதலைக்காக வேண்டுதல் செய்யாமல், நீங்கள் பாதுகாக்கப்படும்படி பெலத்துக்காக வேண்டுங்கள்.

துயரங்கள் தேவனிடத்திலிருந்து வருகிறதா அல்லது சாத் தானிடமிருந்து வருகிறதா என கண்டுபிடிப்பது எப்போதும் சுலபமானதல்ல. இதை அறிந்து கொள்ள கர்த்தரிடம் காத்திருந்து தேவ சித்தத்தை அறிய

வேண்டும். இதற்காக ஒவ்வொருவரிடத்திலும் சென்று ஜெபித்துக் கொள்ள வேண்டுமென்பதில்லை. ஆனால், தேவன் உங்கள் ஜெபத்தில் உபவாச வேளையில் அதைக் காண்பிப்பார்.

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கும் விஷயத்தில் அநேகர் தேவனை நெருங்குகிறார்கள். பூமியின் கடைசிவரை சென்று பிரசங்கிக்க வேண்டுமென இயேசு கட்டளையிட்டிருக்கிறார். எனவே எழுதப்பட்ட அல்லது பேசப்பட்ட வார்த்தையின்படி பவுல் ஆசியாவுக்குச் செல்ல நினைத்தான். ஆனால் ஆவியானவர் பவுலை அங்கே போக அனுமதிக்கவில்லை. பவுல். 'நான் பித்தினியாவுக்கு போவேன்' என்றான். அனால் ஆவியானவர், 'வேண்டாம்' என்றார்.

பவுலும் அவனோடிருந்தவர்களும் துரோவா எனும் அவர்களுக்குத் தெரியாத ஒரு பட்டணத்துக்குப் போனார்கள். செய்வதறியாமல் அங்கே அவன் ஜெபித்து கர்த்தரிடம் காத்திருந்தபோது, அவன் அந்த சூழ்நிலைக்கு தேவையான ரேமா'வை பெற்று, தரிசனத்தில் மக்கதோனியனாகிய ஒருவன் தங்களுக்கு வந்து உதவும்படி கேட்டுக்

கொண்டதாக கண்டான். எனவே ஐரோப்பாவுக்கு கடந்து சென்றான்.

## ரேமாவைப் பெறுதல்

ஜனங்கள் என்னிடத்தில் வந்து 'வேதத்திலுள்ள வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டு பரிசுத்த ஆவியானவர் என்னை உயிர்ப்பித்து, அந்த வாக்குத்தத்தங்கள் எனதாகும் வரை நான் காத்திருந்து ஜெபிக்கலாம். ஆனால் கணவனை தெரிந்து கொள்வதற்கோ அல்லது மனைவியை தெரிந்து கொள்வதற்கோ நான் எப்படி 'ரேமாவை பெற்றுக் கொள்ள முடியும்? நான் வேதத்தை முழுவதும் படித்தாலும் நான் எலிசபெத்தை திருமணம் செய்வதா, மேரியையா அல்லது ஜோனைத் திருமணம் செய்வதா என்பதற்கான 'ரேமாவை' நான் கண்டு கொள்ளவே முடியாதே என்று கேட்கிறார்கள். மேலும் வேதம் லேக்லேண்டில் போய் குடியேறு அல்லது லாஸ் ஏஞ்செஸ்ஸில் போய் குடியிரு என்று சொல்வதில்லையே!. அப்படியிருக்க, நான் தேவனுடைய சித்தத்தை நான் எப்படி அறிந்து கொள்வது?' என்று கேட்கிறார்கள்.

இவைகள் நியாயமான கேள்விகள்தான். இந்தவிதமான கேள்விகளுக்கு நான்

ரேமாவைப்பெற பயன்படுத்தும் 5 படிகளை சொல்கிறேன்.

*1. சமநிலையிலிருத்தல்.*

முதற்படி என்னை நானே சமநிலையில் வைக்க கொள்வேன். முன்னோ பின்னோ அசையாமல் இருதயத்தில் அமைதியை கொண்டுவருவேன். பிறகு கர்த்தரும் காத்திருப்பேன். ’கர்த்தாவே உமது சத்தத்திற்காக நாம் கவனமாக இருக்கிறேன். நீர் ’ஆம்’ என்றால் நாம் போகிறேன். ’இல்லை’ என்றால் நான் போகவி என்னுடைய சுயலாபத்திற்காக நான் எந்த முடிவும் எடுக்க விரும்பவில்லை. ஆனால் உமது விருப்பத்தின்படியே நாம் தீர்மானிப்பேன். எனக்கு அது நன்மையானாலும் தடை னாலும் உம்முடைய வழி நடத்துலை ஏற்றுக்கொள்ள நான் ஆயத்தமாக இருக்கிறேன். இந்த முறையில் நான் கர்த்தருக்குத் காத்திருக்கிறேன். அநேக சமயங்களில் உபவாசம் எடுத்து ஜெபிக்கிறேன். நீங்கள் அதிகம் சாப்பிட்டுவிட்டால் நீங்கள் சோர்வடைந்து விடுவீர்கள். ஜெபிக்கமுடியாது. நீங்கள் இவ்வாறு ஒரு அமைதி நிலைக்கு வந்துவிட்டதாக உணர்வீர்களேயானால் இரண்டாவது படிக்கு செல்லலாம்.

## 2. தெய்வீக விருப்பம்

இரண்டாவதாக, என் விருப்பத்தின் மூலமாக தேவ சித்தத்தை எனக்கு வெளிப்படுத்த வேண்டுமென நான் ஜெபிக்கிறேன். பரிசுத்தமான நமது விருப்பத்தின் மூலமே தேவன் நம்மிடம் வருகிறார். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாய் இரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை அருளிச் செய்வார் (சங் 37:4) நீதிமானின் வாஞ்சை நிறைவேறும் (நீதி 10:24) ஜெபத்தில் எவைகளைக் கேட்கிறீர்களோ, அவைகளை பெறுவோம் என விசுவாசியுங்கள், அப்படியே பெறுவீர்கள் (மாற்கு 11:24) தேவன் தமது தயவுள்ள சித்தத்தின்படியே உங்களில் விருப்பங்களையும் செய்கைகளையும் உண்டாக்கு கிறவராய் இருக்கிறார். (பிலி 2:13)

அவரது சித்தத்தை செய்வதற்காக பரிசுத்த ஆவியானவர் உங்கள் இதயத்தில் விருப்பங்களை ஏற்படுத்துகிறார். எனவே, ’ஆண்டவரே, உமது சித்தத்துக்கு ஏற்ப என்னில் விருப்பத்தை உருவாக்கும் என ஜெபிக்கலாம்.

தெய்வீக விருப்பத்தை உங்களில் தேவன் தரும்வரை – காத்திருங்கள். அந்த தேவ விருப்பம் உங்கள் இதயத்தில் பதிந்துவிடும்

வரை காத்திருங்கள். ’எல்லாம் எனக்கு கிடைத்து விட்டது’ என்று சொல்லி எழுந்து ஓடி விடாதிருங்கள். இன்னும் அதிகமாக கொஞ்சம் காத்திருங்கள். ஏனெனில் விருப்பங்கள் ஒரு வேளை சாத்தானுடையதாகவோ, உங்களுடையதாகவோ, பரிசுத்த ஆவியானவருடையதாகவோ இருக்கலாம்.

காலமே இதற்கான சரியான பரிசோதனைக் கருவி ! பொறுமையாய் காத்திருந்தால், சுயவிருப்பமும் சாத்தானின் விருப்பமும் பெலவீனமடைந்துவிடும். பரிசுத்த ஆவியானவர் தந்த விருப்பம் என்றால் அது மேலும் மேலும் பெலன் பெறும். எனவே, காத்திருந்து தேவ சித்தத்தைப் பெறுங்கள்.

## 3. ஆவிக்குரிய சோதனை

என்னுடைய விருப்பம் தெள்ளத்தெளிவான பின் நான் 3வது படிக்கு செல்கிறேன். என்னுடைய விருப்பத்தை வேத – போதனையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.

ஒரு நாள் ஒரு பெண் என்னிடம் வந்து ’போதகரே, நான் உங்கள் ஊழியத்தை அதிகமான பணம் கொடுத்துத் தாங்கப் போகிறேன்’ என உற்சாகமாய் சொன்னார்.

’ஆண்டவருக்கு மகிமை’ உட்கார்ந்து பேசுங்களேன்’ என்றேன்

’வியாபாரம் செய்யும்படியான வினோதமான விருப்பம் எனக்கு உண்டாகியிருக்கிறது. பேச்சு வார்த்தை நிகழ்த்திக் கொண்டிருக்கிறேன். இதைச் செய்தால் எனக்கு நிறைய பணம் கிடைக்கும்’ என்றாள். ’என்ன வியாபாரம் அது?’ ’சிகரெட் மற்றும் புகையிலை வியாபாரம்’ என உற்சாகமாய் சொன்னாள். ’இதை மறந்து விடுங்கள் என குறுக்கிட்டேன்.

’ஆனால் எனக்கு விருப்பமுண்டே ’ நீங்கள் பிரசங்கின்றபடி எனக்கு அவியாத வாஞ்சை இதில் உண்டு” என்றாள்

இது உங்கள் சொந்த மனதிலிருந்து வந்த விருப்பம் நீங்கள் விரும்பின இந்த காரியம் ஆவிக்குரியதுதானா என வேதாகமத்தை வாசித்து தெரிந்து கொண்டதுண்டா? என கேட்டேன்.

இல்லை என்றாள். “உங்கள் விருப்பம் வேதாகம பின்னணி உடையதாக இருக்க வேண்டும் என்றேன். உங்கள் சரீரம் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறது (1 கொரி 6:19) ஜனங்கள் புகைக்க வேண்டுமென தேவன் விரும்பியிருந்தால்

புகையானது மேல் நோக்கிச் செல்லும்படி நமது மூக்கை வேறுவிதமாக அமைத்திருப்பார். மூக்கைப் பாருங்கள் மேல்நோக்கி இராமல், அது கீழ்நோக்கி இருக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் நமது சரீரத்தில் வாசம் பண்ணுகிறார். புகைபிடித்தலால், பரிசுத்த ஆவியானவரின் ஆலயத்தை புகை மண்டலமாக மாற்றுகிறீர்கள். உங்கள் விருப்பம் தேவசித்தத்தின்படியானதல்ல. இந்த புதிய. வியாபாரத்தை மறந்துவிடுவதே நல்லது' என்றேன்.

வேறொரு சமயம் ஒருவன் என்னிடம் வந்து, போதகரே, விதவையான ஒரு பெண்ணை நான் சிநேகிக்கிறேன். அவள் அழகானவள், மென்மையானவள், அவள் அற்புதப் பிறவி, நான் ஜெபிக்கும் போதெல்லாம், அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்கிற விருப்பம் என்னில் அனல் பற்றி எரிகிறது. ஆனால் எனக்கு ஏற்கனவே மனைவியும் மக்களும் இருக்கிறார்கள் என்றான்.

பார்! இது பிசாசு கொண்டுவந்த சிந்தனை. அவளை மறந்துவிடு என்றேன். 'இல்லை, இல்லை! அப்படியல்ல என்று மறுத்தான்.

'எனது மனைவி எனது சரியான விலா எலும்பல்ல. இப்போதிருக்கும் என் மனைவி

எனக்கு முள்ளாக இருக்கிறாள். இந்த விதவை தான் எனது விலா எலும்பு.

இவள்தான் எனக்கு சரியாய்ப் பொருந்துவாள் என பரிசுத்த ஆவியானவர் எனக்குச் சொன்னார் என்று பிடிவாதமாக சொல்லிக் கொண்டிருந்தான்.

'ஆவியானவர் இப்படி சொல்கிறதேயில்லை இது அசுத்த அவியின் போதனைதான்' என்றேன்.

இது போன்ற தவறுகளை அநேகர் செய்கிறார்கள். எழுதப்பட்ட தேவ வார்த்தைக்கு எதிராக ஜெபிக்கும்போது பிசாசுதான் பேசுவான். எழுதப்பட்ட தேவ வார்த்தைக்கு எதிரிடையாக பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வதேயில்லை. இந்த மனிதன் என் வார்த்தைக்கு செவி கொடுக்காமல் அவன் தன் மனைவியை விவாகரத்து செய்து விட்டு அந்த விதவைப் பெண்ணை மணந்து கொண்டான். இப்போது அவன் எல்லா மனிதரைக் காட்டிலும் பரிதாபமாக இருக்கிறான். அவனது இரண்டாவது மனைவி முதல் மனைவியைக் காட்டிலும் மோசமாக இருக்கிறார். – 'எனவே, நமது வாஞ்சை விருப்பமெல்லாம் வேத வசனத்தோடு இசைந்தவைதானா எனப் பார்க்க வேண்டும். அதைக் குறித்து

உங்களுக்கு தெளிவு கிடைக்காவிடில் நீங்கள் உங்களுக்காக தேவன் வைத்த ஊழியரிடம் விசாரியுங்கள்.

## 4. அருகிலழைக்கும் சைகை

என்னுடைய விருப்பத்தை, எழுதப்பட்டிக்கும் வார்த்தைக்கும், தேவனுடைய போதனைக்கும் ஒப்பிட்டு சோதித்து பார்த்த பின் நான் நான்காவது படிக்கு ஆயத்தமாக இருக் கிறேன். என்னுடைய சூழ்நிலையின் மத்தியில் தேவனிடத் திலிருந்து அருகில் அழைக்கும் சைகையை கேட்பது தான் நான்காவது படி. உண்மையிலேயே தேவன் உங்களுடைய இருதயத்தில் பேசியிருப்பாரானால் நிச்சயமாக வெளிப்படையான வார்த்தையை அடையாளமாகத் தருவார்.

எலியா, மழைக்காக ஏழுமுறை, ஜெபித்தபோது, கீழ்வானத்தில் கையளவு மேகம் அடையாளமாகக் காணப்பட்டது.

கிதியோன் அடையாளத்தைக் கேட்டான். எப்போதும் ஆண்டவர் என் சூழ்நிலைக்கேற்ப அடையாளம் காட்டுகிறார். அது ஒருவேளை சிறிய அளவுடையதாயிருப்பினும், எனக்கு கொடுக்கப்படும் அடையாளமே!

## 5. காலமும் தேவச்செயலும்

அடையாளத்தைப் பெற்றபின்பு, கடைசி அடியை எட்டும் வைக்கிறேன். தேவனுடைய வேளையை அறிந்து கொள்ள வரை ஜெபிக்கிறேன். நமது வேளையிலிருந்து தேவனுடைய வேளை வேறுபடுகிறது.

உள்ளத்தில் மெய்யான சமாதானம் வரும்வரை ஜெபிக்க வேண்டும். ஏனெனில் சமாதானம் ஒரு நடுவரைப் போன்றது. ஒரு காரியத்தைக் குறித்து ஜெபித்த பிறகும் உங்கள் ஆவியில் அமைதலில்லாதிருப்பதாக உணர்ந்தால் ஏற்றவேளை இன்னும் வரவில்லை என்பது பொருள். ஆகவே, உங்களில் ஒரு சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அப்படியானால், தொடர்ந்து ஜெபித்து காத்திருங்கள். தேவனுடைய வேளை வரும் போது உங்கள் மனதில் சமாதானம் தோன்றும். சிவப்பு விளக்கு அணைந்து பச்சை விளக்கு எரிவது போன்ற ஒரு உணர்வை பெறுவீர்கள்.

பிறகு நீங்கள் குதித்து எழலாம். தேவனுடைய ஆசீர் வாதத்தையும் ரேமாவையும் பெற்றுக் கொண்டபடியால், முழு வேகத்தில் நீங்கள் செயல்படத் துவங்கலாம். அற்புதத்திற்கு மேல் அற்புதம் உங்கள் ஜீவியத்தில் தொடரும்.

என் வாழ்நாளெல்லாம் இந்த 5 படிகளை நான் பயன்படுத்துகிறேன். இன்றுவரை தேவன் எப்போதும் அற்புத அடையாளங்களின் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டேயிருக் கிறார். இந்த பலன்கள் லோகோசுக்கும் ரேமாவுக்கு உள்ள வித்தியாசத்தைத் தெளிவாக வெளிப்படுத்தும்.

இனி நீங்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் குறித்து ஒரு போதும் குழம்ப வேண்டாம். தேவன் உங்கள் இதயத்தில் அவருடைய விசுவாசத்தை வைப்பதால் அவருக்கு நீங்கள் இணக்கமுடையவர்களாவீர்கள்.

தேவனிடத்தில் விசுவாசமுடையவர்களாயிருந்தால் இந்த மலையைப் பார்த்து, அது பெயர்ந்து கடலில் விழும்படி சொல்லலாம் என்று மாற்கு சுவிசேஷம் (11:22.23) ஆங்கிலமொழி பெயர்ப்பில் உள்ளது. கிரேக்கு மொழியில் தேவனுடைய விசுவாசத்தை உடையவர்களாயிருக்க வேண்டும் என்றிருக்கிறது. தேவனிடத்தில் விசுவாசம் (Faith in God) தேவனுடைய விசுவாசம் (Faith of God) என்ற இரு தங்களின் வித்தியாசத்தை இப்போது நீங்கள் விளங்கியிருப்பீர்கள்.

தேவனுடைய விசுவாசத்தைப் பெறுவது எப்படி? நீங்கள் ரேமாவைப் பெற்றுக் கொள்ளும் போது, அது உங்களுடைய தாயிருக்கவில்லை. அதுதான் தேவன் உங்களுக்கு கொடுத்த விசுவாசம். இந்த விசுவாசத்தைப் பெற்றபின் மலையைப் பார்த்து கட்டளையிடலாம். தேவனிடத்திலுருந்து விசுவாசத்தைப் பெறாமல் உங்களால் ஒன்றும் செய்ய இயலாது.

ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை, ஆவியானவரைப் பயன்படுத்தும் வேறெதாவது உபகரணம் இருப்பதாகத் தெரியவில்லை . கர்த்தரிடத்தில் காத்திருக்கும் போது, இந்த விசுவாசத்தை பரிசுத்த ஆவியானவர் உங்களில் கொடுக்கிறார். இந்த விசுவாச அடிப்படையில் நீங்கள் செயல்படும் போது பெரிய அற்புதங்கள் உங்கள் வாழ்க்கை யிலும், வீட்டிலும் ஊழியத்திலும் நிகழும்.

எனவே, கர்த்தரிடம் காத்திருங்கள். இதை வீணாக நேரம் செலவழித்தல் என நினைக்க வேண்டாம். ஆண்டவர் உங்கள் இதயத்தில் பேசும் போது, ஒரு முழுவருஷத்திலும் உங்களால் செய்ய முடியாதவைகளை ஒரு

நொடியில் பெரிய காரியங்களைச் செய்துவிடுவார்.

கர்த்தரிடத்தில் காத்திருங்கள்

பெரியகாரியங்களைக் காண்பீர்கள்.

# 5 அந்திரேயாவின் பள்ளி

இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக நீங்கள் ஏற்றுக் கொள்ளும் போது, உங்களது ஆவி உடனடியாக மறுபடி பிறக்கிறது. தேவனுடைய ஜீவன் உங்களில் அப்போதே ஊற்றப்படுவதால் உங்களது ஆத்துமா நித்திய ஜீவனைப் பெறுகிறது. ஆனால் உங்கள் சிந்தனையும், மனதும் மறுபடி பிறந்த அனுபவத்தின் மூலம் புதுப்பிக்கப் படவேண்டும். இது வாழ்க்கை முழுவதும் நடக்கிற செயல் இதற்கு நம்முடைய நேரத்தையும் சக்தியையும் செலவழித்து போராடவும் நேரிடும். பேசப்பட்ட வார்த்தைகள் வல்லமையுடையதாய், உருவாக்கும் தன்மை உடையதாயிருக்க வேண்டு மானால் நாம் தேவன் கொடுக்கும் ரேமாவை பெற்று அதை செயல்படச் செய்ய வேண்டும். இப்பேர்ப்பட்ட மாற்றம் மிக அவசியமானது.

## புதிதாக்கப்பட்ட சிந்தனை வாழ்க்கை

அநேகர் ஆவிக்குரிய மறுபிறப்பை உடையவர்களாக இருக்கின்றனர். ஆனால், தேவனுடைய சிந்தனைகளைப் பற்றிக் கொள்வதற்கான வகையில் மனதைப்

புதிதாக்கு கிறதில்லை. தங்கள் வாழ்வை தேவனுடைய சிந்தனையுடன் இணைத்து விடுவதில்லை எனவேதான், அவர்களது சிந்தனையின் மூலம் தேவன் சுலபமாக அசைவாட இயலவில்லை . இதை நான் இன்னும் தெளிவாக விளக்கிக்காட்டுகிறேன்.

என் மூத்தமகன் அப்போது 4வது வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். என்னிடத்தில் ஏதோ கேட்க வந்தவன் தயங்கித் தயங்கி நின்றான். அவனது தயக்கத்தை புரிந்து கொண்டு கடைசியாக நானே அவனிடம் சென்றேன். “மகனே, நீ என்னிடத்தில் என்ன கேட்க விரும்புகிறாய்?“ என்று கேட்டேன்.

அவன் புன்னகைத்து, ’அப்பா, நான் ஒரு வினோதமான கேள்வியைக் கேட்டால் நீங்கள் கோபப்படமாட்டீர்ககளே? என்றான்.

நான் கோபப்படமாட்டேன், சொல்’ என்றேன். “உங்கள் சபையாருக்கு முன்பாக நீங்கள் பொய் சொல்ல லாமா? என்றான்.

“எப்போது நான் பொய் சொன்னேன்? எனக் கேட்டேன். ’நீங்கள் உங்கள் சபையாரிடம் திரும்பத்திரும்ப ஒரு பொய்யை சொல்கிறீர்கள், அதை நான் கேட்டிருக்கிறேன் என சொல்லிச் சிரித்தான்.

நான் அதிர்ச்சியடைந்தேன். என் மகனே என்னை நம்ப வில்லை என்றால், யார் என்னை நம்புவார்கள்? ’மகனே நீ உட்கார். நான் என்ன பொய் சொன்னேன் என்பதை எனக்குச் சொல்“ என்றேன்.

அப்பா, நீங்கள் பலமுறை ’ஆண்டவரை சந்தித்தேன் அவர் என்னோடு பேசினார் எனச் சபையாருக்கு சொல்வதை கேட்டிருக்கிறேன். இதைப் புரிந்து கொள்வதற்கான ஆவலில் ஒவ்வொரு சனிக்கிழமையும் நீங்கள் அடுத்தநாள் பிரசங்கத்துக்காக ஆயத்தம் செய்து வரும் போது மெய்யாகவே நீங்கள் தேவனைச் சந்தித்து அவருடன் பேசுகிறீர்களா என்று அறிய கதவை இலேசாகத் திறந்து பார்த்திருக்கிறேன்.

ஆனால் உங்கள் படிப்பு அறையில் நீங்கள் தேவனைச் சந்தித்ததாக நான் காணவேயில்லை. ஆகிலும், ஞாயிறன்று ஆலயத்தில் ’நான் நேற்று ஆண்டவரை சந்தித்தேன்’ என தைரியமாக சொல்கிறீர்கள். அது பொய்தானே என்னிடம் உண்மையை சொல்ல பயப்படாதீர்கள். நான் உங்கள் மகன்தானே! நான் இதை யாரிடமும் சொல்லமாட்டேன் என்றான்.

அவன் இன்னும் சிறுவனாயிருந்த படியால் நான் சொல்வதை அவன் விளங்கிக்

கொள்ளமாட்டான். எனவே, 'ஆண்டவரே, உமக்கும் எனக்கும் இடையே உள்ள உறவை இவனுக்கு விளங்கவைக்கும்படி எனக்கு ஞானம்தாரும்" என ஜெபித்தேன். அற்புதமானதோர் சிந்தனை என் மனதில் ஓடியதைக் கண்டேன் நான் அவனைப் பார்த்து, மகனே நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன்.

"நீ என்றாவது உன் நினைவுகளைப் பார்த்ததுண்டா? என்றேன்.

சிறிது தயக்கத்துடன், 'இல்லை. என் நினைவுகளை நான் பார்த்ததில்லை' என்றான். ஆகவே "உனக்கு வெறுந்தலைதான் இருக்கிறது. உனக்கு சிந்தனைகளே வருவதில்லை' என்றேன்.

"இல்லை அப்பா! எனக்கு சிந்தனைகள் வருகிறதால் தானே நான் பேசுகிறேன்" என்றான்

நான் அவனுக்கு சுட்டிக்காட்டினேன். "ஆனால் நான் உன் சிந்தனைகளைப் பார்க்க முடியவில்லையே'

என் நினைவுகளை எப்படி நீங்கள் பார்க்க இயலும்? அவை என் மூளைக்குள் அல்லவா இருக்கின்றன, நீங்கள் பார்க்க முடியாது ' என்றான்.

நான் சொன்னேன்

’நல்லது. நீ உன் சிந்தனைகளைக் காணமுடியாவிட்டாலும் அவைகள் உனக்குள் இருக்கின்றன. அப்படித்தானே?

’ஆம் அப்பா’ என்றான். ’ஆம் நீ உன் கண்களால் காண இயலாவிட்டாலும் நான் தேவனைச் சந்திக்கிறேன். தேவன் உன் சிந்தனைகளைப் போல இருக்கிறார், பரிசுத்த வேதாகமம் தேவன் வார்த்தையாய் இருக்கிறார் என்கிறது.

மகனே வார்த்தை என்றால் என்ன? வார்த்தை என்பது சிந்தனைதான். மொழியின் சொற்தொடர் அணிவிக்கப் பட்டுள்ளது. தேவனுடைய சிந்தனைக்கு சீன மொழி அணிவிக்கப்பட்டிருந்தால். சீனர்கள் புரிந்து கொள்கின்றனர். ஆங்கில மொழி அணிவிக்கப்பட்டிருந்தால் அமெரிக்கர்கள் விளங்கிக்கொள்கின்றனர். கொரிய மொழி அணிவிக்கப் பட்டிருந்தால் கொரிய மக்கள் புரிந்து கொள்கின்றனர். சுருக்கமாகச் சொன்னால் ’வார்த்தைகள் தேவனுடைய சிந்தனைகள் நம்மை வந்தடையப் பயன்படும் ஒரு கருவிதான். தேவனுடைய வார்த்தையாகிய வசனத்தை நான் படிக்கும்போது தேவனைச் சந்திக்கிறேன். காணக்கூடாத விதத்தில், தேவனுடைய

சிந்தனையானது என் சிந்தனையைத் தொடுகிறது. நான் வேத அசனத்தின் மூலமாகப் பரலோக பிதாவோடு பேசுகிறேன், தேவன் அப்படித்தான் இருக்கிறார்.

கருத்தை விளங்கிக் கொண்டு அவன் தலையசைத்தான். தேவனை நான் காணமுடியவில்லை என்றாலும் அவர் இருக்கிறார் என்பதை இப்போது நான் அறிந்து கொண்டேன். அப்பா என்னை மன்னித்து விடுங்கள். நான் தவறாகப் புரிந்து கொண்டேன் என்றான்.

என் மகன் அப்பாலே சென்றதும் நான் எழுந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தினேன். 'பிதாவே, அவன் விளங்கிக் கொள்ள இயலாது என நினைத்தேன். அவனோ விளங்கிக்கொண்டான். நான் அறியாதிருந்த போதும் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய அற்புத பிரசன்னத்தை அவனுக்கு விளக்கிக்காட்டும்படி எனக்கு உதவினார். என சொல்லித் துதித்தேன்.

நான் உங்களைப் பார்த்து கேட்கிறேன். தேவன் எப்படிப் பட்டவர்? அவருக்கு ஏதேனும் உருவம் உண்டா ? மனிதனைப் போல இருக்கிறாரோ ? தேவருடைய பிரசன்னத்தை எப்படி விளங்க வைப்பீர்கள்?

தேவன், சிந்தனை அல்லது நினைவு போலிருக்கிறார். உங்களுக்கு சிந்தனையோ நினைவோ இல்லாவிட்டால் தேவன் உங்களோடு பேச இயலாது. தேவனைத் தொட்டுப் பார்க்கவோ, முகர்ந்து பார்க்கவோ இயலாது. தேவன் இந்த தொடு உணர்வுக்குரியவரல்லர். உங்கள் சிந்தனைவளத் தினூடாக மட்டுமே நீங்கள் சந்திக்க இயலும்.

தேவனுடைய நினைவுகள் அவரது வார்த்தை மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் வருகிறது. அவரது நினைவுகள் உங்கள் நினைவுகளைத் தொடுகின்றன. அங்கே நீங்கள் தேவனை சந்திக்கிறீர்கள். எனவே மனந்திரும்புதலுக்குப் பிறகு உங்கள் மனமும், சிந்தனையும் புதுப்பிக்கப்படாவிட்டால், தேவன் தன்னை உங்களுக்கு வெளிப்படுத்த இயலாது.

மனந்திரும்பிய பின்னரும் அநேகர் பழைய சிந்தனை யிலேயே வாழ்கின்றனர். பழைய சிந்தனை குறிப்பிட்ட வரையறைக்குட்பட்டது. இப்படி, பழைய தவறான சிந்தனை வாழ்க்கையால் தேவனது செயல்கள் மட்டுப்படுத்தப்படுகிறது. தேவனிடத்தில் நெருங்கி ஜீவிக்க வேண்டுமானால், உங்கள் நினைவுகளையும் சிந்தனைகளையும்

புதுப்பிக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் தேவன் உங்களுடன் தொடர்பு கொள்ளவோ, உங்களிடம் வந்து தங்கியிருக்கவோ முடியாது.

உங்கள் சிந்தனை வாழ்க்கையின் மூலம் விசுவாசம் வளர்வதற்காக, உங்கள் சிந்தனை புதுப்பிக்கப்பட வேண்டும். விசுவாசம் கிணற்றிலிருந்து மொண்டு எடுக்கப்படுகிறதல்ல, விசுவாசம் உங்களது சிந்தனையுடன் இணைந்து செயல்படக் கூடியது. ஏனெனில் விசுவாசம் தேவவசனத்தை கேட்பதி னால் வருகிறது. கேட்கும் வார்த்தை உங்கள் நினைவுகளில் வந்து அது உங்கள் ஆவியில் கலந்து பின்பு விசுவாசத்தை உண்டாக்குகிறது. எனவே, உங்கள் மனம் புதிதாகவில்லை எனில்" தேவ வசனத்தை விளங்கிக் கொள்ள இயலாது. மனம் புதிதாகாமல் தேவனுடைய வசனத்தை கேட்காமல் விசுவாசம் வந்துவிடாது. விசுவாசம் கேட்பதினால் வருகிறது.

உங்கள் சிந்தனை அரங்கம் தேவசிந்தனையை தந்து, விசுவாசத்தை உருவாக்குகிறது. உங்கள் விசுவாசத்தின்மூலம் தேவன் மற்றவர்களுக்கு வெளிப்படுகிறார். உங்கள் சிந்தனை வாழ்க்கை மிகவும் முக்கியமானது. உங்கள் மனம் புதி தாகட்டும். உங்கள் மனம்

புதிதாக்கப்பட 3 வழிகளுள்ளன. அவைகளைக் காண்போம்.

## 1. சிந்தனையில் மாற்றம்

உங்கள் சிந்தனை பிற்போக்கானதாயிராமல் முற்போக்கு சிந்தனையாயிருக்க வேண்டும். இயேசுவின் சீஷனாகிய பேதுரு ஒரு எடுத்துக்காட்டு.

கலிலேயாக் கடலில் இயேசுவின் சீஷர்கள் படகில் சென்றனர். இருள் சூழ்ந்த வேளையில் அலைகள் பெரியதாகி படகை வந்து மோதின. படகை காப்பாற்றுவதற்காக தங்களால் இயன்ற மட்டும் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்த போது இயேசு கடலின்மேல் நடந்து அவர்களை நோக்கி வந்தார். (மத் 14:28.31) படகோட்டி கடலில் ஒரு ஆவியைக் கண்டால் அப்படகு மூழ்கி விடும் என்ற ஒரு பாரம்பரிய நம்பிக்கை இருந்து வந்தது. இயேசுவை அவர்தான் என அவர்கள் அறியாததால் அவரை ஒரு ஆவி என நினைத்து தாம் மூழ்கி செத்து விடுவோம் என பயந்தார்கள். ஆனால் “நான்தான் இயேசு, பயப்படாதிருங்கள்’ என்றார் ’நீர் இயேசு வானால் நான் உம்மிடம் வர அனுமதிக்க வேண்டும்’ என்றான் பேதுரு

பேதுரு எப்போதுமே அவன் நினைப்பதற்கு முன்பே பேசிவிடும் பழக்கமுள்ளவன், உணர்ச்சிவசப்படுகிறவன், ஆனால் அவனுக்கு துணிச்சல் இருந்தது. எனவே ஆண்டவர் பயன்படுத்தினார்.

இயேசு அவனை வரும்படி சொன்னார். இக்கட்டளையை அவன் பெற்றுக் கொண்டதுமே, அவனது சிந்தனை புதுப் பிக்கப்பட்டது. மனிதமுறையாய் சொன்னால், பேதுரு தண்ணீரில் நடக்கவில்லை. இயேசுவின் வார்த்தையை ஏற்றுக் கொண்டதும் உடனே அவன் தன் சிந்தனையை புதுப் பித்தான். முற்போக்காய் சிந்தித்தான். பேதுரு, தன்னால் தண்ணீரின் மேல் நடக்கமுடியும் என நம்பவில்லை , ஆனால் சிந்தனையை முற்றிலும் புதுப்பித்துக்கொண்டு தண்ணீரின் மேல் நடப்பதாக சிந்தித்துப் பார்த்து அதன்படியே படகி லிருந்து இறங்கி தண்ணீரின் மேல் நடந்தான். புதுப்பிக்கப் பட்ட மனதில் அற்புதங்கள் தொடர்கின்றன.

ஆனால் அவன் சுற்றிலும் பார்த்தபோது இருளையும் வலிய அலைகளையும் பார்த்தபோது பயந்து மனதிலே பழைய நிலைக்குத் திரும்பிவிட்டான். நான் மனிதன்தானே ! எப்படி தண்ணீரில்

நடக்கமுடியும். நான் மீனுமல்ல. ஆனால் நடக்கிறேன். இது சாத்தியமானதல்ல, இது தவறானது. என்னால் தண்ணீரின்மேல் நடக்கமுடியாதே! என்று அவன் நினைத்த போது அவனது சிந்தனையே மாறிவிட்டது. உடனே அவன் மூழ்கத்துவங்கினான்.

ரேமாவைப் பெற்றுக்கொண்டு சிந்தனையைப் புதுப்பித்த தால் பேதுரு தண்ணீரின் மேல் நடந்தான். அவிசுவாசப்பட்டு சிந்தனையை மாற்றிக் கொண்ட போதே மூழ்கினான். எனவேதான் நாம் நமது சிந்தனையை புதுப்பித்து நேர் மறையானதை சிந்திக்கவேண்டுமென சொல்கிறேன்.

கடவுளை நம்பாத ஒரு மருத்துவரை அறிவேன். அவர் வெகுகாலமாக என் ஊழியத்துக்கு எதிரியாக இருந்தார். ஒரு நாள் அவருக்கு சரீரத்தில் பக்கவாத நோய் ஏற்பட்டது. அவர் மரித்துக் கொண்டிருந்தார். அவர் என்னிடம் வந்து தனக்காக ஜெபிக்கக் கேட்டார்.

பல நாத்திகர்கள் தங்கள் கொள்கைபற்றி பெருமை யடித்துக் கொள்கிறார்கள். எனினும் கடும் கிருமிகளையும் பேரலைகளையும் சந்திக்கும் போது அவர்களது நாத்திக கொள்கையும் அதன் மேலுள்ள அவர்கள் எண்ணமும் பெலவீனமடைகிறது.

அவருக்காக ஜெபித்தேன். அவர் தன் சக்கர நாற்காலியிலிருந்து எழுந்து அடி எடுத்து வைத்து நடந்தார். எல்லாரும் கைகளைக் கொட்டி ஆர்ப்பரித்து கர்த்தரைத் துதித்தார்கள்.

அடுத்த ஞாயிறன்று அந்த மருத்துவர் யாருடைய துணை யுமின்றி அவராகவே ஆராதனைக்கு வந்தார். என்னிடம் மீண்டும் ஜெபிக்கக் கேட்டார். எனது திரளான பணிகளால் இதை மறந்து விட்டேன். வெறுப்புற்றவராக அவர் திரும்பி தன் காரில் அமரச் சென்ற போது அவர் மீண்டும் பாதிக்கப் பட்டார். எனவே அவரது மனைவி அவரை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றார்,

நான் அவருக்கு தனிப்பட ஜெபிக்காததால் கோபமுற்ற அவர், இவரென்ன ஜெபிப்பது என்று மனதை கடினப்படுத்தி சிந்தனையை மாற்றிக் கொண்டதால் அவர் பழைய நிலைக்கே போய்விட்டார். பேதுருவும் இப்படித்தான் தேவவல்லமையை சந்தேகித்து மூழ்கினான்.

நினைவுகள் முக்கியமானவை; எனவே உங்கள் சிந்தனையைப் புதுப்பிக்கத் தவறாதிருங்கள். உங்கள் நினைவு களெல்லாம் நேர்மறையானதாக முன்னோக்கியிருக்கட்டும்.

தேவன் ஒளியாய் இருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை. உங்கள் சிந்தனையை வேத வசனத்தால் நிரப்புங்கள்.

வேத வசனத்தை நீங்கள் மேய்ந்து கொள்ளும் போது, நீங்கள் உங்கள் பழைய பாரம்பரியத்துக்குத் திரும்பாதபடி எச்சரிக்கையாய் இருங்கள். அநேகர் பாரம்பரியத்திற்கும் புராணக்கதைகளுக்கும் திரும்பிவிட்டதால் அவர்கள் மூலமாக தேவன் செய்ய விரும்பிய பெரிய காரியங்களை அவரால் செய்யக்கூடாமற் போயிற்று. தேவ வார்த்தையை புரட்சி கரமாக ஏற்றுக்கொண்டு உங்கள் சிந்தனைகளைப் புதுப் பித்தால் உங்கள் நிலைமைக்கும் அப்பாற்பட்ட உயர்வு பெறுவீர்கள்.

நான் கொரியாவிலிருக்கும் போது ஒவ்வொரு காலையிலும் எனது 100 உடன் ஊழியர்களுடன் எனக்கொரு நிகழ்ச்சி இருக்கும். காலை 9.00 முதல் 9.30 வரை அவர்களுடன் பேசி அவர்களது சிந்தனைகள் புரட்சிகரமானதாக இருக்க வேண்டுமென சவாலிடுவேன்.

’எனது போதனைகளையும் நினைவுகளையும் உடையவர்களாயிராமல், தேவனுடைய வார்த்தையின்படியே சென்று போதியுங்கள் உங்கள் சிந்தனையில் புரட்சி உண்டாகட்டும்“

என்று கூறுவேன். வேதவசனத்தின்படி உங்கள் சிந்தனை வாழ்க்கையை விரிவுபடுத்துங்கள். உங்கள் சிந்தனையின் மூலமாகவே தேவன் விடுதலையை மக்களுக்கு அருளுவார்.

அவர்கள் உற்சாகமடைந்து, தேவ வார்த்தைகளைப் பெற்று செல்கிறார்கள். அதன்பலனைக் காண முடிகிறது. அவர்கள் வேலையில், அவர்கள் கஷ்டப்படும் போது மட்டுமே யல்லாமல், மற்றபடி நான் குறுக்கிடுவதேயில்லை . துணிச்சலும் ஜெயமுமான இந்த ஊழியர் ஒவ்வொருவரும் 50000 அங்கத்தினரின் குறிப்பிட்ட பகுதி தேவைகளை சந்திக் கிறார்கள்.

## 2. அற்புதங்களை எதிர்பார்த்தல்.

உங்கள் சிந்தனைகளை முற்போக்குடையவைகளாக மாற்றினபின் அடுத்ததாக, அற்புதங்களை எதிர்பார்க்கப் பழக வேண்டும். இயேசு கிறிஸ்துவின் சீடர்களிடம் இது காணப் பட்டது.

ஒரு முறை வனாந்திரத்தில் 5000 ஆண்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். அவர்களுடன் மனைவி மக்கள் என

15000 பேர், ஆக மொத்தம் ஏறத்தாழ 20000 பேர் இருந்திருக்கக்கூடும். மாலையில் அவர்கள் பசியாய் இருந்தனர். இருளும் குளிரும் நிறைந்த அப்பொழுதில் அவர்கள் தங்கள்

வீடு நோக்கி நகரத்தொடங்கினர்.

இயேசு பிலிப்புவை அழைத்து, 'நீங்களே போஜனங் கொடுங்கள்' என்றார். (மத் 14:15.21)

கட்டளை பெற்ற பிலிப்பு, இக்காலத்தைப் போல ஒரு கமிட்டியை ஏற்பாடு செய்து யோசித்திருப்பான். அக்குழுவின் தலைவனான அவன், 'நமதாண்டவர் 20000 பேரை போஷிக்க சொல்லி கட்டளை கொடுத்துவிட்டார். உத்தர வாதம் நம்மீது. உங்களுக்கு ஏதாவது யோசனை தெரிகிறதா?" என கேட்டிருப்பான்.

அவர்களில் ஒருவன், 'நாம் வனாந்திரத்தில் இருக்கிறோம். எருசலேம் வெகுதொலைவிலிருக்கிறது. இது நடத்த இயலாத காரியம் ' என்றான்.

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்" – பிலிப்பு மற்றொருவன்,

“தலைவரே’, நம்மிடம் போதுமான பணம் இருக்கிறதா ? 200 தினார் இருந்தால் அறைகுறை ஆகாரமாவது வாங்கிக் கொடுக்கலாம், பணம் இருக்கிறதா ?” என்கிறான்.

“இல்லை, ஒரு பைசாவும் இல்லை“ – பிலிப்பு.

“உமக்கு மூளையே இல்லை என நினைக்கிறேன்“ என்றான் மற்றவன்.

“ஆம் அப்படித்தான் நினைக்கிறேன்“ – பிலிப்பு

மூன்றாமவன், “தலைவரே ! ஒரு ரொட்டிக்கடையில் இத்தனை பேருக்கும் ரொட்டி வாங்கமுடியுமா ?“

“இங்கே ரொட்டிக்கடை எதுவும் இருப்பதாகத் தெரிய வில்லை – பிலிப்பு

“அப்படியே இருந்தாலும் எல்லாருக்கும் அப்பம் தயாரிக்க சில வாரங்களாவது ஆகும் இல்லையா ?“

’ஆமாம் ஆமாம் !“ – பிலிப்பு. நான்காமவன் வந்து, “இப்போது மிகவும் பிந்தி விட்டது. அவர்களையே அனுப்பி ஆகாரம் எங்கே கிடைக்கிறது என தேடச் சொல்ல லாமா ?“ என்றான்,

கமிட்டி கூட்டம் முடிந்தது. அவர்கள் சேகரித்த தகவல் எல்லாம் எதிர்மறையானது, இயலாமையையே பிரதிபலித் தார்கள், அது இயேசுவின் போதனைக்கு மறுப்பு தெரிவிக் கிறதாக இருந்தது.

பிலிப்பு இயேசுவிடம் வந்து பேசத்துவங்குமுன், அந்திரேயா 5 அப்பங்கள் 2 மீன்களுடன் வருவதைக் கண்டு, “அந்திரேயா, என்ன விளையாடுகிறாயா? என்னப்பா செய் கிறாய்? 20000 பேரைப் போஷிக்க 5 அப்பத்தையும் 2 மீனையும் கொண்டுவருகிறாயே! உனக்கு மூளையே இல்லை!“ என்றான்.

அந்திரேயா எதுவும் பேசாமல் இயேசுவிடம் வந்தான். “ஆண்டவரே. இது போதாது, ஆயினும் இவைகளை உம்மிடம் கொண்டு வந்தேறன்” என்றான். (யோவான் 6:5.12)

இயேசு ஆசீர்வதித்து ஜனத்தைப் போஷித்தார். எல்லா கிறிஸ்தவர்களும் இயேசுவினுடையவர்களே! ஆனால் இயேசுவிடம் பிலிப்புவின் பள்ளி, அந்திரேயாவின் பள்ளி என இரண்டு உண்டு. துரதிர்ஷ்டவசமாக, அநேக சபைகள் பிலிப்புவின் பள்ளியைப் போல இயலாதவை களைப் பேசிக்கொண்டிருக்கின்றன. இது வனாந்திரம்’ ’காலம் பிந்திவிட்டது’,

’எங்களால் முடியாது“ என கத்திக் கொண்டிருக்கின்றனர். அற்ப விசுவாசத்தால் இயலாமையையே பேசிக் கொண்டிருக்கின்றனர். நீங்கள் எந்தப் பள்ளியைச் சேர்ந்தவர்கள்? பிலிப்புவின் பள்ளியா? அந்திரேயாவின் பள்ளியா?

1969ல், 10000 பேர் அமரக்கூடிய ஆலயத்தைக் கட்டும்படி ஆண்டவர் எனக்குச் சொன்னபோது நான் நடுங்கினேன். ஒவ்வொரு அசைவிலும் நான் பிலிப்புவைப் போலத் தானிருந்தேன். மூப்பர்களிடம் நான் விசாரித்த போது பிலிப்பு வின் நண்பர்கள் சொன்னது போலத்தான் இவர்களும் எனக்குச் சொன்னார்கள். இது இயலாத காரியம் என்றார்கள். எனவே நானும் கூட பிலிப்புவின் பள்ளியில் சேர்ந்து விட்டேன். ஆண்டவரிடம், நான் ஆலயத்தைக் கட்ட முடியாது என்றேன். “உன் மூப்பர்களைக்கூட்டி மாநாடு நடத்தும்படி நான் உனக்குச் சொல்லவில்லை; நீ போய் ஆலயத்தைக் கட்டும்படிதான் சொன்னேன்’ என்றார்.

’ஆண்டவரே, கட்டுவதற்கு என்னிடம் எதுவுமில்லை, அதிகமான பணம் தேவைப்படும், என்னிடம் இருப்பது மிகக் குறைவு என்பது உமக்குத்தெரியும்’ என்றேன்.

’உன்னிடத்தில் என்ன உண்டோ அதை நீ கொடுக்க வேண்டும் என ஆவியானவர் பேசினார். ’

அவர் எதைக் கேட்கிறார் என்பதை விளங்கிக் கொண்ட வனாக, ’ஆண்டவரே, அப்படி செய்யும்படி சொல்லாதிரும், 30 வயதில் எனக்கு திருமணமாயிற்று. காலமெல்லாம் நாம் சேமித்ததைக் கொண்டு ஒரு அழகான வீட்டைக்கட்டி அதை என் மனைவிக்குக் கொடுத்து விட்டேன், அதை நான் விற்க முடியாது“ என்றேன்.

ஆனால், ’உன்னிடம் இருப்பதைக் கொடு’ என்றார்.

“பிதாவே, அது வெறும் 20000 ரூபாய் மட்டுமே பெறும்“ என அழுதேன். “அதைக் கொண்டு ஆலயத்தையும் இணை கட்டங்களையும் கட்டமுடியாது, அதற்கு 5 கோடி ரூபாய் வேண்டும், என் வீட்டை விற்றுவரும் பணம் அதற்குப் போதாதே!“ எனக் கதறினேன்.

ஆனால், ’அந்த வீட்டைவிற்று அப்பணத்தை விசு வாசத்துடன் என்னிடம் கொண்டு வா“ என்றார்.

“தேவனே ! இது பயங்கரம் ! எப்படிச் செய்வேன்?“ “என் வார்த்தையை நீ நம்பு.

உன்னிடம் உள்ளதை முதலாவது மனவிருப்பத்துடன் எனக்குக் கொடு“ என்றார்.

கொரியாவைப் பொறுத்தமட்டில், மனைவிக்கு வீடுதான் எல்லாம். குழந்தைகளை வளர்த்து தன்னைப் பராமரித்துக் கொள்வதே அவளுக்குப் பெரிய வேலை. அதுதான் அவளுக்கு சொத்து . எனவே, என் மனைவியிடம் இதைச் சொல்ல பயந்தேன். வேதனையுடன் ஜெபித்தேன். என் மனைவி, வீட்டை விற்க சம்மதிக்க வேண்டுமெனவும் ஜெபித்து வந்தேன்.

ஒரு நாள் என் மனைவிக்கு பரிசுப்பொருட்களையும் சில மலர்களையும் வாங்கிவந்தபோது, அவள் குறுக்கிட்டு, ’நான் உங்களை நேசிக்க மாட்டேன் என நினைத்து இவைகளை வாங்கிவந்தீர்களா?“ என்று சொல்லிவிட்டு அன்றிரவு நல்ல மாலைஉணவு தயாரித்தாள்.

“நன்றி ஆண்டவரே“ என சொல்லிவிட்டு, ’நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். நீ எனக்கு கிடைத்தது எனக்கு கிடைத்த பாக்கியம். ஒவ்வொரு நாளும் நீ மிகவும் அழகாக இருக்கிறாய்!“ என்று சொல்லிவிட்டு, இதுதான் ஏற்றவேளை என நினைத்து,

“அன்பே, எனக்கொரு பெரிய பிரச்னை இருக்கிறது“ என்றேன்.

மிகவும் அக்கறையுடன், “சொல்லுங்கள்“ என்றாள். 10,000 பேர் அமரக்கூடிய பெரியதொரு ஆலயத்தை நாம் கட்டப் போகிறோம். இதற்கு 5 கோடி ரூபாய் தேவைப்படும். நான் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, தேவனுக்காக கட்டுவதில் முதலாவது நம் வீட்டிலிருந்தே துவங்க வேண்டுமென ஆவியானவர் உணர்த்தினார். ஐந்து அப்பமும் 2 மீனுமாக நமது வீட்டை அவருக்காக கொடுக்க தேவன் விரும்புகிறார்“ என்றேன்.

அவள் முகம் வெளிறிப்போயிற்று !என்னை முறைத்துப் பார்த்து, “இது என்னுடைய வீடு, உம்முடையதல்ல. இது எனக்கும் என் பிள்ளைகளுக்கும் உரியது. இந்த வீட்டை – விற்கமுடியாது“ என்று கூறிவிட்டாள்.

நான் பயந்தது போலவே நேர்ந்தது. ஆண்டவரிடம் சென்று, ''ஆண்டவரே, என்னால் முடிந்ததைச் செய்து விட்டேன். மீதி உம்முடையது. பரிசுத்த ஆவியானவர் அவளது உள்ளத்தை உணர்த்தினால் அவள் கீழ்ப்படிவாள்“ என்று ஜெபித்தேன்.

அன்றிரவு நான் ஜெபித்தேன். என் மனைவிக்கு தூக்கமே வரவில்லை. பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்து கொண்டிருந்தார். 'ஆண்டவரே அவளை உம்பக்கம் திருப்பிக் கொள்ளும்" என்றேன். ஒரு வாரமாக அவள் தூங்கவேயில் லை. அவளது கண்கள் தூக்கமின்மையால் நெருப்புக் கோளங் களாக காட்சியளித்தன. கடைசியாக என்னிடம் வந்து, "பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறதை நான் மறுக்கவில்லை, வீட்டைக் கொடுத்துவிடுகிறேன்" என்றாள். அவள் வீட்டுப்பத்திரத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். எங்கள் வீட்டை ஆலயக் கட்டுமானப் பணிக்காகக் கொடுத்து விட்டோம். அந்திரேயாவைப் போல் எங்களிடமிருந்த 5 அப்பமும் 2 மீனுமாக எங்களது வீட்டை கொடுத்தோம். இப்படியாக நாங்கள் அந்திரேயாவின் பள்ளியில் சேர்ந்து கொண்டோம்.

ஒரு நாள், எப்படியோ, நாங்கள் ஆலயம் கட்டும் இடம் பற்றி பிரச்சனை எழுந்தது. கொரிய அரசாங்கம் 'யோய்தா" தீவில் ஒரு விசேஷித்த இடத்தை விரிவுபடுத்திக் கொண் டிருந்தது. அந்தத் தீவில் ஒரு சபைக் கட்டிடம் கட்ட அரசு அனுமதியளித்தது. மெதடிஸ்ட், பாப்டிஸ்ட், ஆங்கிலிக்கன் மற்றும்

கத்தோலிக்க சபையார் மட்டுமல்லாது புத்தர்களும் கன்பூசியஸ் மார்க்கத்தாரும் தங்களுக்கு அங்கே ஆலயம் கட்ட அனுமதிக்க வேண்டுமென மனுச் செய்திருந்தனர். நானும் கூட மனுவை சமர்ப்பித்தேன்.

நிர்வாகி என்னைப் பார்த்து, “எந்த சபையை சார்ந்தவர் நீர்“ என்றார். ’அசெம்பிளி ஆப் காட்சபை’ என்றேன். ”அதாவது, அதிகமாகக் கூச்சல் போட்டு தேவனைத் துதிக்கிறவர்கள், வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கிறவர்கள்“ அப்படித்தானே என்றார். ஆம் என்றேன்.

“உங்களுக்கு ஆலயம் கட்ட அனுமதிக்க முடியாது. உங்கள் விண்ணப்பத்தை ஏற்க முடியாது“ என்றார்.

நான் வந்து, “ஆண்டவரே, நடந்ததைப் பார்த்தீரா ?“ என்றேன்.

“கட்டடம் கட்ட அனுமதி கோரி எப்போது நான் விண்ணப்பிக்கச் சொன்னேன்“ எனக் கேட்டார்.

“நான் அப்படி நினைத்தேன், அவ்வளவு தான்“ என்றேன்.

“என் பிள்ளையே’, நீ இப்போது நடந்துவரும் பாதையை நீ பின்பற்ற வேண்டாம். நீ ,

விசுவாசம், ஜெபம் என்னும் வேறொரு வழியில் நடக்கவேண்டும்“ என்றார்.

எனவே நான் உபவாசித்து ஜெபித்தபோது, ’நீ போய் அந்த தீவை விரிவுபடுத்தும் பணியில் யார் ஈடுபட்டிருக்கிறார் எனக் கவனி’ என ஆவியானவர் பேசினார்.

அப்பட்டணத்தின் துணைமேயர் இப்பொறுப்பைப் பெற்றுள்ளார் என அறிந்தேன். அவரைப் பற்றி விசாரித்த போது அவரது தாயார் பிரஸ்பிட்டேரியன் சபையைச் சேர்ந்தவர் என அறிந்து, அவர்களைச் சந்தித்து ஜெபித்தேன். பரிசுத்த ஆவியின் நிறைவை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

பின்பு என் சபைக்கு வரத் தொடங்கினார்கள்.

கொரியாவில் மாமியார் மருமகள் மேல் அதிகாரம் செலுத்துபவர்களாக இருக்கிறதினால், இந்த தாயாரிடம், ’உங்கள் மருமகளையும் ஆலயத்துக்கு அழைத்து வாருங்கள் என்றேன். அதன்படி அழைத்து வந்தார்கள். அவளும் வசனத் துக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தாள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டாள். இந்த இளம்பெண்ணிடம், உங்கள் கணவரை அழைத்து வாருங் களேன் என்றேன்.

“இல்லை , அவருக்கு வேலைகள் அதிகம்“ என்றாள்.

“உங்கள் கணவர் நரகத்திற்கு செல்வதை விரும்பு கிறீர்களா? அவரை அழைத்து வாருங்கள்“ என்றேன்,

அவள், அவரை அழைத்துவந்த அன்று வல்லமையாக நான் பிரசங்கித்தேன். அவர் தன்னை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தார்.

அடுத்த ஞாயிறன்று, என் அலுவலத்திற்கு வந்து, “யோய்தா தீவின் பொறுப்பாளியாக நான் இருக்கிறேன், ஒரே ஒரு கிறிஸ்தவ ஆலயம் கட்ட அனுமதியுண்டு, எனவே நீங்கள் அங்கே ஆலயம் கட்டலாமே“ என்றார்.

சந்தோஷத்தில்– சப்தமிட விரும்பினேன். ஆனால் “ஆவியானவர் தடுத்தார். சிலவேளைகளில் ஆவியானவர் மறைமுகமாகக் கிரியை செய்கிறார். நான் ’சரி, நல்லது“ என்று சொல்ல நினைத்தேன். ஆனால் ஆவியானவர் ’இல்லை’, என்று சொல்லத்தூண்டினார். அந்த துணைமேயரைப்’ பார்த்து, “இல்லை இந்த சபையை யோய்தாவுக்கு கொண்டு செல்ல நிறைய செலவாகும். அத்துடன் எங்களுக்கு 3 அல்லது 4 ஏக்கர் நிலமாவது தேவைப்படும்.

அதற்கே 5 கோடி ரூபாய் ஆகலாம். இது எங்களால் முடியாது. நாங்கள் பெந்தேகொஸ்தேகாரர்களானதால் எங்கள் விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்’ என்றேன்.

அவர் புன்னகைத்துவிட்டு, எனக்கொரு வழி தெரிகிறது. ஒரு வாரம் வரை ஜெபியுங்கள், நான் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வருகிறேன். அப்போது அதன் பதிலை நீங்கள் சரி என்று சொல்லுவீர்கள்’ என்றார்.

ஒரு வாரம் ஜெபித்தேன். அவரும் திரும்பி வந்தார். ’போதகரே, நீங்கள் இந்த ஆலயத்தை யோய்தாவுக்கு மாற்றுவதாகத் தீர்மானம் செய்தால், அந்த தீவில் உங்களுக் கான இடத்தை ஒதுக்கித்தர அரசுத்தரப்பில் எல்லா ஏற்பாடு களையும் செய்கிறேன். அதற்காகும் செலவுகளை எங்கள் அலுவலகம் பொறுப்பெடுக்கும். அத்துடன் நிலத்தைக் கடன் முறையில் வாங்கவும் வழிவகுத்துத்தருகிறேன். ’ என்று கூறி முடித்தார்.

இப்போது சப்தமிட்டு சந்தோஷப்பட ஆவியானவர் அனுமதித்தார்.

“துணைமேயர் அவர்களே, நான் அதற்கு சம்மதிக் கிறேன்“ என்றேன். அதற்குப் பின்பு

நிலம் எங்களுக்கு சொந்தமாயிற்று. பிறகு கட்டுமானப் பணிக்காக ஒப்பந்தக் காரர்களை அணுகினோம். அவர்கள் வெகு சீக்கிரத்திலேயே வேலையைத் துவங்கிவிட்டார்கள். இந்த துணைமேயர் எங்கள் சபையின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருக்கிறார்.

இதேவிதமாகத்தான் உங்கள் விசுவாசம் சோதிக்கப்படும். வேலை சிறியதாக இருந்தால் சிறிய அளவிலும் , வேலை பெரியதாக இருந்தால் பெரிய அளவிலும் சோதிக்கப் படுவீர்கள். உங்கள் விசுவாசம் ரோஜா மலர்பாதையில் பயணம் செய்கிறது என ஒரு போதும் நினைக்க வேண்டாம். குழப்பமான சூழ்நிலையில் தான் உங்கள் விசுவாசம் பரி சோதிக்கப்படுகிறது.

சபைக்கட்டட காரியத்திலிருந்து இதுவரை நாங்கள் அந்திரேயாவின் பள்ளியில் தான் இருக்கிறோம். ஒவ்வொரு புது பிரச்சனைகளும் விசுவாசமுள்ள ஜெபத்தால் மேற் கொள்ளப்படுகிறது.

திடீரென, கொரியா நாட்டு பண மதிப்பு குறைந்து விட்டபோது, ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தத்தை இரத்து செய்து விட்டனர். மறுபேச்சுவார்த்தை நடத்தி தொகையைக் கூட்ட வேண்டுமென்றனர். பிறகு எண்ணைப்

பற்றாக்குறை வந்ததால் வங்கிகள் மூடப்பட்டு விட்டன. என் சபையார் அநேகர் வேலையிழந்தனர். எனக்கு வந்த வருமானத்தைக் கொண்டு வாங்கின கடனுக்கு வட்டிகூட கட்ட இயலவில்லை. என் அலுவலகப்பணியாளருக்கு என்னால் எதுவும் கொடுக்க இயலவில்லை. என்னிடத்தில் எனக்கென எதுவுமேயில்லை.

பிறகு, மின் பொருள் கடைக்காரர், மரக்கடைக்காரர், பீங்கான் கடைக்காரர், கட்டடப் பொறியாளர் என ஒவ்வொரு வரும் என்னுடன் வழக்காடத்தொடங்கியதால் தினமும் நோட்டீஸ் மேல் நோட்டீஸ் வந்து கொண்டிருந்தன. அவர் களுக்கென கொடுக்க என்னிடத்தில் எந்தப் பணமும் இல்லை.

எனக்காக வாதாடும் வக்கீலுக்கு கொடுக்கவேண்டிய சம்பளமும் கொடுக்க முடியாமல் திணறினேன். என் அலுவலகப் பணியார்களுக்கு நான் சம்பளம் கொடுக்காததால் ஒருவர்பின் ஒருவராக போய்விட்டார்கள். மூழ்கிக் கொண்டிருக்கும் இந்தப் படகில் உட்கார்ந்திருக்க யாருக்கும் விருப்பமில்லை. நானே அதிகவேகமாய் மூழ்கிக் கொண் டிருந்தேன்.

எங்கள் வீடு விற்கப்பட்டதால், வேறெந்தவழியும் தெரி யாமல், தண்ணீர்

வசதியில்லாத இன்னும் கட்டிமுடிக்கப்படாத ஒரு கட்டிடத்தின் ஏழாவது மாடியில் குடியேறினோம். குளிர் அதிகமாக இருந்தது ஆனால் அனல்மூட்டிக் கொள்ள எதுவுமேயில்லை .

மாலையில் நான் இந்த வீட்டுக்குத் திரும்புவேன், இரவெல்லாம் குளிரில் நடுங்கிக்கொண்டு உணவு இல்லாமல். –.. ஒ – எல்லாம் இருளாயிருந்தது! நான் தவறு செய்து விட்டது போல் தோன்றிற்று. பிலிப்புவின் சீஷர்களைப் போலாகி, ’விசுவாச வாழ்வு என்பது வெறும் போலிதானே, நான் தவறிழைத்துவிட்டேன் என சொல்லிக் கொண்டு எனக்குள்ளேயே வருந்தினேன்,

சபையார் என் சபையை விட்டு விலகிச் சென்றார்கள். எல்லாம் தலைகீழாய் நடந்தது. என் மனைவி மக்களும் என்னை சந்தேகித்தனர். பசியும் களைப்பும் எங்களை மேற்கொண்டது. ’இவ்வளவுதான், இத்துடன் எல்லாம் முடியப்போகிறது. இதுதான் விசுவாச வாழ்க்கை என்பது. ம்.. நான் என் வாழ்வை முடிக்கப் போகிறேன். நான் சாகப் போகிறேன். ஆனால் நான் நரகத்திற்கு செல்ல விரும்பவில்லை.“ என உளறிக் கொண்டிருந்தேன்,

“காலமெல்லாம் உமக்காகவே உழைத்து விட்டேன். அதற்காகவாவது நான் எதையாகிலும் பெற்றுக் கொள்ள வேண்டும். நரகம் இந்த வாழ்வை விட மோசமானதென்றால், நான் ஏன் அங்கே போக வேண்டும்? ஆனால் இந்த விதமாக நான் வாழ விரும்பவேயில்லை நான் தற்கொலை செய்து கொள்ளலாமா? ஆண்டவரே, என் ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும். பரலோகில் என்னைச் சேர்த்தருளும்“ என்றேன்.

இப்படி நான் ஜெபித்ததின் விளைவு. நான் உணர்ந்ததைக் காட்டிலும் அதிக வல்லமையுள்ளதாய் இருந்தது, இப்படி நான் ஜெபித்துக் கொண்டிருந்த போது ஒரு சப்தம் கேட்டது. “நீ ஒரு கோழை நீ சாவதினால் ஜனங்களுக்கு நீ ஒரு பரியாசப் பொருளாயிருக்க விரும்புகிறாயோ, இன்னமும் நீ கோழைதானா? அல்லது விசுவாச மனிதனா?“

“ஆம், நான் கோழைதான்“ “நீ மட்டுமல்ல உன்னைப் பின்பற்றுகிற அநேகரையும் நீ நரகத்திற்கு இழுத்துச் செல்லப் பார்க்கிறாய். சபை மூப்பர்கள், அங்கத்தினர்கள் மற்றும் சகோதரிகளிடமிருந்து நிறைய பணம் கடன்வாங்கியிருக்கிறாய். அவர்களேல்லாரும்

உன்னை நம்பிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நீயோ சாகப் போகிறேன் என்கிறாய்?“ என அச்சப்தம் தொடர்ந்தது.

உன் கோழைத்தனத்தால் அநேகர் விசுவாசத்தை விட்டு விலகிவிடுவர். அவர்களது குடும்பம் சிதைக்கப்பட்டு, அவர்களும் தற்கொலை செய்து கொள்வர். உன் செய்கையின் எதிரொலி கிறிஸ்துவ உலகத்தை எந்த அளவு பாதிக்கும் என உனக்குத் தெரியுமா?

இந்த வார்த்தைகள் என் இதயத்தினுள் ஊற்றப்பட்டது. “ஆண்டவரே, பிறகு நான் என்ன செய்ய முடியும்? ஏன் என்னை சாகவும் விட மாட்டேன் என்கிறீர்?“ என கதறினேன்.

“நீ சாக முடியாது. பாதுகாக்கப்படுவாய்! உன் கடன் கட்டித் தீர்க்கப்பட்டது, உனது ஜனங்கள் கடன்கள் தீர்க்கப் பட்டது என்பதைப் பார்க்க வேண்டும்“ என்று பதிலுரைத்தார் ஆண்டவர்,

உடனே எழுந்து ஏழாம் மாடியிலிருந்து கீழே இறங்கி ஒடி, வேதனையோடும் புலம்பலோடும் என் அலுவலகத்தில் முழங்காலிட்டேன். என்னுடைய பரிதாபமான நிலை பற்றிய செய்தி சீக்கிரத்தில் என்

சபையாருக்கு எட்டினதால் அவர்கள் புது விசுவாசத்துடனும் விழிப்புடனும், எங்களைவிட்டு போனவர்களும் கூட இணைந்து கொண்டு, ’நமது போதகரைக் காப்பாற்றுவோம், தேவனுடைய மனிதனைக் காப் பாற்றுவோம்’ எனக் கூடிவிட்டனர்.

இந்தவிதமாக, கட்டப்படாத, தரை பூசப்படாத ஆலயத்தில் ஆயிரக்கணக்கானோர் இரவும் பகலுமாக உபவாசித்து “தேவனே, எங்கள் போதகரைக் காப்பாற்றும்’ என்று கதறி ஜெபிக்கத் தொடங்கினர்.

தேவன் கிரியை செய்ய ஆரம்பித்தார். பெண்கள் தங்களது நீண்ட தலை முடிகளை வெட்டி விற்று பணம் கொண்டுவந்தனர். ஒருமுறை அனாதையும் ஆதரவு அற்றவளுமான வயதான ஒரு ஏழைத்தாய் தன்னிடம் இருந்த ஒரே ஒரு சாப்பாட்டுத் தட்டையும் ஒரு கரண்டியையும் கொண்டுவந்தாள். பீடத்தண்டையில் அவள் அழுது கொண்டு நிற்கும்போது, ’போதகரே இந்த சூழ்நிலையிலிருந்து நீங்கள் விடுவிக்கப்படவேண்டுமென விரும்புகிறேன். பல ஆண்டு களாய் உங்களிடம் நன்மை பெற்ற நான் உங்களுக்கென கொடுக்க இந்த தட்டும், கரண்டியும் தவிர வேறொன்றும் என்னிடத்தில் இல்லை. ஆனால் இதையும்

ஆண்டவரின் வேலைக்காக கொடுக்க வந்தேன், பெற்றுக் கொள்ளுங்கள். காகித அட்டையில் உணவை வைத்து என் கைகளால் எடுத்து சாப்பிட என்னால் இயலும் என்றாள்.

என் இதயம் நொறுங்கியது. ’அம்மா, இதை நான் வாங்கிக் கொள்ள மாட்டேன். இது உங்களுக்குத் தேவை . நான் வாங்க மாட்டேன். ’ என்றேன்.

வெடித்துச் சிதறின கண்ணீருடன், ’இந்த ஏழையின் காணிக்கையை ஆண்டவர் ஏற்றுக் கொள்ள மாட்டாரா? இது உங்களுக்கு உதவி செய்யாது என எனக்குத் தெரியும். ஆகிலும் நான் ஏதாகிலும் ஆண்டவருக்கென கொடுக்க விரும்புகிறேன்’ என்றாள்.

உடனே ஒரு பணக்கார வியாபாரி எழுந்து, 30,000 ரூபாய் கொடுத்து ’போதகரே, இதை நான் வாங்கிக் கொள்கிறேன்’ என்றார். ஆம், அப்படியே நடந்தது.

இது ஒரு நெருப்புப் பொறி போலப் பற்றியது. அநேகர் தங்களது நல்ல வீடுகளை விற்று ஆலயத்துக்கு கொடுத்து விட்டு சாதாரண சிறிய குடியிருப்புப் பகுதிகளுக்குச் சென்றனர். இளந்தம்பதிகள் பலர் தங்களது ஆண்டு

வருமானத்தை அப்படியே கொடுத்துவிட்டு விசுவாசத்தில் பிழைக்கத் தொடங்கினர்.

சீக்கிரத்தில் பணம் சேர்ந்தது. வட்டி கட்டினது மட்டுமல்லாமல் ஆலயமும், ஆலயம் சார்ந்த மாடிக் கட்டிடமும் கட்டி முடிக்க 5 கோடி ரூபாய் பணமும் கிடைத்தது. 1973க்குள் என் எல்லாக் கடனும் கட்டித் தீர்க்கப்பட்டது.

அந்திரேயாவின் பள்ளியே சிறந்தது என மீண்டும் ஆண்டவர் எனக்கு உணர்த்தினார். அற்புதங்களை நாம் எதிர்பார்க்கும்போது தேவன் அற்புதங்களைச் செய்கிறவர் என்றும் நாம் நினைக்க வேண்டும்.

விசுவாசம் நமக்கிருந்தால், சிறுசிறு பிரச்சனைகள் தவிர மற்றெல்லாம் சுலபமாக நடந்துவிடும் என்று பலர் நினைக் கின்றனர். அது அப்படியல்ல. ஆபிரகாமுக்கு விசுவாசம் இருந்தது. ஆனால் 25 ஆண்டுகள் அவர் சோதிக்கப்பட்டார். யாக்கோபு 20 ஆண்டுகள் பெரும் துயரத்தில் வாழ்ந்தார். யோசேப்பு 30 ஆண்டுகளும், மோசே 40 ஆண்டுகளும், இயேசுவின் சீஷர்கள் தங்கள் வாழ்நாளெல்லாம் துயரங்களை அனுபவித்தார்கள்.

துயரங்கள் வரும்போது ’கடவுள் எங்கே?’ என கேட்காதிருங்கள். தேவன் எப்போதும்

இருக்கிறார். அவர் உங்களைப் பரிசோதிக்கிறார். சிலவேளைகளில் தேவன் உங்கள் முதுகெலும்பை பலப்படுத்தவும் நேராக்கவும் விரும்பு வதுண்டு. எலும்பை பெலப்படுத்தும்போது அது உடைவது போல் சப்தம் கேட்கலாம். ஆனால் விசுவாசத்துடன் வேத வசனங்களைப் பிடித்துக் கொள்ளுங்கள். தேவன் உங்களைக் கைவிடவே மாட்டார்.

அநேக வேளைகளில் தேவன் கடைசி நேரம் வரை காத்திருக்கச் செய்கிறார். உங்கள் மனதைப் புதிதாக்கி, தேவனோடு நடக்கப் பழகிவிட்டால் கடைசி நிமிடம் வரை நீங்கள் உறுதியாய் நிற்கலாம்.

உங்கள் சிந்தனை வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். பழைய பாரம்பரியத்துக்கு அல்ல, வேத வசனத்தை வாசித்து புதிதாகுங்கள். உங்கள் மனதைப் புதி தாக்குவது வேதவசனங்கள் மட்டுமே. நேர்மறையானவைகளைச் சிந்தித்து அற்புதங்களை எதிர்பாருங்கள்,

## 3. உங்கள் மனதை ஜெபத்திற்கு நேராக குவியுங்கள்,

நீங்கள் பெற்ற சிந்தனை தேவன் தந்ததாக இருந்தால் ஜெபம் உங்களுடையதே! தேவன் கைவிடமாட்டார். தேவன் யுத்தத்தில் ஒரு போதும் தோற்றதில்லை . அவர் ஜெய கர்த்தர். ஜெயம் பெறுவோம் என்கிற எண்ணம் உங்களுக்கு இருக்கவேண்டும். தேவனுக்கு ஒரு குறையுமில்லை, நீங்கள் எதிலும் குறைவற்றவர்கள் என்கிற எண்ணம் உங்களிடம் இருக்க வேண்டும்.

இந்த எண்ணம் மிக முக்கியமானது. சுயதாழ்ச்சி, வறுமை, வியாதி, தோல்வியாகிய சிந்தனை உங்களுக்குள் இருந்தால் தேவன் கிரியை செய்ய இயலாது. தேவன் உங்களுக்கு உதவுகிறவர். அவரே உங்கள் நிறைவு. அவரே உங்களது மேன்மையும் வெற்றியுமாக இருக்கிறார். இருவர் ஒருமனப் பட்டிராவிடில் எப்படி இணைந்து வேலை செய்யமுடியும்? தேவனோடு நடந்து கிரியை செய்ய வேண்டுமானால் உங்களுக்கு அவருடன் இணைந்த எண்ணம் அல்லது மனநி லை வேண்டும்.

உங்கள் மனதைப் புதிதாக்குங்கள். வெற்றி, நிறைவு இவைகளைப்பற்றியே சிந்தியுங்கள். உங்கள் சிந்தனை வாழ்க்கை

புதுப்பிக்கப்பட்டுவிட்டால் நீங்கள் 'ரேமாவைப் பெற்றுவிடுவீர்கள். ஜெபத்தால் விசுவாசத்தை வளமாக்குங்கள். விசுவாசத்தால் உயர்த்தப்படுவீர்கள்.

இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். தேவனுடைய வார்த்தை நிறைவேறாமல் அதில் ஒன்றும் கீழே விழுவதில்லை. தேவன் மாறாதவர். நாம் அப்பத்தினால் மட்டுமல்ல, தேவனுடைய வார்த்தையினாலும் பிழைக்கிறோம். நாம் நீதிகரிக்கப்பட்ட தேவ பிள்ளைகள், நாம் விசுவாசத்தால் பிழைக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் நாமெல்லாரும் ஒன்றே!

பெரிய காரியங்களை சிந்தியுங்கள்! வாழ ஒரே ஒரு வாழ்க்கைதான் உண்டு, தோல்வி மனப்பான்மையுடன் வாழவே வேண்டாம். உங்கள் வாழ்க்கை விலையேறப் பெற்றது. நீங்கள் தேவனுடைய நாமத்தினால் இவ்வுலகுக்கு ஏதேனும் கொடுத்தே ஆகவேண்டும். கிறிஸ்து உங்களுக்குள் மகிமையாய் வீற்றிருக்கிறார். கிறிஸ்துவுக்குள் நீங்கள் முடிவில்லாத பொக்கிஷமாய் இருக்கிறீர்கள்.

2000 ஆண்டுகளுக்கு முன் இருந்தது போலவே, இயேசு இன்னும் வல்லவராகவே இருக்கிறார். நேர்மறையானவைகளைச்

சிந்தித்து கிறிஸ்துவின் சிந்தனையை உங்கள் இதயத்தினுள் கொண்டு வாருங்கள். அற்புதங்களை எதிர் பாருங்கள். சூழ்நிலைகளின்மேல் ஜெயம் கொள்ளுங்கள், வேத வசனம் உங்கள் நினைவுகளில் சிந்தனைகளில் நிறைந்திருக்கட்டும். பிறகென்ன, அற்புதங்கள் நிகழ்வதைக் காண்பீர்கள். 4. நினைத்தல் – கேட்டல் இவைகளின் விதிமுறை

எபேசியர் 3:20ல் ’நினைப்பதற்கும் வேண்டிக் கொள் வதற்கும் அதிகமாய் நம்மில் கிரியை செய்கிற வல்லமையின் படியே“ என வாசிக்கிறோம். இதை நான் நினைத்தல் கேட்டலின் விதிமுறை என்கிறேன். ஏதோ கேட்டால் கிடைத்து விடும் என பலர் நினைக்கின்றனர். ’நினைப்பதற்கும் வேண்டிக் கொள்வதற்கும் அதிகமாய்“ என வேதம் சொல்கிறது. அதாவது ஒன்றை நினைக்கவேண்டும், பின்பு கேட்க (வேண்டும்.

என்னத்தை நினைக்கிறீர்கள் ? வறுமையையா ? வியாதியையா ? இயலாமையையா ? தோல்வியையா ? பின்வாங்குதலையா? இந்தவிதமாய் சிந்தித்து கேட்டால் தேவன் உங்களுக்கு எதையும் செய்யமுடியாது.

உங்கள் சிந்தனை வாழ்க்கை எப்படிப்பட்டது? உங்கள் சிந்தனையை புதுப்பித்து விட்டீர்களா? எந்த அளவு உங்கள் சிந்தனை புதுப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த அளவுக்கு தேவன்

உங்களில் நிறைவுகளைக் கட்டளையிடுவார்.

நீங்கள் வேதாகமத்தை வாசிக்க வேண்டும். வரலாற்றுப் புத்தகம் போலவோ, மார்க்கபுத்தகம் போலவோ, சட்டப் புத்தகம் போலவோ படிக்காமல், உங்கள் மனம் புதிதாக்கப் படும்படியாக படியுங்கள். உங்கள் சிந்தனைகளை வேத வசனங்களால் நிரப்புங்கள். பிறகு, தேவன் இலகுவாக உங்கள் வாழ்வில் இடைபட்டு, உங்கள் மூலமாகப் பெரிய பெரிய காரியங்களைச் செய்து மகிமைப்படுவார்.

# 6. தேவனுடைய முகவரி

நாம் கிறிஸ்துவுக்குள்ளான பிறகு நமது சிந்தனை வாழ்க்கை நம்பிக்கையான எண்ணங்களுடன் புதுப்பிக்கப்பட வேண்டும். 'எனக்கு காசநோய் எப்படி வந்ததென்றால் 'எனக்கு காசநோய் வந்து விடுமோ' என்ற பயம் எப்போதும் என்னிலிருந்தது. நான் உயர்நிலைப்பள்ளியில் மாணவனாக இருந்த சமயத்தில் ஒரு பாட்டிலில் எலும்புகளும் குடல்களும் எரிசாராயத்தில் வைக்கப்பட்டிருந்ததை காண நேர்ந்தது. அந்த காட்சி என்னை பீதியடையச் செய்தது.

ஒருநாள் உடற்கூறு ஆசிரியர் 'காசநோய் பற்றி கற்றுக் கொடுத்தார். 'உங்களுக்குக் காசநோய் ஏற்படுமானால் உங்களது எலும்புகளும், குடல்களும் இந்த பாட்டிலில் இருப்பது போல்தான் ஆகும்.' என்று அந்த பாட்டிலை சுட்டிக்காட்டி காசநோயின் பயங்கரத்தைக் குறித்து பேசினார். அந்தக் காலத்தில் காசநோயை குணமாக்கும் அற்புதமான மருந்துகள் இல்லை, மேலும் சிலருக்கு பிறப்பிலேயே காசநோய் வருவதற்கான கூறு உண்டு. ஒடுக்கமான தோளும் நீண்ட கழுத்தும் உள்ளவர்களுக்கு

காசநோய் வர வாய்ப்பு உண்டு' என்று அந்த ஆசிரியர் சொன்னார்.

எல்லா மாணவர்களும் தங்களது கழுத்தை கொக்குபோல் நீட்டிப்பார்த்து தங்கள் கழுத்து எப்படி இருக்கிறது என்று பார்த்தார்கள். நானும் அவ்விதமே செய்து பார்த்தேன். வகுப்பிலுள்ள எல்லோரையும் பார்க்கிலும் எனக்கு நீண்ட கழுத்து இருப்பதை உணர்ந்தேன். அப்போதே எனக்கு காச் நோய் வரும் என்ற உணர்வு ஏற்பட்டுவிட்டது. பயம் என்னை ஆட்கொண்டது. நான் என் அறைக்கு வந்து கண்ணாடி முன்னால் நின்று என்னை நானே பார்த்தேன். எனக்கு பயம் மேலும் அதிகரித்தது, நான் பயத்திலேயே வாழ்ந்தேன்.

விருப்பம் விருப்பத்தையே ஈர்த்துக் கொள்வது போல் என்னுடைய 18வது வயதில் நான் காசநோயால் பீடிக்கப் பட்டேன்.

## குழப்பம்

1958ல் எங்கள் பட்டணத்தில் முன்னோடி ஊழியமாக குடிசைப்பகுதி மக்களிடம் சென்றேன். இப்படிப்பட்ட ஊழியத் துக்காக நான் பயிற்சி பெறவும் இல்லை . ஆயத்தப்பட வுமில்லை . 3 மாதங்களில் என்

பிரசங்கமெல்லாம் முடிந்தது. அதற்குமேல் பிரசங்கிக்க என்னிடம் ஒன்றுமில்லை.

போய் இரட்சிப்பை பற்றி சொல்லவேண்டியது தானே என்பீர்கள். இரவு பகலாக இரட்சிப்பைப் பற்றியே சும்மா பேசிக் கொண்டிருக்க முடியாது. ஒரு பிரசங்கத்தை நான் ஆயத்தம் செய்ய ஒரு முழுவாரத்தையும், ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல்வரை புரட்டுவதிலேயே செலவழித்தேன், ஆனாலும் தயாரிக்க இயலாததால் நான் ஊழியத்துக்கு லாயக் கில்லை என நினைத்தேன்.

மிகவும் ஏழைகளான என்பகுதி மக்கள் மோட்சம் நரகம் பற்றி எங்கே நினைக்கப் போகிறார்கள். அவர்களோ அன்றாடங்காய்ச்சிகள். அன்றன்றுள்ள ஆகாரத்தைத் தேடுவதே அவர்களுக்குப் பெரியபாடு. எதிர்காலம் பற்றி சிந்திக்க அவர்களுக்கு எங்கே நேரமிருக்கிறது. நான் சென்ற இடமெல்லாம் ஜனங்கள் அரிசியும் துணியும் குடிசை கட்ட பணமும் கேட்டார்கள். அவர்களது நிலைமைதான் எனக்கும் ஒரே ஒரு உடைதான். உணவும். -- அதைப் பற்றி நினைத்துப் பார்க்கவே கூடாது. நானும் குடிசைவாசிதான். நான் எப்படி அவர்களுக்கு உதவ முடியும்?

தேவன் எல்லா நன்மைக்கும் ஊற்றும் காரணருமாய் இருக்கிறார் என எனக்குத் தெரிந்தாலும் நான் மிகுந்த சோர்வடைந்திருந்தேன். ஏனெனில் அவரை எப்படி அசைத்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என எனக்கு அந்நாட்களில் தெரியாதிருந்தது. சில வேளைகளில் நான் ஆண்டவரை நெருங்குவது போலத் தோன்றும் ஆனால் அடுத்த நாளில் நான் தூரமாயிருப்பது போலக் காணப்படும்.

மெய்யாகவே பரிசுத்த ஆவிக்குள்தான் வாழ்கிறேனா என்பது பற்றி பலமுறை நான் குழப்பமடைந்ததுண்டு. அடிக்கடி நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன் என நினைத்துக் கொண்டாலும், நாட்கள் கடுமையாகத் தோன்றும் போது, நான் ஆண்டவரைவிட்டுத் தனித்திருப்பது போலத் தோன்றும். ’பிதாவே, நான் உமக்குள்ளும் சில சமயம் உமக்கு வெளியேயும் இருப்பது போலத் தோன்றுகிறது. எப்போதும் உம்மோடு இருப்பது எப்படி எனத் தெரியவில்லை ’ என ஜெபித்ததுண்டு. பிறகு எப்போதுமே தேவ பிரசன்னத்தில் இருக்கவேண்மென்கிற எண்ணம் என்னில் எழுந்தது.

கிழக்கு தேசத்தாருக்கு தாங்கள் ஆராதிக்கும் தேவனுக்கென ஒரு குறிப்பிட்ட இடம்

தேவைப்படும். கீழ் தேசத்தார் பெரும்பாலும் அவர்களுடைய ஆராதனையில் புற ஜாதிகளின் பழக்கங்களே மேலோங்கி நிற்கும். அந்தப் பழக்கத்தின்படி போய் ஆராதிப்பதற்காக கடவுளுக்கு ஒரு இடமும், முகவரியும் தேவை. புறஜாதிகளின்படி நான் ஆராதிக்க வேண்டுமானால் நான் அதற்கான ஆலயத்திற்கு சென்று அங்குள்ள விக்ரகத்திற்கு முன்பாக நான் முழங்கால் படியிட வேண்டும். அப்படி செய்யும்போது அங்கிருக்கும் விக்ரக தெய்வத்தோடு நேருக்கு நேர் நிற்கலாம். புறஜாதி களின் பழக்கப்படி அவர்களுக்கு அவர்களுடைய தெய்வத்தின் முகவரி தெரியும்.

ஆனால் கிறிஸ்தவனான பிறகும் கூட என்னால் கடவுளின் முகவரியை கண்டுபிடிக்க இயலாதிருந்தது. அது என் இருதயத்தில் பெரும்பாரமாகயிருந்தது. கர்த்தருடைய ஜெபத்தில் ’பரமண்டலத்திலிருக்கிற எங்கள் பிதாவே’ என்று சொல்கிறோம். அப்படியானால் அந்த பரமண்டலம் அல்லது பரலோகம் எங்கிருக்கிறது? பூமி உருண்டையானபடியால் மேலே இருப்பவர்களுக்கு பரலோகம் அதற்கு மேலாக இருக்கும். ஆனால் கீழே இருப்பவர்களுக்கு எங்கே என்றெல் லாம் நான் சிந்திப்பதுண்டு.

ஆகவே கீழ்தேசத்தார் கிறிஸ்தவர்களாகும்போது தேவனுடைய முகவரி என்ன என்று காண்பது பெரும் போராட்டமாக இருக்கும். இன்றும் கூட அப்படிப்பட்டவர் என்னிடம் அவர் எங்கே இருக்கிறார்? அவரது தோற்றம் எப்படி இருக்கும்? அவர் விலாசம் எது? நீங்கள் அவனை நம்பும்படி சொல்கிறீர்கள் அப்படியானால் அவரை எங்கே காண முடியும் எனக் கேட்கிறார்கள்.

எனது ஆரம்பகால ஊழியத்தில், யாராவது இப்படித் கேட்டால் நீங்கள் பரலோக பிதாவுடன் பேசுங்கள் – ஜெபி யுங்கள். அவர் விலாசம் எனக்குத் தெரியாது, கூப்பிட்டால் சில நேரம் வருகிறார், சில சமயம் வராதிருக்கிறார் என சொல்லியிருக்கிறேன்.

இதைக்குறித்து நான் பாரப்பட்டு அழுதிருக்கிறேன். ' ஏனென்றால் இப்படியே நான் பிரசங்கித்துக் கொண்டிருக்க முடியாதே. ஆகவே அவரது திட்டமான முகவரி எனக்கு தேவைப்பட்டது. நான் நம்முடைய தேவனின் முகவரியை தேட ஆரம்பித்தேன். என் கற்பனையில் நான் ஆதாமிடம் சென்று, ஆதாமே நீர்தான் முதல் மனிதர், தேவனின் முகவரி என்ன என்று உமக்குத் தெரியும்.

தயவு செய்து பரலோக பிதாவின் முகவரியை சொல்லும் என கேட்டேன்.

’அவர் ஏதேன் தோட்டத்தில் இருக்கிறார், அங்கே நீ போய் பார்த்தால் அவரது முகவரி உனக்குத் தெரியலாம் என்று சொல்லியிருப்பார்.

’நீர் கிருபையைவிட்டு வீழ்ந்த பிறகு, ஏதேனைவிட்டு தள்ளப்பட்டுவிட்டீர். வெளியேற்றப்பட்டபிறகு தேவனின் முகவரி என்ன?

’எனக்குத் தெரியாது’ இது ஆதாமின் பதில்,

என்னுடைய கற்பனையில் நான் ஆபிரகாமிடம் செல்லத் தீர்மானித்தேன். நான் சோர்ந்து போய் ஆபிரகாமிடம் வந்தேன். ’நீர் விசுவாசத்தின் தகப்பன். நீர் தேவனை அடிக்கடி சந்தித்திருக்கிறீர், அப்படியானால் பிதாவின் விலாசத்தைச் சொல்லுங்கள்’ என்றேன்.

’தேவனை நான் காணவேண்டும் என்று நினைக்கும் வேளையில் பலிபீடம் கட்டி பலி செலுத்திக் காத்திருப்பேன்.

சிலவேளைகளில் அவர் வருவார். அவரது விலாசம் எனக்குத் தெரியாது’. இது ஆபிரகாமின் பதில்.

பின்பு மோசேயைப் போய் பார்த்தேன். 'நீர் ஆண்டவரின் பிரசன்னத்திலேயே இருந்ததால் ஆண்டவரின் விலாசம் உமக்குத் தெரிந்திருக்கும், அதை எனக்குச் சொல்லுவீரா?" என்றேன்.

நிச்சயமாக அவரை எனக்குத் தெரியும். வனாந்திரத்தில் கட்டப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தில் அவர் வருவார். பகலில் மேகஸ்தம்பமாகவும் இரவில் அக்கினிஸ்தம்பமாகவும் வருவார். நீர் அங்கே போய் பாரும்'. இது மோசேயின் பதில்.

'இஸ்ரவேலர் கானானுக்குள் வந்ததும் ஆசரிப்புக் கூடாரம் காணப்படாமற் போயிற்று. எங்கே அந்த வனாந்தர ஆசரிப்புக் கூடாரம்?'.

'எனக்குத் தெரியாது' என்றார் மோசே.

சோர்ந்து போய் சாலமோன் இராஜாவிடம் போய் 'நீர் ஆண்டவருக்காக மகிமையான ஆலயத்தைக் கட்டினீர், அந்த ஆண்டவரின் விலாசம் எது ? என கேட்டேன்.

'மகிமையான சாலமோனின் ஆலயத்தில் தேவன் வாசம் பண்ணினார். 'தேசத்தில் சாபமும், நோயும் வரும்போது அந்த ஆலயத்திற்கு சென்று அங்குள்ள தேவனை நோக்கி விண்ணப்பிக்கும் போது

அவர்களுடைய விண்ணப்பங்களைக் கேட்டு அவர் பதில் அளித்தார்' என்று சொன்னான்.

'அந்த ஆலயம் எங்கே? கிறிஸ்துவுக்கு 600 ஆண்டுகளுக்கு முன் பாபிலோனியர் அதைத்தான் இடித்து விட்டார்களே! அந்த ஆலயத்தின் முகவரியே இப்போது இல்லையே.

'ஆலயம் இடிக்கப்பட்டுவிட்டது. இப்போது அவரது முகவரி எனக்குத் தெரியாது.'

பிறகு, யோவான் ஸ்நானனிடம் வந்தேன். 'யோவானே உமக்கு நிச்சயமாக தேவனின் விலாசம் தெரிந்திருக்க வேண்டும். ' என்று கேட்டேன்.

'ஆம், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டி இயேசு கிறிஸ்துவைப் பார். இவர் பரலோகப் பிதாவின் முகவரி? என்றார்.

ஆ. – – அற்புதம். கடவுளின் விலாசத்தைக் க பிடிக்கும் பயணத்தில் நான் இயேசுவைக் கண்டு கொண்டேன். இயேசுவில் நான் நிச்சயமாக கடவுளை காண முடியும். இயேசுவின் மூலம் தேவன் பேசினார். .. பேறான குமாரனாகிய அவர் மூலம் அற்புதங்களை செய்தார். எங்கெல்லாம்

இயேசு இருக்கிறாரோ அங்கெல்லாம் கடவுள் இருக்கிறார்.

தேவனின் விலாசத்தைக் கண்டு பிடித்ததினால் மகிழ்ந்தேன். ஆயினும் ஒரு பெரிய கேள்வி இயேசு மரித்து உயிர்த்தெழுந்து பரமேறிச் சென்று விட்டார். அவரது விலாசம் எது? மீண்டும் விசாரிக்கத் தொடங்கினேன். 'இயேசுவே, உமது முகவரி என்ன? உமது முகவரி எனக்குத் தெரியாததால் என் ஜனங்களுக்கு உமது இடம் பற்றி எனக்கு சொல்லத் தெரியவில்லை.

# தீர்வு

பதில் வந்தது, 'நான் மரித்து உயிர்த்தேன். பரிசுத்த ஆவி யானவரை என் சீஷர்களுக்கு அனுப்பியிருக்கிறேன். உங்களைத் திக்கற்றவர்களாக விடேன் என உனக்குச் சொல்லவில்லையா? நான் பிதாவை வேண்டிக் கொள்வேன். அவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவார். அன்றிலிருந்து பிதா என்னிலும் நான் அவரில் இருப்பதையும் நான் உங்களிலும், நீங்கள் என்னிலும் இருப்பதையும் அறிந்து கொள்வீர்கள் எனவும் சொல்லியிருக்கிறேன். '

பிற்பாடு பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுவும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக எனக்குள் வாசமாயிருக் கிறார்கள் என்பதைக் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்து கொண்டேன். கொரிந்தியருக்கான இரண்டாம் நிருபத்தில் நாம் வாசிக்கும்போது அவர் நம்மை முத்திரித்து பரிசுத்த ஆவியை நம்முடைய இருதயத்தில் ஊற்றியிருக்கிறார்.

இப்போது நான் தேவனின் முகவரியை கண்டு கொண்டேன். என்னுடைய முகவரியே தேவனின் முகவரி.

இதற்கு பிறகு நான் கிறிஸ்தவர்கள் மத்தியில் சென்று தைரியமாகப் பிரசங்கிக்க ஆரம்பித்தேன். தேவனுடைய இருப் பிடத்தை நாம் கண்டுகொள்ள முடியும். அவர் முகவரியை நான் கண்டுகொண்டேன். என்னுடை முகவரிதான் அவரது

முகவரி. அவர் எனக்குள் வல்லமையுடனும் அதிகாரத்துடனும் எனக்குள் வாசம் பண்ணுகிறார். பரிசுத்த ஆவியின் மூலமாக பிதாவாகிய தேவனும், குமாரனாகிய தேவனும் என்னில் வாசம் பண்ணுகிறார்கள். நான் போகும் இடமெல்லாம் அவர் என்னோடு வருகிறார். – அவர் உங்களுக்குள்ளும் வாழ்கிறார். உங்கள் முகவரிதான் அவரது முகவரி. நீங்கள் வீட்டில்

த ங்கி யி ரு க்கு ம்போ து அ வ ர் அ ங்கே யி ரு க்கி றா ர் . நீ ங்க ள் உ ங்க ள் வி யா பா ர ஸ்த ல த் தி லி ரு ந்தா ல் அ வ ர் அங்கேயிருக்கிறார். நீங்கள் சமைய லறையில் வேலை செய்து கொண்டிருந்தால் அவர் அங்கேயும் இருக்கிறார். நீங்கள் எங்கே இ ரு க்கி றீ ர்க ளோ உ ங்க ளோ டு அ வ ரு ம் அங்கே இருக்கிறார். அவர் உங்களுக்குள் வாசம் பண்ணுகிறபடியால் அவரது ஊற்றுக் கண் உங்களுக்குள் இருக்கிறது. ' என கிறிஸ்தவர்களிடம் சொன்னேன்.

வெள்ளியும், பொன்னும், அரிசியும், உணவும், துணியும் என்னிடத்தில் இல்லை. ஆனால் உங்களுக்கு கொடுக்கும் படியாக வேறொன்று என்னிடத்தில் உண்டு. தேவன் உங்களுக்குள் இருக்கிறார். யாரிடத்தில் தேவன் இல்லையோ அவர்கள் வந்து இயேசுகிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள். அவர் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவர், எல்லாம் அவருக்குள் இருக்கிறது. உங்கள் இருதயத்தில் அவர் வந்து தங்குவார். உங்கள் தேவைகளை யெல்லாம் அவர் சந்திப்பார் என்று பிரசங்கித்தேன். இந்த செய்தியை கேட்டவர்கள் விசுவாசத்தை கட்டத் தொடங் கினார்கள்.

இதுதான் என் ஊழியத்தின் துவக்கம். இந்த பிரசங்க வாழ்க்கைதான் எனது அஸ்திவாரம். இந்த அனுபவத்திற்கு முன்பாக நான் தேவனைக் கண்டு கொள்ள இங்குமங்குமாக அலைந்தேன். புகழ்பெற்ற சுவிசேஷகர் வரும்போது தேவனைக் கண்டு கொள்ள அவர்களது பிரசங்கத்தை கேட்கச் செல்வேன். மலைகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்கும் சென்றிருக்கிறேன். ஆனால் இந்த சத்தியத்தை அறிந்தபின் நான் எங்கும் அலைந்து திரியவில்லை. ஏனென்றால் நான் தேவனின் முகவரியையும் இருப்பிடத்தையும் கண்டு கொண்டேன்.

நான் என் ஜனங்களுக்கு இப்படிச் சொல்கிறேன் தேவன் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இல்லை , அவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு மட்டுமிருந்த தேவன் அல்ல. எதிர்காலத்திற்கான தேவன் மட்டுமல்ல. அவர் இப்போதும் சகல அதிகாரத்தோடும் வல்லமையோடும் சகல ஆசீர்வாதங்களோடும் உங்களுக்குள் இருக்கிறார். எனவே ஒவ்வொரு நாளும் அவரோடு பேசுங்கள். விசுவாசத் தினாலும், ஜெபத்தினாலும் அவரைத் தேடி அவர் தரும் பலனைப் பெறலாம். சப்தமிட்டு கூப்பிட்டாலும் அமைதியாய் அழைத்தாலும், தியானித்தாலும் அவர் நம்மைக் காண்கிறார்,

கேட்கிறார். அவர் உங்களுக்குள் வாசம் பண்ணுவதால் உங்கள் தேவைகளையெல்லாம் சந்திப்பார்’.

கொரிய யுத்தத்துக்குப் பிறகு, மிஷினரிகள் ஊழியத் திற்காக திரும்பிவந்த வேளையில் அதன் நிர்வாகக் குழுவின் கூட்டத்திற்கு செல்வதுண்டு. ஆலயங்களைக் கட்டுதல், வேத கலாசாலைகளை நிறுவுதல் இது போன்ற பல காரியங்களைப் பற்றி கொரிய நாட்டு ஊழியர்கள் ஆலோசித்தார்கள். பணப்பேச்சு ஏற்பட்டபோது, யாராவது வெளிநாட்டு மிஷினரிகள் இப்பொறுப்பை ஏற்கட்டும் என்றனர். மிஷனரி களை முதலீட்டாளர்களாகப் பயன்படுத்தினர்.

’ஏன் எப்போதும் மிஷினரிகளையே நாடுகிறீர்கள்? என்று கேட்டால், ஆண்டவர் இந்த மிஷினரிகள் மூலமாகத் தான் தருகிறார் எனச் சொல்வார்கள். வேதக் கல்லூரியில் நான் படிக்கும்போதே, தேவனையே என் தேவைகளுக்கு எதிர்பார்த்துப் பழகினேன். ஆண்டவர் எனக்குள் வாழ்கிறார், அவருக்குள் எனக்குத் தேவையான எல்லாம் இருக்கிறது எனக் கண்டு கொண்டேன். தேவனுடைய பொக்கிஷத்தை எப்படித் திறக்கவேண்டுமென எனக்குத் தெரியும். 30 ஆண்டுகளுக்கும்

மேலான என் ஊழியத்தில் என் தேவைக்காக வேறு யாரையும் சார்ந்திருந்ததில்லை

வெளிநாடுகளில் ஊழியம் செய்வதற்காக 40 தடவைக்கு மேல் பசிபிக் மகா சமுத்திரத்தை கடந்திருக்கிறேன். ஆனால் எந்த சபையிலும் 1 ரூபாய் கூட நான் கேட்டுப் பெற்றதில்லை . வெளிநாட்டிலிருந்து கொரியாவுக்கு வந்த மிஷினரிகளை வாழ்த்துகிறேன். ஆனால் வெளிநாட்டுச் சபைகளிலிருந்து நான் எதுவும் பெற்றதில்லை .

எல்லா நேரங்களிலும் தேவனையே சார்ந்திருக்கிறேன். சபை கூட்டுவது, மிஷனரிகளை மற்ற நாடுகளுக்கு அனுப்பு வது, வேதாகமக் கல்லூரியை நிறுவுவது, இப்படி சிறிதாயினும், பெரிதாயினும் எல்லாவற்றுக்கும் ஆண்டவர் தேவை களைச் சந்திக்கிறார்.

இப்புத்தகம் எழுதப்படுகிறபோது கொரியாவில் புதிய தொரு வேதாகமக் கல்லூரி கட்டப்பட்டது. அதற்கு எங்கள் சபையிலிருந்து மட்டும் 15 லட்சம் ரூபாய் பணத்தைக் கொடுத் தோம். தேவன் எங்கள் தேவைகளையெல்லாம் சந்தித்து வருகிறார்.

## சவால்

இன்று-- உங்கள் தேவை எதுவாயிருப்பினும் அதற்கான ஆதாரம் உங்களுக்குள்ளேயே இருக்கிறது என்கிற உண்மையை உங்கள் இதயத்தில் வைக்கும்படி விரும்புகிறேன். நாளைக்கல்ல, இன்றைக்கல்ல, இப்போதே உங்களுக்குள் இருக்கிறார். அவர் உறங்குவதில்லை. அவர் உங்களில் வந்து தங்கியிருக்கிறார் என்றால் ஏதோ ஒய்வாக உங்களில் அமர்ந்திருக்க வரவில்லை. உங்கள் இரட்சிப்புக்காக கிரியை செய்கிற தேவன் அங்கேதான் இருக்கிறார். உங்கள் சிந்தனை, தரிசனம்,

விசுவாசம் மூலமேயல்லாமல் தேவன் தானாகக் கிரியை செர் வதில்லை. நீங்களே அந்த வாய்க்கால்!

’தேவனே, அற்புதமாக இந்த அண்டசராசரம் முழுவதும் நீர் வல்லமையாய் கிரியை செய்யும்’ என்று நீங்கள் ஒருவேளை சொல்லக் கூடும். தேவன் என்ன பதில் சொல்வார். ’நான் என்னுடைய வல்லமையோடு உலகத்திற்கு வரமுடியாது. ஏனென்றால் நான் உன்னில்தானே வாசம் பண்ணுகிறேன். ஆகவே உன்னுடைய ஜீவியத்தின் மூலம் தான் நான் கிரியை செய்ய முடியும்’.

நீங்களே அந்த வாய்க்கால் . உங்களுக்கு எல்லாவித உத்தரவாதமும் உண்டு. நீங்கள் விசுவாசத்தை வளர்த்துக் கொண்டு அதன் மூலம் நீங்கள் தேவனோடு ஒத்துழைக்கா விட்டால் தேவன் கிரியை செய்ய முடியாது. நீங்கள் எந்த அளவு அவரை அனுமதிக்கிறீர்களோ அந்த அளவு கிரியை செய்கிறார்.

பாவிகள் உடைந்த இருதயத்தோடும், மக்கள் வேதனை களோடும் என்னிடம் வரும்போது, ’தேவன் உங்களுக்குள் இருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் மூலம் சகல நன்மைகளும் உங்களுக்கு உண்டு’ என்று சொல்லி, அவர்களது இதயத்தை தேவனோடு இணைக்கும்படி நான் கற்பிக்கறேன். அவர்கள் இருதயத்தை தேவனோடு இணைந்து செயல்பட நான் போதிக்கிறேன். புதிய விசுவாசம் பெற்று ஒவ்வொருவரும் அற்புதமாக புதிய ஜீவனைப் பெறுகிறார்கள்.

இந்த ஜனங்கள் ஏழைகளும் தரித்திரர்களுமாக இருந்தால் 1969க்கும் 1977க்கும் இடைப்பட்ட காலத்தில் 2 கோடி ரூபாய் பணத்தை எப்படி அவர்கள் ஆலயக்கட்டுமானப் பணிக்காக கொடுத்திருக்க இயலும். ஒவ்வொரு வருடமும் 20 லட்சம் ரூபாய்க்கு நாங்கள் திட்டமிடுகிறோம். தேவனுடைய

பொக்கிஷத்தை எப்படி திறப்பது என இவர்கள் தெரிந்து கொண்டதால் அவர்கள் இன்று செழிப்பாயிருக்கின்றனர். ஆனால் முதலாவது அவர்கள் மாமிசத்தின் பாவங்களிலிருந்து கழுவப்பட்டிருக்க வேண்டும்.

ஒரு கிறிஸ்தவன் தேவனோடு உற்சாகமாகச் செயல் படுவதற்கு முன்னால், ஜனங்களில் அநேகருக்கு ஏற்படுகிற மாமிசப் பிரகாரமான நான்கு பாவங்களை அவன் ஜெயித்திருக்க வேண்டும்.

## 1. பகை உணர்வு எனும் பாவம்

நாம் விவாதிக்கிற முதல் பாவமான பகை அல்லது வெறுப்பினால் பலர் துயர் அடைகின்றனர். உங்கள் உள்ளத்தில் பகை உணர்வு இருக்குமானால் தேவன் மூலம் வெளிப்பட இயலாது. பகையுணர்வு, மன்னிக்க இயலாத தன்மை, உங்களது விசுவாச வாழ்க்கையின் முதல் எதிரி.

மத்தேயு 6:14–15ல் 'மனிதர்கள் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னித்தால், பரமபிதா உங்கள் பாவங்களை மன்னிப்பார்; அவர்கள் குற்றங்களை மன்னியாதிருந்தால் உங்கள் குற்றங்களை பரமபிதா மன்னிக்க மாட்டார்' என வாசிக்கிறோம்.

வழக்கமாக ஞாயிறு காலையில் 4 ஆராதனைகளில் பிரசங்கிப்பதால் களைத்துப் போகிறேன். அப்போது என்னைப் பார்க்க யாரையும் அனுமதிப்பதில்லை. அப்படி யாரேனும் பார்க்க விரும்பினால் எனது காரியதரிசி மூலமாகத் தான் வரவேண்டும். அப்படி ஒருவர் என் அறைக்குள் அனுமதிக்கப்படுகிறார் என்றால் அவர் ஒரு பெரிய தேவையுடன் இருக்கிறார் என்று பொருள்.

ஒருநாள், நான்காவது ஆராதனைக்குப் பின்பு, ஒருவன் என் அலுவலக அறைக்கு வந்தான். மதுபானம் அருந்தியவனைப் போல தள்ளாடி வந்து உட்கார்ந்து, தன் பையிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்தான். காரியதரிசிகள் என்ன செய்கிறார்கள். ஏன் இதுபோன்ற ஆட்களை உள்ளே அனுப்புகிறார்கள் என நினைத்தேன்.

அவன் தன் பையிலிருந்து ஒரு சூரிக்கத்தியை எடுத்தான். நான் பயந்து போனேன். தாழ்ந்த குரலில் நான் அவனை நோக்கி, ’அந்தக் கத்தியை பயன்படுத்தாதே, எதற்காக வந்தாய் என்பதைச் சொல்“ என்றேன்.

’நான் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன். அதற்கு முன் என் மனைவி, மாமனார், மாமியார் மற்றும் சிலரைக் கொலை

செய்யப் போகிறேன். என்னுடைய நண்பன் ஒருவன், நீ இதைச் செய்வதற்கு முன் எங்கள் ஆலய ஆராதனைக்கு வா என்றான். அதன்படி 4வது ஆராதனைக்கு வந்தேன். நான் கவனமாகக் கேட்டேன். ஆனால் ஒரு வார்த்தை கூட எனக்கு விளங்கவில்லை. ஏனென்றால் நீர் பேசியது தெற்கத்தியர் பேசும் பாணியிலிருந்தது. உம் வார்த்தைகளை நான் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்போது நான் என் திட்டத்தை நிறைவேற்றப் போகிறேன். நான் காசநோய்க்காரன், நான் செத்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

அமைதியாய் இரு, உட்கார், உன் கதையைச் சொல் என்றேன்,

முதலாம் வியட்நாம் யுத்தத்தின் போது நான் புல்டோசர் ஒட்டுநராக இருந்ததால் அதிகமான பணம் சேர்க்க விரும்பி கடினமாக உழைத்தேன். பணத்தையெல்லாம் என் மனைவிக்கு அனுப்பிக் கொடுத்தேன். யுத்தம் ஒய்ந்தபோது நான் ஹாங்காங்கிலிருந்து சியோல் வருவதாகவும் என்னைப் பிள்ளைகளுடன் வந்து எதிர்பார் என என் மனைவிக்குத் தந்தி அனுப்பினேன். அவள் வரவில்லை . நான் வீட்டுக்குச் சென்றபோது வேறு யாரோ சிலர் அங்கிருந்தனர்.

அவள் என்னுடைய எல்லாப் பணத்தையும் எடுத்துக் கொண்டு வேறொருவனுடன் ஓடிவிட்டாள். நான் அவளிடம் போய், என்னிடம் வந்துவிடு என்றேன். வரமாட்டேன் என அடம்பிடிக்கிறாள்.

அவளது பெற்றோரிடம் சென்று கேட்டபோது, 40 டாலரை என்னிடம் கொடுத்து என்னை வெளியே தள்ளிக் கதவடைத்தார்கள். ஒருவாரத்திற்குள்ளாக அவள்மேல் எனக்கு வெறுப்பு உண்டாயிற்று. எனக்கு இரத்த வாந்தி வேறு வெளிப்பட்டது, காசநோய் என்னைக் கொல்லுகிறது. எனக்கு நம்பிக்கையேயில்லை. அவர்களை அழித்துவிட்டு என்னையும் மாய்த்துக் கொள்ளப் போகிறேன்' என்றாள்.

'நீங்கள் பழிவாங்க நினைப்பது சரியான முறையல்ல. நீங்கள் பூரண சுகம் பெற்று நல்லதொரு வேலையில் சேர்ந்து நல்லதொரு வீட்டில் வாழ்வதை அவர்கள் காணச் செய்வது தான் நேர்வழியில் செல்வதாகும். இப்படி நீங்கள் பழிவாங் கலாம். மற்றபடி அவர்களை கொன்றுவிட்டு உங்களை மாய்த்துக் கொள்வதால் லாபம் என்ன' என்றேன்.

'நான் அவர்களைப் பகைக்கிறேன்' என கத்தினான்.

அவர்களை எவ்வளவுக்கெவ்வளவு வெறுக்கிறீர்களோ அந்த அளவு உங்களையே நீங்கள் அழித்துக் கொள்கிறீர்கள், மற்றவர்களை வெறுப்பதால் உங்களை நீங்களே அழித்துக் கொள்கிறீர்கள்.

நீங்கள் ஏன் இயேசுவை முயற்சித்துப் பார்க்கக் கூடாது? இயேசு உங்கள் உள்ளத்தில் வரும் போது, தேவவல்லமை உங்களில் வந்து தங்கும். ஆண்டவர் உங்களைத் தொட்டு குணமாக்கி உங்களைப் புதுப்பிப்பார். உங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டி எழுப்பலாம். இதுதான் அவர்களை நீங்கள் பழிவாங்கும் வழி என்றேன்.

பிறகு அவரை ஜெபமலைக்கு அனுப்பினேன். அங்கே அவர் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டார். பின்பு, உங்கள் மனைவியை நீங்கள் மன்னிக்க வேண்டும். அவளை மன்னிக்க சிறந்த வழி, நீங்கள் அவர்களை ஆசீர்வதிப்பது தான். அவளது ஆவி ஆத்துமா சரீரத்தில் அவளை ஆசீர் வதியுங்கள். பரலோகத்தின் ஆசீர்வாத வாசலை தேவன் அவளுக்கு திறக்க வேண்டுமென ஜெபியுங்கள் என்றேன்.

’நான் அவளை சபிக்கவில்லை என்றாலும் என்னால் ஆசிர்வதிக்க முடியாது“ என்றார்.

’நீங்கள் ஆசீர்வதிக்காவிட்டால் நீங்கள் சுகமடைய மாட்டீர்கள். நீங்கள் ஆசீர்வதிக்கும் போது ஆசீர்வாதம் உங்களிடமிருந்து புறப்பட்டுப்போகிறது. அவளைக் காட்டிலும் நீங்கள் அதிகமாக ஆசீர்வதிக்கப்படுவீர்கள். நீங்கள் உங்கள் மனைவியை வெறுக்கும் போது சாபம் உங்கள் வாயிலிருந்து புறப்படுவதால் உங்களுக்கும் சாபம் வரும். கொரியாவில் .. பழமொழி உண்டு ’மற்றவர்கள் முகத்தில் சகதியை அ. விரும்பினால் நீங்கள் முதலில் உங்கள் கையை சகதியாக்கி கொள்ள வேண்டியிருக்கிறது. நீங்கள் ஆசீர்வதித்தார் நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். எனவே நீங்கள் போல் உங்கள் மனைவியை வாழ்த்துங்கள்’ என்றேன்.

முதலில் உட்கார்ந்து ஆசீர்வதிக்க தொடங்கினபோது பற்களைக் கடித்தார். பின்பு ஜெபித்தார். ’தேவனே, நான் என் – மனைவியை... ஆசீர்வதிக்கிறேன். நீர். –. ஆசீர்வாதியும். அவளை இரட்சியும். ஆண்டவரே. .. அவளை... ஆசீர்வதியும் இப்படி தொடர்ந்து ஆசீர்வதித்துக் கொண்டேயிருந்தார். ஒரு மாதத்திற்குள்ளாக காசநோய் முற்றிலும் நீங்கியது தேவ வல்லமை அவரை நிரப்பினதால் அவரது முகம் பிரகாசித்தது.

ஒரு மாதத்துக்குப்பின் உற்சாகத்துடன், போதகரே, கர்த்தருக்குள் நான் மகிழ்கிறேன். அவள் என்னை விட்டு விலகினதால் நான் இயேசுவை அறிந்து கொள்ள முடிந்தது. – அதற்காக என் மனைவியை வாழ்த்துகிறேன். அவருக்காக ஒவ்வொரு நாளும் ஜெபிக்கிறேன். எனது லைசென்ஸ் புதுப்பிக்கப்பட்டதால் எனக்கொரு வேலை கிடைத்திருக்கிறது. நான் என் மனைவி திரும்பி வருவதற்காக காத்திருக்கிறேன். நான் ஒரு வீட்டையும் ஆயத்தம் செய்திருக்கிறேன் என்றார்.

இந்த மனிதன் தேவனைத் துதித்தார். தேவ வல்லமையால் வாழ்வைத் திரும்பவும் கட்டி எழுப்பி ஆசீர் வதிக்கப்பட்டார். ஆவியிலும் சரீரத்திலும் சுகம் பெற்றவரானார். ஆவியானவர் அவரை நிரப்பினதால் அவரது முகம் பிரகாசித்தது.

பகையை உங்கள் உள்ளத்திலிருந்து எடுத்துப் போடா விட்டால் தேவனது தொடுதலை நீங்கள் அறியமுடியாது. நீங்கள் ஊழியத்துக்குச் செல்லும் போது ஜனங்கள் இதை உணரும்படி செய்யுங்கள்,

ஒரு நாள் ஒரு பள்ளி ஆசிரியை என்னிடத்தில் வந்தாள். அவள் பள்ளியில் முதல்வர். அவள் தீராத மூட்டுவலியால்

பீடிக்கப்பட்டிருந்தாள். அவளது வியாதியை எவரும் குணமாக்க இயலவில்லை . நான் அவள் தலை மேல் கை வைத்து ஜெபித்தேன். கடிந்து கொண்டேன், கத்தினேன். என்னால் இயன்யென்றதெல்லாம் செய்தேன், எதுவும் நடக்க எல்லை. தேவன் அவளைத் தொடவில்லை.

சபையில் அநேகர் சுகம் பெற்றார்கள். இவளோ சுகம் பெறவில்லை. அவள் நம்பிக்கையையும் இழந்து விட்டாள். நானும் அவளைக் கைவிட்டு விடவேண்டிய நிலை வருமோ எண்ணினேன். ஒரு நாள் நான் ஜெபித்தபோது, அவளுக்காக ஜெபிக்கவேண்டாம், அவள் தன் கணவனைக் கடுமையாய் வெறுக்கிறாள். நான் அவளுக்காக கிரியை செய்யமுடியாது' என்று பரிசுத்த ஆவியானவர் பேசினார்.

10 ஆண்டுகளுக்கு முன் அவள் தன் கணவனை விவாகரத்து செய்துவிட்டாள் என அறிந்து கொண்டேன். அனாலும், "சகோதரி உங்கள் கணவரை விவாகரத்து செய்துவிடுங்கள்" என்றேன்.

போதகரே, என்ன சொல்கிறீர்கள்? 10 ஆண்டுகளுக்கு முன்பே அவரை விவாகரத்து செய்துவிட்டேன்' என்றாள்.

’இல்லை, நீங்கள் அப்படிச் செய்யவில்லை ’ என்றேன். ’நான் விவாகரத்து செய்துவிட்டேனே ’ என்றாள். சட்டப்படி விவாகரத்து செய்திருந்தாலும் உங்கள் மனதிலிருந்து நீக்கவில்லையே. ஒவ்வொரு காலையிலும் அவரை நீங்கள் சபிக்கிறீர்கள் வெறுக்கிறீர்கள், உங்கள் மனதிலிருந்து அவரை நீங்கள் விட்டுவிடவில்லை . நீங்கள் அவரைப் பகைக்கிற இந்தச் செயல் உங்கள் எலும்புகளை உலரச் (ய்து அழித்துக் கொண்டிருக்கிறது. இதனிமித்தமே உங்கள் வியாதி குணமாக்கப்படவில்லை’ என்றேன்,

“ஆம், அவர் அப்படி என்னை கொடுமைப்படுத்தினார்.

எங்களுக்கு திருமணமானபோது அவருக்கு வேலையில்லை. என் வருமானத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு, என்னைக் குழப்பிவிட்டார். மேலும் என்னை விட்டுவிட்டு, வேறொரு பெண்ணுடன் ஓடிப்போய்விட்டார். நான் எப்படி அவரை நேசிக்க முடியும் ?’ என்றாள்.

’நேசிப்பதும், நேசிக்காமலிருப்பதும் உங்களைப் பொறுத்தது, நேசிக்காவிட்டால் உங்கள் வியாதி உங்களைக் கொல்லும். தேவ வல்லமையால் மட்டுமே இந்த வியாதி சுகமாகும். தேவ வல்லமை மேலேயிருந்து

பொத்தென்று விழுந்து உங்களை சுகமாக்கிவிடாது.

தேவன் உங்களுக்குள் இருக்கிறார். அவர் உங்களைக் குணமாக்க விரும்புவதை உங்கள் வெறுப்பினால் பகை , உணர்வால் நீங்களே தடை செய்கிறீர்கள். தயவு செய்து “ உங்கள் கணவரை வாழ்த்துங்கள். பகைவரை ஆசீர்வதித்து அவருக்கு நன்மை செய்யுங்கள். தேவன் உங்களைத் தொட்டு குணமாக்கும்படி உங்கள் கணவரை நேசிக்கப் பழகுங்கள் என்று சொல்லி முடித்தேன்.

’நான் அவரை நேசிக்க முடியாது. தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். அவரை நான் வெறுக்கத்தான் முடியுமேயல்லாமல் நேசிக்க முடியாது ’ என்று கத்தினாள்.

அவள் போராடினாள். அவளுக்காக நான் ஜெபித்தேன். அவள் கத்தினாள், பற்களைக் கடித்தாள். கொஞ்சம் கொஞ்ச மாக நேசிக்க ஆரம்பித்து, அவனை ஆசீர்வதிக்கவும் தேவன் அவனுக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் ஜெபிக்கத் தொடங்கினாள். தேவ வல்லமை புறப்பட்டது. அவள் தொடப் பட்டாள். கொஞ்ச நாட்களில் அவள் பூரண சுகம் பெற்றாள்.

தேவன் உங்களுக்குள் வாசம் பண்ணுகிறார். பிரதான எதிரியான பகை, வெறுப்பு இவைகளிலிருந்து நீங்கள் விடுதலை பெறாவிட்டால், தேவ வல்லமை உங்கள் மூலமாய் பாய்ந்து செல்லமுடியாது.

## பயம் எனும் பாவம்.

அநேகர் பயத்துடன் வாழ்கின்றனர். இந்த பயத்திலிருந்து ஜனங்களை நாம் விடுவிக்க வேண்டும். இது கிறிஸ்தவர் களாகிய நமது பொறுப்பு.

எனக்கு காசநோய் எப்படி வந்ததென்றால், நான் எப்போதும் 'எனக்கு காசநோய் வந்து விடுமோ' என்ற பயத்திலிருந்தேன். நான் உயர்நிலைப்பள்ளியில் மாணவனாக சமயத்தில் ஒரு பாட்டிலில் எலும்புகளும் குடல்களும் எரிசாராயத்தில் வைக்கப்பட்டிருந்ததை காண நேர்ந்தது. அந்த காட்சி என்னை பீதியடையச் செய்தது.

நாள் உடற்கூறு ஆசிரியர் : காசநோய் பற்றி கற்றுக் கொடுத்தார். 'உங்களுக்கு காசநோய் ஏற்படுமானால் தங்களது எலும்புகளும் குடல்களும் இந்த பாட்டிலில் இருப்பது போல் தான் ஆகும். 'என்று அந்த பாட்டிலை சுட்டிக்காட்டி காசநோயின் பயங்கரத்தை குறித்து பேசினார். அந்தக் மத்தில்

காசநோயை குணமாக்கும் அற்புதமான மருந்துகள் இல்லை. மேலும் சிலருக்கு பிறப்பிலேயே காசநோய் வரு வதற்கான கூர் உண்டு. ஒடுக்கமான தோளும் நீண்ட கழுத்தும் உள்ளவர்களுக்கு காசநோய் வர வாய்ப்பு உண்டு’ என்று

அந்த ஆசிரியர் சொன்னார்.

எல்லா மாணவர்களும் தங்களது கழுத்தை கொக்கு போல் நீட்டிப்பார்த்து, அவர்கள் கழுத்து எப்படி இருக்கிறது என்று பார்த்தார்கள். நானும் அவ்விதமே செய்து பார்த்தேன். வகுப்பிலுள்ள எல்லோரையும் பார்க்கிலும் எனக்கு நீண்ட கழுத்து இருப்பதை உணர்ந்தேன். அப்போதே எனக்கு காச நோய் வரும் என்ற உணர்வு ஏற்பட்டுவிட்டது பயம் என்னை ஆட்கொண்டது. நான் என் அறைக்கு வந்து கண்ணாடி முன்னால் நின்று என்னை நானே பார்த்தேன். எனக்கு பயம் மேலும் அதிகரித்தது. நான் பயத்திலேயே வாழ்ந்தேன்.

விருப்பம் விருப்பத்தையே ஈர்த்துக் கொள்வது போல “னுடைய 18 வது வயதில் நான் காசநோயால் பீடிக்கப்பட்டேன்.

பயம் உங்களுக்கு இருந்தால், சாத்தான் அதைக் கருவியாகப் பயன்படுத்தி

உங்களுக்குள் நுழைவான். பயம் என்பது விசுவாசத்துக்கு எதிரி. எனக்கு இரத்த வாந்தி வந்த போது 'நான் எதிர்பார்த்தது தான் ' என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

கொரியாவில் அநேகர் பழக்கதோஷத்தினால் சாகி றார்கள் என மருத்துவர் கூறுவதாக மருத்துவப் பத்திரிகையில் படித்தேன். அதாவது, ஒருவர் 50 வயதில் மாரடைப்பால் சாகிறார் என்று வைத்துக் கொள்வோம். இவரது மகனும் தனது 50 வயதில் மாரடைப்பு வந்து சாகிறார் என்றால், பேரன் தனக்கு 50 வயதாகும் போது சாவோம் என்ற பயத்திலேயே வாழ்கிறான் என்கிறார்கள்.

இந்த மூன்றாம் தலைமுறையான பேரன், 50 வயது நெருங்கும் போது, பயத்துடன் அந்த நோயை எதிர்பார்க் கிறார். பயமானது அவரது சரீரத்தில் கிரியை செய்வதால் திடீரென ஒரு நாள் மாரடைப்பு வந்து சாகிறார்.

புற்று நோய் வருமோ என்ற பயத்திலேயே பல பெண்கள் சாகிறார்கள். என் அத்தையும் என் அம்மாவும் புற்று நோயால் இறந்தார்கள். நானும் புற்று நோயால் சாவேன் என சிலர் சொல்கிறார்கள்.

இந்த பெண்ணுக்கு ஏதேனும் வலி ஏற்பட்டால், உடனே, அது புற்று நோயாக

இருக்குமோ என்கிற பயம் ஏற்படுகிறது. ஒவ்வொரு நாளும் அவள் அந்த நோய் வரும் என காத்திருக் கிறாள். அதுபோலவே சம்பவிக்கிறது.

1969ல் எனது இரண்டாவது சபையில் நான் ஊழியம் செய்தபோது 10000 முதல் 12000 பேர் வரை இருந்தனர். எனக்கு மிகுந்த சந்தோஷம். நல்ல குடும்பம், வீடு, மனைவி, மக்கள், நல்ல கார், வசதி வாய்ப்புக்கள் எல்லாம் இருந்ததால் நான் ஆண்டவரைப் பார்த்து, 'ஆண்டவரே எல்லாம் வசதியாக இருக்கிறது. எனக்கு முதுமையாகும் வரை இங்கேயே இருந்துவிடுகிறேன்' என்றேன்.

தேவனுடைய முகவரி

என், "சோ

ஒரு நாள் என் அலுவலகத்தில் நான் ஜெபித்துக் கொண்டிருந்தபோது 'சோ, இங்கே உன் ஊழியக்காலம் முடிகிறது. அடுத்த இடத்துக்குச் செல்ல ஆயத்தப்படு' என ஆண்டவர் சொன்னார்.

'ஆண்டவரே, நான் ஏற்கனவே ஓரிடத்தில் ஊழியம் செய்தேன். இங்கே கொண்டு வந்தீர். இப்போது வேறொரு இடத்துக்குப் போகச் சொல்கிறீர் நான் ஏன் நான் போக

வேண்டும்? வேறுயாரையாகிலும் அனுப்பும் என்று ஆண்டவரோடு வழக்காடினேன்.

தேவன் என்னை விட்டுவிடவில்லை , 'நீ புறப்பட்டுப் போய் 10000 பேர் அமரக்கூடிய சபையைக் கட்டு. அங்கிருந்து 500 மிஷினரிகள் அனுப்பப்படுவார்கள்" என்றார்.

ஆண்டவரே, நான் அதைச் செய்யமுடியாது" என்றேன். இல்லை, நீ போயே தீர வேண்டும் என்று கட்டளை யிட்டார்.

இது உமது கட்டளை என்றால் நான் போகிறேன்' என்று சொல்லி ஆயத்தமானேன். நான் ஏற்கனவே விவரித்தபடி 10000 பேர் கொண்ட ஆலயத்தை கட்ட ஆண்டவர் கிருபை தந்தார்.

தேவன் கிரியை செய்தபோது, என்னில் பயம் இல்லை. உங்கள் சூழ்நிலைகளை மட்டும் நீங்கள் நோக்கிக் கொண்டி ருந்தால், உங்கள் உணர்வுகள் மூலமாகவே சாத்தான் உங்களுக்கு பயத்தைக் கொண்டுவந்து உங்களை அழித்து விடுவான். ஆனால் கண்களை மூடி கர்த்தரை நோக்கிப் பார்த்தால் விசுவாசிப்பீர்கள்.

உணர்ச்சிபூர்வமான அறிவு, வெளிப்படுத்தப்பட்ட அறிவு சென இரண்டு வகை உண்டு. ஆவிக்குரியவர்களாகிய நாம்

ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல்வரை காணப்படுகிற வெளிப்படுத்தப்பட்ட அறிவின்படி வாழ வேண்டும்.

ஜனங்கள் பயத்தையும், பயத்தை உண்டாக்கும் சூழ்நிலையும் விட்டுவிடும்படி போதிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் தேவன் அவர்கள் மூலம் வெளிப்பட இயலாது. அவர்களது பயத்தை ஆண்டவரிடத்தில் கொண்டு வந்து வைத்து விடும்படி சொல்லுங்கள். அவர்கள் தேவை வார்த்தையின்மேல் விசுவாசம் கொள்ளட்டும்.

3. சுயதாழ்ச்சியாகிய பாவம் (தாழ்வு மனப்பான்மையாகிய பாவம்)

அநேகர் இந்த தாழ்வு மனப்பான்மையாகிய பாவத்தில் வாழ்வதால் விரக்தியடைந்துவிடுகிறார்கள். இது நாம் கவனிக்கும் மூன்றாவது பாவம்.

எளியவர்களும் வறியவர்களுமாகிய பலர் தாங்கள் தாழ்ந்த நிலையில் இருப்பதாக நினைத்துக் கொள்கிறார்கள். எனவே, தங்களது தொழிலில் அவர்கள் தோற்றுவிடுகிறார்கள். தோற்றுவிடுவோம் என்கிற எண்ணம் அவர்களில் இருப்பதே அதற்கு காரணம். இப்படிப்பட்ட மனநிலையில் இருக்கும் அவர்கள் அதிலேயே

நிலைத்திருக்கும்வரை அவர்களுக்கு நாம் உதவி செய்ய இயலாது. தாழ்வு மனப் பான்மையை விட்டுவிட்டு, தேவனுடைய அன்பினால் மீண்டும் தங்களைத் தட்டி எழுப்பும்படி இவர்களுக்கு புத்தி சொல்ல வேண்டும்.

ஒரு நாள், ஒரு தொடக்கப்பள்ளி மாணவன் தன் தம்பியைக் கத்தியினால் குத்தி கொன்றுவிட்டான். இதற்கு காரணம் உண்டு. பெற்றோர் மூத்தவன் முன்னிலையில் இளையவனை அதிகமாய் நேசிப்பதும் அவனைப் பாராட்டு வதுமாக இருந்ததால், இதைக் கண்ட மூத்தவன் தனக்குள் புழுங்கினான். ஒரு நாள் பெற்றோர் வெளியே சென்றிருந்த போது, மூத்தவன் இளையவனைக் குத்திக் கொன்றான்.

தாழ்வுமனப்பான்மை என்பது அழிவைக் கொண்டுவரும் ஒரு தீய சக்தி

ஆரம்ப நாட்களில் இந்த சுபாவம் என்னில் இருந்தது. முதல் 2 ஆண்டுகளில் என் சபை நன்றாக வளர்ந்தது. அநேகர் வந்து சுகம் பெற்றார்கள். அது ஒரு பெந்தே கொஸ்தே சபை. ஒரு நாள், ஸ்தாபனத்தின் நிர்வாக குழுத் தலைவர் என்னை அழைத்து 'நீ உண்மையாகவே வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கிறாயா? ஜனங்கள் ஆவியில்

நிறைந்து அந்நிய பாஷை பேசுகிறார்களா? என்று கேட்டார்.

“ஆம்’ என்றேன்.

நீ மார்க்க வெறி பிடித்தவன்’ என்றனர்.

“இல்லை, நான் வேதாகமத்தின் போதனைகளின்படியே செய்கிறேன்’ என்றேன்.

தீவிர ஆலோசனை செய்தபின் எனது ஊழிய அனுமதியை இரத்து செய்துவிட்டு, என்னை அனுப்பி விட்டார்கள். எனது ஸ்தாபனம் என்னை துரத்தியது. அதற்குப் மிஷனரி ஹர்ஸ்டன் வந்த பிறகு மீண்டும் என்னை சேர்த்துக் கொண்டனர். பிற்காலத்தில் நான் கொரியாவில் அந்த ஸ்தாபனத்திற்கு பொது மேலதிகாரியாக வருவேன் என்பது இவர்களுக்கு தெரியாதிருந்தது. மேலதிகாரியாகும் போது. 2000 மட்டும் இருந்தனர். விசுவாச விதிமுறைகளையும் அதன் போதனைகளையும் பயன்படுத்திய பிறகு வளர்ச்சியைக் கண்டோம்.

நான் அந்த ஸ்தாபனத்திலிருந்து ராஜினாமா செய்த போது சுமார் 300 சபைகளில் 2,00,000 பேர் இருந்தனர்.

என்னை அவர்கள் முன்னொரு சமயம் வெளியேற்றிய , போது தாழ்வு மனப்பான்மையால் தாக்கப்பட்டேன். அது என்னை அழித்துவிடத்தக்க அளவு பயங்கரமாக என்னில் கிரியை செய்தது. அந்த சூழ்நிலையில் நான் மிகவும் போராடி னேன். ஆனால் கிருபையால் ஜெயம் பெற்றேன்.

இப்படிப்பட்ட உணர்வுகளால் பாதிக்கப்பட்டவர்களுடன் நாம் தொடர்பு கொண்டு இப்படிப்பட்ட அழுத்தம் மற்றும் சோர்விலிருந்து அவர்களை வெளியே கொண்டு வர வேண்டும். கர்த்தரை நம்புகிறவனால் எல்லாம் கூடும் என்று அவர்களுக்கும் போதித்து, கிறிஸ்துவின் அன்பினிமித்தம் சுவாசத்தை அவர்களுக்குள் ஊன்ற வேண்டும். நாம் அந்தவிதமான தாழ்வு மனப்பான்மையிலிருந்து அவர்களை வெளியே கொண்டுவர ஜெபித்து போதுமான பயிற்சியையும் அவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

ஞாயிறன்று 2ம் ஆராதனையின்போது, மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவனை கைகால்களைக் கட்டிக் கொண்டு வந்தார்கள். அந்த நாளில் எங்களது ஆலயப் பணியின் 50வது கட்டிடப்பணிக்காக அறைகூவல் கொடுத்தபோது, அதன் தேவையைச்

சந்திப்பதற்குப் பலர் வாக்குப் பண்ணினார்கள். இந்த மனிதனும் 100 டாலர் கொடுப்பதாக வாக்குப் பண்ணினார்.

அந்த மனிதரின் மனைவி, எங்கள் சபை மூப்பர் ஒருவரைப் பார்த்து 'இவரை நம்பாதீர்கள், இவர் புத்தி சுயாதீனமற்றவர்' என்றாள்.

ஆராதனைக்குப் பின் நான் அவரைப் பார்த்தபோது அவர் பரிசுத்த ஆவியானவரால் முற்றிலும் குணமாக்கப் பட்டவராய் இருந்தார். அவர் மனநிலை அவருக்கு திரும்பி வந்தது. தாழ்வு மனப்பான்மையினிமித்தம் இவர் இப்படி மாறிப் போயிருந்தார்.

"எனக்கொரு உரக் கம்பெனி இருந்தது. வியாபாரம் குறைந்து மிகுந்த கடனுக்குள்ளானேன். மிகுந்த கவலையில் என் மனநிலை பாதிக்கப்பட்டது. என்னை எடுத்துச் சென்று மின் அதிர்ச்சி முறையில் மருத்துவம் செய்தும் பலன் இல்லை. ஆனால் இங்கே வந்து நாற்காலியில் அமர்ந்து உமது வார்த்தைகளைக் கவனித்துக் கொண்டிருக்கும்போதே என் மனநிலை சரியாகி, என் வியாதி என்னை விட்டு நீங்கினதாக உணர்ந்தேன். நண்பர்களையும், புகழையும், ஏன் என்னையே கூட

இழந்துவிட்டேன் என்னால் எதுவும் செய்ய முடியாது’ என்றார்.

“உங்களால் எல்லாம் கூடும். நீங்கள் இயேசுவிடம் வந்திருக்கிறீர்கள். பூரண ஆசீர்வாதத்துடனே உங்களுக்குள் தங்கியிருக்கிறார். நீங்கள் தேவனால் பயன்படுத்தப்படப் போகிறீர்கள். நீங்கள் எதுவும் செய்ய இயலாதவர் அல்ல, நீங்கள் தேவனுடைய மனிதன். தைரியமாய் எழும்புங்கள். உங்களுக்குள் வல்லமையும் ஆசீர்வாதமும் தங்கியிருக்கிறது’ என்றேன்.

“நான் எவ்விதம் பணியைச் செய்யப் போகிறேன்?“ என்றார்.

“எனக்குத் தெரியாது. ஆனால் தொடர்ந்து வேதாகமத்தைப் படித்து ஜெபியுங்கள்” என சொல்லியனுப்பினேன்.

இதே ஆள் ஒரு நாள் உற்சாகத்துடன் திரும்பி வந்து, “நீங்கள் உலகத்துக்கு உப்பாயிருக்கிறீர்கள் என்ற வசனத்தைப் படித்தேன். நான் உப்பு வியாபாரம் செய்யலாம் என்றிருக்கிறேன், – என்ன நினைக்கிறீர்கள்?’ எனக் கேட்டார்.

“நீங்கள்அப்படி நம்பினால் தாராளமாகச் செய்யுங்கள்” என்றேன்.

புறப்பட்டுப் போய் சிறிய அளவில் அந்த வியாபாரத்தைச் செய்து தசமபாகத்தை செலுத்தி, ஆண்டவருக்குள் சந்தோஷமாக இருந்தார். தேவன் அவரை ஆசீர்வதிக்கத் தொடங்கி பெரிய அளவில் வியாபாரம் உயர்ந்துள்ளது. கடலோரத்தில் கிட்டங்கியை ஆயத்தப்படுத்தி அங்கே 50000 டாலர் மதிப்புள்ள உப்பு மூடைகள் வைத்திருந்தார்.

ஒருநாள் திடீரென கடும் மழை வந்து போது பெரு வெள்ளம் வந்தது. நான் பயந்து, வேகமாக நேரே அவரது உப்புக்கிடங்கிப் போய் பார்த்தபோது, அந்தோ ! அந்த மூடைகளெல்லாம் தண்ணீரில் கரைந்து போயிருக்கக் கண்டேன்.

இப்போது அவர் என் சபையில் மூப்பராய் இருக்கிறார். அந்த உப்புக் கிடங்கில் அவர் அதன் நடுவில் உட்கார்ந்து தேவனைப் பாடித் துதித்துக் கொண்டிருந்தார். அவர் நல்ல மனநிலையில்தான் இருக்கிறாரா? எனக்கு சந்தேகம் வந்துவிடவே, அவரிடம், “நீங்கள் நன்றாயிருக்கிறீர்களா? அல்லது - - - ? பித்துப்பிடித்துவிட்டதா?” எனக் கேட்டேன்.

“போதகரே, நான் நானேதான். நான் பித்துப் பிடிததவனல்ல. கவலைப்பட வேண்டாம். எல்லாவற்றையும் இழந்து விட்டேன். ஆனால்

நீங்கள் அடிக்கடி எனக்குச் சொன்னவிதமாக எனக்குள் பெரிய பொக்கிஷம் இருக்கிறது.

வெள்ளம் உப்பை வேண்டுமானால் அடித்துச் சென்றிருக்கலாம். ஆனால் எனக்குள் வாசம் பண்ணுகிற ஆவியானவரின் பிரசன்னமாகிய பொக்கிஷத்தை அது கொண்டு செல்ல முடியாது. விசுவாசத்தினாலும் ஜெபத்தினாலும் நான் அந்த பொக்கிஷத்தை திறந்துவிடுவேன். கொஞ்சம் அவகாசம் கொடுங்கள் மீண்டும் என் தொழிலை நிலைநிறுத்துகிறேன்" என்றார்.

அவர் அதன்பின் தாழ்வுமனப்பான்மையுடன் வாழந்ததில்லை. திட நம்பிக்கையுடன் இருக்கிறார். இப்போது பெரும் கோடீஸ்வரர் ஆவார். இப்போது லாஸ் ஏஞ்சலஸ், வான்கூவர், நியூயார்க் ஆகிய இடங்களுக்கு ஊழியத்திற்காக என்னுடன் வந்தார். சமீபத்தில் ஐரோப்பாவிற்கு சென்று வந்தார்.

தாழ்வு மனப்பான்மையால் பாதிக்கப்பட்டவர்களை, "தேவனுடைய ஆசீர்வாதங்களும் வாய்ப்புகளும் உங்களிலேயே இருக்கிறது. அதை நீங்கள் உயபோகிப்பது உங்கள் பொறுப்பில் தான் இருக்கிறது என்பதை வலியுறுத்தி சொல்கிறதினால் அவர்கள் அப்படிப்பட்ட மனப்பான்மையிலிருந்து விடுபட அது

ஏதுவாக இருக்கிறது. அதற்கு இவரே சிறந்த உதாரணம்.

## 4. குற்ற உணர்வாகிய பாவம்

தேவனுக்காக கிரியை செய்யக்கூடாதபடி நம்மைத் தடுக்கும் மற்றொரு பாவம் குற்ற உணர்வு. குற்ற உணர்வுடன் வாழும் மனிதர்கள் மூலமாகவும் தேவ வல்லமை செயல் படமுடியாது. குற்ற உணர்வில் சிக்கியவர்களை அதிலிருந்து வெளியே கொண்டுவர வேண்டும். நீங்கள் தகுதியற்றவர்களாக இருந்தாலும், குற்றமுடையவர்களாக இருந்தாலும் அப்படியே இயேசுவிடம் வந்தால் போதும், அவர் உங்களைக் கழுவி சுத்தமாக்குவார் என ஆலோசனை சொல்ல வேண்டும்.

ஒருநாள் அழகான தம்பதிகள் என் அறைக்குள் வந்தனர். அவர்களிருவரும் மிகவும் அழகாயிருந்தனர். அவரது மனைவி 30 வயதைத்தான் தாண்டியிருப்பாள். அவள் மிக அழகாக இருந்தாலும், கண் இமையைக்கூட மூட சிரமப்படும் அளவுக்கு மிக இளைத்துப் போயிருந்தாள். .

போதகரே நான் என் மனைவிக்காக மனோதத்துவ முறையிலும் சத்துவசாஸ்திர முறையிலும் மருத்துவ முறையிலும் என்னால்

இயன்ற மட்டும் சிகிச்சை செய்து பார்த்துவிட்டேன் ஒன்றும் முடியவில்லை . நான் வசதியாய் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்தும் பயனில்லை. மருத்துவர்களும் நம்பிக்கை இழந்து விட்டனர். நீங்கள் அநேகருக்கு உதவி செய்து அவர்கள் சுகம் பெற்றிருப்பதாக கேள்விப்பட்டு இங்கே வந்தேன். நீங்கள் உதவி செய்ய வெண்டும் என்றார். அது உண்மைதான் சொல்லிக்கொண்டே அவளைப் பார்த்தேன். அவளுடைய உடனடித்தேவை என்ன என்பதை கவனித்தேன், ஆண்டவரே, இங்கே வந்த இவளுக்கு நான் என்ன செய்ய வேண்டும்?' என அமைதியாக ஜெபித்தேன்.

மனநிலை பாதிப்பினால் இவளுக்கு இப்படி நேர்ந்திருக்கிறது. இவளுக்கு வியாதியில்லை. மனநோய்தான் என தேவனுடைய தெளிவான மெல்லிய சத்தத்தை அப்போது தானே கேட்டேன். அவளது கணவரை சிறிது வெளியே போகச் சொல்லிவிட்டு 'நீங்கள் வாழவிரும்ப கிறீர்களா? நீங்கள் உங்கள் கணவருக்காகவும் உங்களது 3 பிள்ளைகளுக்குமாவது வாழ்ந்துதான் ஆக வேண்டும். நீங்கள் மரித்துப் போனால் இந்த முழுக் குடும்பமும் குழப்பத்துக் குள்ளாகிவிடும். ஆகவே நீங்கள்

வாழ்ந்துதான் ஆக வேண்டும், நன்றாக சிந்தித்துச் சொல்லுங்கள் என்றேன்.

’நான் வாழத்தான் விரும்புகிறேன்“

’அப்படியானால் நான் ஒரு நிபந்தனையில்தான் உங்களுக்கு உதவி செய்ய முடியும். நீங்கள் மனம் திறந்து உங்கள் கடந்தகால வாழ்க்கைப் பற்றி என்னிடம் சொல்ல வேண்டும்.

அவள் நேரே நிமிர்ந்து உட்கார்ந்து, கோபத்துடன் கண்களை உருட்டிப் பார்த்து, ’நான் காவல் நிலையத்திலா இருக்கிறேன்? நீர் ஒரு சர்வாதிகாரியா? ஏன் இப்படிக் கேட்கிறீர்? கேள்வி கேட்கத் தேவையில்லை. நான் என் பழைய வாழ்க்கைப் பற்றி எதுவும் சொல்லப் போவதில்லை“ என்றாள்.

நீ இப்படி சொன்னால் நான் எப்படி உனக்கு உதவ முடியும்? கடந்த காலம் பற்றி நீ சொல்லாவிட்டால் நான் ஜெபித்தே தெரிந்து கொண்டுவிடுவேன்’ என்றேன்.

அவள் பயந்துபோய், தன் கைக்குட்டையால் தன் வாயை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தாள். மிகுந்த வெட்கத்துக்கு நடுவே “நான் என் கடந்த காலத்தைப் பற்றி சொல்கிறேன். ஆனால் அது என் பிரச்சினை என்று நினைக்கவில்லை“ என்றாள். “இல்லை.

அதுதான் பிரச்சினைக்கே காரணம்" என்று அழுத்தமாக சொன்னேன். பிறகு அவள் சொல்லத் துவங்கினாள்.

என் சிறுவயதில் என் பெற்றோரை நான் இழந்ததால் என் மூத்த சகோதரி எனக்குத் தாயாகவும் அவளது கணவர் எனக்கு தகப்பனாகவும் இருந்து வளர்த்தார்கள். கல்லூரி வரை படித்தேன். நான் மூன்றாம் ஆண்டு கல்லூரியில் படித்தபோது, என் அக்கா பிரசவத்திற்காக மருத்துவமனைக்குச் சென்றி ருந்தாள். நான் வீட்டுக்காரியங்களை கவனித்து வந்தேன். நானும் அக்கா கணவரும் ஒருவரை ஒருவர் சாதாரணமாகவே நேசித்தோம்.

ஆனால் அந்தச் சூழ்நிலையில் தவறிவிட்டோம். தவறான உறவுகள் ஏற்பட்டது. அந்த குற்ற உணர்வு என்னை உறுத்தியது. அந்த வேளையிலிருந்து குற்ற உணர்வினால் வேதனைப்பட்டு செத்துக் கொண்டிருக்கிறேன்,

என் கல்லூரிப் படிப்பு முடிந்ததும், எனக்கொரு வேலை கிடைத்தது. இப்போது என் கணவராய் இருக்கிற இவர் என்னை திருமணம் செய்ய கேட்டார். எனது கடந்த கால வாழ்க்கையைப் பற்றி அவர் எதுவும் கேட்கவில்லை. நான் எற்றுக்கொண்டு, என்

அக்காவீட்டை விட்டு வெளியேறி இவரைத் திருமணம் செய்து கொண்டேன். இவர் சொந்தத் தொழில் செய்கிறார். நல்லவீடு, பணம், வாழ்க்கை எல்லாம் இருக்கிறது.

ஆனால் அந்த குற்ற உணர்வு என்னை வாட்டுகிறது. என கணவர் என்னிடம் அன்புடன் நெருங்கிவரும்போது, இந்த களங்கமில்லாத அன்பை ஏற்றுக் கொள்ள எனக்கு எந்தவிதத் தகுதியும் இல்லை , நான் ஒரு குற்றவாளி என இதயம் எனக்குள் உடைந்து நொறுங்குகிறது. என் பிள்ளைகள் அன்புடன் என்னைச் சுற்றிவந்து 'அம்மா' என்று அழைக்கும் போது உன்னை நானே வெறுக்கிறேன். நான் துணிகரமான பாவி என்பது எனக்குத் தெரியும். கண்ணாடியால் என் முகத்தைப் பார்க்கக்கூட வெட்கமாக இருக்கிறது. இதனால் நான் சந்தோஷமாக வாழமுடியவில்லை. விரக்தி நிலையில் மகிழ்ச்சியற்று வாழ்கிறேன்' எனத் தன் நீண்ட கதையைச் சொல்லிமுடித்தாள்.

உனக்கொரு நற்செய்தியை வைத்திருக்கிறேன். நீயே உன்னை மன்னிக்கவேண்டும். இயேசு கிறிஸ்து உனக்காகவும் உன் பாவங்களுக்காகவும் சிலுவையில் மரித்தார்" என்றேன்.

இயேசு கூட என் பாவத்தை மன்னிக்க முடியாது. என் பாவங்கள் மன்னிக்கக்கூடாத அளவு கொடியவை. யாரையும் – சித்துவிடலாம், என்னை மன்னிக்க முடியாது. என் சோதரியை நான் வஞ்சித்தேன். நான் செய்ததை அவளிடம் சொல்லி மன்னிப்பு கேட்கமுடியாது. அப்படி கேட்டால் அவளது குடும்ப வாழ்க்கை உடைந்து நொறுங்கிவிடும்.

ஆண்டவரே இவளுக்கு நான் எப்படி உதவ முடியும். எனக்குச் சொல்லித் தாரும் ' என எனக்குள் ஜெபித்தேன். அமர்ந்த மெல்லிய சப்தத்தில் எனக்கு வழி கிடைத்தது.

உன் கண்களை மூடு. நான் செய்வதை நீ கற்பனையில் கொண்டு வா. ஓர் அழகான அமைதியான ஏரிக்கரையில் இருக்கிறோம். அந்த இடத்தில் நிறைய கூழாங்கற்கள் கிடக்கின்றன. நான் ஒரு சிறு கூழாங்கல்லை எடுத்துக் கொள்கிறேன். நீ ஒரு பெரிய பாறாங்கல்லை எடுத்துக் கொள். நாம் அந்த கூழாங்கல்லையும் பெரிய பாறாங்கல்லையும் இந்த ஏரியில் எறிந்து விடுவோம். 'நான் முதலில் எறிகிறேன்'. என்னிடமிருந்த கூழாங்கல்லை ஏரியில் எறிந்தேன். “கூழாங்கல் விழுந்த சப்தத்தை கேட்டாயா?' 'சிற்றலையை கவனித்தாயா, என்னிடமிருந்த கூழாங்கல் எங்கே?. 'அது ஏரியின் ஆழத்தில்

மூழ்கி விட்டது' என்று சொன்னாள். இப்போது நீங்கள் அந்த பெரிய பாறாங்கல்லை ஏரியில் எறிந்தாயிற்று. நல்லது இப்போது அது எறியப்பட்டபோது சாதாரண சத்தமா இருந்தது?"

'இல்லை பெரிய சத்தத்தையும் அலையையும் ஏற்படுத்தியது"

'அந்தப் பெரிய கல் இப்போது எங்கே?"

அதுவும் ஆழத்தில் மூழ்கிவிட்டது' என்று பதில் சொன்னாள்.

'நல்லது. அதாவது நாம் எறிந்துவிட்டபோது ஒரு கூழாங்கல்லும், ஒரு பாறாங்கல்லும் கூட இந்த ஏரிக்குள் மூழ்கி மறைந்து விடுகிறது. கூழாங்கல்லும் பாறாங்கல்லும் ஏரியில் எறியப்பட்டுவிட்டன.

கூழாங்கல் எறியப்பட்ட போது சிறுசப்தம் கேட்டது. சிறிய அலைகள் தோன்றின பாறாங்கல் தள்ளப்ப்பட்டபோது பெரும் சப்தம் பெரும் அலைகள் தோன்றின. இதுதான் வித்தியாசம். சிறிய பாவத்தைச் செய்தவர்களானாலும் பெரிய பாவத்தை செய்தவர்களானாலும், இயேசு கிறிஸ்துவிடம் வரா விட்டால் நரகத்துக்குச் செல்வார்கள். வித்தியாசம் என்ன? ஒவ்வொருவருக்கும் இயேசுகிறிஸ்துவின் பாவமன்னிப்பு தேவை.

பெரியதோ, சிறியதோ இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவங்களையும் கழுவிச் சுத்தமாக்கும்.

இந்த வார்த்தைகள் அவளது ஆத்துமாவைத் தொட்டன. அவள் சத்தியத்தை விளங்கிக் கொண்டாள். ’அப்படியானால் என்பாவங்களைக் கடவுள் மன்னிப்பார் என்கிறீர்களா?’ என்றாள்.

’ஆம், நிச்சயமாக

அதற்குப் பிறகு அவள் மனங்கசந்து தன் பாவத்துக்காக அழுது புலம்பி பாவமன்னிப்புக்காகக் கெஞ்சினாள். அவளை நான் அமைதிப்படுத்த முயன்றும் என்னால் இயலாது போயிற்று. அவள் தலை நிமிர்ந்து எழுந்தபோது அவளது கண்கள் பிரகாசித்தன. ’போதகரே“ என் பாவ பாரம் எல்லாம் என்னைவிட்டு அகன்றது. நான் மன்னிக்கப்பட்டேன், நான் இரட்சிக்கப்பட்டேன்’ என்றாள். .

சந்தோஷத்தால் ஆடிப்பாடினாள். அவளது ப் பாடலையும் ஆடலையும் கேட்ட அவளது கணவன் என் அலுவலக அறைக்குள் ஓடிவந்தார். அவனைக் கண்டதும்அவள் ஓடிப்போய் அவனது கழுத்தை கட்டிப்

அணைத்துக் கொண்டாள். அவனால்-நம்பவே முடியவில்லை

‘நீங்கள் அவளுக்கு என்ன செய்தீர்கள்’ என கேட்டார்.

ஆண்டவர் அற்புதம் செய்தார்’ என்றேன். .

ஆண்டவர் உங்களுக்குப் பெரிய காரியம் செய்தார், தன் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்புங்கள்’ என்று புத்தி சொன்னேன்,

தேவன் அவளை வல்லமையில் நிரப்பினார். அவள் பரண ஆரோக்கியம் அடைந்தாள். அவர்கள் என் ஆலயத் துக்கு வருகிறார்கள், அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் கிறிஸ்துவின் அன்பில் மூழ்கிப் போகிறேன். குற்ற ’ உணர்வால் அடைக்கப்பட்டிருந்த உள்ளம் திறக்கப்பட்ட உடன் தேவ வல்லமை பாய்ந்தோடும்.

கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களே, சகோதரிகளே, தேவனின் சகல வல்லமையும் இப்போதே உங்களில் வாச மாயிருக்கிறது. நீங்கள் அந்த வல்லமையைத் திறந்து பயனடைய முடியும். உங்களது படிப்பிற்கு, உங்களது ஆடைகளுக்கு, உங்களது புத்தகங்களுக்கு, உங்களது ஆரோக் கியத்திற்கு, உங்களது வியாபாரத்திற்கு என

சகலத்திற்கும் நீங்கள் அந்த வல்லமையில் சார்ந்திருக்கலாம். நீங்கள் சுவி சேஷத்தைப் பிரசங்கிக்க செல்லும் போது ஏதோ அறிவியலையோ, தத்துவத்தையோ, மார்க்கத்தையோ போதிக் கப்போவதில்லை. வற்றாத வல்லமையின் ஊற்றை எப்படி திறந்து பயன்படுத்துவது என்பதைத்தான் நீங்கள் கற்றுத்தரப் போகிறீர்கள். சுருக்கமாகச் சொன்னால் நீங்கள் இயேசுவைக் கொடுக்கப் போகிறீர்கள். இயேசுவின் மூலம் தேவன் இருதயங்களில் வந்து வாசம் பண்ணுகிறார்.

## தேவனின் இளைப்பாறுதல்

கவலை, பயம் ஆகிய இரண்டும் சாத்தானின் வல்லமையான ஆயுதங்கள். இவற்றை நன்கு அறிந்திருந்தேன். ஏனென்றால் எனது சபையைத் துவங்கிய காலத்திலிருந்து இன்றுவரை கவலை, பயம் இவற்றினூடே நான் கடந்து வந்திருக்கிறேன். நான் தூங்காத இரவு எத்தனையோ உண்டு. சிலவேளைகளில் கவலை, பயம் ஆகியவற்றின் பாரம் அழுத்தத்தால் என் இருதயம் வெடித்துவிடுமோ என்று உணர்ந்த சந்தர்ப்பங்கள் உண்டு.

எபிரேயர் 4:10, 11 வசனங்கள் இவ்வாறு கூறுகின்றன. 'அவருடைய இளைப்பாறுதலில்

பிரவேசித்தவன், தேவன், தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்திருந்தது போல, தானும்’ தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான். ஆகையால், அந்த திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.

வேதத்திற்கு மிகப்பெரிய வல்லமையிருக்கிறது. கவலையினாலும் பயத்தினாலும் அநேக மக்கள் காலத்திற்கு முன்பாகவே மரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக இங்கிலாந்து நாடு முழுவதும் நான் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருந்தேன். அங்கு பர்மிங்காம் என்ற நகரத்தின் அருகிலுள்ள வோர் செஸ்டர் என்ற சிறிய நகரத்தில் நான் இருந்தேன். ஆனாலும் அந்த நகரிலுள்ள போதகருக்கு இருதயநோய் ஏற்ப்பட்டதின் காரணமாக அவருக்கு ஓய்வு கொடுக்க வசதியாகப் புதன் கிழமை மாலை ஆராதனையை என்னை நடத்தும்படி கூறினார்கள். ஆராதனை முடிந்ததும், அந்த போதகர் என்னிடம், அன்று இரவு அவர்களுடைய சபை மூப்பர்களில் ஒருவருடைய வீட்டில் தங்கும்படி வற்புறுத்தினார். நான் பல காரணங்களுக்காக

விடுதிகளில் தங்குவதையே விரும்புவேன். ஆகவே அந்த போதகரின் ஆலோசனையைத் தட்டிக் கழித்துவிட்டு என்னிடம் விடுதியில் தங்குவதற்கு போதுமான பணம் இருக்கிறது' என்று சொல்லி புறப்பட்டேன். மீண்டும் அந்த போதகர் 'அப்படி அல்ல. அந்த சபைமூப்பர் அவரது வீட்டில் தீர்க்கதரிசிகளுக்கான அறை ஒன்று வைத்திருக்கிறார். மட்டுமின்றி, 'நீங்கள் இன்று அந்த வீட்டில் தங்கவேண்டிய அவசியமிருக்கிறது' என வற்புறுத்தினார். சில நிமிடங்களில் அந்த மூப்பரின் மனைவி வந்து விட்டார்கள். அவர்கள் என் கையை பிடித்துக்கொண்டு "வாருங்கள் போகலாம்' என வற்புறுத்திக் கூப்பிட்டார்கள். எனக்குச் சிறிது பயமும் தயக்கமும் ஏற்பட்டது இல்லை, இல்லை மிக்க நன்றி. இன்று இரவு நான் விடுதியிலேயே தங்கிக் கொள்கிறேன்' என்று சொன்னேன். ஆனாலும் அந்த அம்மையார் என்னை விடுவதாக இல்லை. என்னை இழுத்தே கொண்டுபோய் அவர்களுடைய காரில் ஏறச் சொன்னார்கள். வேறு வழியின்றி நானும் ஒப்புக் கொண்டேன். அவர்களே காரை ஒட்டிச் சென்றார்கள். அவர்களது வீடு வந்து சேர்ந்தோம். தன்னுடைய கணவர் வேலையாக வெளியே சென்றிருப் பதாகவும் அவர் வீடு திரும்ப இரவு 10 மணி ஆகும்

என்பதாகவும் அந்த அம்மையார் சொன்னார்கள். 'நீங்கள் 2வது தளத்திலுள்ள அறைக்குச் சென்று உடையை மாற்றிக் கொள்ளுங்கள், அதற்குள் நான் தேனீர் தயார் செய்துவிடுகிறேன். அதன்பின் இரவு உணவும் தயார் செய்து வருகிறேன் என்று சொன்னார்கள். நான் அவர்கள் சொன்ன அறையில் சென்று உடையை மாற்றிக் கொண்டு சிறிது நேரம் கழித்து கீழே வந்தேன் வந்து பார்த்தபோது அவர்கள் தேனீரும் தயார் செய்யவில்லை இரவு சாப்பாடும் தயார் செய்யவில்லை மாறாக அந்த அம்மையார் அழுது கொண்டே வற்புறுத்தியமைக்கு மிக்க வருந்துகிறேன். ஆனாலும் எங்களுக்குள்ள தீராத பிரச்சனை காரணமாக அவ்வாறு செய்தேன். அதனால்தான் எங்கள் போதகரையும் நான் வற்புறுத்தும்படி சொன்னேன். ஏனென்றால் தீர்க்கமுடியாத கடன் காரணமாக நாங்கள் திவாலாகும் நிலையிலிருக்கிறோம். இதற்காக எங்களுக்காக ஜெபம் செய்ய வேண்டும். மேலும் அந்த அம்மையார் தொடர்ந்து பேசினார்கள். இரண்டாவது உலக யுத்தத்தின்போது அப்போது ஜெர்மனியில் இராணுவத் திலிருந்த என் கணவரை சந்தித்தேன். யுத்தம் முடிந்ததும் நான் அவரோடு இங்கிலாந்து வந்துவிட்டேன். இப்போது நான் இங்கிலாந்து நாட்டின்

குடியுரிமை பெற்றவள். நாங்கள் செய்த ஒவ்வொரு வியாபாரத்திலும் நஷ்டமடைந்தோம். எங்களுக்கு இப்போது மீதியுள்ளது ஒரு வீடு மட்டும்தான். அதுவும் அடமானத்தில்தான் உள்ளது. அடமான தொகையைச் செலுத்தாவிட்டால் அதுவும் போய்விடும். சூழ்நிலை மிகவும் பயங்கரமாக உள்ளது. நாங்கள் எவ்வளவோ கடினமாக ஜெபிக்கிறோம். ஆனாலும் எங்களுடைய ஜெபத்திற்கு தேவன் பதில் அளிக்கவில்லை. சாத்தான் வல்லமையாகக் கிரியை செய்து எங்களுடைய நிதிநிலமையை அழித்துவருகிறான். பாஸ்டர், இந்த நிலவரத்தில் எங்களுக்கு என்ன செய்ய முடியும்? இந்த பிரச்சினையை நாங்கள் எப்படி தீர்க்கப் போகிறோம்? அழுதுகொண்டே அந்த அம்மையார் என்னிடம் கேட்டார்கள்.

இந்த குடும்பத்தின் நிலவரத்தை குறித்து மனதுருகினேன், நான் அவர்களது வேதாகமத்தை எடுக்கச் சொல்லி

ஆதியாகத்தின் முதலாவது அதிகாரத்தை எடுத்துக், கொள்ளுங்கள். நான் கேட்கிற கேள்விகளுக்கு அதை வாசித்து எனக்கு பதில் சொல்லுங்கள்' என்று சொன்னேன். அவர்கள் வேதாகமத்தில் அந்த பகுதியை

எடுத்துக் கொண்டார்கள். நான் வாசிக்க ஆரம்பித்தேன். சில வசனங்களை வாசித்துவிட்டு நிறுத்தினேன். அவர்களிடத்தில் கேட்டேன்', தேவன் முதல் நாளிலேயே ஆதாமையும் ஏவாளையும் உருவாக்கி பிறகு ஆதாமிடம் நான் மிகவும் வேலையாக இருக்கிறேன். நீ வந்து எனக்கு உதவி செய். நாம் சேர்ந்து சிருஷ்டிப்பின் வேலையைச் செய்வோம் என்று சொன்னதாக வேதாகமத்தில் இருக்கிறதா?

'இல்லை முதல் நாளில் தேவன் வெளிச்சத்தை உண்டாக்கினார்." என்று பதில் சொன்னார்கள்.

'அவராக மட்டுதான் வெளிச்சத்தை உண்டாக்கினாரா', என்று கேட்டேன் ,

'ஆம்.

'புதுமையானது தான் நான் தொடர்ந்து கேட்டேன் 'எந்த உதவியும் அவருக்குத் தேவைப்படவில்லை என்று நீங்கள் சொல்வது நிச்சயம் தானா? இரண்டாவது நான் குறித்து வாசியுங்கள். தேவன் எதை உருவாக்கினார்? இரண்டாவது நாளிலும் ஆதாம் ஏவாளுடைய உதவியை அவர் நாட வில்லையா? 'இல்லை' என்று பதில் சொன்னார்கள். ரெண்டாவது நாளில் தேவன்

ஆகாய விரிவை உண்டாக்கினார். ஆகாயவிரிவுக்குக் கீழே இருக்கும் தண்ணீருக்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கும் தண்ணீருக்கும் பிரிவுண்டாக்கி தேவன் ஆகாயவிரிவுக்கு வானம் என்று பேரிட்டார்’, ’அது இன்னும் புதுமையாக இருக்கிறது“ என்று சொன்னேன் ’நிச்சயமாக இந்த சிருஷ்டிப்பின் வேலையை அவராக செய்து மிகுந்த களைப்படைந்திருப்பார். ஆகவே மூன்றாவது நாளில் ஆதாம் ஏவாளின் உதவி அவருக்கு தேவைப்பட்டிருக்கும். மூன்றாவது நாள் அவர்களது உதவியை கேட்டாரா’ என்று கேட்டேன்,

மீண்டும் அவர்கள் வேதாகமத்தை வாசித்துவிட்டு , மூன்றாம் நாளில் தேவன் வெட்டாந்தரையை உருவாக்கு கிறார் அதில் கனிதரும் மரம் புல் பூண்டுகளை உருவாக்கினார்’,

இதை சொல்லிவிட்டு என்னைக் கேள்விக்குறியோடு பார்த்தார்கள். உங்களுடைய கொரிய மொழியிலுள்ள வேதாகமத்தில் தேவன் ஏவாளின் உதவியை நாடினார் என்று எழுதியிருக்கிறாதா? இல்லை. உங்களுடைய வேதாகமத்தில் என்ன இருக்கிறதோ அதேதான் கொரிய

வேதாகத்திலும் இருக்கிறது’ என்று சொன்னேன் ’அப்படியானால், ஏன் அப்படிச் கேள்விகளைக் கேட்டீர்கள். என்று வியப்புடன் கேட்டார்கள்.

“முதல் அதிகாரம் முழுவதையும் வாசித்தபின் உங்களுடைய கேள்விக்கு நான் பதில் அளிக்கிறேன், நான்காம் நாளில் தேவன் ஆதாமை உருவாக்கினாரா?’

இல்லை நான்காம் நாளில் சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரங்களையும் அவரே உருவாக்கினார்“ என்று பதில் சொன்னார்கள். நான்காம் நாளில் நிச்சயமாக அவர் களைத்துப் போயிருப்பார். ஆதாம் ஏவாளின் உதவியை நாடியிருப்பார்’

அந்த அம்மையார் தொடர்ந்து வாசித்தார்கள் ஐந்தாம் நாளில் தேவன் நீரில் நீந்தும் ஜீவன்களையும் ஆகாயத்தில் பறக்கும் பறவைகளையும் படைத்தார். அன்றும் அவர் ஆதாம் ஏவாளின் உதவியைக் கேட்கவில்லை . ’ அந்த முடிவுக்கு அவர்களே வரவேண்டும் என்பதற்காகத்தான் நான் காத்துக் கொண்டிருந்தேன்.

அம்மையார் தொடர்ந்தார்கள் ’கடைசியாக தேவன் ஆதாமையும் ஏவாளையும் தன்னுடைய ரூபத்தின்படி உருவாக் கினார்.

“இது எப்போது நிகழ்ந்தது’ என்று கேட்டேன்,

“எல்லாவற்றையும் உருவாக்கிய பின்பு ஆதாமையும் ஏவாளையும் உருவாக்கினார்’ என்று பதில் சொன்னார்கள். . நான் தேவனாகயிருந்தால் உலகங்களை இவ்வாறு உருவாக்கியிருக்க மாட்டேன். வாரம் முழுவதும் சிருஷ்டிப்பு களுக்கும் என்னோடு சேர்ந்து வேலை செய்யும்படி செய்திருப்பேன். ஆனால் தேவன் வேறுவிதமாக செய்திருக் கிறார். எல்லாவற்றையும் அவரே உருவாக்கியிருக்கிறார். இந்த அழகான உலகத்திலுள்ளவைகள் அனைத்தையும் உருவாக்கிய ... பின் தான் ஆதாமையும் ஏவாளையும் உண்டாக்கினார். பிறகு ஒய்ந்திருக்கிறார். ஏழாவது நாள் ஆதாமின் முதலாவது நாள்.

விசுவாசத்தின் மூலமாக ஆவியிலே அந்த அம்மையார் காணவேண்டும் என்று நான் விரும்பிய முக்கிய பகுதிக்கு வந்தேன். ’ஆதாமும் ஏவாளும் தேவனிடத்தில் வந்து கர்த்தாவே, இதுதான் எங்கள் வாழ்க்கையின் முதல்நாள் நாங்கள் கண்ட யாவும் மிகவும் அழகாக இருக்கிறது. ஆனால் நாங்கள் உமக்கு உதவி செய்வதற்கான காரியம் ஒன்று மில்லையா? என்று கேட்பதாக வைத்துக் கொள்வோம். தேவன் என்ன பதில்

சொல்லியிருப்பார். ’நீங்கள் எனக்கு உதவி செய்வதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால் உங்களுக்காக யாவைற்றையும் செய்து முடித்துவிட்டேன். இது என்னுடைய இளைப்பாறுதலின் நாள். என்னுடைய இளைப் பாறுதலின் நாளில் உங்களுடைய வாழ்க்கை துவங்குகிறது. என்னுடைய இளைப்பாறுதலின் நாளில் உங்களுடைய வாழ்க்கை துவங்க வேண்டும் என்று திட்டமிட்டே நான் செய்திருக்கிறேன். உங்களைப் பாடுபட்டு உழைப்பதற்கு உருவாக்கவில்லை நீங்கள் மகிழ்வுடன் ஜீவிக்க வேண்டும் மென்பதற்காகவே உருவாக்கியிருக்கிறேன். ஆகவே நீங்கள் என்னுடைய இளைப்பாறுதலில் தங்கியிருங்கள்:

நான் அவர்களுக்கு ஒரு உதாரணத்தை சொல்லி விளக்கினேன். உங்களுடைய தாயார் பெரிய விருந்து ஒன்றை ஏற்ப்பாடு செய்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் உங்கள் தாயார் வீட்டிற்குச் சென்று அவர்களுக்குச் உதவி செய்வதற்காகச் சென்றிருக்கிறீர்கள். சமையல் அறைக்குச் செல்கிறீர்கள். விருந்துக்கு வேண்டிய சகல் பாத்திரங்களும் அழகாக வைக்கப்பட்டுள்ளன. முன் அறைக்கு செல்கிறீர்கள். அது அழகாக

அலங்கரிக்கப்பட்டு விருந்தினர் உட்காருவதற்கான இருக்கைகள் யாவும் நேர்த்தியாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. வெளியே தோட்டத்திற்கு செல்கிறீர்கள். அங்குள்ள மேஜைகளில் வெள்ளித்தட்டுகளில் பூக்களை வைத்து அலங்காரமாக உள்ளது. முக்கிய விருந்தினருக்கான இருக்கையும் திட்டமிடப்பட்டு ஒழுங்காக உள்ளது. நீங்கள் உங்கள் தாயாரிடத்தில் போய் ஏதாவது நான் உதவி செய் யலாமா என்று கேட்டால் நான் எல்லாவற்றையும் முடித்து வைத்திருக்கிறேன். இனி அதில் செய்வதற்கு ஒன்றுமில்லை என்று சொல்வார்கள் அந்த முடிவுற்ற வேலையில் நீங்கள் இளைப்பாறவும் அதை அனுபவிக்கவும் அதைத் திட்டமிட்டு செய்திருக்கிறார்கள்.

மேலும் அந்த சபை மூப்பரின் மனைவியிடத்தில் சொன்னேன்,

“உங்களுக்காகவும் தேவன் சகலத்தையும் முடித்து வைத்திருக்கிறார். அவருடைய வேலையை நீங்கள் எடுக்க முயற்சி செய்து – நீங்களாக செய்ய ஏன் முற்படுகிறீர்கள்? கிரியை செய்வது தேவனுடைய பகுதி. கிரியை அவருடைய சிறப்புரிமை அதை அவரிடத்திலிருந்து நீங்கள் எடுத்துக்

கொள்ளக்கூடாது. அப்படி எடுத்தால் நீங்கள் அவருடைய திட்டங்களை குழப்பிவிடுவீர்கள். ! தேவனை பொறுத்தவரை உங்களது பிரச்சனையை உலகத்தோற்றத்திற்கு முன்பே தீர்த்துவிட்டார். ஏழாவது நாள் துவக்கத்திற்குள் உங்களது பிரச்சனை உட்பட சகலத்தையும் உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே அவர் முடித்து விட்டார் என்று வேதம் சொல் கிறது. உங்களது பாரம் தேவனுக்குரியது. இந்த பிரச்சனையை எப்படி தீர்ப்பதென்று அவர் முன்பே அறிந்திருக்கிறார். ஆனால் அவரது நேரத்தில் அதை செய்கிறார். 'வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் ; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் ' (மத் 11:28) என்று இயேசு சொன்னார். தேவன் செய்யவேண்டிய பகுதியை நான் எடுத்துக் கொள்ள முயற்சிப்பதே பாவம் தான். தேவனுக்கு உங்கள் உதவி தேவைப்பட்டிருக்குமானால் அவரோடு சேர்ந்து வேலை செய்வதற்காக முதல் நாளே உங்களை உருவாக்கியிருப்பார். அவர் யாருடைய உதவியையும் நாடவில்லை .

உங்களுடைய பிரச்சனையின் எல்லா அம்சத்தையும் அவர் முன்பே முடித்துவிட்டார், உங்களுக்காக அந்த கிரியை

’அவர் செய்திருக்கிறார். உங்களுடைய வாழ்க்கையில் இன்னும் சந்திக்கயிருக்கும் பிரச்சனைகளையும் அவர் தீர்த்து வைத்திருக்கிறார். உங்களுக்காகவும் உங்கள் பிரச்சனைக்காகவும் அவர் கரிசனையுள்ளவராக இருக்கிறார். இன்றுள்ள பிரச்சனைகளையும் இனிவரயிருக்கும் பிரச்சனைகளையும் அவர் எப்படித் தீர்ப்பார் என்பதை அறிந்து கொள்ள அவருடைய வழியை காட்டும்படி அவரைக் கேட்பதை தவிர வேறு வழியில்லை. நீங்கள் செய்யவேண்டியது ஏதாவது இருப்பின் அதை உங்களுக்குக் காட்டுவார். அப்போது அவரது திட்டத்திற்கு முற்றுமாய் கீழ்ப்படிங்கள். அவர் ஏதும் பதில் பேசவில்லை என்றால் அதை அவரிடமே விட்டு விடுங்கள்.

தேவனோடு மனிதன் ஐக்கியப்பட்டிருக்க வேண்டும். அவனோடு ஜீவிக்கவேண்டும் என்ற நோக்கத்தில்தான் தேவன் மனுக்குலத்தை உருவாக்கினார். ’முதலாவது தேவ னுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்’ (மத் 6:33) என்ற வேத வசனம் நம்மை நினைவூட்டுகிறது.

அந்த அம்மையார் மிகுந்த உன்னிப்போடு நான் சொன்ன காரியங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நான் அவர்ளோடு பகிர்ந்து கொண்ட சத்தியத்தை விளங்கிக் கொள்ளத் துவங்கினார்கள்.

தன் மக்கள் வியர்வை சிந்தி, துக்கத்தோடும் மன பலத்தோடும் கடினமாக உழைக்கிறார்கள்?’ என்று அவர் அம் கேட்டேன். ஆதாம் ஏவாளின் கதையை நமது கனவுக்கு கொண்டுவருவோம். ஆரம்பத்தில் ஆச்சரியமான சர்க்கையை அனுபவித்தார்கள். ஏனென்றால் எல்லா அவற்றையும் செய்து முடித்து அந்த அழகான தோட்டத்தில் அவர்களை வைத்திருந்தார். அதன் சுற்றுச்சூழல்கள் யாவற் றையும் கண்டு அவர்கள் ஆனந்தமடைந்தனர்.

பகலின் குளிர்ச்சியான வேளைகளில் தேவன் அவர் களிடத்தில் வந்தார். அவர்கள் அவரோடு நெருங்கிய ஐக்கியம் வைத்திருந்தனர். அவரைத் தொழுது கொண்டனர். எவ்வளவு ஆச்சரியமான அனுபவம்: புதிய உலகத்தில் அவர்களுக்கு எவ்வளவு அழகான துவக்கம்? தேவன் ஒரே ஒரு கட்டளைதான் கொடுத்திருந்தார். என்ன அந்த கட்டளை? ’நன்மை தீமை அறியத்தக்க

விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்' (ஆதி 2:17)

தேவன், புசிக்கக்கூடாது என்று சொன்ன மரத்தின் கனியைத் தவிர மற்ற எல்லா மரத்தின் கனிகளையும் அவர்கள் அனுபவிக்கலாம். வேறு விதமாக சொன்னால் "நீங்கள் எல்லா மரத்தின் கனிகளையும் புசிக்கலாம் ஆனால் நன்மை எது தீமை எது என்ற அறிவைக் கொடுக்கும் கனியைப் புசிக்கக்கூடாது. ஏனெனில் அறிவு என்னுடையது. அதுதான் என்னுடைய அதிகாரத்தின் அடையாளம், தேவனுடைய அதிகாரமும் அவருடைய அதிகாரத்திற்கு கீழ்ப் படிதலுமே முக்கியமான காரியம். புசிக்கக்கூடாது என்று விலக்கப்பட்ட மரம் தேவனின் அதிகாரத்திற்கு அடை யாளமாக இருக்கிறது. தேவன் சொன்னார் 'நீங்கள் அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவீர்கள். '

ஏன் தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அப்படிப்பட்ட கடுமையான கட்டளை கொடுத்தார் ? இப்படிப்பட்டதான கட்டளையைக் கொடுக்க தேவன் ஒருவருக்கே அதிகாரம் உண்டு. நன்மை எது தீமை எது என்பதை அறிந்து கொள்வது தான் நமது காரியம். அவர்கள்

உருவாக்கப்பட்ட நிலையிலேயே இருக்கவேண்டும் என்பதுதான் தேவனுடைய விருப்பம். அதாவது தேவனோடுள்ள ஐக்கியத்திலும் தொடர்பிலும் இளைப்பாறுதலிலும் அவர்கள் நிலைத்திருக்க வேண்டும். ஆனால் அந்த தோட்டத்தில் ஒரு மரத்தின் கனியை மட்டும் புசிக்கக் கூடாது என ஏன் அவர் விலக்கி வைத்திருந்தார் என்றால் அதிகாரத்திற்கு அவர்கள் கீழ்ப்படியப் பழகவேண்டும்.

கொரியாவில் என்னுடைய வீட்டிற்கு நான்தான் தலைவர். என் குடும்பத்தில் நன்மை எது தீமை எது அன்று தீர்மானிக்கும் அதிகாரம் எனக்கு உண்டு. என்னுடைய பிள்ளைகள் சிறியவர்களாக இருந்தபோது ஏதாவது செய்யவேண்டுமென்றால் என்னிடத்தில் அனுமதி கேட்பார்கள். நான் தீர்மானம் செய்து பதிலுரைப்பேன். அந்த காலத்தில் என்னுடைய முடிவைக்குறித்தோ அல்லது முடிவை மாற்றிக் கொள்ளவது கேட்பது குறித்தோ எந்தக் கேள்விகளும் எழுவதில்லை . சிறுவயதில் என்னுடைய மூன்று மகன்களும் எனக்கு முற்றுமாய் கீழ்ப்படிந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் பெரியவர்கள் ஆன பிறகு, அநேக நண்பர்கள் மூலமாக உலகத்தின் துணிகரங்கள் நுழைந்த பிறகு எனக்கு கீழ்ப்

படிதல் என்பது பெரியதொரு போராட்டம் ஆகிவிட்டது. ஆனாலும் இன்றும் நான்தான் வீட்டின் தலைவர். அவர்கள் பெரியவர்கள் ஆனபின் என்னைக் கேள்விகேட்கவும் எனது முடிவுக்குச் சவால்விடவும் விரும்புகின்றனர். அவர்கள் சுயமாக செயல்பட விரும்புகின்றனர். அதன் காரணமாக எங்களுக்குள் சூடான வாக்குவாதங்களும் ஏற்படுகின்றன. இதே காரியம்தான் ஏதேன் தோட்டத்தில் நடந்தது.

தேவன், அவருடைய முழுப்படைப்பின் மீதும் முழு ஆதிக்கம் உள்ளவர். அவருக்கு விரோதமாக யாரும் சவால் விட முடியாது. அவருடைய பிள்ளைகளாகிய நாம் பிள்ளைகளாகவே இருக்கவேண்மே தவிர, தலைவனாக முயற்சிக்கக் ஆடாது. நம்முடைய வாழ்க்கையில் பெரும் பிரச்சனைகளை சந்திக்கும்போது, அவற்றைத் தீர்வுகாண நம்முடைய சொந்த விருப்பங்கள் மூலமாக முடிவு செய்யக்கூடாது. நன்மை எது தீமை எது என்று அறியத்தக்க தேவனோடு நாம் ஆலோசிக்க வேண்டும். ஏனென்றால் தேவனுடைய வார்த்தை ’முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்பது. நமது

வாழ்க்கையிலுள்ள சகல சூழ்நிலைகளிலும் தேவனை நமது தலைவராகக் கனம் பண்ணும்போது நாம் அவரின் இளைப்பாறுதலுக்குள் வருகிறோம்.

ஆதாமும் ஏவாளும் தங்களது சுயவிருப்பத்தைச் செய்ய தீர்மானித்ததின் மூலமாக முழு ஆதிக்கத்தையும் அவர்களே எடுத்துக்கொள்ள முயற்சித்தனர். ஆகவேதான் விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தார்கள். கீழ்ப்படியாமை காட்டிய நொடியிலே அவர்களது தெய்வ உணர்வை (God Conscious ness) இழந்து சுய உணர்வை (Self–Consciousnes)அடைந்தனர். நன்மை செய்யும் பலத்தை இழந்து தீமை செய்யும் பலத்தை பெற்றுக் கொண்டார்கள். இப்போது தேவசாயலாக இருக்கவேண்டியவர்கள் மாறான சாயலிலிருக்கிறார்கள்.

தேவன் எப்போதும் நன்மை செய்வதற்கே வல்லமை யுள்ளவர். ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததின் நிமித்தமாக தங்களது பாவமற்ற, பாவமறியாத நிலையை இழந்தனர். ஆவி யிலே மரணத்தை சந்தித்தனர். கீழ்படியாமை காட்டிய அந்த நேரத்திலிருந்தே நித்திய மரணம் அவர்களை ஆட்கொண்டது, அவர்களுடைய சரீரம் அழிவுக்குள்ளானது.

(ரோமர் 6:12–21) ஏதேன் தோட்டத்தை விட்டு துரத்தப்பட்டார்கள். அவர்களுடைய வாழ்க்கையை அவர்களே பார்த்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. அவர்கள் தேவனுடைய பாதுகாப்பில் இருந்த போது தேவன் அவர்களைப் பொறுப்பெடுத்து அவர்களுக்கு வேண்டிய சகலத்தையும் கொடுத்தார். ஆனால் அவர்கள் கீழ்ப்படியாமை காட்டி, தங்களை விடுதலையடைந்தவர்கள் என பிரகடனப்படுத்திக் கொண்ட போது தேவன் சொன்னார். 'நெற்றிவேர்வை நிலத்தில் சிந்து உங்களது ஜீவியத்தை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்' அந்த நேரத்திலிருந்து அவர்களது சொந்த பலத்தைச் சார்ந்தே அவர்கள் ஜீவிக்க வேண்டியதாயிருந்தது. அவர்கள் தங்களுக்கு முழு ஆதிக்கம் இருப்பதாக நினைத்துக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் பாவத்திற்கு அடிமையானவர்கள். அவர்கள் சமாதானமாக வாழத்தான் முயற்சித்தார்கள். பகைமையும் விரோதமும் அவர்கள் குடும்பத்தை ஆண்டு கொண்டது. அவர்கள் ஆரோக்கியமாக இருக்க விரும்பினார்கள். ஆனால் நோய்கள் அவர்களை ஆட்கொண்டு ஆரோக்கியத்தை அழிக்க துவங்கியது. நிறைவாக வாழ முயற்சித்தனர். ஆனால் பூமி முள்ளையும் குருக்கையும்

முளைப்பித்தது. பூமியைக் கொத்தி பண்படுத்துவது சாதாரண வேலையாக இல்லை. முழு ஆதிக்கத்தையும் எடுத்துக் கொண்டதின் பலன், அவர்களுடைய ஜீவியத்தில் குற்றத்தையும், பாவத்தையும், சாபத்தையும், தரித்திரத்தையும் கொண்டு வந்தது. இதுதான் இளைப்பாறுதலா?

ஆனால், இந்தக் கதை இத்துடன் முடியவில்லை . இயேசு வந்தார். அவர் நம்முடைய பாவத்தையும், குற்றத்தையும், நோய்களையும், சாபங்களையும், தரித்திரத்தையும், மரணத்தின் கூரையும் நம்மை விட்டு எடுத்துப் போடவந்தார். அவர் மனப் பூர்வமாக கல்வாரியின் சிலுவைக்குச் சென்றார். அவருடைய சரீரம் கிழிக்கப்பட்டது. அவருடைய இரத்தம் சிந்தப்பட்டது. எதற்காக? மனிதனை மீட்டு அவனை மீண்டும் தேவனுடைய நல்உறவுக்குள் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தில் தான். அவர் சிலுவையிலே தொங்கிக் கொண்டிருந்த போது, அவர் யாருடைய உதவியையும் நாடவில்லை . பிதாவாகிய தேவனும், பரிசுத்த ஆவியானவரும் மட்டுமே இரட்சிப்பின் வேலையை முடிக்கக் கிரியை செய்தார்கள். நம்முடைய கடன்களையெல்லாம் செலுத்தித் தீர்த்தார். நாம் மீண்டும் தேவனிடத்தில் வருவோம்.

“ஆண்டவரே, இரட்சிக்கப் படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டுக் கொண்டு சிலர் அவரிடத்தில் வருகிறார்கள் தேவன் என்ன சொல்கிறார். ’மகனே நீ ஒன்றும் செய்யவேண்டியதில்லை.

உனக்காக நான் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டேன் இனி செய்வதற்கு ஒன்றுமில்லை. நீ என்னுடைய இளைப்பாறுதலில் ஜீவிக்க போகிறாய். நான் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டேன். ஆகவே உனக்காக ஆயத்தம் செய்யப்பட்ட ஆவிக்குரிய ஜீவியத்தைத் துவங்க வா என்று உன்னை அழைக்கிறேன். என்னை அண்டிக்கொள். என்னைத் தொழுதுகொள், என்னை பின்பற்று, என்னில் இளைப்பாறு. இதுதான் நீ செய்யவேண்டியது. என் மகனே என்னுடைய கிருபையினால் நீ இரட்சிக்கப்பட்டாய்.

உன்னுடைய நற்கிரியைகளின் மூலம் இரட்சிப்பை வாங்கிவிடலாம் என்று நீ முயற்சித்தால், நீ பிதாவின் முழு ஆதிக்கத்தை நீயாக எடுத்துக்கொள்ள முயற்சிக்கிறாய், ஆனால் இரட்சிப்பு தேவனுடையது. எந்த மனித மதங்களும் நம்முடைய ஆத்து மாவை இரட்சிக்க முடியாது.

உன்னுடைய கேடுகளையும் பாவங்களையும் பாராமல் இயேசுவின் மூலமாக தேவனிடத்தில் நீ வருவாயானால் நீ இரட்சிப்பை பெற்றுக் கொள்வாய். அந்த நொடிப்பொழுதிலேயே நீ முற்றுமாய் இரட்சிக்கப்படுவாய். ஏனென்றால் இரட்சிப்பு தேவனிடத்திலிருந்து வரும் ஈவு கிருபை கிருபை யே, கிரியை அல்ல. நாம் கிரியையில் அல்ல, கிருபையில் தான் ஜீவிக்க வேண்டும்.

தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பின் வேலையை முடித்த போதே சரீரப்பிரகாரமான உலகப்பிரகாரமான எல்லா காரியங்களையும் கூட அவர் செய்து முடித்துவிட்டார். இது என்னுடைய வார்த்தையல்ல. இது தேவனுடைய வார்த்தை “அவருடைய கிரியைகள் உலகத்தோற்ற முதல் முடித்து வைக்கப்பட்டுள்ளன“ என்று எபிரேயர் 4:3ல் காண்கிறோம் ஆகவே, உலகத்தோற்றமுதலே உலகத்திற்குரிய யாவும் முற்றுமாய் சிருஷ்டிக்கப்பட்டுவிட்டது. |

2000 ஆண்டுகளுக்கு முன்பாகக் கல்வாரியில் ஆவிக்குரிய இரட்சிப்பின் வேலை செய்து முடிந்தாகிவிட்டது, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன் தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்தது போலத் தானும் தன் கிரியைகளை முடித்து

ஓய்ந்திருப்பான்’ (எபி 4:10) தேவன் செய்ய வேண்டிய எந்த வேலையும் பாக்கியில்லை. உலக வேலையும் சிருஷ்டிப்பின்போதே முடிந்துவிட்டது. இரட்சிப்பின் வேலையும் பாக்கியில்லை. 2000 ஆண்டுகளுக்கு முன்பு இரட்சிப்பை கல்வாரியில் இயேசு செய்து முடித்தார். தேவன் தம்முடைய கிரியைகளிலிருந்து ஓய்ந்திருந்தார் என்றுதான் வேதம் சொல்கிறது.

அவர் தம்முடைய கிரியைகளிலிருந்து ஓய்ந்திருப்பாரானால் இன்று விசுவாசிகளாகிய நாம் என்ன செய்ய வேண்டும்?’ ஆகையால் அந்த திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனும் கீழ்ப்படியாமையாலே விழுந்து போகாதபடிக்கு நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாக இருக்கக் கடவோம்“ (எபி 4 : 11 ) என வேதம் சொல்கிறது.

ஒரே ஒரு காரணத்திற்காகத்தான் நாம் தினமும் பாடுபடுகிறோம். ஜெபிக்கிறோம், பிரசங்கங்களை கேட்கி றோம். என்ன எந்த காரணம்? நாம் தேவனுடைய இணைப் பாறுதலுக்குள் பிரவேசிக்கத் தகுதியாக வேண்டும் என்பதுதான்.

அந்த அம்மையாரிடம் நான் மேலும் தொடர்ந்து பேசினேன். ’இத்தனை ஆண்டுகளும் தேவன் அவருடைய கிரியைகளை நமக்காக முடித்துவைக்கிறார் என்றும், நாம் அவரை அண்டிக்கொண்டு அவருடைய இளைப்பாறுதலில் நிலைக்க வேண்டும் என்ற சரியான அறிவு உங்களுக்கு இல்லாது போய்விட்டதே? தேவனே இப்போது அதை செய்து மகிமையை அவரே அடைந்து கொள்ளப் போகிறார். அவருடைய மகிமையை அவர் யாருடனும் பகிர்ந்து கொள்ள மாட்டார். இந்த காரணத்தினால்தான் நீங்கள் ஜெபத்தில் போராடியும் அது தேவனை அசைக்கவில்லை. அச்ச உணர்வு சாபத்தின் அடையாளம், உங்களுக்கு ஏற்பட்ட அச்ச உணர்வாகிய பாவத்திற்காக நீங்கள் மனஸ்தாபப்படுங்கள். நீங்கள் அவரில் இளைப்பாறுங்கள்.

நாங்கள் இருவருமாக சேர்ந்து ஜெபித்தோம். ’கர்த்தாவே, நீர் செய்யவேண்டியதை நாங்கள் செய்ய முயற்சித்தோம்.

இந்த பாரம் உம்முடைய சிறப்புரிமை. நீராகவே எல்லாக் கிரியைகளையும் செய்ய விரும்பினீர். ஆகவே எல்லா மகிமையும் உமக்கே உரியது. நீர் செய்து முடித்த வேலையில் நாங்களும் ஏதோ கிரியை

செய்யத் துணிந்தோம். இந்தப் பாவத்திற்காக நாங்கள் மனம் வருந்துகிறோம். எங்களை மன்னியும். இன்று இந்த அத்தியாவசியத் தேவையை உம்மிடத்தில் ஒப்புவிக்கிறோம். எங்களுடைய எல்லாப் பாரங்களையும் உம்மிடத்தில் ஒப்புவிக்கிறோம். இன்று இரவு முதலே நாங்கள் உம்மை முற்றுமாக விசுவாசிக்கப் போகிறோம். தொழுது கொள்ளப்போகிறோம், உம்மை நேசிக்க போகிறோம். எந்த கவலையுமின்றி எங்கள் ஜீவனுக்கு நீர் அளித்த ஈவை அனுபவிக்கப் போகிறோம். உம்மிலே இளைப்பாறப் போகிறோம்.

நாங்கள் ஜெபித்து முடிந்ததும் அந்த அம்மையார் குதித்து எழுந்தார்கள். அய்யா, நான் முற்றுமாய் விடுதலை பெற்றது போல் உணர்கிறேன். என் விலங்குகள் உடைக்கப் பட்டுவிட்டன. நான் இதை விளங்கிக் கொள்ளவே இல்லை. இப்போது விளங்கிக் கொண்டேன். நான் இனிமேல் என்னுடைய பிரச்சனைகளை நானாகத் தீர்த்துக் கொள்ள முயற்சிக்க மாட்டேன்.

நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அந்த அம்மை யாரின் கணவர் வந்தார். கணவரிடம் மிகுந்த சந்தோஷத் தோடு எல்லாவற்றையும் சொல்லத் துவங்கினாள். ஆலயத் திலிருந்து

திரும்பி வந்த பின் டாக்டர்.சோ அவர்களிடமிருந்து ஒரு அற்புதமான பிரசங்கத்தை நான் கேட்டேன். நீங்களும் அதை கேட்க வேண்டும். டாக்டர் சோ, மீண்டும் அந்த தூதை தயவு செய்து என் கணவருக்கும் சொல்லுங்கள்' என்று கேட்டார்கள்.

நான் பசியோடிருக்கிறேன். நீங்களே அவருக்குச் சொல்லுங்கள். இப்போது எனக்கு ஏதாவது சாப்பிடக் கொடுங்கள். மறு நாள் நான் கார்டிப், வேல்ஸ் ஆகிய இடங் களுக்கு புறப்பட்டேன். அங்கு நான் இரண்டு வாரம் பேசுவதற்கு எழுப்புதல் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இந்த நல்ல குடும்பத்திற்கு தேவன் கிரியை செய்கிறார் என்று நான் ஆச்சரியப்பட்டேன். சில தினங்களில் அந்த சபை மூப்பரின் மனைவியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. நான் நினைத்தபடியே அந்த கடிதத்தில் நல்ல செய்திகளே இருந்தன. அதில் 'அன்புள்ள பாஸ்டர். நீங்கள் சென்றபின் நானும் என் கணவரும் எல்லாக் காரியங்களையும் பேசிக் கொண்டோம். எங்களுக்கு என்னத் தேவையோ அதையே எங்களுக்கு தேவசெய்தியாகக் கொடுத்தீர்கள். தேவன் எங்களுடைய எல்லா காரியங் களையும் பொறுப்பெடுத்துக் கொண்டார்

என்று நாங்கள் விசுவாசிக்க ஆரம்பித்தோம். நாங்கள் அவரில் இளைப்பாறத் துவங்கினோம். ’விற்பனைக்கு என்று நாங்கள் போட்டிருந்த அறிவிப்பு பலகையைப் பார்த்து ஒரு நாள் ஒரு தம்பதிகள் எங்கள் வீட்டைப் பார்க்க வந்தார்கள். அவரது மனைவி வீட்டை பார்த்துவிட்டு ’இப்படிப்பட்ட ஒரு வீட்டைத்தான்’ நான் தேடிக் கொண்டிருக்கிறேன்’ என்று மிகுந்த ஆச்சரியம்’ பொங்கச் சொன்னார்கள். எங்கள் வீட்டிற்கு நாங்கள் எதிர்பார்த்த கிரயத்தை விட மிக கூடுதலான கிரயத் தொகையைத் தருவதாக சொன்னார்கள். உடனே எங்கள் வீடு’ விற்பனை ஆகிவிட்டது. வங்கிக்கு நாங்கள் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்திவிட்டோம். நாங்கள் எதிர்பார்த்த ஒரு சூழ்நிலையிலிருந்து தேவனுடைய உதவியால் நாங்கள் விடுவிக்கப் பட்டோம்’

கலக்கத்திலும், சோர்விலும், கவலையிலும் நிறைந்து, பாரத்தால் அழுத்தப்பட்டிருக்கும் உங்களுக்கு ’என்னிடத்தில் வாருங்கள்’ என்ற கிறிஸ்துவின் அழைப்பின் பொருளை உண்மையிலேயே விளங்கிக் கொண்டீர்களா? அவர் நம்மை அழைக்கிறார். ’வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு

இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன். என் துக்கத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயுமாயிருச்கிறது“ *(மத் 11:28–30)* எல்லாத் தரத்து மக்களுக்கும் இந்த வசனங்கள் ஆறுதல்தரவல்லது.

பல ஆண்டுகளுக்கு முன்பு பாலஸ்தீனத்தில் ஒரு படி ஒரு இளங்காளையை உழவடைக்கு பயிற்சிப்பதற்கு தனது தாய்ப் பசுவோடு நுகத்தில் இணைத்து பழக்கினாராம். ஏனென்றால் தாயையும் கன்றையும் ஒரே நுகத்தில் இணைக்குபோது அதன் பாரம் தாய்பசுவின் கழுத்தில்தான் இருக்கும், கன்றுக்கு அதன் பாரம் தெரியாது. இம்முறையில் கன்று கழுத்து நோகாமலே உழவடைக்கு பழகிக் கொண்டதாம். இளம் கன்று தாயோடு செல்ல வேண்டும். அவ்வளவுதான். ஆரம்பத்தில் தயக்கத்தோடு நுகத்தின்கீழ் வந்த இளம்கன்று பின்னர் அதை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டது ஏனென்றால் நுகத்தின் பாரம் இளம்கன்றுக்கு இல்லை.

நாம் நம்முடைய நுகத்தை சுமக்க வேண்டும் என்று தேவ வசனம் சொல்லவே இல்லை. ’என்னுடைய நுகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்’ என்றுதான் வேத வசனம் தெளிவாக சொல்கிறது. ’நான் சிலுவைக்கு சென்றேன். உன்னுடைய பாரத்தையும் சேர்த்து நான் சுமக்கிறேன். உன்னுடைய பாவத்திற்கு நீ கிரயம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. என்னுடைய நுகத்தின் கீழே வா. அப்போது உனக்கு இளைப்பாறுதல் உண்டு’ என்றுதான் இயேசு நினைப்பூட்டுகிறார்.

ஆம். நுகம் உன்னுடையதல்ல, கிறிஸ்துவுடையது. நுகம் கிறிஸ்துவுக்கு ஏற்றதாகத்தான் செய்யப்பட்டுள்ளது. அவருடைய நுகத்தை ஏற்றுக் கொள்ளத்தான் நீ அழைக்கப் படுகிறாய், அப்படி ஏற்றுக் கொள்ளும்போது, அதன் சுமையை நீ சுமப்பதாகவே தோன்றாது. ஏனென்றால் இயேசு சுமக்கிறார். அவரது இளைப்பாறுதலில் நாம் ஜீவிப்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்!

இந்த சத்தியத்தை நான் நீண்டகாலத்திற்கு முன்பே கற்றுக் கொள்ளாதிருந்தால் நான் மரித்து அழிந்து போயிருப்பேன். தினமும் திருமணங்கள், அடக்க ஆராதனைகள்

சுகவீனமடைந்தோருக்கு ஜெபம் இவற்றைக் கவனிப்பதே கடினம். எங்கள் சபையில் 6 லட்சம் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். 350 மிஷினரி ஊழியர் காரர்கள் இருக்கிறார்கள். அடிக்கடி அவர்களுடைய பிள்ளைகளுக்கு சுகவீனம் ஏற்பட்டு ஜெபிப்பதற்கு என்னுடைய அலுவலகத்திற்கு ஏராளமான டெலக்ஸ் செய்திகள் வருவதுண்டு. நான் எங்களுடைய ஏலிம் நற்பணி மையத்தை மேற்பார்வை செய்ய வேண்டும். எங்களது வாரப்பத்திரிக்கை தினப்பத்திரிக்கை ஆகியவற்றைச் சரி பார்க்க வேண்டும். டிவி. மற்றும் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுக்க வேண்டும். இவற்றிற்கான செலவீனங்களையும் கூடக் கவனிக்க வேண்டும். எனக்கு 701 துணைப் பாஸ்டர்கள் இருந்தாலும் கூட இரவும் பகலும் என்னுடைய தொலைபேசி மணி அடித்த வண்ணமாகவே இருக்கும். எல்லாத் தேவைகளும் என்னிடத்திலேயே வருகிறபடியால் அவகைள் என்னை அச்சுறுத்துவது போலிருக்கும். இவற்றையெல்லாம் பார்த்து, ஒருவேளை நான் மரிக்க நேரிட்டால் இந்தக் காரியங்க ளெல்லாம் என்னவாகும்! எனப் பிரமித்துப் போனேன். ஆனால் ஒருநாள் பரிசுத்த ஆவியானவர் தெள்ளத் தெளிவாக என்னோடு பேசினார். ’என் மகனே, எல்லாப்

பாரங்களையும் ஏன் நீயே சுமக்க முயற்சிக்கிறாய். இது உனக்கு அதிகப் பாரமானது நீயும் நான் உன்னிடத்தில் ஒப்புவித்திருக்கும் ஊழியமும் என்னுடையது. இந்த சபை என்னுடைய சபை. நீ என்னுடைய இளைப்பாறுதலில் ஜீவிக்க வேண்டும். என்னுடைய சபைக்கு என்னிடத்தில் எல்லாப் பதில்களும் திட்டங்களும் அவற்றை நிறைவேற்ற வேண்டிய வழிகளும் என்னிடத்தில் உண்டு. நீ முற்றுமாய் என்னுடைய கிருபையால் ஜீவிக்க வேண்டும். என்னில் இளைப்பாற வேண்டும்.

என்னுடைய இருதயத்திற்குள் வந்த இந்த வெளிப்படுத்தல் என்னுடைய ஜீவியத்தைப் புரட்சிகரமாக மாற்றியது. என்னுடைய தோளிலிருந்த கவலையின் பாரங்கள் தூக்கி எடுக்கப்பட்டுவிட்டது போன்ற உணர்வடைந்தேன். 'என்னு டைய நுகத்தை ஏற்று கொள்ளுங்கள்' என்ற வசனத்தை நான் மீண்டும் உணர்ந்தேன். நான் இயேசுவோடு நுகத்தில் பிணைக்கப்பட்டிருப்பது போல் உணர்ந்தேன். எல்லா சூழ் நிலைகளிலும் அவரே நடத்துகிறார். அவர் நடத்துகிற அறியாத பாதைகளில் நான் அவரைப் பின் தொடர்ந்து மட்டும் செல்கிறேன். பிதாவே இந்த வேலைகளின் எல்லாப்

பாரங்களையம்நீரே சுமந்து கொள்கிறீரே, நீர் இப்பேர்பட்ட அற்புதமான தகப்பனாக இருப்பீர் என்று நான் உணரவேயில்லையே' என்று சொல்லி நான் அழுதேன். இன்று முதல் அடைய எல்லாக் கவலைகளையும் கஷ்டங்களையும் கிடத்தில் திருப்பிவிட்டு நான் உம்மை மட்டும் தொழுது எள்ளவும், நேசிக்கவும் உம்மோடு உறவாடவும் தீர்மா அறேன். பாரங்கள் என்னை நெருக்கும்போது பாரங்கள் அனைவிட்டு நீங்கி, நீர் அதை ஏற்றும் கொள்ளும் வரை நான் ஜெபத்தில் தரித்திருப்பேன்.

ஆம் சில வேளைகளில் நமது பாரங்கள் நீக்கப்படுவதற்கு நேரமாகலாம். ஏனென்றால் நாம் ஒரு பாடுகள் நிறைந்த உலகத்தில் வாழ்கிறோம். ஆனாலும் அந்த பாரச்சுமைகள் நீக்கப்படும்.

நண்பனே. உன்னுடைய பாரங்கள் எப்படிப்பட்டதாக இருப்பினும் இயேசு அந்த பாரங்களைச் சுமக்க விரும்புகிறார். 'என்னுடைய நுகத்தை ஏற்றுக்கொள்' என்ற வசனத்தையும் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கென்று ஆயத்தம் செய்துள்ள இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கப் பிரயாசப் படவும் பரிசுத்த ஆவியானவர் உனக்கு நினைப்பூட்டுவாராக.

# 7.விசுவாச வித்து

பூரண விசுவாசம் என்றால் என்ன? முற்றும் பூரணமான விசுவாசத்தை நீங்கள் எப்படி அடைந்து கொள்ள முடியும்?

'விசுவாசி' என்று சொல்வது மிக எளிது. ஆனால் இருதயத்தில் சந்தேகமின்றி விசுவாசிப்பது எளிதான காரியம் அல்ல. என்னுடைய இருதயத்தில் அற்புதமான சத்தியத்தை பற்றிக் கொண்டேன். அதை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

'இயேசு அவர்களை நோக்கி; தேவனிடத்தில் விசுவாச முள்ளவர்களாயிருங்கள். எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். 'என மாற்கு 11: 22-23 வசனங்களில் வாசிக்குறோம்.

என்னுடைய சொந்த அனுபவத்தில் அநேக ஆண்டுகள் விசுவாசிப்பதற்கு போராடிப் பிரயாசப்பட்டிருக்கிறேன். அநேக

சந்தர்ப்பங்களில் 'நான் விசுவாசிக்கிறேன்' 'நான் விசுவாசிக்கிறேன் ' என்று மீண்டும் மீண்டும் சொல்லியிருக் கிறேன். ஆனால் உண்மையிலே என்னால் எளிதில் விசுவாசிக்க முடியவில்லை. அது ஒரு போராட்டமாகவே இருந்தது. சிறிதளவேனும் சந்தேகம் இல்லாமல் எப்படி விசுவாசிப்பது? இருதயத்தில் சிறிதளவேனும் சந்தேகம் இல்லாமல் விசுவாசிப்பது உண்மையிலே சாத்தியம்தானா?

உங்களுடைய முழு இருதயத்தோடு எவ்வளவேனும் சந்தேகமற உண்மையிலேயே உங்களுக்கு விசுவாசிக்க கூடுமானால் மலையைப் பார்த்து 'நீ பெயர்ந்து சமுத்திரத்தில் தள்ளுண்டு போ' என்று கட்டளையிட்டால் அது அப்படியே ஆகும். ஆனால் நீங்கள் அப்படிப்பட்ட விசுவாசத்தோடு கட்டளையிட்டும் மலை பெயர்ந்து போகவில்லை என்றால் உங்களுடைய விசுவாசத்தில் சந்தேகமும் போராட்டமும் உள்ளது என்றுதான் பொருள். உங்களிடத்தில் பூரண விசுவாசம் இல்லை. பூரண விசுவாசம் மட்டுமே மலையை அசைக்க முடியும்.

தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்' என்று

இயேசு சொன்னார். இந்த வேதபகுதியை மொழிபெயர்த்த வெவ்வேறு கிரேக்க வேதவல்லுனர்கள் இதற்கு இரண்டு வகையான அர்த்தம் இருக்கக்கூடும் என்று கருதுகிறார்கள். ஒரு கூட்டத்தார் ’தேவனிடத்தில் விசுவாமுள்ளவராயிருங்கள்’ என்று மொழிபெயர்த்துள்ளார்கள். அடுத்த கூட்டத்தார் “தேவனின் விசுவாசமுள்ளவராயிருங்கள்’ என்கின்றனர். இரண்டு வகையான மொழிபெயர்ப்பு இருந்தாலும் கூட கிரேக்க வேதவல்லுனர்கள் இரண்டுமே சரியானதுதான் என்று கருதுகிறார்கள்.

இதை நாம் உன்னிப்பாய் ஆராய்ந்து பார்ப்போம். தேவன் இரண்டு அர்த்தங்களையும் இணைத்தே வைத்திருக் கிறார். ஆகவே இரண்டையும் தனித்தனியாகப் பிரிக்கக் கூடாது என கிரேக்க மொழிபெயர்ப்பிலிருந்து நமக்கு விளங்குகிறது. இரண்டு அர்த்தத்தையும் நாம் இணைத்தே தான் நாம் பார்க்க வேண்டும். நமக்கு தேவனிடத்திலும் விசுவாசம் வேண்டும் தேவனின் விசுவாசமும் வேண்டும்.

விசுவாசிக்க வேண்டும் என்ற நம்முடைய சொந்த முயற்சியில்தான் விசுவாசம்

துவங்குகிறது. அநேக வேளைகளில் தேவனிடத்தில் விசுவாசமாயிருக்க முயற்சிப்பது ஒரு போராட்டமாகவே இருக்கிறது. நாம் விரும்புகிற சமாதானம் நம்மிடம் இருப்பதில்லை. ஆகவே சமாதானத்தைப் பற்றியே நாம் அதிகக் கவலையுள்ளவர்களாகயிருக்கிறோம். விசு வாசிப்பது ஒரு போராட்டமாக இருந்தாலும் கூட விசுவாச அஸ்திபாரத்திற்கு அதுதான் துவக்கம்.

முற்றும் உதவியற்ற நிலவரத்திலிருந்த திமிர்வாதக் காரனைக் குறித்து மாற்கு 2:1–5 வசனங்களில் வாசிக்கிறோம். அவன் எவ்வளவோ சிகிச்சை பெற்றிருப்பான். ஆனாலும் குணம் கிடைக்கவவில்லை. ஒரு நாள் அவன் வசிக்கிற அதே பட்டணத்திற்கு இயேசு கிறிஸ்து வந்திருக்கிறார் என்ற. , செய்தியை கேள்விப்பட்டான். இயேசுவிடத்தில் சென்றால் நிச்சயமாக நான் குணமாவேன் என்ற விசுவாசம் மட்டுமே குணப்படுத்திவிடாது. அவனுடைய விசுவாசத்தைச் செயல் படுத்தத் தீர்மானித்தான். அவனுடைய நண்பர்களில் நான்கு பேரைக் கூப்பிட்டுத் தன்னை இயேசுவினிடத்தில் கொண்டு செல்லும்படி கேட்டுக்கொண்டான். அவனுடைய நண்பர்கள் அவனை ஒரு படுக்கையில்

வைத்து இயேசு இருக்கும் இடத்திற்குக் கொண்டு சென்றார்கள்.

அவர்கள் அங்கு போய்ச் சேர்ந்தபோது கூட்டம் அதிகமாக இருந்தபடியால் அவர்களால் அந்த வீட்டின் வாசலருகே கூடப் போகமுடியவில்லை . ஆனால் அந்த திமிர்வாதக்காரன் எப்படியும் இயேசுவிடத்தில் செல்லவேண்டும் என்று தீர்மானமாயிருந்தான். அப்பேர்ப்பட்ட தீர்மானம் எப்போதும் ஒரு வழியை உண்டாக்கும். ஆகவே அவர்கள் பேசி இயேசு தங்கியிருக்கும் வீட்டின் கூரைமேல் திமிர்வாதக்காரனை எடுத்துச் செல்ல தீர்மானித்தனர். அதன்படியே கூரையில் ஏறினார்கள். கூரையிலுள்ள சில ஒடுகளைப் பிரித்து எடுத்தனர். திமிர்வாதக்காரனைப் படுக்கையோடு இறக்கும் அளவுக்கு வழியை உண்டுபண்ணி சரியாக இயேசுவின் முன் இறக்கினார்கள்.

இந்த சம்பவம் நடக்கிறபோது, “இயேசு அவர்களுடைய விசுவாசத்தை கண்டார்’ என்று வேதம் சொல்கிறது. ஆம், இயேசு திமிர்வாதக்காரனுடைய விசுவாசத்தைக் கண்டு அவனோடு நேரிடையாகப் பேசினார். ’மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது’ (மாற்கு 2:5) ’நான்

உனக்குச் சொல்கிறேன். நீ எழுந்திரு' அவன் உடனே எழுந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு தேவனை மகிமைப் படுத்தி தன் வீட்டுக்கு போனான் (லூக் 5:25

திமிர்வாதக்காரனின் விசுவாசத்தில் முதற்கட்டத்திற்கும் இரண்டாவது கட்டத்திற்கும் என்ன வித்தியாசம்? விசுவாசத்தின் முதல் கட்டமாக திமிர்வாதக்காரன் விசுவாசித்தான். ஆம், உண்மையிலே அவன் விசுவாசித்தான்

ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. குணமாக்கப்படவேண்டும் என்ற அவனது வாஞ்சையையும், இயேசுவினிடத்தில் செல்ல வேண்டும் என்ற அவனது தீர்மானத்தையும், அந்த தீர்மானத்தின் உந்துதலால் இயேசுவினிடத்தில் செல்லத் தன்னால் இயன்றதைச் செய்ததையும் இயேசு கண்டார். மகிழ்ச்சிக்குரிய வல்லமை யான சம்பவம் நிகழ்ந்தது. திமிர்வா தக்காரனின் விசுவாசத்தை இயேசு கண்டபோது அவனுடைய விசுவாசத்தில் அற்புதங்கள் செய்யும் விசுவாசத்தை அவனில் உண்டாக்கினார். அந்த நேரத்திலேயே வியாதியுள்ள அந்த மனிதன் மலையையும் அசைக்கும் அற்புதத்தை அனுபவித்தான். மிக முக்கியமான சத்தியத்தின் கோட்பாடு இதில்

விளங்குகிறது. அதாவது உங்களுடைய விசுவாசம் தேவனுடைய விசுவாசத்தைக் கொண்டு வருகிறது.

நம்முடைய ஜீவியத்திலும் அன்றாட சூழ்நிலைகளில் நம்முடைய விசுவாசத்தைக் காண அவர் விரும்புகிறார். விசுவாசிகளாகிய நாம் நம்முடைய விசுவாசம் வளர வாஞ்சிக்க வேண்டும். நம்முடைய ஜீவியத்திலும் அற்புதங்கள் நிகழ நாம் வாஞ்சிக்க வேண்டும்.

ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவனின் மீது விசுவாசம் இருக்கிறது என்பதே முக்கியமான காரியம். மனமாற்றம் அடையும்போது பரிசுத்த ஆவியால் விசுவாசிகளுடைய இருதயத்தில் விசுவாசம் பிறக்கிறது. ஆனால் விசுவாசத்தின் வளர்ச்சியை அனுபவிப்பதற்கு அதை பயன்படுத்த வேண்டும். விசுவாசத்தைச் சிறிய காரியங்களில் பயிற்சித்தால்தான் பெரிய காரியங்களுக்காக தேவனின் மீது விசுவாசம் வைக்கும் அளவுக்கு நாம் வளரமுடியும். அப்படியானால்தான் மலையையும் அசைக்கும் அனுபவத்தை தேவனிடத்திலிருந்து பெறும் அளவுக்கு வளரமுடியும்.

நம்முடைய விசுவாசத்தின் முதற்கட்டம் போராட்டத்தின் விசுவாசம் அல்லது மனுஷக விசுவாசம். போராட்டத்தின் விசுவாசமாக இருந்தாலும் கூட அதுதான் முதல் கட்ட விசுவாசம். பிறகு அதில் விசுவாசத்தைப் பயிற்சிப்பதற்கு ’விசுவாசவித்தை’ ஊன்ற வேண்டும். அப்படியானால் தான் தேவையான அற்புதங்கள் நிகழும்.

அல்பெர்ட் ஐன்ஸ்டின் பௌதிக விஞ்ஞானத்தில் ’கால், இட அளவைகள் அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்தவை (Law of Relativity) என்ற விதியைக் கண்டுபிடித்து உலகுக்குக் கொடுத்தார். தேவனின் விசுவாசத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முக்கியமான விதி என்னவென்றால் ’விசுவாசவித்துதான்’, இதைத்தான் டாக்டர் ஓரல் ராபர்ட்ஸ் நமக்கு போதித்தார். ’விசுவாச வித்து’ என்பது தேவனிடத்தில் உங்கள் செயலை வெளிப்படுத்திக் காட்டும் விசுவாசம். தேவன் உங்களுடைய விசுவாச வித்தைக் காண விரும்புகிறார். ’நான் விசுவாசிக்கிறேன்! நான் விசுவாசிக்கிறேன்! நான் விசு வாசிக்கிறேன்! என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் தேவன் உங்கள் விசுவாசத்தின் ஆதாரத்தைக் காண விரும்புகிறார்.

நீங்கள் விசுவாசத்தில் போராடிக் கொண்டிருந்தாலும் அதில் அவர் உங்கள் விசுவாசத்தைக் காண்கிறார். உங்கள் விசுவாசத்தை அவரிடத்தில் காட்டவேண்டும் என்று அவர் விரும்புகிறார். உங்களுடைய விசுவாசத்தின் ஆதாரத்தை அல்லது விசுவாசத்தைக் கண்டபிறகு உங்களுடைய விசுவாசத்தோடு அவருடைய விசுவாசத்தைக் கொடுப்பார். அப்போது உங்களுக்கு அற்புதங்கள் நிகழும்.

அந்தத் திமிர்வாதக்காரன் இயேசுவிடத்தில் செல்லவேண்டுமென்று தன்னால் இயன்றவற்றைச் செய்து தன்னுடைய விசுவாசத்தைக் காட்டினான். நீங்கள் எப்படி உங்கள் விசுவாசத்தை காட்டுகிறீர்கள்? உங்களுடைய விசுவாசத்தை அவர் காணக் கூடுமா? உங்களுடைய விசுவாசத்தோடு அவருடைய விசுவாசத்தையும் கொடுத்து மலையையும் அசைய வைக்கும் அற்புதம் உங்களில் நிகழவேண்டும் என்று அவர் ஆவலுடன் எதிர்பார்க்கிறார். அநேகர் அற்புதம் நிகழ வேண்டும் என்பதற்காகத் தங்களது சொந்த திறனையும் முயற்சியையும் முழுமூச்சாக பயன்படுத்துகின்றனர். தேவ னுடைய வார்த்தையின் கோட்பாடு இங்கே தெளிவாக விளங்கும். திமிர்வாதக்காரன் தன்னுடைய தீர்மானத்தின் வைராக்கியத்தால்

தன்னுடைய சுய முயற்சிகளையெல்லாம் விட்டுவிட்டு எப்படியாவது இயேசுவிடத்தில் போனால் போதும் என்ற நிலவரத்திற்கு வந்தபோது அவன் குணமாக்கப்படவேண்டும் என்ற விசுவாசத்தை அவர் கண்டார்.

உங்களுடைய மனுஷக விசுவாசத்தால் மட்டும் அற்புதத்தை பெற்றுக் கொள்ளலாம் இன்று முயற்சிக் காதீர்கள். மனுஷக விசுவாசம் மனுஷக விசுவாசம்தான். அது ஒரு ஆரம்ப விசுவாசம்தான். தேவனுடைய இருதயத்தை தொடுவதற்கு அதுதான் தேவை. உங்களுடைய விசுவாசத்தை அவர் காண விரும்புகிறார். ஆனால் மனுஷக விசுவாசத்தால் மட்டும் மலையை அசைத்துவிட முடியாது. மனுஷக விசுவாசம் அடிப்படை விசுவாசமாகும். அந்த அடிப்படை விசுவாசத்தோடு விசுவாசவித்தும் சேரும் போதுதான் பெரிய விசு வாசத்திற்கு கொண்டு செல்கிறது. அந்த பெரிய விசுவாசம் அற்புதம் நிகழும் பொருட்டு தேவனுடைய இருதயத்தைத் தொடுகிறது.

’விசுவாசவித்து“ மிக முக்கியமானது. எனக்கு ஒரு பெரும் பிரச்சனை இருக்கும்போது தேவனால் அந்த பிரச்சனையை

தீர்க்கமுடியும் என்ற விசுவாசம் இருந்தாலும் கூட எப்போதும் என்னால் முடிந்தமட்டும் என்னுடைய விசுவாசத்தைக் காட்டவே விரும்புகிறேன். முதற்கட்டமாக என்னுடைய விசு வாசத்தைப் பெரும் பண முதலீடு மூலமாக நான் காட்டு கிறேன். அப்படி முதலீடு செய்துவிட்டு 'கர்த்தாவே இவ்வளவு வித்தை நான் கொடுத்துவிட்டேனே என்னால் இதைச் சமாளிக்கமுடியுமா?" என்று நான் என் இருதயத்தில் நடுங்கிய சில சந்தர்ப்பங்களும் உண்டு.

ஆனால் நான் என்னுடைய வித்துக்களை தேவனுடைய பணியில் விதைத்திருக்கிறேன். பிறகு நான் தேவனுடைய சமூகத்தில் காத்திருந்து என்னுடைய ஆவியில் அவர் பதில் கிடைக்கும் வரை தொடர்ந்து ஜெபம் செய்கிறேன். சீக்கிரத்திலோ அல்லது தாமதித்தோ தேவனுடைய விசுவாசம் என்னில் வருகிறது. அவ்வாறு வரும்போது நான் 'அதை உணர்ந்து கொள்கிறேன். அப்போது நான் எழுந்து என்னுடைய மலைகளுக்கு கட்டளையிடமுடியும், 'மலையே, நீ புரண்டு சமுத்திரத்தில் தள்ளுண்டு போ அப்போது மலை புரளும் அல்லேலூயா! இவ்வாறு நீங்கள் மலையை புரட்டி யிருக்கிறீர்களா? நீங்கள் தேவன்

காணும் பொருட்டு விசுவாசவித்தை ஊன்றியிருக்கிறீர்களா?

என்னுடைய மூப்பர்களின் ஒருவருடைய மகன் வாத நோயால் பீடிக்கப்பட்டு மரணத்தருவாயில் இருந்தான் 'கர்த் தாவே, வேதத்தில் அநேகர் குணமாக்கப்பட்டதை நாங்கள் காண்கிறோம். 'குணமாக்குவேன்' என நீர் வாக்களித் திருக்கிறீர். நான் விசுவாசிக்கிறேன்! நான் விசுவாசிக்கறேன்! என்று தினமும் அவனுக்காக ஜெபம் செய்தேன். ஆனால் ஜெபம் செய்வதற்கு அவனது தலையில் கைவைத்தபோது என்னுடைய விசுவாசத்தில் போராட்டம் ஏற்பட்டது. இந்த மகன் என்னுடைய எண்ணத்திற்கு மிக தூரமானவனே அல்ல. எனக்கு விசுவாசமிருந்தது. ஆனால் அவனை முற்று மாய் குணப்படுத்துவதற்கு தேவனின் விசுவாசம் எனக்கு இல்லை. நான் தொடர்ந்து 3 ஆண்டுகள் அவனுக்காக ஜெபித்தாலும் கூட அவனுடைய நிலவரம் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டிருந்தது. கடைசியாக நடக்க இயாலாத அளவுக்கு முற்றுமாய் முடமானான். அவனுடைய குடும்பத்தார் அவனை முதுகிலே சுமந்து பள்ளிக்குக் கொண்டு செல்வார்கள். பள்ளியிலிருந்து வீட்டிற்கு சுமந்து கொண்டு வருவார்கள். அவனது பொற்றோர் பெரும் லட்சாதிபதிகள்.

ஆனால் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்கு விதை விதைத்தவர்களே அல்ல. என்னுடைய ஜெபத்திற்காக அவர் களுடைய மகனை மட்டுமே கொண்டு வந்தார்கள். அவன் குணமடைய வேண்டுமென்று மனதார விரும்பினார்கள். என்னுடைய விசுவாசத்தை அவனுக்காக எவ்வளவோ பயிற்சித்துப்பார்த்தேன். ஆனால் இருதயம் சந்தேகங்களால் நிறைந்திருந்தது. 3 ஆண்டுகள் கழித்து இந்தக் குடும்பத்தார் தேவனுடைய இராஜ்யத்திற்கென்று விதை விதைக்க தீர்மானித்தார்கள். தேவனுக்கென்று ஆலயத்திற்கு ஏராள மான நன்கொடைகள் கொடுத்தனர். பிறகு அவர்களும் என்னோடு சேர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தார்கள்.

ஒரு நாள் மாலை நானும் என் மனைவியும் எங்களுடைய மூப்பர்களோடும் தங்களுடைய மனைவிமார்களோடும் ஆலய விருந்தகத்தில் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது நான் அந்த மூப்பரின் மகனைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருந்தேன், 3 ஆண்டுகள் தினமும் நான் அவனுக்காக ஜெபித்தாலும் கூட அன்று மாலை விருந்தி லிருக்கும்போது திடீரென்று தேவனுடைய ஆவியானவர் என்னில் இறங்கினார். அவனை குணப்படுத்துவதற்கான தேவனின் விசுவாசம் என் இருதயத்தில் வந்தது. அந்த மகன்

முற்றுமாய் குணமாவான் என்ற அசைவற்ற விசுவாசம் எனக்கு வந்தது. என் இருதயமே நடுங்குகிற அளவுக்கு ஒரு பெரிய வல்லமை என் இருதயத்தில் இறங்கியது. அவன் முற்றுமாய் குணமாவான் என்பதில் எனக்கு எவ்வளவேனும் சந்தேகமோ பயமோ இல்லை. அந்த பெரிய விசுவாசம் மட்டுமே என் இருதயத்தில் நிறைந்திருந்தது. அது வரை தேவன் குணமாக்குவார் என்ற பொதுவான விசுவாசந்தான் இருந்தது. ஆனால் அந்த நேரத்தில் தேவனின் இயற்கைக்கு அப்பாற்பட்ட விசுவாசம் எனக்குக் கொடுக்கப்பட்டிருப்பதை விளங்கிக் கொண்டேன். நான் தேவனின் விசுவாசத்தில் – அந்த மகன் குணமாவான் என்பதையும் விளங்கிக் கொண்டேன். நான் எழுந்து அவனது பெற்றோர் உட்கார்ந் திருந்த மேஜைக்கு நேராக விரைந்தேன். அவர்கள் முன்னால் போய் நின்று ’மூப்பர் கிம் அவர்களே, இன்று இரவு உங்களது மகன் குணமாவான்“ வாதநோய் என்ற வேதனை யின் மலை புரட்டி எறியப்படும் நீங்கள் சமாதானத்தோடு வீட்டிற்குப் போங்கள்’ என மகா பெரிய விசுவாசத்தோடு திரும்பிச் சென்றேன்.

நான் இதைச் சொன்னபோது அந்த நல்ல மூப்பரும் அவரது மனைவியும் அழ

ஆரம்பித்து விட்டார்கள். அந்த அறையிலிருந்த எல்லோருடைய கண்களும் கண்ணீரால் நிறைந்தது. ஏனெனில் அந்த குடும்பத்தாரின் பாடுகள் யாவும் எல்லோருக்கும் தெரியும். அவர்கள் யாவரும் அவர்களுடைய மகனுக்காக ஜெபித்தார்கள்.

நான் என்னுடைய மேஜைக்கு திரும்பியதும் என்னுடைய மனைவி 'அவர்கள் அழுகிற அளவுக்கு அவர்களிடத்தில் நீங்கள் என்ன சொன்னீர்கள்“ என்று கேட்டாள். நான் இன்று இரவு அவர்களுடைய மகன் குணமாவான் என்று சொன்னதாக சொன்னேன். என்னுடைய மனைவி மிகவும் கலங் கினாள். 'நீங்கள் 3 ஆண்டுகள் அவர்களுடைய மகனுக்காக ஜெபித்தீர்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் நீங்கள் திடீரென்று இன்று இரவு அவன் குணமாவான் என்று சொல்லிவிட்டீர்கள். அவன் நீங்கள் சொன்னபடி குணமாகாவிட்டால் என்னவாகும்? அது எல்லா இடங்களிலும் பரவினால் உங்களைப்பற்றி என்ன நினைப்பார்கள். ?

அவள் சொன்னது சாதாரணமாகக் குணமாக்கப் படுவதற்கு தேவன் மேலுள்ள விசுவாசத்தை பெற்றுக் கொள் ளாதவர்கள் பேசுகிற பேச்சுதான். ஆனால் அன்று இரவு

அவன் குணமாவான் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். பெற்றோர்கள் விசுவாசத்தில் வித்தை விதைத்திருந்தாலும் எங்களிருவருக்கும் விசுவாசமிருந்தாலும், குணமாக்குதலின் சாட்சி பெற்றோர்களுக்கு வராமல் முதலில் எனக்கு வந்தது.

இந்த மகனின் சரீர நிலவரத்தில் மாற்றம் ஏற்படுவதோடு என்ன நிகழ்ந்தது? அவர்கள் அவர்களுடைய மகனுடை சுகத்திற்கு தேவனையே சார்ந்திருப்பதான விசுவாசத்தை தேவனிடத்தில் காட்டினார்கள். அவர்கள் அதை வித்திட்டனர். தேவன் அவர்களுடைய விசுவாச போராட்டத்தையும் என்னுடைய விசுவாசத்தையும் கண்டார். இப்போது அவர்கள் விசுவாச வித்தை ஊன்றியிருப்பதை தேவன் கண்டதால், அவர் தன்னுடைய விசுவாசத்தையும் அவர்களுக்குச் சேர்த்துக் கொடுத்தார். இப்போது தேவனுடத்திலுள்ள விசுவாசம் மட்டுமல்ல, தேவனின் விசுவாசமும் என்னுடைய விசுவாசத்தோடு சேர்ந்திருக்கிறது என்பதை உணர்கிறேன்.

அன்று இரவு அவர்கள் வீட்டிற்குத் திரும்பியதும் அந்த மகன் கதவண்டை தவழ்ந்து வந்து அவர்களுக்கு வணக்கம் சொன்னான். பெற்றோர்கள் அவனிடத்தில்

இன்று இரவு நீ முற்றுமாய் குணமடைவாய் என்று பாஸ்டர் திட்டமாய் சொல்லியிருக்கிறார். இரவே நீ சுகமாகுவதை வெளிப்படையாகவே காணலாம் என்றும் சொல்லியிருக்கிறார்’ என்று சொல்லி விட்டு ’மகனே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்திரு’ என்று சொன்னார்கள்.

’அப்பா, என்னால் எழுந்திருக்க முடியாது என்று உங்களுக்கு தெரியுமே. 3 ஆண்டு காலமாக நான் முடவனாகவே இருந்து எழுந்திருப்பது எப்படி என்பதே எனக்கு மறந்து போய்விட்டதே’ என்று சொல்லி அழ ஆரம்பித்தான்.

’நீ எழுந்திருப்பதை மறந்துவிட்டதாக நினைத்தாலும் மகனே, இயேசுவின் நாமத்தில், அவருடைய வார்த்தையின் அதிகாரத்தை கொண்டு நாங்கள் கட்டளையிடுகிறோம். நீ எழுந்திரு’. அன்று இரவு தேவனின் பிரசன்னம் அந்த அறையில் இருந்தது. ஒவ்வொருவரும் அந்த நேரத்தில் சத்தமிட்டு தேவனைத் தொழுது கொண்டார்கள். 3 ஆண்டுகளின் வாதநோயின் விளைவால் அவனது கால்கள் சூம்பி வளைந்து போய் இருந்தது. அவனுடைய கையைப் பிடித்து இலேசாகத் தூக்கிப் பொறுமையோடு அவனுக்கு உத்

வினார்கள். அந்தச் சமயத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியம் நிகழ ஆரம்பித்தது. அவர்கள் கண்களுக்கு முன்பாகவே வளைந்து போயிருந்த அவனுடைய கால்கள் நேராக ஆரம்பித்தது. ஒரு கால் ஊன்றி அவன் எழும்பினான். பிறகு அடுத்த காலையும் சிரமத்தோடு இழுத்தான். அதுவும் நேரானது. அற்புதத்தைச் செய்யும் பரிசுத்த ஆவி அந்த மகனை முற்றுமாய் குணமாக்கியது. அவன் நடக்க ஆரம்பித்தான். வீட்டிற்கு வெளியே நடந்தான். தெருவில் வந்து நடந்தான். வீட்டாரின் சந்தோஷ சத்தத்தில் பக்கத் திலுள்ளோர் யாவரும் கூடிவிட்டனர். அவன் நடப்பதைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கினார்கள், குணப்படுத்துகிறவர், பரிகாரி வந்துவிட்டார்! தேவனின் விசுவாசம் வெளியரங் கமாயிற்று. அவன் அன்று இரவே முற்றுமாய் சுகமானான்.

அக்கம்பக்கத்தார் யாவருக்கும் இவன் வாதநோயால் முடவனாகியிருந்தான் என்பதை நன்கு அறிந்திருந்தபடியால் அவன் குணமடைந்து நடந்தது அக்கம்பக்கத்தார் மத்தியில் ஒரு வல்லமையான சாட்சியாயிற்று. அவன் குதிப்பதும், நடப்பதும் பள்ளிக்கு அவனாக நடந்து செல்வதையும் பார்ப் பவர்கள் ஆச்சரியப்படுவதாக உள்ளது.

ஒவ்வொரு இடத்தி லிருந்தும் மக்கள் ’இது எப்படியாயிற்று? எப்படியாயிற்று“ என்று கேட்கிறார்கள். இந்த அற்புதத்தைச் கண்ட அநேக அயலகத்தார் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். அநேக கிறிஸ்தவர்கள் இதன் மூலம் உற்சாகமடைந்தனர். விசுவாச வித்தை ஊன்றுவதின் முக்கியத்துவமாகிய விலையேறப் பெற்ற பாடத்தை கற்றுக் கொண்டார்கள்.

1987ம் ஆண்டு பொதுவான செய்திகளும், கிறிஸ்தவ செய்திகளும் அடங்கிய ஒரு வாரப் பத்திரிக்கையும், தினப் பத்திரிக்கையும் வெளியிட தேவன் என்னை வழிநடத்தினார். அவை எங்களுடைய அமைதியான பிரசங்கிகளாகும். கொரியா மட்டுமல்லாமல் கொரியர்கள் வாழும் மற்றைய நாடு களுக்கும் அந்தப் பத்திரிக்கைகள் அனுப்பப்படும்.

சமீபத்தில் சுவிட்சர்லாந்திலிருந்து அதிவேக அச்சு இயந்திரம் ஒன்று வாங்க எனக்கு 40 மில்லியன் டாலர் கடன் தேவைப்பட்டது. அந்த பணம் இரண்டு வாரத்திற்குள் எனக்கு தேவைப்பட்டது. அவ்வளவு பணம் கடன் வாங்குவதற்கும் எனக்கு வங்கியில் பங்குமில்லை. ஆனால் தேவனிடத்தில் எனக்கு விசுவாசமிருந்தது. அதுவும் போராட்ட கட்டத் திலிருந்த விசுவாசம்தான்.

ஒரு சமயம் நான் உண்மை , யிலேயே விசுவாசித்தேன். மறுசமயம் என்னுடைய இருதயத்தில் சந்தேகங்கள் இருந்தன. பல இரவுகள் என்னால் தூங்கமுடியவில்லை . ஆம், நான் விசுவாசித்தேன். ஆனால் அது பூரண விசுவாசம் அல்ல. தேவனின் விசுவாசம் என்னில் இல்லாதிருந்தது. நான் இந்த மலையைச் சமுத்திரத்தில் தள்ளுண்டு போ என்று கட்டளையிட முடியாது, பிறகு ஒரு நாள் நான் தேவனுடைய மகிமைக்கென்று வித்தை ஊன்றத் தீர்மானித்தேன்.

’கர்த்தாவே, எனக்கு அடிப்படையான விசுவாசம், மனுஷி விசுவாசம் மட்டுமே உள்ளது. ஆனால் இப்போது விசுவாச வித்தை விதைத்திருக்கிறேன். இப்போது நீர் உம்முடைய பகுதியைச் செய்யக் காத்திருக்கிறேன்’ என்று ஜெபித்தேன்.

ஒருவாரமாகத் தொடர்ந்து ஜெபம் செய்தேன். இரண்டாவது வாரக் கடைசிக்குள் அந்த அச்சு இயந்திரம் வாங்குவது சம்பந்தமான ஒப்பந்தம் முடிந்தாக வேண்டும். வியாழக்கிழமை என்னுடைய பொருளாளர் என்னை அலுவலகத்தில் சந்தித்தார். ’பாஸ்டர் கடன் பெறுவதற்கான வங்கி கடிதம் நம்மால் பெறமுடியாது. 40 மில்லியன் டாலர் கடன்

தொகை கொடுப்பதற்கான வங்கி பங்கும் நமக்கு இல்லை. மேலும் 75 ஆண்டுகள் வரலாற்றில் இவ்வளவு தொகை வங்கி பங்கில்லாமல் கொடுத்ததில்லை என்றும் அறிகிறேன்’ என்றார்.

என்னுடைய இருதயத்தில் இந்த மலையை புரட்ட முடியும் என்று அறிந்திருந்தேன். ’எனக்கு தேவனிடத்தில் விசுவாச மிருக்கிறது’ என்று என்னுடைய பொருளாளரிடம் சொன்னேன். ’ஆனால் தேவனின் விசுவாசம் இன்னும் கிடைக்கவில்லை. எந்த நேரத்திலும் தேவனின் விசுவாசம் எனக்கு வரும் ஏனெனில் நான் வித்தை விதைத்துவிட்டேன்’ என்று சொன்னேன்.

வியாழக்கிழமை மாலை நான் வீட்டிற்கு சென்றபின் வழக்கம்போல் என் ஜெப அறைக்கு சென்றேன். நான் ஜெபிக்க ஆரம்பித்தேன். ’கர்த்தாவே, என்னுடைய விசுவாச வித்தை விதைத்துவிட்டேன். நீர் எனக்கு உதவி செய்வீர் என்று அறிவேன்’

நான் ஜெபித்தபின் தேவனுடைய சமூகத்தில் அமைதியாக காத்திருந்தேன். அந்தச் சமயத்தில் பரலோகங்கள் திறக்கப்பட்டு என்னுடைய விசுவாசத்தோடு தேவனின் விசுவாசம் என்னுடைய இருதயத்தில் இறங்குவது போன்றி ருந்தது. அது தேவனின்

விசுவாசம்தான் என்பதை நான் விளங்கிக் கொண்டேன். அதை நான் பெற்று கொள்ளத் துவங்கினேன். தேவனின் விசுவாசம் உங்களில் வரும்போது நிச்சயமாக நீங்கள் அதை உணர்ந்து கொள்ளலாம். ஒரு பெரிய சமாதானம் என்னை ஆட்கொண்டதை நான் உணர்ந்தேன். சில நொடிப்பொழுதில் நான் அண்டசராசரங் களிலுள்ள சகல விசுவாசமும் எனக்கு கிடைத்திருப்பதை உணர்ந்தேன். நான் ஒரு பெரிய அதிகாரத்தோடும் எழுந்து நின்றேன். சத்தமாக பேசினேன். 'வங்கியே, 40 மில்லியன் டாலர் கடன் கிடைப்பதற்கான கடிதத்தை உடனே கொடு'.

நான் என் ஜெப அறையைவிட்டு வெளியே வந்ததும் என்னுடைய முகம் பிரகாசமாய் ஜொலித்ததைக் கண்டு என் மனைவி என்ன நடந்திருக்கும் என்பதை அறிந்து கொண்டாள். மறுநாள் காலை நான் ஆலயத்திற்குச் சென்று என்னுடைய பொருளாளரைக் கூப்பிட்டேன். 'நீங்கள் உடனே வங்கிக்குச் செல்லுங்கள். கடன் பெறுவதற்கான கடிதத்தை இன்று தருவார்கள்' என்று சொன்னேன்.

அவர் ஆச்சரியத்துடன், 'பாஸ்டர், நீங்கள் கனவு காண்கிறீர்கள்' என்று சொன்னார்.

'ஆமாம், நான் கனவு காண்கிறவர்தான். என்னுடைய நேற்றைய கனவு ஒரு

அடிப்படை விசுவாசமாயிருந்தது. ஆனால் இன்று நான் தேவனின் விசுவாசத்தை பெற்றுக் கொண்டேன். இந்த மலை இன்று புரட்டப்படும். அது புரண்டு தள்ளுண்டு போகக் கட்டளையிட்டிருந்தேன். அது புரண்டு போகும்.

என்னுடைய பொருளாளர் வங்கிக்குச் சென்றார். அவர் சுமார் 3 அல்லது 4 மணிநேரம் வங்கியில் இருந்தார். திரும்பி வரும்போது 40 மில்லியன் டாலர் கடன் பெறுவதற்கான கடிதத்தோடு வந்தார். அது தேவனின் விசுவாசத்தால் வந்த பலன்!

சில நாட்கள் கழித்து அந்த வங்கியின் தலைவரும், அலுவலர்களும் என்னிடத்தில் வந்தார்கள். அவர்கள் சிறிது அச்சத்துடன் காணப்பட்டார்கள். ’75 ஆண்டு கால எங்கள் வங்கியின் வரலாற்றில் வங்கி பங்கு இல்லாமல் இவ்வளவு பெரிய தொகைக்கான கடன் கடிதம் நாங்கள் கொடுத்த தில்லை. ஆனால் எங்களை ஏதோ ஒரு மேலான வல்லமை உங்களுக்கு இந்த கடனை கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்துவதை உணர்ந்தோம். ஆகவே உங்களுக்குக் கொடுப்பதில் எங்களுக்கு மகிழ்ச்சிதான். என்று சொன் னார்கள்.

தேவனின் விசுவாசம்! மனுஷக விசுவாசத்திற்கும் தேவனின் விசுவாசத்திற்கும் மிகத் தெளிவான வித்தியாசம் உண்டு. முதலில் விசுவாசம் மனுஷகத்தில் துவங்குகிறது. அது போராடும் விசுவாசம். ஆனால் வேதம், நாம் தேவனின் விசுவாசத்தைப் பெற அழைக்கிறது. ஏனென்றால் முதலில் ஒரு ஆரம்ப விசுவாசம் உள்ளது. இந்த ஆரம்ப விசுவாசத்தோடு நாம் தேவனின் விசுவாசத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். தேவனின் விசுவாசத்தை நான் எப்படிப் பெற்றுக் கொள்ளலாம்? விதையை விதைப்பதால், பிறகு அவருடைய வழியில் நிலை நிற்பதால் பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் விதையை விதைக்கும்போது, தேவன் தன்னுடைய விசுவாசத்தை உங்களுக்கு அருள ஏதுவான அடிப்படை விசுவாசத்தைப் பெற்றுக் கொள்கிறீர்கள். இந்த உண்மையை உங்களால் காண முடிகிறதா?

நீங்கள் விதையை விதைத்த பிறகு ஜெபித்துக் காத் திருங்கள். நீங்கள் காத்திருக்கும் காலம் மிக முக்கியமானது. தேவனின் விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ளாமல் உங்களுடைய சுயவிசுவாசத்தால் எதையும் சாதித்து விடலாம் என்று நினைக்காதீர்கள்.

விசுவாசியுங்கள். தேவனைத் தொழுது கொள்ளுங்கள். அவருடைய ஏற்றவேளை வரும் போது அவருடைய விசுவாசத்தை உங்களுடைய விசு வாசத்தின்மீது வைப்பார். அவர் உங்களோடு பேசுவார். தேவனின் விசுவாசம் அப்போது வெளிப்படும்.

ஆம், திமிர்வாதக்காரனுக்கு விசுவாசம் இருந்தது. ஆனால் அவனுக்கு அதிக விசுவாசம் தேவைப்பட்டது. ஆகவே அவன் மேலும் முன்னேறினான். அவனுடைய செயலால் விசுவாச வித்தை விதைத்தான். இயேசுவிடத்தில் செல்வதற்கு அவனால் முடிந்த எல்லா காரியங்களையும் செய்தான். உங்கள் வீட்டு கூரையில் ஏறவும். ஒட்டைப்பிரிக்கவும், ஒரு ஆள் இறங்கும் அளவுக்கு கூரையில் வழியை உண்டாக்கவும் அதைச் சரிசெய்யும் செலவை யாரும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை, என்ற நிலவரத்தில் உங்கள் வீட்டை அப்படி செய்ய நீங்கள் அனுமதிப்பீர்களா? இந்த மனிதன் உண்மை யிலேயே விசுவாசித்தான். அந்த விதையை ஊன்றியதன் மூலமாக அவனது உணர்வுகளைப் புரியும்படி வெளிக் காட்டினான். ’கூரையில் ஏற்பட்ட சேதத்திற்கு நான் பின்பு நஷ்ட ஈடு கொடுத்துக் கொள்வேன். தற்போதைக்கு நான் இயேசுவினிடத்தில் சென்றடைவதற்கு என்ன

செல் வானாலும் அது பொருட்டல்ல’ என்று தன்னுடைய இருதயத்தில் சொல்லியிருக்கக்கூடும். இயேசு விசுவாசத்தைத் தான் தேடுகிறார். உனக்கு விசுவாசம் இருக்கிறது என்று அவருக்கு எப்படித் தெரியும். ? எப்படி நீ உன்னுடைய விசுவாசத்தை அவருக்கு காட்டுவாய் ? உன்னுடைய விசுவாச வித்தை அவர் காண்கிறபோதுதான் அவருடைய விசு வாசத்தை தருவார்.

இன்று நீங்கள் மலை போன்று பெரிய விசுவாசத்தை அனுபவிக்கலாம். நாம் பூமியிலிருக்கும் காலம்வரை உப யோகிக்க வேதாகமத்தில் 8000 வாக்குத்தத்தங்கள் உள்ளன. நீங்கள் பரலோகத்தை அடையும்போது அவைகளெல்லாம் உங்களுக்கு தேவையில்லை. ஆனால் தற்போது அவைகள் உங்களுக்குத் தேவை. தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களை விசுவாசிக்க நீங்கள் உங்கள் விசுவாசத்தை எப்படி காட்டுவீர்கள் ? விதையை ஊன்றுங்கள். அநேக ஆண்டுகளாக நல்ல உண்மையுள்ள விசுவாசிகள் கூட விசுவாச வித்தை தேவனிடத்தில் காட்டத் தெரியாததால் அவர்களுக்கு – மலைகளையும் புரட்டும் அனுபவம் இல்லை. இந்த பெரிய உண்மையை நீங்கள் பற்றிக்

கொள்ளும்போது நீங்கள் வித்தை
விதையுங்கள். அவருடையை விசுவாசத்தைப்
பெற்றுக் கொள்ளும்வரை தேவ சமூகத்தில்
காத்திருங்கள். நீங்களும் உங்களது
மலைகளைப் புரட்டித் தள்ளும் வல்லமை
யைப் பெறுவீர்கள்.